# கண்மலையின் மேல் அடித்தளமிடுகிறவன்

ஸாஜு



# கண்மலையின்மேல்
# அடித்தளமிருகிறவன்

സാജു

**Kanmalaiyinmel**
**Adithalamidukiravan**
(Tamil)

Author
**Saju**

Translated By
**Sara Pradeep**
**Sheeba Renjith**
**Eby  Ebenezer**

Published By
**Sanctuary Word Media Publishing**
**26/150A; Avees Building**
**Toll Junction, Edappally**
**Cochin_682024, Kerala, India**
**Phone- +91484-2557606**
**Email: sactuarywm@gmail.com**

Design by
**foggeneration.com**
**Cochin**

Printed At:
**Anaswara Printers, Cochin**

ISBN: 978-81-922375-3-4

Price Rs. 90/-

# என்னுரை

என் ஆவிக்குரிய வாழ்க்கையை நான் திரும்பி பார்க்கும்போதெல்லாம், எனக்குள் ஒரு கேள்வி எழும். “என்னை இதுவரை நிலைநிறுத்தி வருவது ஏது?”

நான் ஒருபோதும் ஒரு ‘ஆவிக்குரிய பேராற்றல்’ வாய்ந்தவனாக இருந்ததேயில்லை. எழுதி வைக்க ‘வீர சரிதங்களும்’ இல்லை. அதே நேரத்தில் கர்த்தர் சமூகத்தில் தலைநிமிரிந்து நிற்க முடியாமல் நின்ற அநேக சந்தர்பங்கள் உண்டு. இப்படியெல்லாம் இருந்தாலும் கூட இன்றைக்கும் நான் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறேன்.

கடைமுடிவாக? கிருபை, தேவ கிருபை. என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும். அதே நேரத்தில் ‘கர்த்தருடைய வசனங்களுக்கு’ தவிர்க்க முடியாத ஓர் பங்கு என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியில் உண்டு என்பது என்னால் மறுக்கவே முடியாத உண்மை. இப்புத்தகத்தில் சொல்லப்படுவதைப் போல, என்னை இரட்ச்சிப்புக்கு பாத்திரவானாக மாற்றியது மாமிசத்தில் வெளிப்பட்ட வசனம். ஆனால் இரட்ச்சிப்பில் என்னை நிலைநிறுத்தி வருவது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளே.

1974, நான் ‘இரட்ச்சிப்புக்குள் வந்துக் கொண்டிருக்கும் காலம்’. அதாவது, நான் இயேசுவால் பிடிக்கப்பட்டேன். ஆனால் இரட்சிப்பைக் குறித்து கூடுதலாக ஒன்றும் தெரியாது. ஒரு ஜெபக்கூடுகையின் போது அதை நடத்தினவர்களிடம் “உங்களுக்குள் காணப்படும் இந்த சந்தோஷத்தின் காரணம் என்ன?” என்று ஆர்வமாய் ஆராய்ந்தேன். அவர்கள் அதற்கு

பதிலாக எதையெல்லாமோ சொன்னார்கள். அந்த 'ஆவிக்குரிய வார்த்தைகள்' ஒன்றும் எனக்கு புரியவில்லை! (அன்று நான் ஒரு மேல்நிலைப்பள்ளி மாணவன்) ஆனால் அவர்கள் என்னிடம் மிக முக்கியமான ஒரு காரியத்தை சொன்னார்கள். அது எனக்கு நன்றாக புரிந்தது. அது என்னவென்றால். "தம்பி, நல்லா வேதபுத்தகத்தைப் படி!"

நான் அதை மறக்காமல் செய்யத் தொடங்கினேன். இரண்டு மாதங்களுக்குள்ளாக முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்தேன். அது எனக்கு ஜீவாமிர்தமாக இருந்தது. நான் 'இரட்சிக்கப்பட்டேன்'.

என்னுடைய விசுவாசத்தை திருவசனங்களின்மேல் உறுதிப்படுத்தினேன். அவ்வசனங்கள் என் காலடிகளுக்கு விளக்காகவும், என் பாதைக்கு ஒளியாகவும், என் நாவில் தேனாகவும், என் உடலுக்கெல்லாம் குளிர்ச்சியாகவும், என் உள்ளத்தில் பற்றியெறியும் அக்கினியாகவும், என் கண்களுக்கு பிரகாசமாகவும் மாறிற்று.

நான் உட்பட்டிருந்த சபை வேதாகமத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தது. எல்லா கூட்டங்களுக்கும் வேதாகம்த்தை சுமந்து செல்வார்கள். தினமும் திருவசனம் வாசிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். ஆனால் வேதாகமம் என்பது அவர்களுக்கு மதப்புத்தகமாக மட்டும்தான் இருந்தது. வேதாகமம் வெறும் எழுத்துக்களாகத்தான் காண்பார்களே ஒழிய அதற்க்குள் இருக்கும் ஜீவனையும், பொருளையும் தவிர்த்தார்கள். அதை உணர்ந்த நான் ஆண்டவரோடு இப்படிச் சொன்னேன்: "கர்த்தாவே இந்த ஆபத்து எனக்கு வராமல் காத்தருளும், எனக்கும் உம்முடைய வார்த்தைகளின் ஜீவனையும், பொருளையும் பகிர்ந்து தாரும்."

அதுமட்டுமல்லாமல் எல்லா வருடாந்திர ஜெபக் கூட்டங்களிலும் "ஆண்டவரே எனக்கு இந்த வருடம் உம் பரிசுத்த ஆவியனாவர் எனக்கு வசனங்களை கற்றுத் தர வேண்டும். சகல சத்தியத்திற்க்குள்ளும் என்னை வழி நடத்த வேண்டும்" என்று நான் ஜெபித்தேன்.

ஆவியானவர் என்னை வழிநடத்த தொடங்கினார். அப்போது நான் திருவசனங்களை கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். எனக்கு கிடைத்த திருவசனத்தின் வெளிச்சத்தில் என் வாழ்க்கையிலிருந்து அகங்காரங்கள், அதிகாரங்கள், சுகங்கள், சுயம், இவைகளை அகற்றிவிடவும், ஒழித்துவிடவும் வேண்டும் என்று நான் உணர்ந்தேன். அதற்கான ஒரு விலையை செலுத்த வேண்டும் அது எனக்கு மிகவும் கடினமாயிருந்தது (இப்போதும்

அப்படித்தான்). ஆனால் எப்பொழுதெல்லாம் சாக்குப்போக்குச் சொல்லி தயங்கினேனோ, அப்பொழுதெல்லாம் என்னுடைய ஆவிக்குரிய பயணத்தின் வளர்ச்சி நின்று விடுவதை உணர்ந்தேன்.

பிரியமானவர்களே, தேவன் எனக்கு கற்றுத்தந்த ஆவிக்குரிய உண்மைகளையெல்லாம் உங்களுக்கு விவரிப்பதற்க்காக இந்த புத்தகத்தை நான் எழுதவில்லை. அதற்கு மாறாக, நான் வேததாகமத்தை வாசித்து தியானிக்கும்போதெல்லாம் கர்த்தர் புதியப் புதிய சத்தியங்களை எனக்கு கற்றுத் தருகிறார். அதே தேவன் உங்களுக்கும், திருவசனங்கள் மூலமாக சத்தியங்களை கற்றுத் தர விரும்புகிறார் என்பதை உங்களுக்கு அறிவுறுத்தவும், அதனை உணர்ந்து உங்களையும் அவர் சமூகத்தில் அர்பணியுங்கள் என்று உங்களை கேட்டுகொள்ளவே இந்த புத்தகத்தை எழுதியுள்ளேன். திருவசனத்துக்கு திரும்புங்கள் என்பதே என் கதறல்.

எவ்வளவு எளிதாக விவரிக்க முடியுமோ அவ்வளவு எளிதாக, கதைகள், அனுபவங்கள், மூலமாக ஆவிக்குரிய சத்தியங்கள் எடுத்துச் சொல்ல முயற்சி செய்துள்ளேன். கதைகள் அனைத்துமே கற்பனைகள். ஆனால் அனுபவங்கள் உண்மையானவைகள். ஒரு சில வசனங்களை திருவிவிலியம் பொது மொழிப்பெயர்ப்பிலிருந்து பயன்படுத்தியுள்ளேன். இந்த புத்தகம் வேதாகமத்துக்கு நான் எழுதும் விளக்கவுறையல்ல வசனங்களுக்குள்ளாக உங்களை அழைத்துச் செல்ல ஜெபத்துடன் உழைத்துள்ளேன். “அவருக்கான உழைப்பு வீண் போகாது” என்ற நம்பிக்கையுடன்.

உங்கள் ஸாஜு

# உள்ளடக்கம்


1. கண்மலையின் மேல் அடித்தளமிடுகிறவன்.
2. அந்த வார்த்தை மாமிசமாகி......
3. நல்ல நிலத்தில் விழுந்த விதை
4. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து.....
5. உமது வசனத்தை தியானிக்கும்படி....
6. என் செவிகளை திறந்தீர்....
7. வசனம் V/S பாவம்
8. சாந்தமுள்ள ஆவியோடே
9. வசனத்தை தடுத்து நிறுத்தும் அரண்கள்....
10. வசனம் தரும் விடுதலை.
11. எளிய வார்த்தை... எழில்மிகு வார்த்தை...
12. வசனத்தை விளக்கும் ஆவியானவர் ...
13. வசனம் என்னும் கண்ணாடி
14. ஆவியின் பெலத்தினால் வரும் கீழ்படிதல்....
15. எழுப்புதலின் சாளரவாயில்..

# 1

# கன்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில், கிளார்க்காக பணிபுரியும் ராஜ்குமாரின் குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக இருந்தது. ராஜ்குமாரின் மனைவி ராணி ஒரு ஆங்கில பள்ளிக்கூடத்தில் டீச்சராக இருந்தாள். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு ரஞ்சித் என்று பெயர். அவனை கவனிக்கவும், பராமரிக்கவும், ராணி வேலைக்கு செல்வதை நிறுத்தினால். அவர்களுக்கு அடுத்தாக ராதிகா என்ற பெண் குழந்தையும் பிறந்தது. மகிழ்ச்சியாக இருந்த குடும்பத்தில் ஒரு பெரும் சோகம் ஏற்பட்டது. ராணி புற்றுநோயால் பாதிக்கப்பட்டாள். அதுவரை வயிறு வலி, கியாஸ் பிராப்ளம் என்று சொல்லி சொந்தமாக மருந்து மாத்திரையை சாப்பிட்டு வந்தாள். ஆனால் இப்போது புற்றுநோயின் கடைசி நிலையான மூன்றாம் கட்டத்தை எட்டியிருந்தது. வலி தாங்க முடியாமல் அழுதாள், துடித்தாள். சொர்க்கம் போலிருந்த அந்த வீடு சோக கடலாக மாறிற்று.

தன்னோடு வங்கியில் வேலைப் பார்க்கும் ராபர்ட் என்பவர் பட்டணத்தில் நடைபெறும் நற்செய்தி கூட்டத்தைப் பற்றி ராஜ்குமாரிடம் சொன்னார். "ஒரு வெளிநாட்டு ஊழியக்காரர் வருகிறார். அவர் நடத்தும் கூட்டங்களில் ஏராளமானப் பேர் சுகமடைகிறார்கள் என்றுச் சொன்னார்". அதற்கு ராஜ்குமார்

“இதெல்லாம் காசு சம்பாதிபதற்கான வித்தை” என்று பதிலளித்தார். “ஏதோ நீ படுற கஷ்டத்தை பார்த்து சொன்னேன் அவ்வளவுதான், உன்னால் முடிந்தால் கூட்டத்தில் கலந்து கொள்” என்று ராபர்ட் சொல்லி முடித்தார்.

வீட்டுக்கு வந்ததும் ராணியின் நிலைமையை பார்த்து ராஜ்குமாருக்கு என்ன செய்வது என்று தெரியாமல் ராணியை கட்டிபிடித்து அழுதான். என்ன செய்வது என்று தெரியாமல் நிலைகுலைந்து இருந்த போது காலையில் ராபர்ட் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தது. ராணியை அந்த நற்செய்தி கூட்டத்துக்கு அழைத்து சென்றான். அந்த நற்செய்திக் கூட்டத்தில் வைத்து அற்புதமான சுகம் ராணிக்கு கிடைத்தது. அன்று முதல் அவர்கள் இயேசுவை விசுவாசித்து சபைக்கு செல்ல ஆரம்பித்தார்கள்.

சபைக்கு செல்லும்போதெல்லாம் ராணி, ராஜ்குமாரின் அக்கா ரேணுகாவை சபைக்கு வா என்று கூப்பிடுவாள். ஏனென்றால் மூன்று வருடங்களுக்கு முன்பு திருமணமான ரேணுகாவுக்கு இரண்டு வயது பெண் குழந்தை ஒன்று இருக்கிறது. அவள் கணவன் வேறு ஒரு பெண்ணுடன் கள்ளத் தொடர்பு ஏற்பட்டு, ரேணுகாவையும், அவள் குழந்தையும் விட்டு விட்டு அந்த பெண்ணுடன் தனிகுடித்தனம் நடத்தி வருகிறான். இதில் மனமுடைந்த ரேணுகா பலமுறை தற்கொலை செய்ய முயற்சி செய்திருக்கிறாள். அப்போதெல்லாம் அதிர்ஷ்டவசமாக யாராவது வந்து தடுப்பார்கள்.

அப்படி இருக்கும்போது ஒரு நாள் ராணி வழக்கப்போல் ரேணுகாவை சபைக்கு செல்ல அழைத்தாள். முதலில் வர மறுத்த ரேணுகா, அன்றைய தினம் ராணி மிகவும் கட்டாயப்படுத்தி கேட்டு கொண்டதால், சபைக்கு வர சம்மதித்தால். அனைவரும் சபைக்கு சென்றார்கள். அன்று ஒரு விஷேசித்த உபவாச கூட்டம் சபையில் நடந்து கொண்டிருந்தது. சபைக்குள் நுழைந்ததும் அங்கு ஒரே சத்தமாயிருந்து. ரேணுகாவுக்கு அது தலைவலியாகயிருந்தது. “என்னடா நிம்மதி கிடைக்குமேன்னு வந்தா... ஒரே சத்தமாயிருக்கே... சரி வந்துட்டோம் எங்கயாவது உட்காருவோம்” என்று சொல்லி கடைசி வரிசையில் ஒரு மூலையில் ரேணுகா உட்கார்ந்தாள். பாட்டு முடிந்து பிரசங்கம் ஆரம்பித்தது, சிறிது நேரம் கழித்து, பிரசங்கம் செய்துக் கொண்டிருந்த அந்த ஊழியக்காரர் அவளைப் பார்த்து இப்படி சொன்னார்:

“அந்த கடைசி வரிசையில் சிகப்பு ஆடையை அணிந்து அங்கே உட்கார்ந்திருக்கும் சகோதரியைப் பார்த்து ஆவியானவர் இப்படிச் சொல்கிறார். உன்னுடைய வாழ்க்கை முடித்து கொள்வதற்காக விஷ பாட்டிலை வாங்கி நீ வைத்திருக்கிறாய். தேவன் உன்னை காண்கிறார்.

தற்கொலைச் செய்துக் கொள்ளாதே. உனக்கு உதவி செய்ய தேவனுடைய கரங்கள் வல்லமையுள்ளது. உன் வாழ்க்கையை இன்றே தேவனிடம் ஒப்புக்கொடு....”

இந்த வார்த்தைகள் ரேணுகாவை அதிர வைத்தது. ஏனென்றால் அன்று இரவு யாருக்கும் தெரியாமல் தற்கொலை செய்துக் கொள்வதற்காக பிரோவில் விஷப் பாட்டிலை வாங்கி வைத்திருந்தாள். ஒருவருக்கும் தெரியாத அந்த காரியத்தை இவர் சொல்ல வேண்டுமானால் ஏதோ சக்தி இந்த மார்க்கத்தில் இருக்கிறது என்று நம்பினாள். இப்படித்தான் ரேணுகாவும் சபைக்கு செல்ல ஆரம்பித்தாள்.

அடுத்தது பிரதர் தயாளன். எப்போதும் சிரித்த முகமாய் காட்சியளிக்கும் இவர். சபையில் மூப்பராக இருக்கிறார். அதிகமான ஆத்தும பாரம் கொண்டவர். யாரைப்பார்த்தாலும் இயேசுவைப் பற்றி சொல்லாமல் இருக்கவே மாட்டார். சபைக்காரியங்களில் மும்முரமாக இருப்பார். ஒரு தனியார் சிறு சேமிப்பு கம்பெனியில் மேனேஜராக வேலை செய்கிறார்.

சரவணன் தயாளனின் நிறுவனத்தின் எதிரில் ப்ளம்பிங் கடையை வைத்துள்ளார். தயாளனும், சரவணனும் அடிக்கடி சந்தித்து பேசிக்கொள்வார்கள். ஒருநாள் தயாளன் சரவணனுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்லி அந்த வாரம் ஆராதனைக்கு அழைத்துச் சென்றார். அதிலிருந்து இருவரும் மிகவும் நெருக்கமானர்கள். சரவணனுடைய எல்லா காரியங்களிலும் தயாளன் ஈடுபட்டார். தயாளனிடம் கேட்காமல் சரவணன் ஒன்றுமே செய்வதில்லை. இரண்டு வருடம் வெளிநாட்டில் வேலை செய்து சம்பாதித்த பணத்தை வங்கியிலிருந்து எடுத்து தயாளனின் சிறுசேமிப்பு கம்பெனியில் டெப்பாசிட் செய்தார்.

இவர்கள் அனைவரும் - அதாவது, ராணி, ராஜ்குமார், ரேணுகா, சரவணன் மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள். சபை ஆராதனையில் மிகவும் ஆர்வமுடன் பங்குபெற்று வந்தார்கள். பெறும் எதிர்ப்பை பெற்றோர்கள் மற்றும் உற்றார் உறுவினர்களிடம் சந்தித்தாலும் கூட அதையெல்லாம் கடந்து மிக மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள். சபையில் நல்ல வல்லமையான ஆராதனை, விஷேசித்த கூட்டங்கள் நடைபெற்றது. அதிலெல்லாம் தவறாமல் பங்குபெற்று மகிழ்ந்து வந்தார்கள்.

ஆனால் எதிர்பாராத நேரத்தில் பல விதமான பிரச்சனைகள் அவர்களை தாக்கியது. அந்த பிரச்சனைகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது அல்ல.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

ஆனால் அந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாமல் விசுவாசத்தில் இருந்து பின்வாங்கிப் போனார்கள்.

அது எப்படி என்றால்? ராணிக்கு அற்புத சுகம் கிடைத்தது உண்மைதான். ஆனால் ஒருநாள் ரஞ்சித் பள்ளி விட்டு வரும்போது எதிரே பாய்ந்து வந்த கார் அவன் மேல் மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தான். அதை இந்த குடும்பத்திற்கு தாங்க முடியாத அதிர்ச்சியை கொடுத்தது. ராணி தன் சுயநிலையை இழந்தாள். பலமுறை தற்கொலை செய்ய முயன்றாள். ராஜ்குமார் ஒரு பைத்திக்காரனைப் போல காணப்பட்டார். சொந்த பந்தங்கள் எல்லாரும் எதையெல்லாமோ சொன்னார்கள். குலத்தெய்வத்தை விட்டுப் போனதினால் வந்த சாபம் என்றுக் கூட சொன்னார்கள். ராஜ்குமார் வேலைக்கு போயி ஆறு ஏழு வாரங்கள் ஆகிவிட்டது. இவர்கள் சபைக்கு செல்வதையும் நிறுத்தி விட்டார்கள். பூசாரியான ராணியின் தந்தை மந்திர பூஜைகளை ராணிக்காக செய்ய தொடங்கினார்.

ரேணுகாவைப் பற்றி சொல்லப்போனால், அது வேறொரு கதை. அவளுக்கு தீர்க்கதரிசிகள் என்றாலே உயிர். அவர்களை ஆண்டவருக்கு சமமாக கனம் பண்ணி வந்தாள். ஒரு நாள் ஒரு தீர்க்கதரிசி கூட்டத்தின் மத்தியில் வைத்து “மகளே. உன் பாவ வாழ்க்கை விட்டு மனம் திரும்ப வேண்டும். உன் வழிகள் சரியாக இல்லை” என்று சொன்னார். ரேணுகாவுக்கு இதை சகித்துக் கொள்ள முடியவில்லை. கணவன் இல்லாமல் இத்தனை நாட்கள் வாழ்ந்தாலும், அவள் மனதில் வேறு ஒரு ஆணைப் பற்றி தப்பாக நினைத்ததேயில்லை. அனைவரிடம் சகஜமாக சிரித்துப் பேசுவாளே தவிர வேறு எந்தவித தப்பான எண்ணமோ, செயல்களோ ரேணுகாவிடம் இல்லை.

கூட்டம் முடிந்ததும், அவளை அன்று முதல் எல்லாரும் வித்தியாசமாக பார்க்க தொடங்கினார்கள். பாஸ்டர், மற்ற ஆண்கள் முகம் கொடுக்காமல் போகிறதும், எந்த ஆணாவது அவளோடு பேசினால் அவர்களது மனைவிகள் தூரத்தில் இருந்து இவளை பார்த்து முறைப்பதும் போன்ற காரியங்கள் ரேணுகாவை காயப்படுத்தியது. இதில் மனமுடைந்த ரேணுகா சபைக்கு செல்வதை நிறுத்திவிட்டாள்.

பிரதர் தயாளன் பார்க்க நல்லவராக இருந்தாலும் அவருடைய கம்பெனி திடீர் என்று ஒரு நாள் ‘மாயம்’ ஆனது. எக்கச்சக்கமான கடன்கள், மற்ற பண நெருக்கடிகள் காரணமாக முதலாளி உள்ளிட்ட அனைவரும் தலைமறைவானர்கள். இலட்சக்கணக்கான பணத்தை, அநேகர் இழந்தார்கள்.

நம்முடைய சரவணன் தன் பணத்தை இழந்தது மட்டுமல்லாமல் பெரும் ஏமாற்றத்துக்கும் ஆளானார்.

உண்மையில் நடந்தது என்ன?

ராணி, ராஜ்குமார், ரேணுகா, சரவணன் உள்ளிட்ட இவர்கள் உண்மையிலே விசுவாசிகளாக இருந்தார்களா? நிச்சயமாகவே விசுவாசிகளாகத்தான் இருந்தார்கள். ஆனால் இவர்களின் விசுவாசத்தின் அடித்தளம் தங்கள் அனுபவங்களாக இருந்தது. தங்கள் அனுபவங்களுக்கு ஒரு எதிர் அனுபவம் வந்த போது அவர்களுடைய விசுவாசம் தாக்குப் பிடிக்கவில்லை. நமக்கிருக்கும் அனுபவங்களுக்கு விபரீதமான வேறொரு அனுபவம் நம் வாழ்கையில் வரும்போது அந்த அனுபவம் இவர்களை போல நம்மை விசுவாசத்திலிருந்து பின்னடைய செய்கிறது.

நிலைத்திருக்கும் விசுவாசத்தையும், நிலைகுலைந்துப் போகும் விசுவாசத்தையும் பற்றி இயேசு சொல்லும் உவமையைப் பாருங்கள்.

“ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கண்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கண்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.” நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து , காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்” (மத்தேயு 7 : 24-27).

‘நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ...’ அவன்தான் கன்மலையின்மேல் அடித்தளத்தை அமைக்கிறவன். ஏனென்றால் அவனின் அடித்தளம் இயேசு கிறிஸ்துவின் திருவசனமே. திருவசனங்களின் மேல் தன் விசுவாசத்தை உறுதிப்படுத்தினவன், பெருமழையிலும், தண்ணீரின் பெருக்கத்திலும், பெருங்காற்றின் உக்கிரத்திலும், தள்ளாடிப் போவதில்லை. அப்படியில்லாதவன் மணலின்மேல் வீட்டைக் கட்டுகிறவன். நோவில்லாமல் எளிதாக வீட்டை கட்டி முடிக்கலாம். ஆனால் வீழ்ச்சியும் அதை போல எளிதாகவும், பயங்கரமாகவும் இருக்கும்....!

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

எப்பேர்ப்பட்ட அனுபவங்கள் வழியாக கிறிஸ்தவ வாழ்க்கைக்குள் வந்தாலும் நம்முடைய விசவாசத்தை திருவசனங்களின் மேல் உறுதிப்படுத்தவில்லையென்றால் அழிவு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நடக்கலாம். ஆகவே நாம் வசனத்தை அறிகிறவர்களும், வசனத்தை அனுசரிக்கிறவர்களும் ஆக இருக்க வேண்டும்.

# 2

# அந்த வார்த்தை மாமிசமாகி...

நமக்கு 'இரட்ச்சிப்பை' பெற்று தந்தது எது?

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமாகிய "பாவபரிகார பலி". சரியான பதில். எந்தவித சந்தேகமும் அதில் இல்லை.

ஆனால் இயேசு 'மாமிசத்தில் வெளிப்பட்ட வார்த்தை' என்று யோவான் சொல்லுகிறாரே. அது என்ன?

"ஆதியிலே 'வார்த்தை' இருந்தது, அந்த 'வார்த்தை' தேவனிடத்தில் இருந்தது. அந்த 'வார்த்தை' தேவனாயிருந்தது.. 'அந்த வார்த்தை' மாமிசமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்...." (யோவான் 1:1,14).

இந்த வேத பகுதியை வெருமெனே ஒரு முறை வாசித்து விட்டால் இதற்குள் அடங்கியிருக்கும் ஆழமான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியாது. 'வார்த்தை' என்பதற்க்கு 'லோகோஸ்' என்ற கிரேக்க சொல்லை யோவான் பயன்படுத்தியிருக்கிறார். இந்த கிரேக்க சொல் பல-பரிமான அர்த்தங்களை கொண்டது. எண்ணம், சிந்தனை, இருதயம், மனது, உணர்வுகள் போன்ற வெவ்வேறு அர்த்தங்கள் இதற்கு உண்டு.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

ஒரு மனிதனுடைய சிந்தனை அவனின் எண்ணம், இதயம், மனது என்பது உண்மையில் அந்த மனிதனின் ஆளுமையோடு சேர்ந்தாயிருக்கிறது. அவன் தன்னுடைய சிந்தனையை, எண்ணத்தை, மனதை வார்த்தைகள் வடிவில் வெளிப்படுத்துகிறான். இவைகளை அந்த மனிதன் வார்த்தைகள் வழியாக வெளிப்படுத்தவில்லை என்றால் அது அந்த நபருக்குள்ளே மறைந்து இருக்கும். ஆகவே வார்த்தைகள் ஒரு நபரின் மனதை வெளிப்படுத்துகிறது. அதைபோல இதயம் அல்லது மனது அந்த நபரையே பிரதிபலிக்கிறது. ஒரு நபரின் தனித்துவத்தையும் அவரது இதயம் (அ) மனதையும் வெவ்வேறாக பிரித்து பார்க்க முடியாத ஒன்று. ஒரு நபரின் வார்த்தைகள் அந்த நபர் எப்படிப்பட்டவர் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதே போலத்தான் தேவனுடைய வார்த்தைகள். வார்த்தைகள் தேவனுடையதாகும் போது அதன் முக்கியத்துவம் பல்லாயிரம் மடங்காக அதிகரிக்கும். அது அளவிட முடியாத ஒன்று. ஆதியில் சிருஷ்ட்டிப்பின் நேரத்தில் கிரியை செய்ததென்ன? தேவனுடைய வார்த்தைகள் தானே?

வேதம் என்ன சொல்வதென்று பாருங்கள்.

“கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது” (சங்கீதம் 33:6).

யோவான் தன்னுடைய சுவிசேஷத்தை எப்படி ஆரம்பிக்கிறார் என்று பாருங்கள் “சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை” (யோவான் 1:3). என்றுசொல்லி சங்கீதகாரனோடு சேர்ந்து அதை உறுதிப்படுத்துகிறார்.

தேவன் படைக்கிறவர் மட்டுமல்ல படைப்புகளை பாதுகாக்கிறவரும் கூட என்று யூதர்கள் நம்பினார்கள். “அவர் தமது வார்த்தையை பூமியிலே அனுப்புகிறார், அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது..... அவர் தமது வார்த்தையை அனுப்பி, இவைகளை உருகப்பண்ணுகிறார்; தமது காற்றை வீசும்படி செய்ய, தண்ணீர்கள் ஓடும்” (சங்கீதம் 147:15-18).

“அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி அவர்களை அழிவுக்கு தப்புவிக்கிறார்”. (சங்கீதம்: 107:20).

தேவன் எந்த வார்தைகளினால் இந்த பூமியைப் உருவாக்கினாரோ அதே வார்த்தைகளினால் இந்த பூமியை அழித்துவிடுவார் என்று பேதுரு

தன்னுடைய இரண்டாவது நிரூபத்தில் கூறியுள்ளார். “பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைக்கொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்தது என்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அதே வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயதீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது”. (2 பேதுரு 3:5-7).

யூத பண்டிதர்கள் வார்த்தைக்கு சுயாதீனமான சிறப்பு (an independant existance) உண்டு என்று நம்பினார்கள். ஏனென்றால் ஏசா தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் இருந்து ஆசிர்வாதத்தை பெற்று கொள்ள வரும்பொழுது, யாக்கோபுக்கு அனைத்து ஆசிகளையும் அளித்து விட்டேன் என்றும், ஆசிர்வாத வார்த்தைகள் ஏற்கனவே என் வாயைவிட்டு போயிற்று இனி அதை திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்லுகிறான்.

மேலும் யூத பண்டிதர்கள் ‘தேவன்’ மற்றும் ‘தேவனுடைய வார்த்தை’ என்ற இவ்விரு சொற்களையும் உள்மாற்றீடாக (interchangeably) பயன்படுத்துவார்கள். யூத சாஸ்திரிகள் “யகோவா” (YHWH) என்ற சொல்லை பெரும் அச்சத்தோடும், பக்தியோடும் தான் பயன்படுத்துவார்கள். பழைய ஏற்பாட்டின் அராமிக் (Aramic) மொழிபெயர்பாகிய ‘டர்கும்’ (Targum) மில் தேவனுடைய வார்த்தைகளுக்கு (Word of God) யெகோவா அல்லது யாஹ்வே (YHWH) என்று பயன்படுத்துவார்கள். அதைப்போல தேவன் என்பதற்கு தேவனுடைய வார்த்தை என்றும் பயன்படுத்தி வந்தார்கள்.

உதாரணமாக,

“அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர் கொண்டுப்போக மோசே அவர்களை பாளையத்திலிருந்து புறப்பட்பண்ணினான் (யாத் 19:17 - பழைய ஏற்பாடு).

“அப்பொழுது ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை எதிர்கொண்டு போக மோசே அவர்களை பாளையத்திலிருந்து புறப்படப்பண்ணிணான்”. (டர்கும் - பழைய ஏற்பாட்டின் ஆராமிய மொழி பெயர்ப்பு).

இந்த விளக்கங்களின் அடிப்படையில், “வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது” என்று வாசிக்கும் போது, “வார்த்தை என்பது தேவனுடைய இதயத்தின் வெளிப்பாடு” என்று மிக எளிமையான

முறையில் புரிந்து கொள்ளமுடியும். ஆம், வார்த்தை தேவனோடிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

கிரேக்க தத்துவ ஞானிகளுக்கும் ‘லோகோஸ்’ புதியதாக இருக்கவில்லை. “இப்பிரபஞ்சததை முழுவதும் அடக்கி அளுகைச் செய்யும் ‘யுத்தி’ தான் லோகோஸ்” என்று ஹிராக்ளீட்டஸ் சொல்லியிருக்கிறார். ப்ளேட்டோவின் மெய்யியலிலும் லோகோஸ்க்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. யோசனை (அ) சிந்தனை தான் உண்மை என்று அவர் நம்பினார். இப்பிரபஞ்சத்தில் காணும் மற்ற அனைத்துமே காணப்படாத யோசனையின் (அ) சிந்தனையின் பிரதிப்பலிப்பாகும்.

உதாரணமாக, ஒரு ஒவியத்தை எடுத்து கொள்வோம். உண்மையாகவே அந்த ஓவியம் எங்கே இருக்கிறது? அந்த ஓவியத்தை வரைந்த கலைஞரின் மனதுக்குள்! அவர் என்ன செய்கிறார்? தன்னுடைய மனதை ஒரு கான்வாஸ் (canvas) மீது வெளிப்படுத்துகிறார். அப்படியென்றால் நிஜம் என்பது ஓவியம் அல்ல. ஓவியனின் மனதுக்குள் இருக்கும் சிந்தனை (அ) எண்ணம். இந்த ‘எண்ணம்’ ஓவிய வடிவில் வெளிப்படும்போது தான் நாம் அதை கண்டு ரசிக்கிறோம்.

தன்னுடைய வாசகர்கள் கிரேக்க மற்றும் யூத தத்துவ அறிவை உடையவர்கள் என்பதை தெளிவாக புரிந்துக் கொண்ட யோவான் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்பை ‘லோகோஸ்’ தத்துவத்தின் பின்னணியில் விளக்குகிறார். இயேசு தேவனிடமிருந்து வேறுபடுத்தி பார்க்க முடியாத தேவனின் ‘லோகோஸ்’ என்றும், அந்த ‘லோகோஸ்’ வார்த்தையை - உலகத்திலுள்ள மக்களுக்கு புலப்படும் முறையில் வெளிபடுத்தப்பட்டது என்று யோவான் நிரூபிக்கிறார். அந்த தேவனின் லோகோஸ், இந்த முழு பிரபஞ்சத்தையும் ஆளுகை செய்யும் தேவனின் லோகோஸ் - இதோ, இப்பொழுது பிதாவான தேவனின் மகிமையின் வெளிப்பாடாக நமக்குள்ளே வாசம் செய்கிறார். தேவனுடைய வார்த்தை மாமிசமாயிற்று! மனித உருவடைந்திருக்கிறது! அவர்தான் இயேசு கிறிஸ்து. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. தேவனை பற்றி நமக்கு இதுவரை இருந்த அறிவு மறைவான, மங்கலான, தெளிவற்ற அறிவாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுதோ பிதாவாகிய தேவனின் மடியிலிருக்கிற ஒரேப்பேரான குமாரன் நம் மத்தியில் இறங்கி வந்திருக்கிறார். பிதாவாகிய தேவனை நமக்கு தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தி தருகிறார்.

(யோவான் 1:14, 18)

தேவனுடைய லோகோஸ், மனு உருவமெடுத்து நம் மத்தியில் வாழ்ந்ததினாலே, தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. அதைப் போல தேவனுடைய வார்த்தை மாமிசமானதற்க்கு முக்கியமான வேறொரு நோக்கமும் இருக்கிறது. அது என்னவென்றால், "கிருபையும், சத்தியமும் இந்த உலகத்திற்கு கொண்டு வர.... அவரை ஏற்றுக் கொண்டு அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி..... வார்த்தை மாமிசமானது" (யோவான் 1:17, 12).

நம்மை தேவனுடைய பிள்ளைகளாக மாற்ற இயேசு கிறிஸ்து என்னும் மாமிசமாக மாறின வார்த்தைக்கு பெரிய கிரயம் செலுத்த வேண்டியிருந்தது. அந்த பெரிய கிரயம் இயேசு கிறிஸ்துவின் சொந்த ஜீவனே ! ஆம், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம்மாக தான் இரட்ச்சிப்பு என்றால் என்ன என்பதை ஒருவர் அறிந்து கொள்ள முடியும். ஏனென்றால் அங்கு தான் மாமிசத்தில் வெளிப்பட்ட வார்த்தை (இயேசு கிறிஸ்து) தம்மையை பலியாக்கினார். நமக்கு இரட்சிப்பை பெற்று தந்த பாவபரிகார பலியை அங்கு பார்க்கிறோம்.

நாம் இரட்சிப்பை பெற்று கொள்வதற்கு நம்மை பாத்திரவான்களாக்குவது. வசனம் என்றால். நம்மை இரட்சிப்பில் வளர செய்வது எது? அதுவும் வசனமே!

"நீங்கள் வளரும் படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, 'திருவசனமாகிய' களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சயாயிருங்கள்" (1பேதுரு 2:3).

மாமிசத்தில் வெளிப்பட்ட வார்த்தை இரட்ச்சிப்பை பெற்றுத் தந்தது என்றால் எழுதப்பட்ட வார்த்தை நம்மை இரட்சிப்பில் நிலைநிறுத்துகிறது. வசனத்தைப் புறக்கணிப்பவர்களால், ஆவிக்குரிய வாழ்க்கையில் நிலைநிற்க முடியாது.

"அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்படியாதவர்களாயிருந்து இடருகிறார்கள்" (1பேதுரு 2:8).

நாம் ஒவ்வொருவரும் இரட்சிப்புக்குள் வர பல விதமான அனுபவங்கள் ஏதுக்களாக இருந்திருக்கலாம். ஆனால் நாம் இரட்ச்சிப்படைய ஒரே ஒரு

வழிதான் உண்டு. பல வழிகள் இல்லை. அதைப் போல அனுபவங்கள் நமக்கு இரட்ச்சிப்பை பெற்றுத் தராது. அவைகள் நம்மை இரட்ச்சிப்புக்கு நேராக கொண்டு வரத்தான் செய்யும்.

நித்திய வார்த்தையாகிய இயேசு தம்முடைய சிலுவை மரணம் வழியாக நித்தியஜீவனை நமக்கு அளித்தார். இனி நாம் பெற்றுக் கொண்ட இரட்ச்சிப்புக்குள் வளர கன்மலையின்மேல் தன் அடித்தளத்தை அமைத்துக் கொண்டவனைப் போல எழுதப்பட்ட தேவவார்த்தைகளின் மீது நம்முடைய விசுவாசத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொள்ள வேண்டும். திருவசனமாகிய களங்கமில்லா பாலைக் குடித்து இரட்ச்சிப்பில் வளர வேண்டும்.

பிரியமானவர்களே, மாமிசத்தில் வெளிப்பட்ட தேவ வார்த்தை உங்கள் இரட்ச்சிப்புக்கு என்று தேவன் ஆயத்தப்படுத்தின வழியாக இருக்கும் போது, எழுதப்பட்ட தேவ வார்த்தைகள் நீங்கள் இரட்ச்சிப்பில் வளர தேவனால் ஆயத்தப்படுத்தப்பட்ட வழியாக இருக்கிறது. (The incarnated word of God is God’s way for you to obtain your salvation while the written word of God is God’s way for you to sustain your salvation)

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் (வசனம்) நாம் பெற்றுக்கொண்ட இரட்ச்சிப்பில் நம்மை தொடர்ந்து வளர செய்கிறது. பிரியமானவர்களே, எழுதப்பட்ட் வசனத்தில் வளராமல் இருந்ததினால் தான் ராணி, ராஜ்குமார், ரேணுகா மற்றும் சரவணன் விசுவாசத்தில் இருந்து பின் வாங்கி போனார்கள்.

# 3

# நல்ல நிலத்தில் விழுந்த விதை...

வின்சென்ட் ஒரு நற்செய்தி கூட்டத்திற்கு சென்று சுவிசேஷத்தை கேட்டான். அதற்கு பிறகு அவன் வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக இருந்தது. அடுத்த ஞாயிறு காலையில் தன் வீட்டின் அருகாமையிலுள்ள ஒரு சபைக்கு சென்றான். ஒரே சந்தோஷம், உற்சாகம். சபை மக்களை பார்த்த வின்சென்ட், அவர்கள் வாழ்வில் உள்ள சந்தோஷத்தை கண்டு அவர்களைப் போல தன்னுடைய வாழ்விலும் ஒரு புதிய தொடக்கத்தை விரும்பினான்.

“நான் என் குடிபழக்கத்தை விட்டு விடுகிறேன். இன்று முதல் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ விரும்புகிறேன். சபை மக்கள் அனைவரும் எனக்காக ஜெபியுங்கள்” என்று சாட்சியும் அன்று சபையில் சொன்னான். இதுவரை இல்லாத சமாதானத்தையும், புத்துணர்ச்சியும் அனுபவித்தான். வின்சென்ட் சபையிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்து படுத்து தூங்கினான். மாலையில் ஒரு நண்பர் வந்து கதவை தட்டினான். வின்சென்ட் தூக்கத்தை விட்டு எழுந்து வந்து கதவைத் திறந்து பார்த்தான். அங்கே தன் நண்பன் சுந்தர் நின்று கொண்டு இருந்தான்.

“ஏய், வாடா மச்சான், டவுனுக்கு போவோம், காலையிலேயே வந்திருவியே இன்னைக்கு என்ன ஆச்சு உனக்கு? சரக்கு ஏதாவது கிடச்சுதா, மாப்பிளே? ஏய், என்னடா நா பாட்டுக்கு பேசிக்கிட்டே இருக்கேன், நீ

ஒன்னும் சொல்லாமல் உம்மனு இருக்க? என்ன ஆச்சு...? சரி வா போலாம், அந்த மாருதி பார்ட்டி அட்வான்ஸ் தந்திருக்கு போயி ஒரு புடி புடிப்போம்" என்று வழக்கம் போல சுந்தர் அவன் ஸ்டைலிலே சொன்னான்.

இதையெல்லாம் தலையை துக்காமல் வின்சென்ட் கேட்டுக் கொண்டிருந்தான்.

"டேய், சுந்தர் நான் வரலேடா.. இனியும் இந்த மாதிரி காரியங்களுக்கெல்லாம் வரமாட்டேன்டா, என்ன விட்டுரு. உண்மையாக, வாழனும் பரிசுத்தமா இருக்கணும், நீயும் கிறிஸ்துவன் தானே சுந்தர், எல்லாத்தையும் விட்டுருடா"என்று வின்சென்ட் சொல்ல.

"அட போடா, இப்ப தான் லைஃப் என்ஜாய் பண்ண முடியும். அப்புறம் கல்யாணம், குழந்தை, குட்டி, அது, இதுன்னு லைஃப் புல்லா காம்பிளிகேட்டு ஆயிடும் மச்சி, டேய், வின்சென்ட் நாமென்ன குடிச்சு குத்தாடி, அலையவா போறோம், அஃப்ட்ரால் கொஞ்சம் பீர். 6% ஆல்கஹால்... உடம்புக்கு குளிர்ச்சியா இருக்கும், நல்ல வாட்ட சாட்டமா இருக்கலாம் வாடா..... வின்சென்ட்", என்று வற்புறுத்தினான்.

"அப்படி இல்லடா.. அது எல்லாம் தப்பு, குடிகாரர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லைன்னு பைபிள் சொல்லுது. அதுமட்டும் இல்ல இன்னைக்கு சர்ச்சுலே கூட பாஸ்டர் அதேதான் பிரசங்கம் பண்ணினார்".

"என்ன...? சர்ச்சுக்கு போனீயா?, டேய் இயேசப்பா கானாவுருல்ல என்னடா பண்ணினாரு? டேய், ராப்போஜனத்துக்கு நம்ம குடிக்கிறது என்னடா? அங்க அவுங்க ஒரு பாட்டில எல்லாரும் குடிக்கிறாங்க, நம்ம ஒராளுக்கு ஒருபாட்டில குடிக்கிறோம். அவ்வளுவ தான் மாப்பிளே! உனக்கு ஒண்ணு தெரியுமா. பவுலடியார் கூட திமோத்தி கிட்ட கொஞ்மா டெய்லி குடிக்க சொல்லியிருக்கிறார். அது உடம்புக்கு நல்லதுதானா!!" என்று தன் பைபிள் ஞானத்தை சுந்தர் தட்டி விலாசினான். சுந்தர், வின்சென்டை அது இது என்று சொல்லி கடைசியில் தன்னுடன் இழுத்து சென்றான். அவ்வளவுத்தான் வின்சென்ட் திரும்பவும் குடிக்க ஆரம்பித்தான். பிறகு சபைக்கு போகவேயில்லை.

சிவகுமாரின் மனைவி தேவியும் மிக நேர்மையுடன் சபைக்கு சென்று வந்தாள். வைராக்கியமான விசுவாசமுடையவள். அவளது ஊக்கமான ஜெபமும், சாட்சிகளும் மற்ற சபை மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை உருவாக்கியது. புறஜாதி மக்களிருந்து வருகிற

இப்படிப்பட்ட புது விசுவாசிகளை எடுத்துகாட்டாக வைத்து தேவன் நமக்கு ஆவிக்குரிய எரிச்சலை உண்டு பண்ணுகிறார் என்று பழைய விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சொல்லி கொண்டார்கள்.

“பாஸ்டரய்யா எங்க ஏரியாவுல ஒரு செல் மீட்டிங் ஆரம்பிங்க அதை எங்க வீட்டிலேயே நடத்துங்க” என்று தேவி சொல்ல பாஸ்டர் பிரமித்து போனார்.

“அட என்ன சிஸ்டர் சொல்றீங்க, அதுக்கு உங்க ஹஸ்பெண்ட் ஒத்துக்குவாரா? அதுமட்டுமில்ல, உங்க வீடு ஹவுஸிங் காம்பளக்ஸ் ஏரியாவுலதானே இருக்கு, இப்ப வேண்டாம் சிஸ்டர், கொஞ்ச நாள் ஆகட்டும்” என்று பாஸ்டர் சொன்னார்.

“அதெல்லாம் பரவாயில்லை பாஸ்டரய்யா.... இசேப்பா பார்த்துக்குவாரு, கர்த்தர் நமது பட்சத்தில் இருந்தால், நமக்கு எதிராக யாரும் வரமுடியாது. நீங்க எல்லாரும் ஜெபத்தோடு வாங்க, பாஸ்டரய்யா”

தேவியின் உற்சாகத்தை கண்டதும் பாஸ்டர் ‘ரைட்’ன்னு சொன்னார்.

செல் மீட்டிங்க் நடத்தும் நாள் வந்தது. தேவிகாவின் வீடாயிருந்ததால் எல்லாரும் உற்சாகத்துடன் திரண்டு வந்தார்கள். ராஜ்குமாரும் எங்கயும் போகாமல் தேவிகா சொன்னதினால் வீட்டிலே இருந்தார். கூட்டத்துக்கு வந்தவர்களிடம் நலம் விசாரித்தார். ஆனால் ஜெபம் ஆரம்பித்ததும் மாடியில் போய் உட்கார்ந்து விட்டார். பாட்டு சத்தமும், கையடியும் மிக அதிகமாக இருந்தது. பக்கத்து வீட்டுகாரர்கள் கேலி செய்து சிரிப்பதையும், கெட்ட வார்த்தைகளினால் திட்டுவதையும் மாடியிலிருந்த வண்ணமாக சிவக்குமார் கவனித்தார். ஜெபம் முடிந்து எல்லாரும் போன பின்பு சிவகுமார் தேவியிடம் சொன்னார். “இங்க பாரு, இது தான் கடைசி... இனி இந்தமாதிரி ஒன்னும் வெச்சுக்காத. மனுஷனுக்கு வெளிலே இறங்கி நடக்கணுமா, வேண்டாமா?”

அடுத்து வாரமும் செல் மீட்டிங் நடந்தது. அன்று சிவக்குமார் இல்லாத நேரமாயிரந்தது. இதைப்பற்றி தெரிய வந்தபோது சிவகுமார் கடும்கோபம் கொண்டார். தன்னுடைய சொல்லை மீறின தேவிகாவை அவர் மன்னிக்க முடியாமல் அவளை சரமாரியகாக அடித்தார், அவள் சபைக்கு செல்வதையும், ஜெபம் செய்வதையும் தடுத்தார். திருமணமாகி தேவிகாவை சிவக்குமார் அடித்தது இதுவே முதன் முறை. தன் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் சபைக்கு சென்று போதகரையும், சபை மக்களையும் சிவக்குமார் மிரட்டினார்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

திரும்ப வீட்டுக்கு வந்த சிவகுமார் பைபிள், பாட்டு புத்தகம், மற்ற எல்லா பொருள்களையும் தூக்கி வீசினார். இச்சம்பவம் தேவிக்காவை மிக சோகத்துக்கு ஆளாக்கியது. “ஆண்டவர் ஏன் இதை அனுமதித்தார்? அவர் ஏன் இதை தடுத்து நிறுத்தவில்லை, நான் ஆண்டவருக்கு இவ்வளவு உண்மையாயிருந்தும், நான் உபத்திரப்படுத்துவற்கு, அவர் ஏன் விட்டுக் கொடுத்தார்?” போன்ற கேள்விகளுக்கு முன் அவளுடைய விசுவாசமும், தேவனுடன் இருந்த அன்பையும் இழந்தாள். தேவிகா தன் கணவனுக்கு பயந்து, தன்னுடைய குடும்ப வாழ்க்கை சீரழிந்து விடக்கூடாது என்று சொல்லி, சபைக்கு செல்வதையும், இயேசுவை ஆராதிப்பதையும், ஜெபம் செய்வதையும் நிறுத்திவிட்டாள்.

செபாஸ்டியன், ரோஸ்மேரி தம்பதியினர்கள் ஒருமித்து இயேசுவை ஏற்றுக்கொண்டு கத்தொலிக்க சபையை விட்டு பெந்தெகோஸ்தே சபை ஒன்றுக்கு போக தொடங்கினார்கள். சொந்தக்காரர்கள் அனைவரும் எதிர்த்த போதிலும், அதையெல்லாம் உதறிவிட்டு விசுவாசத்திற்காக மிக வைராக்கியத்துடன் காணப்பட்டார்கள். ஆகவே சபை மக்களும் அவர்களை நேசித்து அவர்களுக்காக ஜெபிக்கவும் செய்தார்கள்.

பி.எட். பாஸான ரோஸ்மேரிக்கு கத்தொலிக்கர்கள் நடத்தும் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தாள். ஆனால் அவர்கள் கத்தொலிக்க சபையை விட்டு பெந்தெகோஸ்தே சபைக்கு சேர்ந்ததினாலே வேலை கொடுக்க அந்த பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியர் மறுத்தார். “நமது திருச்சபையில் உறுப்பினாராக இருப்பவர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும். உங்கள் விசுவாசம் உங்களை இரட்சிக்கட்டும் எங்களாலே ஒண்ணுமே செய்ய முடியாது” என்று பள்ளி நிர்வாகிகள் சொல்லிவிட்டார்கள்.

ரோஸ்மேரிக்கும், செபாஸ்டியனுக்கும் என்ன சொல்வது என்று தெரியவில்லை. இப்படி ஒரு பிரச்சனை வரும் என்று கனவில் கூட எதிர்பார்க்கவும் இல்லை. செபாஸ்டியன் ஒரு விவசாயி. அவருடைய வருமானத்தை மட்டும் வைத்து இந்த காலத்தில் ஒரு குடும்பத்தை நடத்த முடியாது. வாழ்க்கைக்கு பணம் அவசியம் தானே.

மறுநாள் காலையில் செபாஸ்டியன் கத்தொலிக்க சபையின் பாதிரியை நேரடியாக சந்தித்து பேசுவதற்க்காக சென்றார். ஃபாதர் ரொஸாரியோ, அவர் அந்த பள்ளிக்கூடத்தின் மேனேஜராக இருக்கிறார். “ஃபாதர், இனிமேல் இந்த பெந்தேகோஸ்தே சபைக்கு போகமாட்டோம், இனி சாகும் வரை நாங்கள்

திருச்சபையில் தான் இருப்போம். தயவு செய்து ரோஸ்மேரிக்கு வேலை தாங்க ஃபாதர்". என்று அழுகு கேட்டுக் கொண்டார்.

பிரியமானவர்களே இவர்களுக்கு என்ன நடந்தது? அதாவது செபாஸ்டியன் ரோஸ்மேரி, வின்செண்ட், தேவிகா என்பவர்கள் இரட்ச்சிப்பின் அனுபவத்தை பெற்ற பிறகு, அவர்கள் பின் வாங்கி போனது ஏன்? அவர்கள் எல்லோரும் தேவனுடைய வார்த்தைகளை கேட்டார்கள், அதை ஏற்று கொண்டார்கள், கீழ்படிய வேண்டும், மாற வேண்டும் என்றும் எண்ணினார்கள். ஆனால் அவர்கள் யாருமே கீழ்படிதலில் தொடர்ந்து முன்னேற துணியவில்லை. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளையே பயன்படுத்துவோமென்றால் அவர்கள் யாருமே அறுவடைக்கென்று தயாராகவில்லை. அவர்களுடைய இதய வயல் ஆயத்தப்படுத்தபடவில்லை.

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்க புறப்பட்டான், அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதை பட்சித்துப் போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்தது, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது" (மத்தேயு 13:3-9).

இந்த உவமையின் விளக்கத்தை இயேசுவே தமது சீஷர்களுக்கு விளக்குவதினால், வியாக்கியான நூல்களை தேடி செல்ல வேண்டிய அவசியமில்லை. 'விதை' தேவனுடைய வார்த்தையை குறிக்கிறது.

"ஆகையால் விதைக்கிறவனைப் பற்றியே உவமையைக் கேளுங்கள். ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தை கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதை பறித்துகொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தை கேட்டு, உடனே அதை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்கிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சகாலம் மாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தை

கேட்கிறவனாய் இருந்ததும், உலக கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிபோடுகிறதினால், அவனும் பலனற்றுபோவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தை கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்'' (மத்தேயு 13:18-23).

நற்செய்தி கூட்டதின் போது வின்சென்ட் கேட்ட வசனம் வழியருகே விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அது ஆழத்தில் வேரூன்றப்படவில்லை. ஆகவே வளரவுமில்லை. தன்னுடைய பாவத்தை உணர்ந்து கொண்ட அவன் அதை விட்டு விலகி பரலோக ராஜ்யத்தினை பெற்று கொள்ள வாஞ்சித்தான். அவன் நண்பன் சுந்தர் வந்து அந்த வார்த்தைகளை வின்செண்ட் உள்ளத்திலிருந்து எடுத்துப் போட்டான்.

தேவிகாவின் வாழ்க்கையில் வசனம் பாறை இடங்களில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பாயிருந்தது. அந்த விதை வேகமாக வளர்ந்தது. எவ்வளவு உற்சாகமாக காணப்பட்டாள் அவள்! ஆனால் வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பமும் அவள் எதிர்பார்க்கவே இல்லை. தேவிகா அந்த தீவெயிலில் காய்ந்து கருகி போனாள்.

அதைப்போல, செபாஸ்டியன் ரோஸ்மேரி இவ்விருவரும் வசனம் கேட்டவர்கள்தான். குடும்பத்தினரின் எதிர்ப்போ, நிந்தையோ கடிந்து கொள்ளுதலோ அவர்களை அசைக்க முடியவில்லை. ஆனால் அவர்களை தகர்த்தெரிந்ததென்ன? "உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கம்" என்ற முள்ளுகளே!

இது வேத வார்த்தைகள் எங்கும் மழையைப் போல் பொழியும் பொற்காலம். தேவனுடைய வார்த்தைகளை ஏராளம் பேர் தினமும் கேட்கிறார்கள். அப்படியிருந்தும் தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுத்து, அதற்கு கீழ்ப்படிந்து அவருடைய வசனத்தில் நிலைநிற்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகிறது. இன்னல்கள் மத்தியில் இடறலடைகிறார்கள். விசுவாசப்பாதையில் திணறி தள்ளாடுகிறார்கள். உலக காரியங்களுக்காக உள்ளத்தை பறி கொடுத்து உன்னதரோடுள்ள அன்பின் உறவை உதரி தள்ளி போடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? மேற்சொன்ன காரணங்கள்தான். சாத்தானுக்கு எப்போது வேண்டுமானாலும் இதயத்திற்குள் பிரவேசிக்காமலேயே தட்டி செல்வதற்கு சாதமாக வசனத்தை வழியருகே விட்டு விடுகிறார்கள் அல்லது ஆசாபாசங்கள் எவ்வித தடையுமின்றி நுழைந்து விட இதயவாசலை அதற்கு என்று திறந்து வைத்து

விடுகிறார்கள்.

ஒரு சிலருக்கு வசனம் சொகுசு வாழ்கையை தரவேண்டும். அவர்களுக்கு வசனத்தோடு வரும் உபத்திரவங்கள், துன்பங்களை பொறுத்து கொள்ளமுடியாது. ஆதாயம் ஒன்றே ஆவல். மற்ற சிலருக்கு வசனத்தில் நிலைநிற்பதுக்கான கிரயத்தை செலுத்த மனதில்லை பேராசையினாலும், இச்சையினாலும் நிறைந்தவர்கள்.

கென்னடி என்பவர் தீவிர கத்தோலிக்க குடும்பத்திலிருந்து கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டார். குடி பழக்கத்துக்கு அடிமையாயிருந்தவர் அதில் இருந்து விடுதலையானார். நகரிலுள்ள ஒரு தனியார் டிரான்ஸ்போர்ட் அலுவலகம் ஒன்றில் மேனேஜராக பணியாற்றுகிறார். கென்னடி ஒரு பெந்தேகோஸ்தே சபைக்கு செல்வதை பெற்றோர்கள் எதிர்த்தார்கள். பல புரோகிதர்கள் இந்த குடும்பத்தின் உறுப்பினர்களாயிருந்ததால், கென்னடியின் அம்மா எப்படியாவது அவரை பெந்தேகோஸ்தே சபைக்கு செல்வதில் இருந்து அவரை நிறுத்த வேண்டும் என்று சொல்லி முயற்சி செய்தார்கள். அதற்கு கென்னடி சொன்னார்: “அம்மா நான் ஒரு தப்பும் செய்யவில்லை  இப்போ எவ்வளவு நல்லவனா இருக்கிறேன் பாருங்க குடிக்கிறேனா? இல்லதானே, இதெல்லாம் அந்த சபைக்கு போனதுக்கு பிறகு தானேம்மா...”

கென்னடியின் பெற்றோர்கள் அவனுக்கு வந்த மாற்றத்தை கண்டு சந்தோஷப்பட்டார்கள். மகன் நல்லா இருந்தா போதும் என்று சொல்லி மௌனமாயிருந்தார்கள்.

ஒரு நாள் குடும்ப விழாவில் பங்கேற்க சென்றார். கென்னடியின் உறவினர்கள் மது அருந்த அழைத்தபோது “உங்களோடுக் கூட சந்தோஷமாக இருப்பது எனக்கு பிடித்த காரியமாயிருந்தாலும், என் ஆண்டவருக்கு பிடிக்காத காரியங்களை நான் செய்யமாட்டேன்” என்று சொன்னார்.

கென்னடி தன் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளித்தார். வேதாகமத்தை தொடர்ந்து தியானம் செய்தார். இப்படி ஒரு வலுவான கிறிஸ்துவ வாழ்க்கையை அமைத்து கொண்டார். ஒரு நாள் அவரது முதலாளி அடுத்த ஆறு மாதத்திற்கு ஞாயிற்றுக் கிழமை காலையில் வேலைக்கு வர வேண்டும் என்று சொன்னார். ஞாயிற்றுக்கிழமை சபை ஆராதனையை கென்னடி தவிர்க்கவே மாட்டார். ஏனென்றால் அவர் அந்த நேரத்தை மிகவும் நேசித்தார்.  இது தன்னுடைய விசுவாசத்தின் சோதனை என்று உணர்ந்த

அவர். முதலாளியிடம் தனக்கு ஆராதனைக்கு போக வேண்டும், அதனாலே வரமுடியாது என்று சொல்லிவிட்டார். ஆரம்பத்தில் முறுமுறுத்தாலும் கூட கென்னடியின் முதலாளி வேறொரு நபரை நியமித்தார். கென்னடியின் வாழ்க்கை தனது நண்பர்களுக்கும், சகபணியாளர்களுக்கும் ஒரு சவாலாகவும், உதாரணமாகவும் விளங்கியது. தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக தனது இதயத்தை ஒரு நல்ல நிலமாக ஆயத்தப்படுத்த ஒப்புக் கொடுத்தார். அது அவருக்குள் ஓங்கி வளர்ந்து கனிகளை அளிக்க துவங்கியது. அவருக்குள் உட்பிரவேசித்த வசனத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டார். அவர் ஒரு கனி கொடுக்கிற மரமாக இருந்தார்.

ஆம் நல்ல நிலத்தில் விழுந்த விதைத்தான் விளைச்சலை தருகிறது. சிலர் நினைப்பது போல வழியருகே விழுந்தது முப்பதும், கற்பாறை நிலத்தில் விழுந்தது அறுபதும், நல்ல நிலத்தில் விழுந்தது நூறு மடங்கு பலனை தந்தது என்று அல்ல. மாறாக நல்ல நிலத்தில் விழுந்த விதை மட்டும் தான் முப்பதும், அறுபதும், நூறு மடங்கு விளைச்சலை தருவதாக இயேசு தன் உவமையில் சொல்லி இருக்கிறார். எல்லா இடங்களிலும் விதை ஒன்று போல விதைக்கப்பட்டது. நிலம் தான் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகள் மட்டும் பலனை தருகின்றது. வேத வசனங்கள் பயனுள்ளதாக ஆக வேண்டுமென்றால் ஆயத்தமான இதயம் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு மிக அவசியம் என்று மறந்து விடாதீர்கள்...!

# 4

# கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து...

சுனிதாவுக்கு தனது ஆவிக்குரிய வாழ்வில் எப்படியாவது முன்னேற வேண்டும், ஆண்டவருக்கென்று வைராக்கியமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. இதை சபைப் போதகருக்கு தெரிவித்தபோது "வேதாகமத்தை அதிகமாக தியானம் செய்ய வேண்டும், தேவமனிதர்கள் அவருடைய வசனங்களை இரவும் பகலும் தியானம் செய்தார்கள். அது தான் அவர்களுடைய வெற்றிகரமான வாழ்க்கையின் ரகசியம்" என்று சொல்லி சங்கீதம் 1யை வாசிக்க சொன்னார்.

"இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்ற வசனம் சுனிதாவை மிகவும் கவர்ந்தது. பரவசமடைந்தாள். தன்னாள் முடிந்த வரை வேதாகமத்தோடு கூட அதிக நேரம் செலவிடவும் குறைந்தது 5 அதிகாரங்கள் தினமும் வாசிக்கவும் தீர்மானித்தாள்.

இரவும் பகலுமாக வசனம் வாசிப்பதும் தியானம் செய்வதும் நடைமுறை வாழ்கையில் எளிதல்ல என்பதை புரிந்து கொண்டாள். ஏனென்றால் பிள்ளைகளை கவனிக்க வேண்டும், கணவனை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். சமையல் போன்ற தினசரி நடைமுறைகள் ஏராளமாக இருப்பதால் மதியம் இதற்காக நேரத்தை ஒதுக்கிவைத்தாள். மதியம் டிவி பார்ப்பது

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

நாளிதழ்கள் வாசிப்பது என்ற பழக்கங்களை கைவிட்டாள் சுனிதா.

வசனதியானம் ஆரம்பித்தாள். ஆனால் ஒரு பகுதியைக் கூட தன்னாள் கவனித்து வாசிக்கமுடியவில்லை. தூக்கம் துக்கி போடுது! முகத்தை இரண்டு மூன்று தடவை கழுவி பார்த்தாள். ஆனால் வேதம் வாசிப்பது 'போரிங்' ஆக இருந்தது.

"ஆண்டவரே டிவி பார்க்குபோதோ, நாளிதழ்கள் வாசிக்கும் போதோ எனக்கு இப்படி வருவதில்லையே, உம்முடைய வேதத்தை இரவும் பகலும் தியானிக்கிறவன் பாக்கியவான் என்று சொல்லியிருக்கிறது. நான் என்ன செய்வேன்? எனக்கு உதவும்" என்று கதறி அழுது ஜெபித்தாள். ஒரு அதிகாரத்தை வாசிப்பது என்றாலே எவ்வளவு சிரமமாக இருக்கிறது. இரவும், பகலும் இதை எப்படி தியானிக்க முடியும்.

ஒன்றாம் சங்கீதத்தை ஒருமுறை கூட கவனமாக வாசித்து பாருங்கள்.

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கும் மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 1 : 2).

அன்பானவர்களே, வேதத்தின் மேல் பிரியமாயிருக்கிறவனால் தான் இரவும் பகலும் வேதத்தில் தியானமாயிருக்க முடியும். அல்லாதவர்களுக்கு வேதம் வாசித்தல் என்றால் ஒரு நேர்த்திக்கடன், ஒரு மதசெயல்பாடு அவ்வளவுத்தான். பிரியமாயிருப்பவன் இரவும் பகலும் தியானமாயிருப்பான்.

ஆனால் வேதத்தில் நம்மால் மகிழ்ச்சியாயிருக்க முடியும். அதற்காக, வேதாகமத்தை குறித்து நாம் கொண்டுள்ள கருத்து என்ன என்பதை பரிசோதிக்க வேண்டும். வேதாகமத்தைக் குறித்து உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன? அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கையொடு வேததாகமத்தை எப்படி சம்மந்தப்படுத்தி கொள்கிறீர்கள்? ஏனென்றால் ஒரு சிலருக்கு பைபிள் என்றாள், கட்டளைகள் நிறைந்த புத்தகம். நாம் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக் கூடாது போன்ற விதிமுறைகள் அடங்கிய புத்தகம். நிச்சயமாகவே இத்தகைய காரியங்கள் இருந்தாலும் கூட வேதாகமத்தை சட்ட புத்தகமாக (Book of Law) பார்ப்பவர்களுக்கு வேதத்தை பிரியப்படவோ, இதை வாசிப்பதின் மூலம் மகிழ்ச்சியை கண்டடையவோ முடியாது. "இந்தியன் குற்றவியல் நடைமுறை சட்டம்" (INDIAN PENAL CODE) வாசித்து ரசிக்க யாரால்தான் முடியும்? வேறு சிலர் வேதத்தை கட்டளைகளாக எடுத்து கொள்ள வேண்டிய தேவையில்லை. ஆண்டவர்

நம்மை குறித்துள்ள விருப்பங்களைதான் அதில் வெளிப்படுத்தியிருக்கிறார். அதனை நமக்கான அறிவுரையாக எடுத்தால் போதும் என்பார்கள். பிரியமானவர்களே, யாருக்காவது வீட்டிலுள்ள கிரைன்டர், மிக்ஸியின் பயனர் கையேட்டை (User’s manual) ஓயாமல் வாசித்து ரசிக்க முடியுமா?

வேதாகமத்தை குறித்து நாம் மனதில் கொண்டுள்ள எண்ணம் மாற வேண்டும். நம்முடைய வாழ்கையில் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள், சட்டங்கள், பெற்றுக் கொள்ள வேண்டிய அறிவுரைகள் இவைகள் எல்லாம் வேதாகமத்தில இருந்தாலும் கூட, அதற்கும் மேலாக வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கங்களும் தேவனை நமக்கு வெளிப்படுத்தி தருகிறது. பைபிள் மூலமாக நாம் தேவன் யார் என்பதையும், எப்படிபட்டவர் என்பதையும். அறிந்து கொள்கிறோம்.

பரிசுத்த வேதாகமம் தேவனால் மனிதர்களுக்கு அருளப்பட்ட ஈவு. தேவன் அதை நமக்கு தந்தார். அது ‘தேவனின் திரு வார்த்தை’.

சுப்பையா ஒரு தபால்காரர். காலையில் தபால் போட ஆரம்பித்தார். இப்போது மதியம் ஆகிவிட்டது. தேயிலை எஸ்டேட் பகுதி என்பதால் மலை பாதை வழியாகத்தான் ஒவ்வொரு வீட்டுக்கு தபால் கொடுக்க வேண்டும். மதிய வெயில் தாங்க முடியாமல் நிழல் கண்டதும் ஒதுங்கினார். பையிலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுக்கும் போது ஒரு கடிதம் கீழே விழுந்தது. அது சரியான முறையில் ஒட்டாமலிருந்ததால் அதை எடுத்து பார்த்து ஆர்வமாக வாசிக்க தொடங்கினார் (இப்படி செய்வது மிக தப்பான காரியம்). சௌந்தர்யாவுக்கு வெளிநாட்டில் வேலைபார்க்கும் அவள் கணவன் ஜெயராம் எழுதின கடிதம். பிள்ளைகளின் படிப்பு, வீட்டுக்கு அடிக்கவேண்டிய பெயிண்டின் கலர், அவர் அங்கு படுகிற பாடு, இதெல்லாம் எழுதியிருக்கிறார். சுப்பையா படித்து விட்டு அதை திரும்ப மடித்து வைத்தார்.

சௌந்தர்யாவின் வீட்டுக்கு வந்தார் சுப்பையா. அவள் வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தாள். சுப்பையாவை கண்டதும் அவள் துடைப்பத்தை கீழே போட்டு விட்டு ஓடி வந்தாள். கடிதம் வாங்கி வாசிக்க துவங்கினாள். சுப்பையா அங்கே எங்கயாவது வரும் போது தான் மதிய உணவை சாப்பிடுவார். இனி நாலு மணிக்கு தான் பஸ் வரும். தன்னுடைய பையிலிருந்து டிபன் பாக்ஸ் எடுத்தார். எடுத்து விட்டு திரும்பி பார்க்கும் போது சௌந்தர்யா நின்ற வண்ணமாகவே கடிதத்தை பரவசமாக வாசித்து கொண்டிருக்கிறாள். சுப்பையா காத்திருந்தார். இதோ அவள் மறுபடியும் வாசிக்க ஆரம்பித்துவிட்டாள்! “அப்படி வாசிக்க அதுல என்னதான் இருக்கு?”

ஆச்சரியப்பட்டார் சுப்பையா. “வீட்டுக்கு பெயிண்ட் அடிக்கிறதையும், வெளிநாட்டில் வெயில் தாங்க முடியல, ஸ்கூல் பீஸ், பிள்ளைகள் காரியம், இதெல்லாம் தானே இருந்துச்சு?!!.” வேரோன்னுமில்லையே! “ஏம்மா சௌந்தர்யா அண்ணனுக்கு கொஞ்சம் தண்ணி தாம்மா... சாப்பிடட்டும்” என்று சுப்பையா கேட்டார். அவள் தன் மகளிடம் தண்ணீர் கொடுக்க சொல்லிவிட்டு திரும்பவும் அந்த கடிதத்தில் மூழ்கினாள். அது இப்பொழுது மூன்றாவது முறை! சுப்பையா சாப்பிட்டு கை கழுவும்போதும் சௌந்தர்யாவை கவனித்தார். இப்போது வீட்டு வாசல்படியிலிருந்து அந்த கடிதத்தை நாளாவதோ, ஐந்தாவதோ முறை வாசித்து கொண்டு இருக்கிறாள். சுப்பையா அவளை பார்த்து “ஏம்மா, சௌந்தர்யா நா உங்கிட்ட ஒரு கடிதத்தை தானே தந்தேன்...”? என்று நகைச்சுவையாக கேட்டார்.

அன்பானவர்களே சுப்பையாவை கொண்டு ஒரு முறைக்கூட வாசிக்க முடியாமலிருந்த அந்த கடிதத்தை சௌந்தர்யா திரும்ப திரும்ப வாசிப்பதின் காரணமென்ன?

சுப்பையாவை பொறுத்தவரை ஜெயராம் தனக்கு தெரிந்தவர்அவ்வளவு தான். சொந்தம் கொண்டாடுவதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால் சௌந்தர்யாவுக்கு ஜெயராம் தன் அன்பு கணவர், உயிருடன் கலந்தவர் எழுதிய கடிதம் வாசிப்பது என்றால் தன் கணவருடன் நேருக்கு நேராக நின்று நேரம் செலவழிப்பது போலவே இருக்கும்.

தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கும் போதும், அதை தியானம் செய்யும்போதும் மகிழ்ச்சியை கண்டடைய வேண்டுமா? தேவனோடு இணைந்து விடுங்கள். தேவனோடு இணைய இணைய, நெருங்க நெருங்க உங்களுக்கு வேதத்தின்மேலுள்ள ஆர்வம் பெருகும். மளமளவென்று மகிழ்ச்சி உள்ளத்தை நிரப்பும். ‘‘தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனத்தை கேட்கிறான்’’ (யோவான் 8:47). ஆம் நாம் பிதாவை அன்புகூருவோமென்றால் அவருடைய வசனத்திற்கு செவி கொடுப்பவர்களாக இருப்போம். தேவனை நேசிக்காமல், அவருக்குள் மகிழ்ச்சியாய் இருக்காமல், ஒருவருக்கும் அவருடைய திருவசனத்திற்குள்ளும் மகிழ்ச்சியாயிருக்க முடியாது. ஆனால் என் ஆத்மநேசர் எனக்காக எழுதின நேசமடல் என்று எண்ணி வேதத்தை வாசிக்கும் போது உங்களால் திருவசனங்களின் மேல் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

நம்மை நேசிக்கும் தேவன் தம் கடிதம் மூலமாக நம்மோடு பேசுகிறார். அவருடைய இருதயத்தை நம்மிடம் ஊற்றுகிறார். தம்மைக்குரித்தான

வெளிபாட்டை தந்து நம்மை அதற்குள்ளாக நடத்துகிறார். ஜெயராம் எழுதின கடிதத்தில் சௌந்தர்யா, நான் உன்னை நேசிக்கிறேன். நீ என்றால் எனக்கு உயிர். நான் மிகவும் பொறுப்புள்ள கணவன், உன்மேலும் பிள்ளைகள் மேலும் எனக்கு அக்கறையுண்டு என்று நேரடியாக ஒன்றும் சொல்லப்படவில்லை.

இருப்பினும் விடுமுறை வரும் போது சௌந்தர்யாவுக்கு அளிப்பதற்காக வாங்கி வைத்திருக்கின்ற நகைகள், வீட்டு தேவைகளுக்காக அனுப்புகிற பணத்தை குறித்துள்ள தகவல்கள், பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக வங்கியில் ஆரம்பித்துள்ள சேமிப்பை குறித்துள்ள விளக்கம், அதற்கான பணத்திற்காக அவர் செய்யும் மேலதிக வேலை, இப்படிப்பட்ட விளக்கங்கள் மூலமாக சௌந்தர்யா தன் கணவன் தன் மேல் வைத்திருக்கும், அக்கறை, கவனிப்பு, பொருப்பு என்பவைகளை மிக நன்றாக புரிந்துகொள்கிறாள்.

இது அவர்கள் இடையே இருக்கும் அன்பு, பாசம், உறவு வளர மிகவும் உதவியாக இருக்கும். இதைப்போல தேவனும் வசனத்தின் மூலமாக தம்மை வெளிப்படுத்துகிறார். நாம் தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கும் ஒவ்வொரு முறையும், தேவன் நமக்காக ஆயத்தப்படுத்தின காரியங்கள், தற்போது அவர் நமக்காக செய்து வரும் காரியங்கள் நமக்களித்த வாக்குத்தத்தங்கள் என்பவைகளை அறியும் போது, தேவன் நம்மை விசாரிப்பவர் என்பதையும், நம்மேல் பிரியமாயிருந்து நம்மை கைவிடாமல், நம்மேல் இரக்கமாயிருந்து நம்மை சுமப்பவர் என்பதையும் அறிந்துக் கொள்கிறோம்.

மேலும் வேதாகமத்திலிருந்து நம்மை குறித்துள்ள தேவ சித்தத்தையும், அவருடைய எதிர்பார்ப்பையும் அறிந்து கொள்ள முடியும். ஆகவே தேவனோடு கூட இணைந்துக் கொள்ளுங்கள். நேசத்தீயை மூட்டியெழுப்ப ஆவியானவரோடு வேண்டிக் கொள்ளுங்கள். உறவு வளரட்டும். மான் நீரொடையை வாஞ்சிப்பது போல, வேதத்தை வாசிக்க வாஞ்சியுங்கள். கவர்ச்சி நாயகன், ஆத்தும நேசர் உங்களை பரவசப்படுத்துவாராக.

# 5

# உமது வசனத்தைத் தியானிக்கும்படி...

டானியேல் வேதாகமத்தை வாசிப்பதற்காக திறந்தபோது நெகேமியா தீர்க்கசரிசியின் புத்தகம் கிடைத்தது. வாசிக்க ஆரம்பித்த அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. “என்னடா இது? ஒன்னுமே புரியலயே” என்று சொல்லி மறுபடியும் வாசிக்க ஆரம்பித்தார். ஆனால் இப்பொதும் ஒன்றும் புரியவில்லை. “கர்த்தாவே உமது வார்த்தைகள் என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லையே” என்று சொல்லி சோர்ந்து போய் வேததாகமத்தை முடி வைத்தார். இங்கு டானியேல் சந்தித்த பிரச்சனை என்ன? திருவசனத்தை ஆர்வமாக வாசித்த டானியேல் ஒன்றும் புரியாமல் முடி வைத்த காரணம் என்ன?

டானியேல் நெகேமியாவின் புத்தகத்தை வாசிப்பது இதுவே முதன் முறை. அந்த குறிப்பிட்ட புத்தகத்தை முழுமையாக வாசிக்காமல் அதிலுள்ள ஏதாவது அதிகாரத்தையோ, ஏதவாது ஒரு வசனத்தை மட்டும் புரிந்து கொள்ள முடியாது. நெகேமியா யார், இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரம், பாபிலோன் சிறையமைப்பின் பிண்ணணி என்பவைகளை குறித்தான அறிவு டானியேலுக்கு இல்லாதிருந்ததினால் அவராலே அதை புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. ஆர்வம் இருந்தும் ரசித்து வாசிக்க முடியவில்லை. அதற்குள் இருக்கும் சத்தியத்தை புரிந்து கொள்ளவும் இல்லை.

வேதாகமத்தில், தேவனை பற்றும் வெளிபாடுகள், மனிதர்களுடைய வாழ்க்கை வரலாறு மற்றும் அனுபவங்கள் எழுதப்பட்டுள்ளது. எனவே அப்படிப்பட்ட வரலாறுகளையும் அனுபவங்களையும் தெரிந்து கொள்ளும் போது, ஒவ்வொரு காலத்திலும் உள்ள ஜனங்களோடும், தனி நபர்களோடும் தேவன் எப்படி பேசினார், அவர்கள் அவரை எப்படி புரிந்து கொண்டார்கள், தேவனுடைய சித்தம் என்ன என்பதையெல்லாம் அறிந்து கொள்ளகிறோம். எனவே வேதாகமத்தை கற்று கொள்வதின் முதற்படி வேதாகமத்தை முழுவதுமாக முறையாக வாசிப்பதுதான். எல்லாம் எனக்கு தெரியும் என்ற எண்ணத்தோடு வாசிக்காமல், எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று வாஞ்சையுடன் வாசிக்கவேண்டும்.

வேதாகமத்தை முதன்முறையாக வாசிக்கும் போதே அதின் ஆழமான அர்த்தங்களை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் இப்படி வாசிப்பதினால் வேதாகமத்தின் அதிசய உலகிற்குள் பிரவேசிக்க முடியும். குறைந்தபட்சம் ஒருமுறையாவது வேதாகமத்தை வாசிக்கும் போது அதிலுள்ள கதைகள், சரித்திரங்கள், நபர்கள், என்பவைகளைக் குறித்து ஒரு மேலோட்ட அறிவை அடைய முடியும். இந்த மேற்பரப்பான புரிந்துணர்வு அற்பமானது அல்ல. இந்த அறிவை வைத்து தான் நமக்கு வேதாகமத்தின் ஆழமான ஆவிக்குரிய சத்தியத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

“உங்களுக்கு இருக்கும் அறிவின்மேல் மட்டுமே பரிசுத்த ஆவியானவருக்கு உங்களுக்குள் கிரியை செய்ய முடியும்” என்று ஜெ.ஜெ. பாய்க்கர் சொல்லியிருக்கிறார். ஒருவேளை இந்த மேற்கோள் (quote) பரிசுத்தாவியனாவரை மட்டுபடுத்தி சொல்லும் ஒன்றாக தோன்றலாம். ஆனால் உண்மையென்ன என்பதை பரிசோதிப்போம். உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு வாலிப பெண்ணை பார்த்து “நான் உன்னை உல்தாள் தீர்க்கதரிசியானவளைப் போல பயன்படுத்தப் போகிறேன்” என்று சொல்லும் போது, உல்தாள் யார் என்றும், உல்தாளின் ஊழியம் என்ன என்பதையும் அந்த பெண் அறிந்திருக்க வேண்டும். (உங்களுக்கு தெரியுமா?) இதை அறியாத ஒருவரிடம் பரிசுத்த ஆவியானவர் எப்படி பகிர்ந்து கொள்ள முடியும்.

யூதாவின் இராஜாவாகிய யோசியாவின் காலத்தில் ஒரு பெரிய எழுப்புதல் நடந்தது. ராஜா உல்தாள் என்னும் தீர்க்தரிசியானவளிடம் தேவ ஆலோசனையை நாடி சென்றார். இதை 2 நாளாகமம் 34:19-38ல் நாம் பார்க்கிறோம். இந்த தீர்க்கதரிசியானவளிடமிருந்து வந்த தேவ வார்த்தைகள் அந்த எழுப்புதுலுக்கு ஒரு திருப்புமுனையாக மாறியது.

அன்பானவர்களே, தேவன் உல்தாள் தீர்க்கதரிசியானவளைப்போல ஒருவரை அபிஷேகம் செய்ய இருப்பதை அந்த நபருடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமானால் அந்த நபருக்கு உல்தாளை குறித்தான அறிவு இருந்தே ஆக வேண்டும். எனவே ஆவியானவர் நமக்கு இருக்கும் அறிவை வைத்துத்தான் நம்மிடம் கிரியை செய்கிறார். ஆனால் இன்றைய ஆவிக்குரிய உலகில் நடப்பதென்ன? வேதாகமத்தை குறித்து போதுமான அறிவு நமக்கு இல்லாததால் தேவ ஆவியானவருக்கு நம்மோடு பேசவோ, நம்மை உணர்த்தவோ, திருத்தவோ மற்றும் தொடர்பு கொள்ளவோ கூடாமல் அதற்கான வாசல்களையும், வாய்புகளையும் அடைத்து விடுகிறோம்.

ஆனால் இப்படிப்பட்ட எந்த அறிவும் இல்லாதபொழுதும் வேதாகமத்தை திறந்தவுடன்கிடைத்த வசனம்மூலமாக தேவன் என்னோடு பேசியிருக்கிறாரே, எனக்கு அந்த வார்த்தைகள் மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் அளித்ததே என்று நீங்கள் ஒருவேளை சொல்லலாம். ஆனால் தேவ ஆவியானவர் அதை உங்களோடு சொல்லும் போது அவருடைய திரு இதயத்தில் இருந்த கருத்தை நீங்கள் முழுவதும் அறிந்திருக்க மாட்டீர்கள். அப்படி அறியவும் முடியாது.

துரைராஜ் என்பவர் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை ஒருநாள் வாசித்துக் கொண்டிருக்கும் போது அதில் 7வது அதிகாரம் 10 முதல் 12 வரையுள்ள வசனங்கள் அவரை மிகவும் உற்சாகப்படுத்தியது. “பின்பு கர்த்தர் ஆகாசை நோக்கி நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள். அதை ஆழத்தில் இருந்தாகிலும், உன்னதத்தில் இருந்தாகிலும் உண்டாக கேட்டுக்கொள் என்று சொன்னார். ஆகாசோ நான் கேட்கமாட்டேன். நான் கர்த்தரை பரீட்சை செய்யமாட்டேன் என்றான்”.

இதை வாசித்த துரைராஜ், ஆகாசின் விசுவாசத்தை கண்டு வியந்து போனார் தேவனிடத்தில் கடுகளவுகூட சந்தேகமில்லாமல் உறுதிக்காக ஒரு அடையாளத்தைக் கூட கேட்காமல் இருந்ததை பார்த்து, தனக்கும் அப்படிப்பட்ட விசுவாசம் வேண்டும் என்று தேவனிடத்தில் கேட்டு கொண்டார். அப்படிப்பட்ட விசுவாசம் இருப்பதோ அதற்க்காக ஜெபிப்பதோ நல்லது தான். ஆனால் ஆகாசின் இந்த வார்த்தைகளை கேட்டு தேவன் அவன்மீது கோபமடைவதாக அங்கே எழுதியிருக்கிறது.

வரலாறு என்ன? ஆகாஸ் அரசாளும் யூதா தேசத்திற்க்கு விரோதமாக சீரியர் மற்றும் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாக்கள் படையெடுத்து வருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டபோது அவன் பயந்து நடுங்குகிறான் (ஏசாயா 7:1-2).

இதைக்கண்ட ஏசாயா தீர்க்கதரிசி தேவன் உன்னை காத்துகொள்வார். எந்த ஆபத்தும் நடக்காது என்ற செய்தியை அறிவிக்கிறார். ஆனால் ஆகாஸ் ஒருபோதும் தேவன் மேல் நம்பிக்கையாய் இருக்கவில்லை. ஏசாயாவை எப்படியாவது தவிர்ப்பதற்காக ஒரு சாக்குபோக்குக்கென்று சொன்ன வார்த்தைகளாயிருந்து. இதை ஏசாயா 7வது அதிகாரமும், 2 இராஜக்காள் 16வது அதிகாரமும் சேர்த்து வைத்து படிக்கும்போது தெளிவாக புரியும்.

ஆனால் இந்த வசனங்களின் பின்னணியை அறியாத ஒருவருக்கு, பரிசுத்தாவியானவர் எந்த நோக்கத்துடன் எழுதிவைத்தாரோ அந்த சத்தியத்தை நழுவவிட்டு தன்னுடைய மனதுக்கேற்றவாரு வசனங்களை ஏற்றுக்கொள்ளும் ஆபத்து ஏற்படுகிறது.

வேதாகமத்தை தொடர்ச்சியாக பலமுறை வாசிப்பதினால் மட்டுமே இவ்வித தவறுகளை நம்மால் தவிர்க்கமுடியும். அதுமட்டுமல்லாமல் வசனங்களின் பின்னனி, வரலாறு போன்ற முக்கிய அம்சங்களைக் குறித்த அறிவு நமக்கு இருக்கும்போது, நமக்கு கிடைக்கும் வெளிபாடுகள் தேவவசனங்களுக்கு ஏற்றதாக இருக்கும். முடியுமானால் குறுகிய நாட்களுக்குள் வேத புத்தகத்தை தொடர்ந்து வாசித்து வேதாகமத்தின் உலகை உங்களுக்கு அறிமுகப்படுத்தி கொள்ளுங்கள். மற்ற நேரங்களில் ஒவ்வொரு புத்தகங்களை (ஆதியாகமம், ரோமர், ஏசாயா) என்று வாசியுங்கள். உபவாச நாட்களில் வேத புத்தகம் வாசிக்க அதிக நேரம் செலவழியுங்கள். தேவ ஆவியானவர் உங்களோடு மனம் திறந்து பேசுவார்.

இவைகள் எல்லாமே வேதாகமம் வாசிப்பதற்கும், கற்றுக் கொள்வதற்குமான அடிப்படை அம்சங்கள். ஆனால் வசனத்தை வாசிப்பதும், வசனம் தியானம் செய்வதும் வெவ்வேறான காரியம் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

“இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்” (சங்கீதம் 1:2). என்று வேதம் கூறுகிறது.

ஜெனிஃபர் ஒருநாள் யோவான் எழுதின சுவிசேஷம் 6-வது அதிகாரத்தை வாசித்து கொண்டிருந்தாள்.

“அப்போது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது. இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதை கண்டு, பிலிப்புவை நோக்கி; இவர்கள் சாப்பிடதக்கதாக

அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப் போகிறதை அறிந்திருந்தும் அவனை சோதிக்கும்படி இப்படி கேட்டார். பிலிப்பு அவருக்கு பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்கு போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்க்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாய் இருந்தது. பந்தியிலிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள். இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிலிருந்தவர்களுக்கு கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தார். அவர்கள் திருப்த்தியடைந்தப் பின்பு, தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாயி போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். அந்தபடியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பண்ணிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்''(யோவான் 6:4-13).

ஜெனிபா் இயேசு செய்த இந்த அற்புதத்தை வாசித்து மிகவும் பரவசமடைந்தாள். "மெய்யாகவே இயேசு வல்லமையுள்ளவா். அவருக்கு நிகராக ஒருவருமில்லை. அவா் நிச்சயமாகவே தேவகுமாரன். இல்லையென்றால் இப்படிப்பட்ட அற்புதங்களை செய்யமுடியுமா? அப்படியிருந்தும் உலகத்தாா் ஏன் இதை புரிந்துகொள்ளாமல் இன்னும் இருக்கிறாா்கள்? இந்த அதிசயமானவரை அறிந்து கொண்டது நிச்சயமாகவே ஒரு சிலாக்கியம் தான்"! ஜெனிபா் வேதாகமத்தை மூடிவைத்துவிட்டு தேவனை துத்தித்தாள்.

ஜெனிஃபா் இப்படி பைபிள் வாசிப்பதில் ஏதாவது தவறு இருக்கிறதா? அவள் இயேசுவின் அற்புதத்தை புரிந்து கொண்டாள். அவரை துதிக்கவும் செய்தாளே. உண்மைதான். ஆனால் ஜெனிஃபா் வேதம் வாசிக்கமட்டும் தான் செய்தாள். இதை வசனம் தியானம் என்று அழைக்க முடியாது.

ஜெனிஃபா் வசனத்தை வாசித்து, சிந்தித்து தேவனை ஆராதித்து

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

துதித்ததின் பிறகும் அது வசனதியானம் இல்லை என்று எப்படி சொல்லலாம்?

அன்பானவர்களே, 'தியானம்' என்ற வார்த்தையின் இலக்கிய பொருள் மற்றும் ஆவிக்குரிய பொருள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எதையாவது சிந்தித்து கொண்டு மௌனமாயிருக்கும் போது அதை சாதாரணமாக தியானம் என்று அழைக்கிறோம். உதாரணமாக, நண்பர்களோடு கூட பேசி கொண்டிருக்கும் போது, யாராவது ஒருவர் சில நேரம் எதையும் பேசாமல் அமைதியாக இருப்பாரென்றால் "ஹலோ. என்ன தியானமா?" என்று கேட்பார்கலல்லவா?

ஏன் அப்படி கேட்கிறார்கள்? நண்பர்கள் ஒன்று சேர்ந்து பேசிக்கொண்டிருக்கையில், சரிரபிரகாரமாக அவர் அங்கே உட்காந்திருந்தாலும் அவர் வேறு ஏதோ உலகத்தில் உலாவிகொண்டிருக்கிறார். அவருடைய மனது வேறு ஏதோ காலத்தில் இருக்கிறது. அவரோடு கூடயிருக்கும் ஒருவரையும் அவர் காணவோ, கேட்கவோ செய்வதில்லை. ஏனென்றால் அவர் தியானத்தில் இருந்தார்!.

ஜெனிஃஃபர் வேதத்தை வாசிக்கும் போது, தேவனை துதிக்கும் போது கூட அந்த குறிப்பிட்ட வேதாகம நிகழ்ச்சி அவளுக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னதாக நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியாக மட்டும் தான் இருக்கிறது. உண்மையாகவே அது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழச்சி தான். ஆனால் இந்த வேத பகுதியை தியானம் செய்யும் போது அந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழ் காலத்துக்கு இறங்கி வர வேண்டும். அல்லது நாம் இரண்டாயிரம் வருடத்துக்கு முன் அந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்துக்குள் கடந்து போக வேண்டும்.

வேதாகமத்தை தியானம் செய்யும்போது நாம் வேதாகம காலத்திற்குள்ளாக உட்பிரவேசிக்கிறோம். அப்பொழுது நாம் இருப்பிடத்தை விட்டுவிட்டு வெளியே போவதில்லை. ஒரு வேளை வேதபுத்தகம் நம்முடைய மடியில் திறந்த வண்ணமாகவே இருக்கலாம். ஆனால் வேதாகமத்திலுள்ள எழுத்துக்களின் உலகத்திலிருந்து நாம் வாசித்த வேதாகமத்தின் நிகழ்ச்சிக்குள்ளாக நடந்து செல்கிறோம். அதாவது நிகழ்ற்க்காலத்தில் இருந்து கடந்த காலத்துக்குள்ளாக ஒரு பயணம்.

அதாவது, யோவான் சுவிசேஷம் 6ம் அதிகாரம் வாசித்ததின் பிறகு, அதை திறந்தவண்ணமாகவே நம் மடியில் இருக்கும்போது பாலஸ்தீனாவிலே அந்த புல்லுள்ள விரிவான இடங்களுக்கு நடந்து செல்கிறோம். அங்கே அந்த

திரளான ஜனங்களோடுகூட நாமும் நமக்கொரு இருப்பிடத்தை தெரிந்து கொள்கிறோம். அவர்களோடு கூட நாமும் இயேசுவின் வார்த்தையை கேட்கிறோம். இப்பொழுது நீங்களும் இந்த வரிசையில் அமர்ந்திருக்கிறீர்கள்... இதோ இயேசு அப்பத்தை கரங்களில் எடுத்து வானத்தை பார்த்து ஜெபிக்கிறார்... அற்புதம்...!! அது பெருகிக் கொண்டேயிருக்கிறது... !! அந்த அப்பம் சீடர்கள் உங்களுக்கு தருகிறார்கள்... நீங்கள் அதை வாங்கி புசிக்கிறீர்கள்... !! மீதியுள்ள துணிக்கைகள் சேர்க்கும்படியாக சீஷர்கள் துரிதபடுகிறார்கள். புசித்து திருப்தியான நீங்கள் அவர்களோடு சேரக்கூடாதா? இதோ இயேசு இப்பொழுது உங்கள் அருகில் வருகிறார். இவர் உங்களோடு பேசுகிறார். அவரின் இனிய பிரசண்ணம் உங்களால் இப்போது உணரமுடியவில்லையா?

வசனம் தியானிக்கயில் வேதாகம சம்பவங்கள் உங்களுக்கு சொந்தமாகிறது. அது ஒரு நிஜமாக மாறுகிறது.

ஆஹா... வேதத்தின் அற்புத உலகம்... !!!

தியானிக்கிறவன் நிகழ்ச்சிகளை கண்டு மகிழாமல் அதில் பங்கு பெருகிறான். இங்கு நீங்கள் ஜனங்களோடு ஒரு ஆளாகவோ அல்லது அப்பத்தை எடுத்து கொடுக்கும் ஒரு ஆளாகவோ மாறிவிடுகிறீர்கள். சிலநேரங்களில் அதற்கும் மேலான இடத்திற்கு சென்று வீடுவீர்கள். அங்கே திரளான ஜனங்கள் போன பிறகும் நீங்கள் புல்தரையிலிருந்த எழவில்லை, இன்னும் அதிகமாக தேவ பிரசன்னத்தை உங்கள் ஆவியில் உணர்ந்து கொண்டு இருக்கிறீர்கள். இந்த உணர்வு உங்களது புத்தியிலோ, இதயத்திலோ தோன்றியது அல்ல மாறாக அது உங்கள் ஆவி மனிதனுக்குள் உணரும் உணர்வு.

ஒரு முறையோ, அல்லது இரண்டாவது முறையோ வாசிக்கும்போது இப்படிப்பட்ட தியான அனுபவத்துக்குள் பிரவேசிக்க முடியாமல் இருக்கலாம். ஏனென்றால் அந்த உண்மை சம்பவங்கள் உங்களுக்கு இன்னும் அறிமுகம் ஆகாமல் இருப்பதுதான் காரணம். பலமுறை வேதாமத்தை தொடர்ந்து வாசிக்கும் போதுதான் வேதத்தை உங்களால் தியானம் செய்ய முடியும். வேதாகம நிகழ்வுகள் ஒவ்வொன்றும் உங்கள் இருதய சுவரில் தெளிவாக வரையபட்டதின் பிறகு இந்த ஆவிக்குரிய தியான அனுபவம் உங்களுக்கு மிக எளிதாக மாறிவிடும்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

ஆனால் நிரந்தராமாக வேதத்தை வாசிப்பதின் மூலமாகவும், நாம் தியான அனுபவத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. ஒரு வேளை வசனத்தை ஆழமாக படிக்க உங்களுக்கு உதவியாக இருக்கும். ஆனால் தியானம் செய்ய, நாம் நம்மையே நிதானத்தோடும், மிக கவனத்தோடும் பரிசீலித்துக் கொள்ள வேண்டும். அநேக நேரங்களில் நடைபெறுகிற ஆபத்து என்னவென்றால் வசனத்தை கற்று கொள்ளும் போது அதை வசன தியானம் என்று தவறாக எண்ணிவிடுகிறோம். ஆனால் உண்மையென்ன? வசனத்தை நாம் கற்று கொள்ளுகிற வேளையில், அதை வாசிக்க மட்டும் செய்யாமல், கூடுதல் விரிவாக காரியங்களை கற்று கொள்ள முயற்சி செய்கிறோம். நாம் வாசிக்கும் பகுதியை மற்ற வேத பகுதிகளோடு இணைத்து பார்க்கிறோம். நமக்கு கிடைத்த தகவல்களை வைத்து அந்த வசன பகுதியை இன்னும் ஆழமாக ஆராய்ச்சி செய்கிறோம். அப்படி கிடைக்கும் அறிவுகளை சேர்த்து வைக்கிறோம். அப்போது புதிய கருத்துக்கள் வெளிப்படுகிறது. இவையனைத்தும் சரியாக இருந்தாலும் வேதத்தை கற்றுக்கொள்ளும்போது, அது நம்முடைய மனதையும். புத்தியையும்தான் தொடுகிறது. நம்முடைய இதயத்தை உற்சாகப்படுத்துகிறது. ஆனால் தியானம் செய்யும்போது அது நம்முடைய மனதையும், புத்தியையும். தாண்டி ஆத்துமாவை உணர்வடைய செய்கிறது. நாம் ஆவிக்குரிய உலகத்திற்குள் பிரவேசிக்கிறோம்.

வேதத்தை கற்றுக் கொள்ளும் போது நாம் அதை வெறுமனே வாசித்து விடாமல், ஒவ்வொரு வசனங்களையும் ஆராய்ந்து படிக்கிறோம். நாம் வாசித்த பகுதியிலுள்ள வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, அதன் மூலை பாஷையிலுள்ள விளக்கங்கள், மற்றும் விளக்குரைகளின் உதவியோடு ஆராய்ந்துப் படிக்கிறோம். இது நமக்கு மூளை அறிவை தருகிறது. மெய்யாகவே ‘அறிவு’ அவசியம் தான். தேவனின் வசனங்கள் அறிவுக்கு அப்பாற்பட்டது அல்ல. நாம் தேவனை சேவிப்பது அறியாமையினால் அல்ல. அறிவு நமக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் தருகிறது. அதைப்போல வசனத்தை தியானம் செய்யும் போதும் மனதுக்கும், இதயத்துக்கும் ஆறுதல் கிடைக்கும். ஆனால் அந்த ஆறுதல் நம் ஆவியிலிருந்து ஒரு நதியைபோல மனதுக்கும், உடலுக்கும் பாயும். அங்கே ஒரு ஜீவன் உருவாகிறது. சுகத்தை பெற்றுக்கொள்கிறோம். பெலனடைகிறோம்! அதாவது வேதாகமத்தை கற்றுகொள்ளும்போது கிடைக்கும் அறிவு, நம் இதயத்திற்கு இளைப்பாருதல் தரும், ஆனால் வசனத்தை தியானம் செய்யும் போது அறிவை அல்ல, வெளிப்பாடை பெற்றுக் கொள்கிறோம். ஆவிக்குரிய உலகில் ‘அறியாமை’க்கு எதிர்சொல் ‘அறிவு’ அல்ல ‘வெளிபாடு’ தான்.

‘அறிவு’ மூளையில் தான் உதிக்கும் ‘வெளிப்பாடோ’ ஆவியில் ஜொலிக்கும்! தியான அனுபவத்தின் செழுமை ஆவியில் நிரம்புகிறது. அங்கேயிருந்து ஜீவநதியைப் போல இதயத்தையும் மனதையும் செழுமையாக்குகிறது.

இன்னும் ஒன்றை சொல்கிறேன். வேதாகம சம்பவங்கள் நம்மை பரவசமப்படுத்துவதின் காரணம் அச்சம்பவங்களின் மகத்துவம் அல்ல, அதற்கு மாறாக நம் அருள் நாதரின் இனிய பிரசண்ணம் ஒன்று மட்டும் தான். ஆம் பிரியமானவர்களே ஒருவேளை அந்த மகிமையின் பிரசண்ணத்தை நேரடியாக பார்ப்பீர்கள் இல்லையென்றால் அதை உணர்வீர்கள். எதுவாக இருந்தாலும் அது இனியதாயிருக்கும்.

உலக புகழ் பெற்ற ஒரு நடிகர் ஒரு முறை ஒரு கருத்தரங்கில் 23ம் சங்கீதத்தை நாடக வடிவில் நடித்து காண்பித்தார். ஒவ்வொரு வசனங்களும் வாசிக்கும் போதும் அவருடைய முகத்தில் அதனுடைய பாவனைகள் பிரதிபலித்தது. அது முடிந்த போது சில நிமிடங்கள் கரவொலி எழுப்பி அந்த நடிகரை ஜனங்கள் பாராட்டினார்கள். எல்லாம் அமைதியானதின் பிறகு, வேறு யாராவது இதைப் போல செய்யும் படி அழைத்தார்.

அந்த அபிநய மேதையோடு போட்டியிட யாருமே முன்வரவில்லை. ஒருமுறை கூட ஜனங்களை உற்சாகப்படுத்தினார். அப்போது கடைசி வரிசையிலிருந்து ஒரு மூதாட்டி எழும்பி முன் வந்தாள். அதைக் கண்ட அனைவரும் சிரித்தார்கள். அவள் 23ம் சங்கீதத்தை சொல்ல துவங்கிய போது ஜனங்கள் மிகவும் வியந்து பார்த்து கொண்டிருந்தார்கள். அந்த வயதான அம்மா சங்கீதத்தை சொல்லும் போது அந்த நடிகரும் ஆச்சரியப்பட்டார். கூட்டம் முடிந்தபின் பத்திரிக்கையாளர்கள் அந்த பிரபல நடிகரிடம், “ஐயா, அந்த வயதான மூதாட்டிக்கு உங்களைவிட மிகவும் நல்ல முறையில் சங்கீதத்தை சொல்ல முடிந்ததின் காரணம் என்ன?” என்று கேட்டார்கள். அதற்கு அவர் “எனக்கு 23ம் சங்கீதம் மட்டும் தான் தெரியும், ஆனால் அந்த மூதாட்டிக்கு அதில் வரும் மேய்ப்பனை நன்றாக தெரியும்!” என்று சொன்னார்.

ஆம் பிரியமானவர்களே, வேத வசனத்தை வாசிப்பதும், அதை தியானிப்பதற்கும் இருக்கிற வித்தியாசம் இதுவே! வேத வசனங்களை நாம் ஆராய்ந்து படிக்கும் போது நாம் விளக்கங்களின் தளங்களுக்குள் பிரவேசிக்கிறோம். ஆனால் தியானம் செய்யும் போது அந்த வசனத்தை நமக்குள் கொண்டுவருகிறோம். நம்முடையதாக மாற்றுகிறோம். நம்மை மிகவும் நேசிக்கும் ஒரு நபரின் கடிதத்தை நாம் அலசி உலசி ஆராய்ந்து

விடுவோமா என்ன? ஒரு நாளும் கிடையாது. நாம் அதை இருக்கும் வண்ணமாகவே ஏற்றுக் கொள்கிறோம். அதிலே மூழ்கிவிடுகிறோம். ஆம் வாசிக்கும்போது மேய்ப்பனை குறித்துள்ள அறிவு உருவாகிறது. ஆனால் தியானம் செய்யும் போது தியானம் நம்மை மேய்ப்பனின் ஆட்டுக்குட்டியாக மாற்றுகிறது. தியானம் செய்கிறவன் மேய்ப்பனோடுக்கூட பசும்புள்வெளியில் உலாவுகிறான். அங்கே சத்துருபீதியின்றி இளைப்பாறுகிறான். மேய்ப்பனோடு கூட குளிர்ச்சியான தண்ணீரை பானம் பண்ணுகிறான். பசியில்லாமல், தாகமில்லாமல் மேய்பனோடுகூட அமைதியாக நீதியின் பாதைகளில் நடக்கிறான். மேய்ப்பனின் கோல் கூட்டம் விட்டு போகாதபடி நடக்க அவனுக்கு உதவியாயிருக்கிறது. நித்தமும் பிரமாண்டமான விருந்து அவனின் அனுபவம், மேய்ப்பனின் மாறாத பிரசன்னம் அவனின் நிரந்தர பாக்கியம், அவன் தலைமீது அபிஷேக தைலம் ஊற்றப்படுகிறதை உணருகிறான். அவன் பாத்திரம் நிரம்பி வழிகிறதால் மற்றவர்களும் தங்கள் தாகத்தை தீர்த்து கொள்கிறார்கள். நன்மையும்,கிருபையும் அவனை பின்பற்றுகிறதை அவன் கண்டாலும் கூட அவன் வாஞ்சை தேவனுடைய ஆலயத்தில் நீடித்த நாட்களாக வசிப்பது தான்!

இப்படிப்பட்ட தியான அனுபவங்கள் ஒரு அரிய நிகழ்வு என்று ஒருவேளை நினைக்கலாம். ஆனால் கர்த்தருடைய வசனம் என்ன சொல்லுகிறது? “இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்”. ஒரு மனிதன் உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படை தேவைகளை எல்லாம் விட்டு விட்டு எப்படி வேதவசனங்களை வாசித்து கொண்டே இருக்க முடியும்? நடைமுறை வாழ்க்கையில் அது எப்படி சாத்தியமாகும்? என்று நீங்கள் கேட்கலாம்.

இரவும், பகலும் வேதத்தை தியானம் செய்வது உண்மையாகவே நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வரமுடியும். எப்படியென்றால் வேதாகமத்தை தொடர்மானமாக வாசிக்கும் போது வசனம் நம் இதய பலகையின் மேல் எழுதப்படும் அல்லது இதற்கு முன் வசனங்களை வாசித்து தியானம் செய்த நேரங்களில் அந்த வேதகாம நிகழ்ச்சிகளுக்குள் பிரவேசித்திருக்கிறோம். ஆனால் இப்பொழுது அந்த வேததாகம பகுதிகள் அல்லது நிகழ்ச்சிகள் நம்முடைய வாழ்க்கையின் தனிப்பட்ட அனுபவங்களுக்குள் இறங்கி வருகிறது. அதாவது வேதாகமக் காலம் நிகழ் காலத்திற்குள் இறங்கி வருகிறது.

நம்முடைய வாழ்க்கையில் பல அனுபவங்கள் ஊடாக நாம் கடந்து போகிறோம். சில நேரங்களில் நண்பர்களால் வஞ்சிக்கப்படலாம், பாலைவனத்தைப்போல ஒருவேளை நம் வாழ்க்கை காணப்படலாம் எனக்கு யாருமே இல்லையே என்று சொல்லும் சூழ்நிலை உருவாகலாம், உண்ண உணவோ, குடிக்க தண்ணீரோ இல்லாத அனுபவம் வரலாம். மரணமேயல்லாமல் வேறோரு வழியும் இனி இல்லை என்று சொல்லி திகைத்து போகலாம். அப்படியிருக்கும் போது நம் அனுபவத்தை போல சமமான ஒரு அனுபவம் வேதாமத்திலிருந்து உங்கள் முன் வரும். அது ஒருவேளை ஆகாரின் சம்பவமாக இருக்கலாம். இதற்க்கு முன் உங்கள் தியானத்தின் போது அந்த வனாந்திரத்திற்கே நீங்கள் சென்று இருக்கலாம். ஆனால் இப்போது உங்கள் வாழ்க்கையே வனாந்திரம்போல் இருக்கிறது. அந்த வனாந்திரதிற்குள் தேவனுடைய வசனம் இறங்கி வரும். வனாந்திரத்தில் கடும் வெயிலில் நீங்கள் வாடி தவிக்கும் போது ஒரு குளிர் அருவி ஒன்று பாய்ந்து வருகிறது. சந்தோஷம் அடக்கமுடியாமல் நீங்கள் குதிக்கிறீர்கள். இங்கிதமாக தண்ணீர் மொண்டு குடிப்பதற்கு பதிலாக, அதற்க்குள் குதித்து மூழ்கி மகிழ்கிறீர்கள். இதுதான் தியான அனுபவம்.

ஆம், உங்கள் தியான வேளையில் வசனம் மழையாக பொழியும். உங்கள் படிப்பு அறையில் அல்ல உங்கள் நிஜ வாழ்க்கையில் தான் இந்த மழைப் பொழிகிறது. ஆனால் சில நாட்களுக்கு முன்பு இந்த வேத பகுதியை படிக்கும் போது அதை அறிந்தது உண்மை. ஆனால் இப்பொழுதோ உங்கள் நிஜ வாழ்க்கையில் அதை உணருகிறீர்கள்.

நாட்கள் செல்ல செல்ல ஒரு நிரந்தரமான, இயல்பான அனுபவமாக அது மாறும். தேவனுடைய வார்த்தைகள் உங்கள் வாழ்க்கைக்குள் இறங்கி வருவதை காண்பீர்கள். இரவும் பகலுமாக....!! தேவன் தாமே அதற்காக உங்களை ஆயத்தப்படுத்துவாராக!.

# 6

# என் செவிகளை திறந்தீர்...

இந்த குடும்ப வழக்கில், விவாகரத்தை கேட்டு மனு தாக்கல் செய்தது ஒரு பெண். அதற்கு பல காரணங்களை அவள் பட்டியலிட்டு சொல்லுகிறாள். அதில் ஒரு முக்கியமான காரணம் என்னவென்றால், இருவருக்கும் திருமணமாகி பண்ணிரண்டு வருடங்களாயிற்று, இது வரையிலும் தன் கணவன் தன்னோடு பேசினதேயில்லையாம்!

நீதிபதி வாதத்தை கேட்ட முதல்நாளே விவாகரத்தை அனுமதித்து உத்தரவிட்டார்!

தீர்ப்பைக் கேட்ட கணவன் நீதிபதியிடம் தான் சொல்ல விரும்புவதை சொல்ல அனுமதிக்கும்படி கேட்க, “நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்” என்று அவர் மறுத்தார். “மனைவியிடம் பண்ணிரெண்டு வருடம் பேசாமலிருந்த உன் பேச்சை நான் எதற்கு கேட்க வேண்டும்? விவாகரத்தை நான் அனுமதிக்கிறேன்”

அதற்கு கணவன் “அதைநான் ஏற்று கொள்கிறேன் மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே, திருமணம் ஆகி 12 வருடங்கள் ஆன போதும் நான் ஏன் பேசவில்லை என்பதின் காரணத்தை சற்று கேளுங்கள்” என்று சொன்னார்.

“எந்த காரணமானாலும் சரி, அது ஏற்று கொள்ள முடியாது! ஆனாலும் உன்னுடைய நியாயங்களை நீ கூறலாம்” என்று நீதிபதி ஆணையிட்டார்.

“மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே, கடந்த பண்ணிரெண்டு வருடகாலமாக நான் அவளோடு பேசுவதற்காக முயற்சி செய்தேன். ஆனால் அவள் பேசுவதை நிறுத்தி நான் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தால் தானே எனக்குப் பேச முடியும்?!!!”

அநேக நேரங்களில் நாமும் இந்த பெண்ணைப்போல பேசிக்கொண்டே இருப்பதில் தான் ஆர்வம் காட்டுகிறோம். சொல்லுவதைக் கேட்க நமக்கு கொஞ்சங்கூட மனதில்லை. அதிகமாக பேசிக்கொண்டே இருப்பதினால் நம்மை கவனித்து கொண்டிருக்கும் நபருக்கு பேச வாய்ப்பு கொடுப்பதும் இல்லை.

“ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்” (யாக்கோபு1:19) என்று கர்த்தருடைய வசனம் கூறுகிறது. அதற்கு மாறாக பேசுகிறதற்கு தீவிரமாயும், கேட்கிறதற்கு பொறுமையாவும் இருப்போமென்றால் நாம் ஒரு சுயநலவாதி என்பதை அது காட்டுகிறது. நாம் சொல்வதை பிறர் கேட்க வேண்டும் என்று நாம் நினைப்பதுப் போலவே அவர்கள் சொல்வதை நாம் கேட்க வேண்டும் என்ற எண்ணம் மற்றவர்களுக்கும் இருக்காதா என்ன? அதற்க்கான வாய்ப்பை நாம் அடுத்தவர்களுக்கு கொடுக்காமலிருக்கும் போது நாம் சுயநலவாதிகளாக நடந்து கொள்கிறோம்.

“எந்த மனுஷனும் கேட்பதற்கு தீவிரமாயும், பேசுவதற்கு பொறுமையாகவும் இருக்க வேண்டும்” என்பது ஒரு பொதுவான தார்மீக நெறிமுறையாக இருந்தாலும், இங்கு, அப்போஸ்தலனாகிய யாக்கோபு ஒரு வித்தியாசமான அர்த்தத்தில் இதை குறிப்பிட்டுள்ளார். கர்த்தருடைய வார்தைகளை கேட்பதற்குதான் நமக்கு தீவிரம் இருக்க வேண்டும் என்று யாக்கோபு சொல்லுகிறார். இதை அந்த வசனத்திற்கு முன் பின் வரும் வசனங்கள் தெளிவுப்படுத்துகின்றது.

“நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும், பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிபித்தார்” (யாக்கோபு 1:17-18) .

இந்த வசனத்திற்கு பிறகு தான் அடுத்த வசனம் இணைந்து வருகிறது. “ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்” (யாக்கோபு 1:19).

திருவிவிலியம் பொது மொழிபெயர்ப்பில் “என் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே இதை தெரிந்து கொள்ளுங்கள்” என்று சேர்க்கப்பட்டுள்ளது. (அதாவது நாம் தேவனின் படைப்புகளுக்குள் முக்கியமானவர்கள் (அ) உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் ஆக வேண்டும் என்பது பிதாவின் சித்தம், அதற்க்காக சத்திய வசனத்தினால் நீங்கள் ஜநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்)

நாம் சத்திய வசனத்தினால் ஜநிப்பிக்கப்பட்டவர்களானபடியால் அந்த வார்த்தைகளை கேட்பதற்கு நாம் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள்.

மேலும் இறை வார்த்தைகளை சாந்தமாய் ஏற்று கொள்ளுங்கள் என்றும் திருவசனத்தை நடைமுறை வாழ்க்கையில் ஒவ்வொருவருடைய செயலில் அதைக் கொண்டு வரவேண்டும் என்றும் பின்வரும் வசனங்களில் யாக்கோபு வலியுறுத்துகிறார் (யாக்கோபு 1:21-26).

ஆனால் நமக்குள் என்ன நடக்கிறது? சாதாரண வாழ்க்கையில் காணப்படுகிறதுப் போலவே தேவனுடைய சமூகத்திலும் நாம் அதிகமாக பேசிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் அவரிடமிருந்து கேட்பது மிகவும் குறைவு. இப்படிப்பட்ட சூழ்நிலை மிகவும் ஆபத்தானது என்று யாக்கோபு ஞாபகப்படுத்துகிறார்.

அவர் ஏன் அப்படி எச்சரிக்கிறார்?

கேட்பதற்கு தீவிரமாகவும், பேசுவதற்கு பொறுமையுள்ளவர்களாகவும் இருப்பதைப் போல இன்னும் ஒரு காரியத்தில் கூட நாம் தாமதமாயிருக்க வேண்டுமாம். கோபப்படுவதற்கு! (யாக்கோபு 1:19). கேட்க தீவிரமாயிராதவன் பேசவும், கோபப்படவும் தீவிரமுள்ளவனாக இருப்பான். இதை நாம் இவ்வுலக வாழக்கையில் ஒவ்வொரு நாளும் கண்டு வருகிறோம். எந்த காரியத்துக்கானாலும் சீறும் புலியைப் போல கோபப்படும் மேலதிகாரி, நிச்சயமாகவே கீழ் ஊழியர்கள் சொல்லுவதை முழுவதும் கேட்க மனதில்லாதவனாய் இருப்பான். சாந்தமாக கேட்கிறவன்,

மிகவும் சாந்தத்தோடு பதில் அளிக்கிறவனாயும், கோபப்படுவதற்கு தாமதமுள்ளவனாகவும் இருப்பான்.

வசனத்தை கவனித்துக் கேட்பதிலும் இந்த பொதுநெறிமுறை மிகவும் முக்கியமானது. சரியான முறையில் வசனத்தை கேட்காதவன் உடனடியாக தன் தீர்ப்பை சொல்ல தீவிரமடைவான். அவன் வார்த்தைகளில் கோபம் நிறைந்திருக்கும். இதற்குள் அப்படி என்ன ஆபத்து இருக்கிறது? என்று ஒருவேளை நினைக்கலாம். இங்கே எழும்பும் கோபம், நம்முடையது (யாக்கோபு 1:20). தேவனுடைய நீதி தேவனின் வார்த்தையில் மட்டும் தான் வெளிப்படுகிறது. வசனத்தை கேட்காமலிருக்கும் ஒருவனின் தீர்ப்பில் மனித கோபம் வெளிப்படுகிறது.

தாவீது ராஜா பாவம் செய்தான் - கடினமான பாவம்! தன்னுடைய போர்ச்சேவகரில் ஒருவனாகிய உரியா என்பவனின் மனைவியை அடைவதற்காக தாவீது உரியாவை கொன்றான். இப்படி இரண்டு பெரிய பாவங்கள் தாவீது செய்கிறான். விபசாரமும், கொலையும். அப்படியிருக்க ஒருநாள் நாத்தான் தீர்க்கதரிசி அரண்மனையில் வந்து ஒரு கதையை தாவீதிடம் சொல்கிறார். ஒரு ஐசுவரியவானும், ஒரு தரித்திரனும் இருந்தார்கள். ஐசுவரியவானுக்கு ஏராளமான ஆடுகள் இருந்தது, தரித்திரனுக்கு ஒரே ஒரு ஆடு மட்டும் தான் இருந்தது. ஆனால் ஒரு விருந்தாளி வந்ததும் ஐசுவரியவான் தன்னுடைய ஆடுகளிலிருந்து எடுக்காமல் அந்த தரித்திரனின் ஆட்டை பரித்துக்கொண்டு கொன்று விருந்தை ஆயத்தப்படுத்தினான் (2சாமுவேல் 12:14).

இதை கேட்ட உடனே தாவீதின் கோபம் அந்த மனுஷனுக்கு விரோதமாக எரிமலைப் போல் வெடித்தது. அந்த ஐசுவரியவான் மரணதண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தான் (2 சாமுவேல் 12:5).

இங்கே மனிதனின் கோபம் ஜொலிக்கிறது. ஆனால் தேவனின் நீதி வெளிப்படவில்லை. காரணம் என்ன? தாவீது பேசுவதற்கு தீவிரமாகயிருந்தான் முழுவதையும் நிதானமாக கவனித்தின் பின் ஒரு தீர்வை காணாமல், தீர்ப்பை கட்டளையிட்டான்.

ஆனால் உண்மையென்ன? இந்த செய்தி தாவீதுக்கு விரோதமாக வந்த செய்தி. தீர்க்கதரிசி அதை சொல்லுகிறார் “நீயே அந்த மனுஷன்” (2 சாமுவேல் 12:7). ஆனால் இதை சொல்லும் முன்னதாக ‘தாவீதின் கோபம்’ ஜொலித்தது.

சரியான முறையில் வசனம் கேட்கவில்லையென்றால் நாம் அடுத்தவர்களை குற்றவாளிகௌன்று தீர்க்க அவசரம் காட்டுகிறவர்களாக இருப்போம். ‘‘அந்த மனுஷன் மரணத்திற்கு பாத்திரன்’’ என்று நாமும் தீவிரித்து கதறிவிடுவோம். ஆனால் வசனத்தை நன்றாக கவனித்து கேட்கும்போது நாம் கோபப்படுவதற்கு தாமதமுள்ளவர்களாக மாறிவிடுவோம். வசனங்கள் மற்றவர்களுக்காக அல்ல, எனக்காக அருளப்பட்ட தேவாலோசனை என்ற உணர்வு நம்மில் வரும். கேட்கும் போது கோபம் அடைவதற்கு பதிலாக நம் குற்றங்களை நினைத்து வருத்தப்பட்டு தேவனிடம் கருணைக்காக ஜெபிக்கிறவர்களாக மாறிவிடுவோம்.

மனதாழ்மையோடும், கீழ்ப்படியும் மனப்பான்மையோடும் கூட தேவனுடைய வசனத்திற்கு நம்மை நாமே அர்பணிக்கும் போது தேவாவியானவர் வசனம் மூலமாக நமக்குள் கிரியை செய்வார். அது நம்மை பரிசுத்தத்திலிருந்து பரிசுத்ததிற்கு நாளுக்கு நாள் கொண்டு செல்லும். இவ்விதமாக நாம் தேவனின் படைப்புகளில் அதிகாரத்தன்மை உள்ளவர்களாக மாறிவிடுவோம். இதற்கு நாம் வசனத்திற்கு செவிக்கொடுக்க வேண்டும். அது தவிர்க்கவே முடியாத ஒன்று. ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நாம் கேட்காதபடி நம்மை வசனத்திலிருந்து அகற்றுகிற காரியங்கள் ஏராளமுண்டு. எனவே யாக்கோபு அப்போஸ்தலன் சொல்கிறார் ‘‘ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிறுக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்’’ (யாக்கோபு1:21).

அப்போஸ்தலனாகிய யாக்கோபு ‘அழுக்கு’ மற்றும் ‘துர்குணம்’ என்ற இரண்டு வார்த்தைகளை வெவ்வேறு அர்த்தத்தில் பயன்படுத்தி இருக்கிறார். காதுகளுக்குள் காணப்படும் மெழுகை (அ) அழுக்கை குறிக்கும் ‘ருபாரியா’ என்ற கிரேக்க வார்த்தை ‘ரூபாஸ்’ என்ற தாதுவில் இருந்து உருவானது. ‘ரூபாஸ்’ என்பதற்கு காதுக் குறும்பி என்று அர்த்தம். அதாவது வசனத்தை கேட்க கூடாதபடி நம்மை தடை செய்யும் இந்த ‘காதுக் குறும்பி’ யை நம்மில் இருந்து அகற்ற வேண்டும் என்று சொல்லுகிறார்.

இப்படிப்பட்ட அழுக்கின் நிமித்தம் காது அடயப்பட்டிருக்குமானால் சரியான முறையில் கேட்பதற்கு அது ஒரு தடையாயிருக்கும். காதை சுத்தம் செய்யாமல் விடுவதினால் அழுக்கு குவிகிறது. இதன் விளைவாக சிலர் செவிடர்களாகவும் மாறிவிடுகிறார்கள். தாங்க முடியாத வலியும் இருக்கும். காது சுத்தம் பண்ணினால் சுகமாக இருக்கலாம். நன்றாக கேட்கவும் முடியும்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

இந்த எளிதான காரியத்தை கூட செய்யாமல் வேதனையை சகித்து கொண்டு வாழ்க்கையை ஒட்டுகிறவர்களும் உண்டு.

ஆனால் யாக்கோபு கூரும் இந்த 'காதுக் குறும்பி' வசனத்தை கேட்கவிடாமல் நம்மை தடை செய்யும் தீய சக்தி வாய்ந்தது. தெள்ள தெளிவாக வசனத்தின் சத்தியங்களை கேட்டும் கூட அதற்கு செவிக்கொடுக்கவோ, உள்ளத்துக்குள் ஏற்றுக் கொள்ளவோ செய்யாமல் இருப்பவர்கள் உண்டு. அவர்கள் அதிகம் கேட்டாமலிருப்பது நல்லது என்று சொல்லுகிறவர்கள். வசனம் கேட்டால் கீழ்படிய வேண்டுமே. வசனத்தை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளாமல் நம்மை தடைசெய்யும் அழுக்கை நனவுடன் நீக்க வேண்டும், அதற்காக ஜெபத்தோடு கூட முயற்சி செய்ய வேண்டும்.

சங்கீதம் 40-ல் வரும் ஒரு ஜெபத்தை பாருங்கள்

"பலியையும் காணிக்கையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை. அப்போழுது நான் இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளின் என்னை குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன்."

நீர் என் செவிகளை திறந்தீர் என்பதற்கு திருவிவிலீயம் பொது மொழிபெயர்ப்பில் "ஆனால், என் செவிகளை திறக்கும்படி செய்தீர்" என்று எழுதப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் தேவன் செய்யும் மிக வல்லமையான செயலை பாருங்கள். வசனத்தை கேட்க நம் காதுகளை அவர் திறக்கிறார்.

செவிகள் திறக்கப்பட்டபோது, "புத்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது" என்ற உணர்வு சங்கிதகாரனுக்கு வருகிறது. இப்பொழுது "நியாப்பிரமானம் உள்ளத்திற்குள் ஆயிற்று". எனவே "என் தேவனை, உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன்" என்று சொல்லி தேவனின் சமூகத்தில் வருகிறான்.

சங்கீதக்காரனுக்கு தன் செவிகள் திறக்கப்படுவதற்கு முன்பும் அதற்கு பிறகும் உண்டான அனுபவத்தை சரியாக புரிந்து கொள்ள இந்த எபிரேய கவிதையை கவனியுங்கள்.

“பலியையும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை
எரிபலியையும் பாவம் போக்கும் பலியையும் நீர் கேட்கவில்லை,
ஆனால், நீர் என் செவிகளை திறக்கும்படி செய்தீர்.
அப்பொழுது நான் சொன்னேன்,
என்னை குறித்து திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது ;
உம்முடைய திருச்சட்டம் என் உள்ளத்தில் இருக்கிறது,
எனவே, என் தேவனே, இதோ நான் வருகிறேன்,
உமக்கு பிரியமானதை நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன்”.

செவிகள் திறக்கப்படுவதற்கு முன்பு தேவன் காணிக்கை, சர்வாங்கதகனபலி பாவநிவாரணபலி என்பவைகளைதான் பிரியப்படுகிறார் என்று சங்கீதக்காரன் நினைத்தான். ஆனால் தேவன் காதுகளை திறந்த போது கர்த்தருடைய நியாய பிரமாணம் உள்ளத்திற்குள் வந்தது. அப்பொழுது புத்தக் சுருளில் சடங்குகளையோ, சம்பிரதாயங்களையோ அல்ல தன்னை குறித்து எழுத்தப்பட்டிருக்கிறது என்று அறிந்து கொள்கிறான்.

பலிகளைக் குறித்து வசனங்களில் சொல்லப்படவில்லையா? என்று கேட்பீர்கள். உண்மையில் ‘பலி’ என்பதின் பொருள் என்ன? மகா பரிசுத்த தேவனின் சமுகத்தண்டையில் சேர முடியாத மனிதனின் உதவியற்ற, தகுதியற்ற நிலமையை தான் பலியிடும் ஒவ்வொரு நேரத்திலும் வெளிப்படுகிற உண்மைக் காட்சி. ஒவ்வொரு சந்தர்பத்திலும் மனிதன் தேவனுடைய கருணையை நாடவேண்டும்.

தமக்கு மிருகங்கள் வேண்டும் என்பதற்காக ஆண்டவர் பலியை ஏற்படுத்தவில்லை, அது அவருக்கு தேவையுமில்லை. பலியிடுகிறவனுடைய இதயம் தான் அவருக்கு முக்கியம். அதைத்தான் அவர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் மதம் நியாயபிரமாணத்தின் உட்கருத்தை மனிதனிடமிருந்து அகற்றி “நீ தேவனுக்கு ஆடு மாடுகளைக் கொடுத்து விடு, அது போதும்... என்ன வேணுமானாலும் செய், பலியை மட்டும் தவறாமல் செலுத்தினால் போதும், அதற்கு பிறகு உனக்கு உன் வழி...” என்று கற்றுக் கொடுக்கிறது.

சில பெயரளவு சபைகளும் இதைப் போல தான். சபையின் சடங்கு சமாச்சாரங்களை ஒழுங்காக செய்தால் போதும். சபைச் சட்டங்கள் மீறாமல் இருந்தால் போதும். ஆனால் மனிதனைக் குறித்துள்ள தேவனுடைய நோக்கத்தை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். சபைக் கூட்டங்களில்

பங்கேற்பதும், வசனம் கேட்பதும், ஏதோ ஒரு கடமைக்குதான் செய்கிறார்கள். அவர்களுடைய செவிகள் திறக்கப்படுவது இல்லை. உம்முடைய வசனங்கள் என் இருதயத்தில் இருக்கிறது என்று சொல்ல தைரியம் அவர்களுக்கு இல்லை.

தேவனுடைய வசனங்கள் ஒருவர் உள்ளத்தில் இருந்தால், தேவனின் விருப்பங்களை அவரால் புரிந்துகொள்ள முடியும். அப்பொழுது அவன் "இதோ நான் வருகிறேன்" என்று சொல்லி, தேவனுக்கு பிரியமானதை செய்ய மனதுள்ளவனாகவும், மகிழ்ச்சியுள்ளவனாகவும் இருப்பான். இப்படிப்பட்டவன் சங்கீதம் 40:9 காணப்படுவது போல 'மகா சபையிலே நீதியை பிரசங்கிப்பான்'! 'தேவனுடைய நீதியை' எங்கே இருந்து அறிந்துக் கொண்டான்? நிச்சயமாகவே திறக்கப்பட்ட செவிகள் வழியாக அவன் இதயத்துக்குள் நிறைந்த வசனங்களிலிருந்துத் தான்! .

மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது என்பதை மறந்து விடக் கூடாது. தேவனுடைய நீதியை யாரால் தெரிந்து கொள்ள முடியும்? தன் செவிகள் திறந்து வசனங்களை இதயத்துக்குள் வைத்துக் கொள்கிறவனால் மட்டும் தான். தேவனுடைய நீதியை அறிந்தவன் வாழ்கையிலிருந்து கோபம் மறைந்து விடும் அதற்கு பதிலாக பாவங்கள் மன்னிக்கப்படவும், தேவ கிருபையைப் பெற்றுக் கொள்ளவும் தேவச் சமூகத்தில் அவன் காத்திருப்பான்.

நமக்கிருக்கும் பாரபட்சங்கள், தப்பெண்ணங்கள், தவறான அபிப்பிராயங்கள் வசனத்தை ஏற்றுக் கொள்ளவதில் இருந்தும், தேவ சித்தத்தை செய்வதில் இருந்தும் நம்மை தடைச் செய்கிறது. இவைகள் பாரம்பரியம், கலாச்சாரம், சமூகம், அனுபவங்கள், மத வழக்கங்கள் மூலமாக உருவாகி வலுவடைகின்றது. ஆகவே இதை 'சுய-துரோகம்' என்று தான் அழைக்க வேண்டும். சுய-துரோகத்தின் விசித்திரமான அம்சம் என்னவென்றால், நாம் மற்றுள்ளவர்களை அல்ல தம்மைத்தாமே வஞ்சித்து கொள்கிறோம் என்பது தான். இப்படி நம்மைத் தாமே வஞ்சித்துக் கொள்கிற பக்தனை குறித்து யாக்கோபு,

"உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்" (யாக்கோபு 1:28) என்று சொல்லுகிறார்.

இந்த மனிதன் மற்றவர்களை அல்ல தன்னைத் தானே வஞ்சிக்கிறான். இந்த நபர் வெளிவேஷம் போடுகிறவன் அல்ல. ஏனென்றால் அவனுடைய பக்தி ஒரு நாடகம் என்று வேறு யாருக்கும் தெரியாவிட்டாலும் அவனுக்கு அது நன்றாக தெரியும். மேற்ச் சொன்ன வசனத்தில் காணப்படும் நபர் அவரையே ஒரு பக்தன் என்று எண்ணுகிறார். ஏனென்றால், அவர் சார்ந்து நிற்க்கும் மதம் அல்லது சபையின் சடங்குகளையும், வழிபாடுகளையும் தவறாமல் நிறைவேற்றுவதால், அந்த நபர் ஒரு பக்தன் என்று அவருடைய மதமோ, சபையோ சொல்லும். ஆனால் மெய்யான பக்தி என்ன என்பது அவருக்கு தெரியாது. ஏனென்றால் வசனம் அவருடைய உள்ளத்தில் இல்லை, காதுகள் அடைக்கப்பட்டிருகிறது என்று அவருக்கு தெரியவே தெரியாது. "பிதாவாகிய தேவன் முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தி" (யாக்கோபு 1:27) என்ன என்பதை தேவனுடைய வார்த்தைகளிலிருந்து தான் அறிந்து கொள்ள முடியும். அதுமட்டுமல்ல, "நீதி, இரக்கம், விசுவாசம் நியாயபிராமானத்தில் கற்ப்பிக்கப்பட்ட விசேஷித்தமானவை" என்று இயேசு சொல்லியிருக்கிறார் (மத்தேயு 23:23).

தேவனுடைய வார்த்தைகள் உள்ளத்தில் இல்லாததினாலே, ஒரு நல்ல சதவீதம் ஆட்கள் பெயரளவு சபை மற்றும் கிறிஸ்துவ மதத்தினுடைய பொய்யான, மாயமான வார்த்தைகளை நம்பி வஞ்சிக்கப்பட்டு சிக்குண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களை பக்தியுள்ளவர்கள் என்று எண்ணுகிறார்கள். உண்மையில் தேவனுடைய பாதையிலிருந்து தூரமாக இருந்தாலும், அதை அறியாமல் அவருடைய வழிகளில் நடக்கிறவர்களாக தங்களையே எண்ணி கொள்கிறார்கள்.

இயேசுவிடம் வந்த ஐசுவரியவானான வாலிபனுக்கும் சம்பவித்தது இது தான் (மாற்கு10:17-23). "கட்டளைகளை முழுவதும் நான் கடைபிடித்து வருகிறேன், அதுவும் சிறுவயது முதல் கடைபிடித்து வருகிறேன்" என்று அவன் இயேசுவோடு சொல்லுகிறான். அதாவது இனி எனக்கு நிறைவேற்ற ஒரு தேவ சித்தங்களும் இல்லை, நான் எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டேன் என்று தானே அதன் அர்த்தம்? அவன் ஒரு பக்தன் என்று அவன் நினைத்தான்.

ஆனால் இயேசு எப்படி பதிலளிக்கிறார் என்றுப் பாருங்கள். "நண்பனே, நீ நியாயப்பிரமாணத்தின் மத விளக்கங்களைத்தான் கடைபிடித்துதிருக்கிறாய். அது உன் மூளையிலிருக்கிறது. ஆனால் வசனம் உன் செவிகளை திறக்கவில்லை. கட்டளையெல்லாம் நான் செய்து வருகிறேன் என்று

சொன்னாயே அது தவறு. உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. உன் அயலானை உன்னைப் போல் நேசிக்கிறாய் என்றால், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று மற்றவர்களுக்கு பிரித்து கொடு. பின்பு வந்து சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றிவா" என்கிறார்.

அவன் பின்பற்றும் மத செயல்பாடுகளின் அடிப்படையில் இந்த வாலிபன் மிக பக்திவைராக்கியம் உள்ளவனாக இருந்தாலும், நியாயபிரமானத்தில் கற்ப்பிக்கப்படும் "விசேஷமானவைகளாகிய (மத்தேயு 23:33) கருணை, அன்பு, விசுவாசம்" என்பவைகளை எப்படி புறக்கணித்திருக்கிறான் என்று இயேசு மறைமுகமாக அந்த வாலிபனுக்கு எடுத்து காட்டுகிறார். ஆகவே, தன் சொத்து சுகங்களை விற்று தரித்திரருக்கு கொடுக்க சொன்னப் போது அவன் 'மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்' என்று மாற்கு தெளிவாக குறித்து வைத்திருக்கிறார் (மாற்கு 10:22). நியாயபிரமாணத்தின் எழுத்துகள் அவன் மூளையிலிருந்தாலும் நியாயப்பிரமானத்தின் உயிரான அதின் உட்கருத்து அவன் உள்ளத்தில் இல்லாமலிருந்தது.

தேவ வசனங்களுக்கு செவிக் கொடுத்து அதனை ஏற்று கொள்ளாமல் தடைச் செய்கிற இப்படிப்பட்ட முன் முடிவுகளின், ஓரவஞ்சனையின், பாரபட்ச்சத்தின் 'காதுக் குறும்பிகளை' தான் அப்போஸ்தலானகிய யாக்கோபு எடுத்துச் சொல்கிறார். வசனத்தின் உட்கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் வெளிவேஷ பக்தியிலும், மத ஒழுங்குகளிலும், பெயரளவு கிறஸ்தவ வாழ்க்கையிலும் கிடைக்கும் மாயமான திருப்தியின் மேலோடுகளை உடைத்தெரிந்து, கர்த்தருடைய வார்த்தைகள் வல்லமையாய் நம் இருதயத்துக்குள் பிரவேசிக்க தேவன் நம் செவிகளை திறப்பதற்காக ஊக்கமாய் அவரை நோக்கி விண்ணப்பித்து ஜெபிப்போம்.

வசனத்தை தடைசெய்யும் மற்றொரு காரியத்தை பற்றியும் அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொல்லுகிறார். 'அது மிகுந்து வரும் கொடிய தூர்குணம்' என்பதே.

# 7

# வசனம் V/S பாவம்

புகழ்ப்பெற்ற பல்கலைகழகத்தில் தன் மகனுக்கு அட்மிஷன் கிடைத்தது அந்த அம்மாவுக்கு மிகவும் சந்தோஷத்தை அளித்தது. சிறு வயதிலிருந்தே அவன் வீட்டுக்கு செல்ல மகனாகவும், உயர்ந்த மதிப்பெண்களை பெறும் பள்ளி மாணவனாகவும் இருந்தான். மகன் என்றாலே அம்மாவுக்கு உயிர். இது வரை அவனை பிரிந்து இருந்ததேயில்லை. இனி அவனை பிரிந்துதான் ஆக வேண்டும். அதை அம்மாவுக்கு நினைத்து பார்க்க கூட முடியாத காரியம். ஏனென்றால் படிப்பு முடிந்தவுடன் வேலையென்று போய்விடுவான், அவன் படிக்கிற படிப்புக்கு வெளிநாடுகளில் தான் வேலை வாய்ப்பு கிடைக்கும். எப்படியும் இதுவரை அவனோடுக் கூட இருந்து, அரவனைத்து, கண்டித்து, புத்திசொல்லி, ஆறுதல்படுத்தி வந்ததுப் போல இனி முடியாது. இது அந்த அம்மாவுக்குள் ஒன்றுகலந்த உணர்வுகளை உருவாக்கியது. ஒரு பக்கம் சந்தோஷம், மறுபக்கம் பதட்டம், ஒரு பக்கம் பெருமை, மறுபக்கம் கலக்கம்.

வாழ்க்கையின் மிக முக்கிய கட்டத்தை எட்டிய தன் மகனுக்கு இனி உடன்துணையாயிருந்து யார் அவனை வழிநடத்துவார்? இருள் சூளும் நேரங்களில் வெளிச்சத்தை காண்பிக்க யார் வருவார்? இக்கட்டான சூழ்நிலையின் மத்தியில் பக்கபலமாய் நிற்க இனி யாரால் முடியும்? நல்ல நண்பர்கள், பேராசிரியர்கள் அவனுக்கு கிடைக்குமா? இப்படிப்பட்ட

சிந்தனைகளால் அந்த தாயின் உள்ளம் கலங்கியது. மகன் கல்லூரிச் செல்ல வேண்டிய நாள் வந்தது. அந்த தாயார் தன் செல்ல மகனுக்கு ஒரு பரிசை கொடுத்தாள். “ஜாண் இது ஒரு புத்தகம், ஒன்று இந்த புத்தகம் உன்னை பாவத்திலிருந்து அகற்றும், இல்லையென்றால் பாவம் உன்னை இந்த புத்தகத்திலிருந்து அகற்றி விடும்”

ஜாண் வெஸ்லி என்ற அந்த வாலிபனுக்கு அவன் தாயார் பரிசாக கொடுத்தது ஒரு பரிசுத்த வேதாகமம். அந்த நாட்களில் சொந்தமாக ஒரு வேதபுத்தகத்தை வாங்குவது என்றால் மிக கடினம். ஆயினும் அந்த தாயார் ஒரு வேதபுத்தகத்தை விலை கொடுத்து வாங்கி தன் மகனுக்கு கொடுத்தது வீணாகப் போகவேயில்லை. அப்புத்தகத்திலிருந்த அக்கினி பாவத்தின் விஷப்பனியில் குளிராமல் ஜாண் வெஸ்லியை பாதுகாத்தது. இந்த ஜாண் வெஸ்லி மூலமாக பல்லாயிரக்கணக்கானோர் வசனத்தின் வல்லமையினால், பாவத்தை படிக்கு வெளியே நிறுத்தினார்கள். பிற்காலத்தில் தேவவார்த்தைகளால் ஒழுங்குப்படுத்தப்பட்ட வாழ்க்கையை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டுமென்று ஜனங்களுக்கு சவால் கொடுத்த ‘மெதடிஸ்ட்’ என்ற அமைப்புக்கு தலைவராக மாறினார் இந்த ஜாண் வெஸ்லி.

“ஒன்று வசனம் பாவத்திலிருந்து நம்மை அகற்றும், இல்லையென்றால் பாவம் நம்மை வசனத்திலிருந்து அகற்றும்”.

ஒரு சீடன் (அ) தேவபிள்ளை பாவம் செய்யும் போது அவனுடைய வாழ்க்கையிலிருந்து முதலாவது ஜெபத்தையோ, தீர்க்கதரிசனத்தையோ, ஊழியத்தையோ அல்ல, வசனத்தை தியானம் செய்வதை இழந்துவிடுகிறான். பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டே அநேகர் அற்புத அடையாள ஊழியங்கள், தீர்க்கதரிசனம் போன்ற வல்லமை ஊழியங்களை செய்வதை பார்த்திருப்பீர்களே! வாழ்க்கையிலிருந்து முதலாவது ஜெபத்தையோ, தீர்க்கதரிசன வரத்தையோ, ஊழியத்தையோ அல்ல திருவசனத்தை வாசித்து தியானித்து நேரம் செலவிடுவதை இழந்துவிடுவான்.

ஒரு மனிதனுக்கு பாவ வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டு அற்புத ஊழியங்கள், கிருபை வரங்களின் ஊழியங்கள் எப்படி செய்ய முடியும் என்று கேட்கலாம். இது அநேகரை குழப்பும் கேள்வி.

கண்மலையின் மேல் வீட்டை கட்டுகிற மனிதனுடைய உவமையை கவனியுங்கள் (மத்தேயு 7:21-27). கடைசிக் காலத்தில் பரலோக ராஜ்யத்துக்குள் அனுமதிக்கப்படாமல் கைவிடப்படுகிறவர்கள், கர்த்தாவே,

கர்த்தாவே என்று சொல்லிக் கொண்டு தேவனிடத்தில் வருவார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் சற்று சுவாரசியமானது. அதென்னவென்றால், “உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம், பிசாசுகளைத் துரத்தினோம் அநேக அற்புதங்களை செய்தோம்” என்பார்கள். அதெல்லாம் உண்மைதான், ஆனால் இப்படியெல்லாமிருந்தும் கர்த்தர் அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் புறம்பே தள்ளி விடுகிறார். அவர்கள் சொல்வது பொய் என்று கர்த்தர் மறுக்கவில்லை. அவர்கள் தீர்க்கதரிசிகளாகவோ, பிசாசைத் துறத்துகிறவர்களாகவோ, அற்புதங்களை செய்தவர்களாகவோ இருக்கலாம். ஆனால் ஆண்டவர் அதை கவனிப்பதே இல்லை. அவர் அவர்களைப் பார்த்து ‘அக்கிரம் செய்கைக்காரரே’ என்று கூப்பிடுகிறார். ஆம் அக்கிரம் செய்வோருக்கு கர்த்தருடைய நித்திய சந்தோஷத்துக்குள் அனுமதி இல்லை!

அக்கிரமத்தை செய்கிறவர்கள் தான் அற்புத அடையாளங்களையும் செய்கிறார்கள்! அது எப்படி நடக்கும்? இரண்டையும் ஒருமித்து எப்படி செய்ய முடியும்?.

ஆவிக்குரிய வரங்கள் தேவன் அருளும் ஈவு. அது தேவனின் அன்பளிப்பு. அது ஒருவரின் பரிசுத்தத்திற்கு பரிசாக வழங்கப்படுவதல்ல. ஆனால் அந்த ஆவியின் வரங்களை வைத்துக் கொண்டு நாம் ஆவிக்குரிய வாழக்கையில் வளர வேண்டும். இதைத்தான் தேவன் விரும்புகிறார். தேவன் அருளும் வரங்கள் தீர்க்கதரிசனம் உரைக்கவும், பிசாசுகளைத் துரத்தவும், அற்புதங்களைச் செய்யவும் நம்மை பலப்படுத்துகிற வரங்கள்தான். ஆனால் தேவன் எதிர்ப்பார்க்கும் பரிசுத்த வாழ்க்கை இல்லாமல் நாம் வரங்களை பயன்படுத்தும்போது கர்த்தரின் திருஇருதயம் வேதனைப்படுகிறது. ஆனாலும் தேவனை துக்கப்படுத்திக் கொண்டே பல சீடர்களும் வரங்களை கையாளுகின்றார்கள். அற்புதங்களையும், அக்கிரமத்தையும் அவர்கள் ஒன்று போல செய்கிறார்கள். தேவனுடைய வேதனையை ஒரு பொருட்டாக எண்ணுவதே இல்லை.

தேவன் ஒரு நபருக்கு ஆவியின் வரங்களை கொடுத்துவிட்ட பிறகு அந்த மனிதன் பாவத்தில் விழும்போது அவர் கொடுத்த வரத்தை திரும்ப எடுத்துக் கொள்ளமாட்டார். நம்முடைய பிள்ளைகள் எதாவது தப்பு செய்யும்போது அடுத்த நிமிடமே அவர்களுக்கு வாங்கி கொடுத்த எதாவது பொருள்களை, அல்லது வழங்கிய பரிசுகளை அவர்களிடமிருந்த திரும்ப வாங்கி விடுவோமா? இல்லையே. பொல்லாதவர்களாகிய நாம் அப்படி செய்வதில்லை என்றால் பரலோக பிதா செய்வாரா?

நாம் உண்மையில்லாதவர்களாக இருந்தாலும், அவர் (தேவன்) உண்மையுள்ளவராக இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. தேவன் தமது பிள்ளைகள் அவர்களுடைய அக்கிரம வழிகளை விட்டு, தம்மிடம் மனம் திரும்பி வருவதை எதிர்நோக்கி பொறுமையுடன் காத்திருப்பார். தாம் ஆவியின் வரங்களினால் நிரப்பின நபர், பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு திரும்பி தம்மிடம் வரவேண்டும் என்றும்,பரிசுத்தமாய் வாழ்ந்து தம்முடைய ஊழியத்தை தொடர்ந்து செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தோடு தேவன் தயவாய் காத்திருப்பார். ஆனால் இந்த மனிதன் அதைப் பற்றி கவலைப்படுவதே இல்லை, தேவன் துக்கம் நிறைந்தவராய் பொறுமையுடன் காத்திருக்கும் இந்த காலத்திலும் அவன் அக்கிரமத்தையும், ஆவியின் வரங்ளையும் ஒன்றுபோல சமாளிக்கிறான்.

தேவன் பொறுமையுள்ளவராகவும், உண்மையுள்ளவராகவும் இருப்பதை தங்களுடைய மனம்திரும்புதலுக்காக பயன்படுத்திகொள்ளாமல் அவரை மறுதலித்து மாண்டுப் போகிறார்கள். தேவனைவிட அவர் அருளும் வரங்களை நேசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஊழியங்களில் அற்புதங்கள் நடக்கிறதினாலே, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறப்படுகிறதினாலே, மற்று வல்லமையான காரியங்கள் நடத்துகிறதினாலே தன்னுடைய வாழ்க்கை தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கிறது என்ற போலியான எண்ணம் அவர்களை பிடித்துக் கொள்கிறது. கிருபை வரங்களை தேவன் கிருபையாய் அளித்த வரங்கள் என்று எண்ணாமல், தங்களுடைய பரிசுத்தத்திற்கு கிடைத்த அங்கீகாரம் அல்லது அதிகாரம் என்று நினைத்துவிடுகிறார்கள். ஆகவே பரலோகத்தின் வாசலை தங்களுக்கு திறந்து தரவேண்டும் என்று அதிகார பூர்வமாக கேட்கிறார்கள். தங்களை புறக்கணிப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. அப்படிப்பட்ட காரியம் ஒரு நாளும் நடக்காது என்று உறுதியாய் நம்பினார்கள்.

இது சுய வஞ்சனையின் வேறொறு சித்திரம். முந்தின அத்தியாயத்தில் மத பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள், சடங்காச்சாரங்கள் மத ஒழுங்குமுறைகள் ஒருவருக்கு தரும் மாயமான மனநிறைவு, தேவனுடைய பரிபூரண சித்தத்தை செய்யவிடாமல் தடைச்செய்வது எப்படியென்றும் அதின் ஆபத்தையும் குறித்து பார்த்தோம்.

மதக் கொள்கைகளையும், சபை கோட்பாடுகளையும் பின்பற்றுகிறவர்கள், தாங்கள் தேவனுடைய வழிகளின் மிக வைராக்கியமாக இருக்கிறார்கள் என்றும், அவர்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று எண்ணுகின்றனர்.

ஆனால் இந்த மாயமான எண்ணம் வசனத்திற்காக செவிகள் திறக்கப்படுவதில் இருந்து அவர்களை தடைசெய்கிறது. அதன் விளைவாக வசனம் அவர்களுக்குள் பிரவேசித்து கிரியைச் செய்வதற்கான வாய்ப்பு தவிர்க்கப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்டவர்கள் தங்களை வஞ்சித்து கொள்வதின் ஆபத்தைவிட, வரங்களையும் அக்கிரமத்தையும் ஒன்று போல செய்பவர்களின் ஆபத்து மிகவும் பெரிது. வாழ்க்கையிலோ, ஊழியத்திலோ வல்லமையான வரங்கள் வெளிப்படும் போது தங்களுடைய பாவத்தை தேவன் மறந்துவிட்டார். அவர் அதை எண்ணவில்லை என்று சொல்லி பெறும் ஏமாற்றத்துக்கு ஆளாகிறார்கள்.

ஆவியின் வரங்கள் பெற்று வல்லமையாய் அற்புத அடையாள ஊழியங்கள் செய்கிறவர்கள், கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் பாவத்தை செய்ய எப்படி முடியும் என்ற கேள்விக்கு பதிலாக சகோதரர் பி.ஜி. வர்கீஸ் சொன்னதை என் நினைவுக்கு வருகிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று நேர்மையுடன் வாழ்ந்து வருகிற ஒருவர் எதாவது பாவத்தில் விழுந்து விடும்போது அவருடைய பயம் முழுவதும் அவர் பெற்றுக் கொண்ட ‘அபிஷேக’த்தை இழந்த விடுவேனோ என்பதாக இருக்கும். அதற்கு பிறகு அவர் ஏதாவது ஜெப கூட்டத்திற்கு செல்லும்போது அங்கே மற்றவர்களைப் போல தனக்கும் அந்நிய பாஷை பேச முடிகிறதா என்று தன்னையே பரிசோதிப்பார் (ஏனென்றால் அபிஷேகத்தின் அடையாளமாக அந்நியபாஷையைத் தான் அளவுகோலாக கருதுகிறோம்!) அப்பொழுது அவராலே அன்னியபாஷை பேச முடிந்தால் தன்மேலிருந்து அபிஷேகம் எடுத்து கொள்ளப்படவில்லை என்று தன்னையே நியாயப்படுத்திக் கொள்வார். அதற்கு பிறகு அந்த பாவத்தை மீண்டும் செய்வதற்கு தயங்க மாட்டார். இப்படி, ஒவ்வொரு பாவம் செய்யும் போதும் ‘அபிஷேகம்’ இருக்கிறதா இல்லையா என்று ‘சோதனை’ செய்வார். அந்நிய பாஷை பேச முடிந்தால், பிறகு ‘சந்தோஷம், ஆண்டவர் கிருபையுள்ளர்’ என்று சொல்லி பெரிய பெரிய பாவங்களையும் அக்கிரமங்களையும் எந்த வித தயக்கமுமில்லாமல் செய்ய ஆரம்பிப்பார். ஆவிக்குரிய வாழ்க்கையை நேர்மையுடன் வாழ்ந்தும், ஆவியின் அபிஷேகம் பெற்றும் அவருடைய முடிவு அழிவு ஆனால் என்ன பிரயோஜனம்?

துன்மார்க்கத்தையும், அற்புத ஊழிங்களையும் ஒருமித்து கொண்டுப்போக முடியும் என்று பார்த்தோம். ஆனால் துன்மார்க்கமான வாழ்க்கையையும், திருவசனத்தையும் ஒருமித்து கொண்டுபோக முடியாது. பாவத்தில் விழும் ஒரு சீடன் விட்டுவிடுகிற முதல் காரியம் என்னவென்றால்,

அது திருவசனம்தான்! பாவம் நம்மை திருவசனத்திலிருந்து அகற்றும். ஆகவேதான் “உங்கள் வேதாகமத்தின் மீது தூசிபடிந்து இருக்குமானால், ஒருவித சந்தேகத்துக்கும் இடமில்லை, நீங்கள் பின்மாற்றத்தில் வாழும் நபர்” என்று ஸ்பர்ஜன் சொல்லியிருக்கிறார். பாவத்தை செய்து வருகிறவனுக்கு திருவசனத்தில் சந்தோஷிக்க முடியவே முடியாது. ஒருவேளை வேதாகமத்தை திறந்து வைத்து கொள்ளலாம், அல்லது வாசிக்கவும் செய்யலாம். ஆனால் வசனம் அவனுக்குள் பிரவேசிக்காது. “உமது நியாயப்பிரமாணம் எனக்குள் இருக்கிறது” என்று சங்கீதக்காரன் சொல்லும் அனுபவம் இருக்காது. நியாயப்பிரமாணம் இதயத்தில் இல்லாதவன் பாவத்தில் வாழ்ந்து கொண்டேயிருப்பான்.

ஆவியின் வரங்களை உங்களுடைய வாழ்க்கைக்கு கிடைத்த அங்கீகாரமாக எண்ணி உங்களையே வஞ்சித்து கொண்டிருக்கும் உங்களுக்கான தேவச் செய்தி இது தான், “மரத்தை அதன் கனிகளினால் தான் அறிய வேண்டும் அல்லாமல் அதற்கு போடப்படும் உரங்களினால் அல்ல” மத்தேயு 7:21யை பாருங்கள்.

தீர்க்கதரிசிகளும், பிசாசைத் துரத்திறவர்களுக்கு, அற்புத அடையாளங்களை செய்கிறவர்களும்,அக்கிரமத்துக்குள் விழுகிறபோது, திருவசனத்தின் மேல் அடித்தளம் அமைத்து தன் கிறஸ்துவ வாழ்க்கையை கட்டுகிறவன் பெறுங்காற்றின் மத்தியிலும், பெருமழை, பெருவெள்ளம் இவைகளின் மத்தியிலும் மனம் தளர்ந்துப் போகாமல் கர்த்தர் ஆயத்தம் பண்ணின நித்திய சமாதானத்துக்குள் நுழைந்துவிடுகிறான். காரணம் என்னவென்றால், அவர்கள் அக்கிரமங்களை செய்யாவில்லை. அவர்களை அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழவைத்தது திருவசனங்கள்தான்” என்று இயேசு சொல்கிறார் “நான் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டு,இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டை கட்டிய புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்” (மத்தேயு 7:24).

பாவம் வசனத்திலிருந்து நம்மை அகற்றுகிறது போல வசனம் நம்மை பாவத்திலிருந்து அகற்றுகிறது. ஜாண் வெஸ்லியின் தாயார் “ஒன்று இந்த புத்தம் பாவத்திலிருந்து உன்னை அகற்றும் இல்லையென்றால் பாவம் இந்த புத்தகத்தில் இருந்து உன்னை அகற்றும்” என்று சொன்னது எவ்வளவு உண்மை.

இஸ்ரவேல் ராஜாக்களுக்கு கர்த்தர் கொடுத்த மிக முக்கியமான ஆலோசனை என்னவென்றால் "அவன் தன் சிங்காசனத்தில் வீட்டிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர் பேரில் மேட்டிமை கொள்ளாமலும், கற்பனையை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும், இந்த நியாயபிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்த கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின் படி செய்வதற்காக தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக் கொள்ளும் பொருட்டு, அவன் லேவியராகிய ஆசாரியத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக் கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்க கடவன். இப்படி செய்வதினால் தானும், தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்தில் நீடித்து வாழ்வார்கள்" (உபாகமம் 17: 18-20).

கர்த்தராகிய தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாமலிருக்க வேண்டுமானால், நியாயபிரமானத்தின்னுடைய ஒரு பிரதி தனக்கென்று எழுதியெடுத்து தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக அவன் தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்க வேண்டும். இதைப்போல தேவ வசனத்தை தன் சொந்தமாக்கி கொண்டு அதை வாசித்து கிரகித்து கொள்பவனால் மட்டும்தான் பாவம் செய்யாமல் தன்னை காத்துக்கொள்ள முடியும்.

119ம் சங்கீதம் திருவசனத்தை பற்றியப் பாடல். இந்த பாடலின் ஒவ்வொரு வரிகளும் நாவுக்கு இனிமையானதுதான். இதை ருசிக்க வேண்டுமானால் சங்கீதம் முழுவதும் ஒரு முறை வாசித்து பாருங்கள். மிகவும் பெரிய சங்கீதமானதால் அநேக நேரங்களில் நாம் அதை வாசிக்காமல் விட்டு விடுகிறோம். பாவமும் வசனமும் ஒன்றுக்கொன்று எவ்வளவாக மாறுபட்டிருக்கிறது என்று விவரிக்கும் ஏராளம் வசனங்கள் இதில் அடங்கியுள்ளது.

முதலாவது வசனத்தை எடுத்து கொள்வோம். "கர்த்தரின் வேதத்தின் படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்". நம்மை மாசற்றவர்களாக, உத்தம மார்க்கதாரர்களாக மாற்றுவது திருவசனம் தான் என்ற மெய்மையை சங்கீதக்காரன் ஆரம்பக் கருத்தாக எடுத்து சொல்கிறார். சரியான முறையில் இதை மொழிப்பெயர்க்கும் போது "தன் வழிகளை மாசற்றதாக மாற்றினவன், கர்த்தருடைய நியாயபிரமாணத்திற்கேற்ப நடந்துகொள்கிறவன் பாக்கியவான்" என்று சங்கீதக்காரன் சொல்கிறான்.

திருவசனத்திற்கு கீழ்படிகிற ஒரு நபருக்கு உத்தமனாக அல்லாமல் இருக்க முடியாது. ஆகவே சங்கீதக்காரன் ஒரு இளைஞனிடம் சொல்கிறார்.

“இளைஞர் நம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக் கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைபிடிப்பதால் அன்றோ?” (சங். 119:9). வாலிபனை பாவவழிகளுக்குள் தடுக்கி விழாதபடி தேவனுடைய வார்த்தைகள் அவனை பாதுகாக்கின்றது. அது அவன் கால்களுக்கு தீபமாகவும், பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கும். பரிசுத்த வாழ்க்கை வாழ திருவசனம்அவனுக்கு காப்பாளராக செயல்படும்.

“நான் உமக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்” என்று சொல்லும் போது பாவமும் வசனமும் எதிர்மாறான முடிவடையிலுள்ள இரண்டு காரியங்கள் என்று சங்கீதக்காரன் நம்மை நினைப்பூட்டுகிறான். “பொய் வழியை விட்டு விலக்கியருளும், உமது திருசட்டத்தை எனக்கு கற்றுத்தாரும்” (29) என்று ஜெபிக்கிறான்.

“உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாரு உமது வாக்கை என் இருதயத்தில் இருத்தியுள்ளேன்... உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்” (101) என்று அவர் தேவனிடம் சொல்கிறான். திருவசனம் நம்மை பாவத்தில் இருந்து அகற்றி நிறுத்துவதுப் போல பாவமும் வசனத்திலிருந்து நம்மை அகற்றி நிருத்தும் என்பதைதான் இந்த வசனம் நம்மோடு சொல்கிறது. பொல்லாத வழிகளில் உங்கள் கால்களை வைப்பேனென்றால் காத்தருடைய திருசட்டங்களை கீழ்படிவது உங்களுக்கு அசாத்தியமாக மாறும். தேவனின் திருசட்டத்தை விட்டு தூரம் போனால் துன்மார்க்கம் உங்கள் புகழ்ச்சியாக மாறிவிடும் (நீதி 28:4) அதனால் தான் “எல்லா வித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு வசனத்தை சாந்தமாய் (அ) பணிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொல்லியுள்ளார்.

‘கொடிய தூர்குணம்’ என்ற வார்த்தையை கவனியுங்கள், திருவிவிலியம் பொது மொழிப்பெயர்ப்பில் ‘உங்களிள் மிகுந்துள்ள தீமையை’ என்று பார்கிறோம். துன்மார்க்கம் புற்றுநோயைப் போல செயல்படும். படிபடியாக அது பரவிகொண்டே இருக்கும்.

புற்றுநோய் ஒரு உயிரணுவில் தாக்கும் போது அங்கேயே அது நின்றுவிடாது. சுற்றி இருக்கும் உயிரணுக்களையும் தாக்க துவங்கும். மறைவாக செயல்படுகிற புற்றுநோயின் அணுக்களை கண்டுபிடித்து முற்றுமாக அழிக்கவில்லையேன்றால் அது நம்மை அழித்துவிடும். நம் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சிறு அளவு துன்மார்க்கம் கூட இருக்கவிடாமல் அதை பரிசோதித்து, கண்டுபிடித்து அகற்றிவிட நாம் நெகிழ்ந்து விடுவோமானால் அது ஒவ்வொரு உயிரணுக்களையும் தாக்கி இறுதியாக ஆவிக்குரிய மரணத்திற்கு நேராக நம்மை இழுத்து செல்லும். எனவே எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஆல்வினின் வாழ்கையில் அது தான் நடந்தது.

ஆல்வின் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் உற்சாகமுள்ளவனாக இருந்தான். சபையின் அனைத்து காரியங்களிலும் மகிழ்ச்சியோடு பங்கேற்று வந்தான். அப்படியிருக்கும் போது ஒரு நாள் நண்பர்களின் ‘பாச்சிலேர்ஸ் பார்டி’ (நண்பர்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் மதுவிருந்து)க்கு அழைக்கப்பட்டான். அன்றைய ஸ்பெஷல் சிங்கபூரில் இருந்து வந்த நண்பர்கள் கொண்டு வந்த ஒரு அரியவகையிலான விஸ்கி ஆல்வினுக்கு ஒரே டென்ஷன், அவன் இரட்சிக்கப்பட்டவன் குடிக்க கூடாது என்றெல்லாம் ஆரம்பத்தில் தன்னிடமே சொல்லிப் பார்த்தான். ஆனால் இந்தியாவில் கிடைக்காத அந்த ஸ்பெஷல் விஸ்கியை. ருசி பார்க்க கிடைக்கும் சான்ஸ் விட்டிட கூடாது என்று சொல்லி அவன் நண்பர்கள் அவனை மடங்கடித்தார்கள். சோதனையை எதிர்த்து நிற்க அவனாலே முடியவில்லை. ஒரு ‘பெக்’ அவனும் குடித்தான்.

அய்யோ! நான் தவறி விட்டேனே, இனி என்ன செய்வேன்? என்ற குற்ற உணர்வுடன் தான் ஆல்வின் வீட்டிற்கு சென்றான். படுக்கையில் படுத்துக் கொண்டே “இயேசுவை மன்னியும் தப்பு நடச்சுருச்சு... மன்னியும்” என்று சொல்லி துக்கத்தோடு துங்கினான்

அடுத்த நாள் ஞாயிறு கிழமையாயிருந்தது. காலையில் எழுந்தவுடன் கடந்த இரவு நடந்த காரிங்களை யோசித்துப் பார்த்தான். அவனுக்கு துக்கத்தை தாங்கமுடியவில்லை. “ச்சே... குடிக்காமல் இருந்திருக்கலாமே” என்று யோசித்து படுக்கையிலே இருந்தான். சபைக்கு போக நேரம் நெருங்கிகொண்டேயிருந்தது. ஆராதனைக்கு போகணுமா? பாவம் செய்த நான் பரிசுத்த ஆராதனைக்கு போவது சரியா? என்றெல்லாம் சிந்தித்தான்.

சபைக்கு போக வேண்டாம் என்று முடிவெடுத்தான். ஆனால் இன்று போகவில்லை என்றால் பாஸ்டர், அப்பா, அம்மா, சின்னசிறுசுகளிலிருந்து தாத்தா பாட்டிமார்களுக்கு வரை பதில் சொல்ல வேண்டியதாகுமே. இன்று வாலிபர் கூட்டமில்லாததால் செய்தி கொடுக்கவோ ஆராதனை நடத்தவோ வேண்டாம் மட்டுமல்ல பைபிள் வாசித்து இரண்டு நாளாகிவிட்டது யோசித்துப் பார்த்தான் இந்த வாரம் எந்த வித சிக்கலும் இல்லை. சபைக்கு போக தீர்மானித்தான்.

சபைக்கு சென்ற ஆல்வினுக்கு அடுத்த நெருக்கடியை சமாளிக்க வேண்டியதாயிற்று. அதாவது 'ஆல்வினுக்குப் ஆப்பு' என்று சொல்லலாம். அதென்னவென்றால் அன்று திருவிருந்தாராதனை உண்டு. மாட்டிகிட்டான் ஆல்வின்! குற்ற உணர்வு ஒரு பக்கம் ஆல்வினை நெருக்கியது. திருவிருந்து வேலையில் பாஸ்டர் நிச்சயமாகவே வேதப்பகுதியை வாசிக்க அழைப்பார். மேடையில் எல்லாவரும் தன்னை கவனிப்பார்கள். திருவிருந்தில் பங்கு பெராமல் இருக்க முடியாது. என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிபோனான் ஆல்வின் கடைசியாக மற்றுள்ளவர்களிடமிருந்து வரும் கேள்விக்கணைகளை பயந்து திருவிருந்தில் பங்கேற்றான். சபை ஆராதனை முடிந்து வீட்டுக்கு வந்தான். 'அப்பாத்திரமாக' கர்த்தருடைய அப்பத்தை புசித்ததின் பிறகும் எனக்கு ஒன்றும் ஆகவில்லையே, நான் மரித்துபோகவில்லையே? என்று ஆச்சரியப்பட்டான்.

சாயங்காலமானபோது ஆல்வினின் நண்பன் அழைத்தான் "சிங்கபூரில் இருந்து கொண்டுவந்த பாட்டில் இன்னும் ஒன்று இருக்கு, நீ வா, குடிக்கலாம்" என்றான். "டேய், இல்லடா... நான் வரலேடா, நேற்றுக்கூட..." ஆல்வின் சொல்லிப் பார்த்தான்.

"நேற்று என்னடா அச்சு? என்ன வானம் இடிஞ்சு கீழே விழுந்துதா? நீ வா மச்சி" என்று சொல்லிவிட்டு போனை வைத்தான். அன்றைக்கும் ஆல்வின் நண்பனின் வீட்டுக்கு சென்றான். அன்றும் குற்ற உணர்வோடு கூட படுத்து தூங்கினான். வேறொறு நாள் சென்றபோது சீட்டு விளையாட்டு அமர்க்களமாக நடந்த கொண்டிருந்தது.

"டேய் வந்துட்யா..? வா உட்காரு, ஒரு கை ஆல்வினுக்கும் போடுடா மச்சி...." என்று சொன்னான்.

"இல்ல வேண்டாம்... நான் ஆட வரல... ஆள விடு..."

“ஏன்டா! பிரச்சனையொன்னுமில்லடா வந்து ஆடு...” நண்பன் வலுக்கட்டாயம் செய்தான்.

“டேய் நாங்க க்றிஸ்டீன். எங்களுக்கு சீட்டு விளயாட... சர்ச்ல சொல்லியிருக்காங்க வேண்டா... விட்டுரு....” ஆல்வின் மறுத்தான்.

“ஆமா இங்க தண்ணியடிக்கும் போது கடவுள் கோவப்பட்டரா? உட்காருடா....”

“டேய், இது சூதாட்டம்டா.... நான் வருல....” ஆல்வின் விலகி போக பார்த்தான்.

“அப்படியென்ன காசு வெச்சு யாரவது இங்க விளையாடுறாங்களா? வந்து உட்காருடா....”

நம்ம ஆல்வின் ஆச்சே...!! ஐயா.... ஆட தொடங்கினார்...!!

அன்று இரவு மிக அதிக குற்றஉணர்வுடன் படுக்கைக்கு சென்றான் தூங்குவதற்கு முன்பு ஜெபம் செய்தான்! ஆண்டவரே தப்பு நடந்துப் போச்சு... என்னை மன்னியும் ஆனால் பைபிள் வாசிக்க தோன்றவில்லை.

அதற்கு பிறகு ஆல்வின் பணம்போட்டு கூட சீட்டு விளையாடதுடங்கினான். சிகரட் பிடிப்பது சர்வசாதாரணமானது. பிறகு அவனே பணம் செலவழித்து குடிக்கவும் ஆரம்பித்தான்.

சபைக் காரியங்களில் அவ்வளவு மும்முரமாக ஈடுபடாவிட்டாலும், சபைக்கு தவறாமல் செல்வான். ஒரு தப்பான வாழ்க்கை தான் அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று அவனுக்கு நன்றாக தெரியும். ஒரு கடமைக்காக ஜெபிப்பான். ஆனால் வேதாகமத்தை எல்லா ஞாயிற்றுக்கிழமையும் தூசியடித்து, துடைத்து சபைக்கு கொண்டு செல்வான்.

கொஞ்சம் கொஞ்சமாக தான் ஆல்வின் தவறான வாழ்கையை ஆரம்பித்தான். ஒரு ‘பெக்’ மட்டும் ருசி பார்த்து தொடங்கிய ஆல்வினின் வாழ்கையில், குடி ஒரு பழக்கமாகவே மாறிவிட்டது. அது மட்டுமல்ல சீட்டு விளையாட்டு, சுதாட்டம் போன்ற கெட்ட சுபாவங்களுக்கு அடிமையானான். அவன் வாழக்கை சிதறி குழைந்தது. அவனுடைய ஆவிக்குறிய வாழ்க்கை ஒன்றுமில்லாமல் போனது. எல்லாவித தீமைகளும் அப்படித்தான். தூர்குணம் (அ) தீமை வாழ்கையின் எல்லா பகுதிகளிலும் புற்றுநோயைப் போல பரவி துன்புறுத்திவிடும். தீமை, தூர்குணம் உங்களை

திருவசனத்தில் இருந்து அகற்றிவிடும் என்பதால் மிகுந்து வரும் தீமைகளை ஒழித்துவிட்டு திருவசனத்தை பணிவோடு ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு நம்மிடம் வருந்தி கேட்டுகொள்கிறார்.

வெறுமெனே ஒரு பேச்சுக்காக அதை சொல்லாமல், வசனத்தை நாம் கேட்பதற்கு தடையாய் காணப்படுகின்ற தப்பெண்ணங்கள், தவறான அபிப்ராயங்கள் போன்ற காது குரும்பிகளையும், வசனத்தில் இருந்து நம்மை அகற்றும் புற்றுநோய்க்கு சமானமான தீமைகளையும் துர்குணத்தையும் எந்த வித இரக்கமில்லாமல் ஒழிந்தெரிய வேண்டும் என்றே அவர் சொல்லுகிறார். ஏனோதானோ என்று அதை விட்டுவிடக்கூடாது. சாக்குபோக்கு சொல்லி மறைத்துவிடவும் வேண்டாம். இதை ஒழித்து விடவேண்டும். பாம்பு அதின் சட்டையை உறித்து விடுவதுப் போல், ஒரு துளியளவு கூட மீதி வைக்காமல் நம்மில் இருக்கும் அழுக்கை தப்பெண்ணங்களின் காதுகுரும்பியையும், துர்குணமாகிய புற்றுநோயையும் அகற்றி விடுவோம்.

அடுத்ததை கவனியுங்கள். வசனத்தை கேட்கவிடாமல் நம்மை தடைசெய்யும் எல்லாவிதமான அழுக்கையும் மிகுந்துள்ள தீமைகளையும் அகற்றிவிட்ட பிறகு நாம் என்ன செய்ய வேண்டும்? திருவசனத்தை சாந்தமாய் உள்ளத்தில் ஏற்று கொள்ள வேண்டும்.

# 8

# சாந்தமுள்ள ஆவியோடே...

தேவனுடைய வார்த்தைகளை எற்றுகொள்ள ஒவ்வொருவரும் நினைவுடன் முயற்சிக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு தன் நிருபத்தில் எழுதியுள்ளார். அந்த முயற்சி மிகுந்த சாந்தத்தோடு, பணிவோடும் கூட செய்ய வேண்டுமாம். (யாக்கோபு 1: 2)

'சாந்தம்' என்ற வார்த்தையின் கருத்து சிலர் நினைகிறதுப் போல 'உணர்ச்சிகளில்லாத நிலைமை' அல்ல. 'உணர்ச்சிகளின் சரியான இணைப்பு' என்று தான் அதன் சரியான அர்த்தம். மனிதனை தேவன் உணர்ச்சிகளுள்ள ஆளுமையுள்ளவனாக படைத்திருக்கிறார்.

வசனம் ஒரு நபருக்குள் எந்த விதமான உணர்ச்சிகளையும் ஏற்படுத்துகிறதில்லை என்றால் அது மிக பரிதாபகரமான நிலையாகும். தேவ வசனங்கள் நமக்குள் அன்பு, துக்கம், பக்தி, பச்சாத்தாபம், போன்ற உணர்சிச்களை உண்டு பண்ணவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் உருமாற்றம் வர வேண்டும். வசனங்களை நாம் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளும் சமயத்தில் இது நிச்சயமாகவே உருவாகும். ஆனால் இந்த உணர்ச்சிகள் சரியான நேரத்தில், சரியான இடத்தில் உருவாக வேண்டும். அதற்காக சாந்தம் என்ற மனபாங்கு நமக்கு மிகவும் தேவை.

தாவீது மற்றும் நாதான் சரித்திரத்தை (1சாமுவேல்12) எடுத்து கொள்வோம். நாத்தான் தீர்க்கதரிசி சொன்ன கதையை கேட்ட தாவீது கோபமூண்டவனாயி 'அந்த மனிதன் மரணத்திற்கு பாத்திரன்' என்று உரக்கத் கத்தினான். ஆனால் அவன் என்ன செய்திருக்க வேண்டும்? அந்த இடத்தில் கோபப்படுவதற்கு பதிலாக - பரிதபித்து மனம் திரும்பியிருக்க வேண்டும்.

கவனியுங்கள், தவறான உணர்ச்சி தவறான இடத்தில் வருகிறது. வசனத்தினால் உருவாக்கப்பட வேண்டிய உணர்ச்சியல்ல, மனித இயல்பான உணர்ச்சியை (தாவிதின் கோபம்) அங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

"சாந்தம்" என்பது நம் உணர்ச்சிகளின் உலகை கட்டுப்படுத்தும் ஓர் குணாதிசயம். தேவனால் தூண்டப்படும் உணர்சிகளுக்கு இடம் கொடுக்க மனித இயல்பான உணர்ச்சிகளை வேரோடு பிடுங்கி வீச உதவும் குணாதிசயம். நாத்தானின் வார்த்தைகளை தாவீது பணிவோடு கேட்கவில்லை. மனித இயல்பான உணர்சிகள் விளைந்து நிறைந்திருக்கும் வயலில் தான் அவன் தேவ வசனமாகிய விதையை விதைக்கிறான். அதன் பலன் என்ன? 'தாவிதின் கோபம்' பற்றி எரிகிறது. அனுதாபம் (அ) மனஸ்தாபம் தேவ ஆவியானவரால் உண்டாக வேண்டிய இடத்தில், "கோபம்" ஜொலிக்கிறது. ஆனால் சாந்த மனப்பான்மையை பெற்றுக்கொள்ளும்போது அங்கே 'மனஸ்தாபம் (அ) அனுதாபம் உண்டாகும். துக்கப்படவேண்டிய இடத்தில் துக்கபடுவதற்கும், அனுதபிக்க வேண்டிய இடத்தில் அனுதபிக்கவும் நாம் நம்மையே ஒப்புகொடுத்து தேவ வசனத்தை சாந்தந்தோடு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

'சாந்தம்' நம்முடைய உணர்ச்சிகளின் உலகை தெய்வீக உணர்சிகள் (தேவ ஆவியானவரால் தூண்டப்படும் உணர்ச்சிகள்) விளையும் புலம்பாக மாற்றுவதோடு, ஒரு பள்ளிப் பிள்ளையின் பணிவோடு சத்தியங்களை கற்றுக் கொள்ள நம்மை அது ஆயத்தப்படுத்துகிறது. ஆனால் சிலர் தங்களை சர்வஞானபீடம் ஏறினவர்கள் என்றும் இனி அறிந்துகொள்ளவோ, கற்றுக்கொள்ளவோ எதுவுமில்லை என்று தங்களை எண்ணி கொள்கிறார்கள். இதை மற்றவர்களிடம் சொல்லிக் காட்ட எந்த கூச்சலும் இப்படிப்பட்டவர்களுக்கு இல்லை.

ஒரு 'பைக்' விபத்து நடந்து கொஞ்ச நேரத்துக்குள் ஏராளமான ஆட்கள் ஓடி வந்தார்கள். விபத்தில் அடிப்பட்ட நபருக்கு தலையில் பலத்த காயம் ஏற்ப்பட்டது. உடனே அங்கே கூடிநின்றவர்களில் சிலர் சேர்ந்து காயப்பட்டவரை காரில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல

முன்வந்தார்கள். அவர்களோடு கூட ஒரு வயதானவரும் ஏறி செல்ல முயன்றார். அப்போது பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபர் அந்த முதியவரிடம் "தாத்தா கீழே இரங்குங்க... நீங்க எதுக்கு போரீங்க... நான் போகிரேன்... அதுதான் பிரயோஜனமாயிருக்கும்"....

"நான் ஏன் இரங்கணும்?" என்று முதியவர் கேட்டார். "நான் சாரணர் (Scout) இயக்கத்தில் இருந்தவன், முதலுதவியை எப்படி கொடுக்க வேண்டும் என்று நன்றாக எனக்கு தெரியும், உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா, சும்மா நேரத்தை வீணாக்காம கீழே இரங்குங்க" என்று அந்த வாலிபர் முதியவரிடம் சொன்னார்.

"டேய், கண்ணா, இப்போ நான் போகிரது தான் பிரயோஜனம். ஏன்னா நான் ஒரு நியுரோ-சர்ஜன்". இதை கேட்டு அந்த வாலிபனின் முகம் செத்து போய்விட்டது!

ஏதோ சாரணர் இயக்கத்தில் சேர்ந்து முதலுதவியைப் பற்றி கொஞ்சம் தெரிந்தால் போதும் அவ்வளவுதான். அதற்கு பிறகு என்னமோ நியுரோ-சர்ஜன் 'கெட்-அப்'-ல் நடக்கிறவர்களை பார்த்திருப்பீர்கள். வேதாகம கல்லூரியில் ஏதாவது ஒரு குருகியகால பயிற்சி பெற்றுவிட்டு வேதாகமத்தின் 'கலைக்கலஞ்சியமாக' தங்களை காட்டிக் கொள்கிறவர்கள் ஏராளம்!

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸிடம் அவருடைய சீடர்கள் கேட்டார்கள்

"குருவே, உங்களுக்கு இருக்கும் எல்லா அறிவுகளையும் எங்களுக்கு கற்றுத்தந்து வீட்டீரா?"

"ஆம் என்று நினைக்கிறேன்" என்றார்.

"அப்படியென்றால், நாங்கள் உமக்கு நிகராக மாறிவிட்டோமா?" என்று சீடர்கள் கேட்க,

"ஆம் கிட்டத்தட்ட" என்று சாக்ரடீஸ் சொன்னார்.

"ஆனால் ஒரு சின்ன வித்தியாசம் உண்டு".

"அதென்ன" என்று தெரிந்துக் கொள்ள சீடர்கள் விறுவிறுப்படைந்தார்கள்.

"அது மிகவும் சாதாரணமானது தான்... அதாவது என்னுடைய அறியாமையைக்குறித்து எனக்கு தெரியும், ஆனால் உங்களுக்கு உங்களுடைய அறியாமையைக்குறித்து தெரியாது" என்றார் சாக்ரட்டீஸ்.

நம் அறியாமையை குறித்தான உணர்வு நமக்கு இல்லாததினாலே, நாம் நம்மையே ஞானிகளாக எண்ணிக் கொள்கிறோம். "கர்த்தாவே எனக்கு கற்றுத்தாரும்" என்றல்ல "கர்த்தாவே அது எனக்கு தெரியும் என்று உமக்கு தெரியுமே" என்று தான் நாம் சொல்லி கொண்டு இருக்கிறோம்.

வசனம் நமக்கு வெறும் மூளை அறிவு தரும்படியாக நம்மிடம் வருவதில்லை என்ற உண்மையை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். பல நேரங்களிலும் தேவ வசனம் நம்மிடமிருந்து புதிய காரியங்களை எதிர்பார்கிறது. அது என்னவென்றால் புதிய தீர்மானம், புதிய எண்ணம், வசனம் எதிர்பார்க்கும் உணர்சிகளை எந்தவித தடையுமில்லாமல் நம்மில் வளர உதவும்படி நம் உணர்ச்சிகளின் உலகை ஆயத்தப்படுத்துதல், அதைப் போல புதிய வாழ்க்கை முறையை ஏற்றுக் கொள்ள நம்மையும், நம் மனதையும் ஆயத்தப்படுத்துவது. இதைதான் "சாந்தம்" (Meekness) என்பதின் விளக்கம். ஆனால் ஒரு புதிய காரியத்தை கற்ற தந்து, புதிய ஞானத்தை தர வசனம் நம் அண்டையில் நிற்கும் போது அதை கற்றுக் கொள்ளவோ வசனத்தை ஏற்றுக்கொண்டு மறுரூபமடைய நம்மை அற்பணிக்கவோ தயாராகாமல் நாம் இருக்கிறோம். ஏனென்றால் நமக்கு அதற்கான பணிவு அல்லது சாந்த மனப்பான்மை இல்லை. நான் தேரினவன், எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் நம்மை அதிலிருந்து தடுத்து விடுகிறது.

பேதுருவை எடுத்துக் கொள்ளுங்கள் முக்கியமான ஒரு பாடத்தை பேதுருவுக்கு கற்றுக் கொடுக்க தேவன் விரும்பினார். அதற்கு ஒரு பின்னணி என்ற முறையில் பேதுருவை தேவன் ஒரு தரிசனத்திற்குள்ளாக கொண்டு செல்கிறார் (அப்போ 10: 9-16). அந்த தரிசனத்தில் "வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பெட்டியை போன்ற கூடை ஒன்று தன்னிடத்தில் இரங்கிக் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதகாவும் கண்டான். அல்லாமலும் பேதுருவே எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அதற்கு பேதுரு, அப்படியல்ல ஆண்டவரே, தீட்டும் அசுத்தமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை

என்றான். அப்பொழுது தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாதரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு இந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது''.

பேதுருவுக்கு பசி உண்டாயிற்று. கர்த்தர் அவனுடைய பசியை ஆற்ற பெரிய விருந்து ஒன்றை ஆயத்தம் பண்ணினார். நான்கு மூலைகளும் கட்டப்பட்ட ஒரு விரிப்பு, ஒரு பெரிய விரிப்பு! நிறைய மிருகங்கள்! நோவானின் பேழைக்குள் பரவேசித் அனைத்து பிராணிகளும் உண்டு!

எண்ண முடியாத அளவிற்கு மிருகங்களை கொடுத்துவிட்டு பேதுருவிடம் தேவன் சொன்னார் “பேதுருவே, எழுந்திரு, பசியாக இருக்க தேவையில்லை, இந்த மிருகங்கள் முழுவதும் உனக்கு தான், அடித்து புசி”

சரி என்று சொல்லி மகிழச்சியோடு கூட துப்பட்டியை பார்த்த பேதுரு மிகவும் துக்கமடைந்தான். ஏனென்றால் அவையெல்லாம் நியாயபிரமாணம் அசுத்தம் என்று தீர்பளித்த மிருகங்கள். உடனே கால்களை பார்தான். விர்குளம்பில்லாதவைகள். இப்படிப்பட்ட மிருகங்கள் அசுத்தமானவைகள். ஆகவே ஒரு யுதன் அவைகளை புசிக்க கூடாது. அவன் சொன்னான், “தேவனே, நீர் என்ன சொல்கிறீர்? நான் இதை சாப்பிட வேண்டுமா?” அதற்கு இந்த மிருகங்கள் அசுத்தம் ஆனவைகளாய் இருக்கிறதே. ள் அல்லவோ? ஒரு நாளும் அப்படி கூடாது. நான் இதுவரைக்கும் இப்படிப்பட்டவைகளை புசித்ததேயில்லை என்று உமக்கு தெரியாதா?

சுத்தமானவைகள் எது அசுத்தமானவைகள் எது என்று பேதுருவுக்கு நன்றாக தெரியும். சீனக்கோகில் (யுத வழிபாட்டு தளம்) அதை அவன் கற்று இருக்கிறான். யுத ரப்பி (Rabbi) களின் விளக்கங்களை அவன் கேட்டதுண்டு. ஆகவே அடித்து புசி என்ற கர்த்தரின் வார்த்தைகளை பேதுரு சாந்தத்தோடு ஏற்றுக் கொள்ள மறுத்தான். பேதுரு கற்றுக்கொள்ள தயாராக இல்லை. கர்த்தருடைய வார்ததைகளுக்கு கீழ்படிவதற்கு பதிலாக, “அப்படியல்ல ஆண்டவரே, ஒரு நாளும் அப்படி செய்யக் கூடாது” என்று தேவனிடம் சொல்கிறான். சுத்தமானது எது அசுத்தமானது எது என்று தனக்கு இருக்கும் அறிவு கூட தேவனுக்கு இல்லையென்று தான் பேதுருவின் எண்ணம்! கர்த்தர் சொன்னார் “பேதுருவே தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே”!

பெரும்பாலான ஆட்களும் பேதுருவைப் போல் தான் இருக்கிறார்கள். அவர்கள் தேவனைவிட பரிசுத்தவான்கள் ஆக பார்ப்பார்கள். தேவன் சுத்தம் என்று சொன்னதைக் கூட அவர்கள் தீட்டென்று சொல்வார்கள். அதற்கு எந்த வித காரணங்களும் தேவையில்லை. அவர்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை விடாப்பிடியாய் பிடித்து கொள்வார்கள். அதை விட்டுவிட்டு வேறொன்றை கற்றுக் கொள்ள அவர்களுக்கு மனதில்லை. இனி ஆண்டவரே நேரடியாக வந்தாலும் சரி மாறவே மாட்டார்கள்! ஏனென்றால் அவர்கள் கற்றுக் கொள்ள கூடிய மனப்பாங்கு (a teachable spirit) இல்லாதவர்களாயிருக்கின்றனர். அறிவுக்காக தாகமில்லாதவர்கள் மாற்றத்துக்கு முயலமாட்டர்கள். தனகென்று அருளப்பட்ட மிருகங்களை சுத்தமில்லாதது என்று சொல்லி அதை புசிக்க மறுத்த பேதுருவின் தப்பெண்ணம், கர்த்தருடைய வார்த்தைகள் அவனுக்குள் உட்பிரவேசிக்க விடாமல் தடை செய்கிறதாக பார்க்கிறோம். பேதுருவுக்கு ஒரு புதிய காரியத்தை சொல்லிக் கொடுக்க தேவன் முயற்சிக்கிறார். மூன்று முறை தேவன் பேதுருவிடம் “பேதுருவே அவைகள் அசுத்தமாவைகள் அல்ல, நான் அவைகளை சுத்தபடுத்தினேன்” என்று சொன்னார்.

சாந்த குணமில்லாமல் இருப்பதின் பிரச்சனை என்னவென்றால், சத்தியத்தை அறிந்த பிறகும் அந்த அறிவுக்கு ஏற்றவாரு நம்மை மாற்றிக் கொள்ள மனதில்லாமல் இருந்து விடுவோம் என்பதுதான். மிருகங்கள் சுத்திகரிக்கப்பட்டது என்று மூன்று முறை தேவன் சொன்னாலும் கூட, அதை ஏற்றுக் கொள்ளாமல் தன்னுடைய நியாத்தையே பேதுரு பிடித்து கொள்கிறான். அவன் சொல்வது என்னவென்றால்: “ஒரு வேலை நீர் இவைகளை சுத்திகரித்திருக்கலாம். நான் அதைப் பற்றி உம்மிடம் வாதாட வரவில்லை. ஆனால் ஒன்று, அவைகள் சுத்தமோ அசுத்தமோ எதுவாகயிருந்தாலும்எனக்கு வேண்டாம். இதுவரைக்கும்நான்புசித்ததில்லை இனி புசிக்கவும் விரும்பவில்லை” கர்த்தருடைய வார்தைகளை சாந்ததோடு ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக பாரம்பரியத்துக்காவும், பழக்க வழக்கங்களுக்காகவும் அதை புறக்கனிப்பதை பாருங்கள். இதுவரை பின்பற்றி வந்த பரம்பரை வழக்கங்களை மறுக்க அவனுக்கு முடியவில்லை. ஆகவே இதுவரை செய்து வந்தது தப்பானாலும் சாரியானாலும் அதையே தொடர்ந்து செய்ய தீர்மானிக்கிறான்.

நாம் கற்று வைத்திருக்கும் காரியங்களிலிருந்து வித்தியாசமானதை, கர்த்தருடைய வசனம் நம்மிடம் செய்ய தேவைப்படும்போது அந்த காரியம் நம்முடைய பழக்க வழக்கங்களுக்கும் நடைமுறைகளுக்கும்

எதிராக இருந்தாலும் சாந்த மனபாங்கோடு கூட அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். பேதுருவிடம் புதியதொன்றை ஏற்றுக்கொள்ள மூன்று முறை தேவன் சொல்லியும் அதை ஏற்க அவன் மறுத்ததினால் துப்பெட்டி திரும்ப வானத்திற்கே எடுக்கபட்டது என்று பார்கிறோம். கர்த்தருடைய திருவசனங்களை சாந்தத்தோடு ஏற்றுக் கொண்டு கீழ்படியாததினாலே எத்தனை பரலோக ஆசிர்வாதங்கள் நம்மிடமிருந்து திரும்ப எடுத்து கொள்ளப்டுகிறது என்று யோசித்துப் பாருங்கள்.

வசனத்தை சாந்தமாய் ஏற்றக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு சொல்லும் போது, அதே வார்த்தையை பேதுருவும் தன்னுடைய நிருபத்திலும் உருவகமாக சொல்லியிருப்பதைப் பாருங்கள். “நீங்கள் வளரும்படி புதியதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாயிக களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்” (1பேதுரு 2:3). புதிதாய் பிறந்த குழந்தைக்கு தேவையானது தாயின் மூ லைப்பால் மட்டும் தான். குழந்தைக்கு தாய்ப்பால் மட்டும் போதுமா என்று ஒரு வேலை சிலர் சந்தேகப்படலாம். பச்சைப்பிள்ளைக்கு தாய்பால் ஒன்றே போதும் என்று வைத்திய சாத்திரம் சொல்லுகிறது. தாய்ப்பால் ஒரு நிறை உணவாக இருக்கிறது. அதனாலே எந்த ஏழையான அம்மாவிற்க்கும் தன் பிள்ளையை நிறை உணவு கொடுத்து சில நாட்களாவது வளர்க்க முடியும். அதைப் போல திருவசனம் புதிய விசுவாசயின் சமச்சீர் உணவாக இருக்கிறது.

வளர்ந்த பிள்ளைகள் பாலை பாலாகவே அருந்த ஒரு வேலை விருப்பப்படாமல் இருக்கலாம். சிலர் ‘டீ’ யாக குடிக்க விரும்புகிறார்கள். ஒரு சிலர் ‘ஹார்லிக்ஸ்’ அல்லது ‘பூஸ்ட்’ கலந்து குடிக்க விரும்புவார்கள். ஆனால் பச்சப்பிள்ளைக்கு அப்படிப்பட்ட எந்த விருப்பமும் இருக்காது. அதற்கு தாய்ப்பால் மட்டும் போதும். மீண்டும் மீண்டும் குடித்து கொண்டேயிருக்கும். அதின்மேல் வாஞ்சயாய் இருக்கும். அதைப்போல நாமும் வசனமாகிய களங்கமில்லாத, வஞ்சகமற்ற (களப்படாத) பாலை குடிக்க ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பேதுரு புத்திசொல்கிறார்.

யாக்கோபின் நிருபத்தில் கர்த்தருடைய வார்த்தைகள் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கும்போது, அந்த வசனங்களுக்காக வாஞ்சயாய் ஏங்க வேண்டும் என்று பேதுரு தன் நிருபத்தில் சொல்லுகிறார். அதாவது, அருளப்படுவதை பெற்றுக் கொள்ளுங்கள், அதை நாடித் தேடி செல்லுங்கள் என்று பொருள். இது இரண்டும் நமக்கு இருந்தே ஆக வேண்டும். நாம் கேட்க்கும் வசனங்களை சரியான மனப்பான்மையோடு

கூட ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் நம்மை சந்தோஷப்படுத்த வேண்டிய நேரத்தில் சந்தோஷப்படுத்தவும், நம் குறைகளை நமக்கு உணர்த்தி நம்மை தேவச் சமுகத்தில் மனம்திரும்புதலுக்கேற்ற துக்கத்தை தரும் போது நாம் துக்கப்படவும் வேண்டும்.

அப்பொழுது தான் நாம் தேவ வசனங்களை சாந்தமாய் ஏற்றுக் கொண்டோம் என்று சொல்ல முடியும். அதைப் போல கற்றுக் கொள்ளும் ஆர்வத்தோடு நாம் வசனத்திற்கு முன்பாக எப்பொழுதும் வரவேண்டும். ஒவ்வொரு முறையும் நாம் வசனத்திற்கு செவிக் கொடுக்கும் போதும் நேற்று வரை நமக்கு இருந்த சிந்தனைகளை, மனபாங்குகள், வாழ்க்கை முறைகள் அனைத்துமே வசனத்திற்கேற்ப மாற்றவும், வசனத்துக்கு கீழ்படிய மனதுள்ளவர்களாவும், புதிய வாழ்க்கை முறைகளை கடைபிடிக்கவும் வேண்டும். அதற்கு சாந்த மனப்பான்மை மிக அவசியம். அது மட்டுமல்ல ஒரு பச்சைப்பிள்ளை எவ்வளவு ஆவலோடே தாய்பாலுக்காக வஞ்சிக்கிறதோ, அதைப்போல வசனதிற்காக அதிக ஆவல், அதிக வாஞ்சை வாழ்கையின் கடைசி மூச்சு வரை நமக்கு இருக்க வேண்டும்.

# 9

# வசனத்தை தடுத்து நிறுத்தும் அரண்கள்...

சாந்தத்தோடு, பணிவோடு கர்த்தருடைய வசனங்களை ஏற்றுக்கொள்வதில் இருந்து நம்மை தடை செய்கிற இரண்டு சக்திகள் தான் மரபு அல்லது இன வழிமுறைகள் மற்றும் சம்பிரதாயங்கள். இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாயிருந்தாலும் இரண்டும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. பாரம்பரியம் (அ) மரபு ஒருவருக்குள் அவருடைய முன்னோர்களின் வாழக்கை வரலாறு உருவாக்கும் உணர்வு என்று சொல்லலாம். ஒரு குறிப்பிட்ட அளவு வரை அந்த நபரின் தன்னறிவாக அது செயல்படுகிறது. ஆனால் வழிமுறைகள் என்பது முன்னோர்களின் காலத்திலிருந்து அனுசரித்து வரும் சடங்காசாரங்கள், நம்பிக்கைகள், அனுஷ்டானங்கள் என்பவைகளே.

ஒரு நபருடைய வாழ்க்கையை சரியான முறையில் வரையறுக்கும் வலிமை பாரம்பரியத்துக்கு உண்டு. அதைப் போல ஒரு தகாத முனைவில் ஒரு நபரின் வாழ்வை கொண்டு நிறத்தவும் அதற்கு முடியும். பாரம்பரியத்தை குறித்த நுண்ணறிவும், விழப்புணர்வும் ஒரு நபருக்குள் இருக்குமானால் அது அவரை பெருந்தன்மை உள்ளவராகவும் உயர்பண்புடையவராக மாற்றும்.

ஆனால் அதே நேரத்தில் ஒருவரின் பாரம்பரியத்தை குறித்த தவறான தன்னறிவு அந்த நபரை கர்வமுள்ளவனாகவோ, அகந்தை

நிறைந்தவனாகவோ, மதிக்கெட்டவனாகவோ மாற்றுகிறது. பரம்பரை உணர்வு ஒருவனை பெரும்தன்மையுள்ளவனாக மாற்றுவற்கு பதிலாக அவனை ஒரு சூனியம் பிடித்தவனாக மாற்றுகிறது.

ஒருவரின் பாரம்பரியம் அவருடைய பரம்பரையை மட்டும் சார்ந்திருக்காமல், அவருடைய குழந்தை பருவத்திலிருந்து அவர் கேட்டு வரும் கதைகள், சமூகம் அவருக்குள் செலுத்தும் தாக்கம், வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவருக்கு வரும் அனுபவங்கள் ஆகியவைகளும் அவரின் பாரம்பரியத்தை வரையறுக்கிறது. இவ்வாரு தன்னுடைய சமுதாயம் மற்றும் சமுதாயங்களிலிருந்து மாறுபட்ட சமூகம் என்ற அறிவு அவனுக்கு உண்டாகிறது. இந்த புரிதல் அவனுடைய தனித்துவத்தை (Identity) உணர்த்துகிறது.

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அதனதின் சிறப்பம்சங்கள் உண்டு. ஆனால் தங்களுடைய சமுதாயம் மற்ற சமுதாயங்களைவிட உயர்ந்தது என்ற எண்ணம் வளரும் போதுதான் பிரச்சனைகள் ஆரம்பமாகுகிறது. மிக பெரிய பிரச்சனை என்னவென்றால், அந்த குறிப்பிட்ட சமுதாயம் ஒரு சம்பூர்ணமான சமுதாயம் என்ற பொய் எண்ணத்திற்கு அதைக் கொண்டு நிறுத்கிறது தான். ஆகவே தங்கள் ஒரு பரிபூரணம் வாய்ந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களாக இருப்பதால் தங்களிடம் இருந்து மற்றவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், மற்ற சமுதாயங்களிடமிருந்து எங்களுக்கு கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை என்ற கர்வம் உருவாகுகிறது. ஏனென்றால் அவர்கள் அவர்களுடைய முன்னோர்களை மட்டும் பார்க்கிறார்கள்.

யூதனுக்கும் இதே பிரச்சனை இருந்தது. சம்பூரண சட்டம், சம்பூரண ஆன்மீகம் என்பவைகளில் சர்வாதீனம் படைத்தவர்கள் என்று தான் அவர்கள் நினைப்பு! அந்த அகந்தை இருந்ததினாலே இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் விலைமதிக்கவே இல்லை.

இயேசு யூதர்களை பார்த்து, “நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்.... சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்...” (யோவான் 8:31, 32). இதைக் கேட்டதும் யூதர்களுக்கு கோபம் வந்தது. “நீர் என்ன சொல்கிறீர்.... நாங்கள் என்ன அடிமைகாளா? நாங்கள் யார் என்று தெரியுமா? அபிரகாமின் சந்ததிகள்...! இன்று வரை நாங்கள் யாருக்குமே அடிமைகளாக இருந்ததில்லை”.

பாரம்பரியம் ஒரு மனிதனை குருடனாக்குகிறது என்பதற்கு இதுவே சரியான உதாரணம். "நாங்கள் ஒருக்காலும் அடிமைகளாக இருந்ததில்லை" என்று யூதர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை என்ன? அவர்கள் முன்பு எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள், அடுத்ததாக பாபிலோனிலும் அடிமைகளாக வாழ்ந்தார்கள் அதற்கு பிறகு மேதியர், பெரிசியர், கிரீஸ், சீரியா என்ற நாட்டிலும் அடிமைகளாக இருந்தார்கள். "நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாக இருந்ததில்லை" என்று சொல்லும் நேரத்திலும் ரோமையர்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள்! அவர்கள் அடிமைகள் என்ற உண்மை இதை பேசும் யூதர்களுக்கும் அதை கேட்டு கொண்டிருக்கும் இயேசுவுக்கும் நன்றாக தெரியும். அப்படியிருந்தும் எந்தவிதமான கூச்சலுமில்லாமல் நாங்கள் சுதந்திரராக இருக்கிறோம் என்று வீண்பெருமை பேசுகிறதை பாருங்கள்.

சாராயம் குடித்துவிட்டு நடக்க முடியாமல் சாக்கடையில் விழுந்து கிடக்கும் ஒருவன் "இன்னும் பத்து பாட்டில் குடித்தாலும் ராமைய்யா ஸ்ரைட்டா நிப்பாண்டா..." என்று சொல்வதை போல் தான் இது இருக்கிறது!!.

அடிமைகளாக இருக்கும்போதும் கூட அவர்களை தற்பெருமையடைய செய்வது என்னவென்றால், அவர்கள் ஆபிரகாமின் சந்ததியர்கள் என்ற சிந்தைதான். ஒரு யூதனை பொறுத்தவரை ஆபிரகாமின் சந்ததி என்ற பதவியை விட உயர்ந்ததாக ஒன்றுமில்லை. ஆபிரகாமின் சந்ததியாக இருப்பதினால் அவன் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறான் என்று ஒவ்வொரு யூதனும் நினைக்கிறான். உண்மை நிலமையின் உக்கிரத்தை உணர்ந்துகொள்ள விடாமல், அல்லது அனுமதியாமல் யூதனை மாயத்தோற்றத்தின் விசித்திர உலகில் சிறைப்படுத்தும் பாரம்பரியத்தின் வலிமையை பாருங்கள். அதன் ஆபத்து எத்துனை பயங்கரம். அடிமையின் கட்டுக்களை உடைத்தெரிந்து அவனை விடுதலை செய்ய வரும் மீட்பரை நோக்கி, "நான் கட்டப்பட்டவன் அல்ல" என்று ஒரு அடிமை சொன்னால், அது எவ்வளவு பரிதாபமாக இருக்கும்? திருவசனம் விடுதலையின் திருவுளத்தைக் கொண்டு வரும் போது, யூதன் சொல்கிறான் "வேண்டாம், அந்த வார்த்தைகள் வேண்டாம், அது எங்களுக்கு தேவையில்லை ஏனென்றால் நாங்கள் அடிமைகள் அல்ல!!"

ஆபிரகாமின் பாரம்பரியம் சொல்லும் யூதனைப் பார்த்து இயேசு சொல்கிறார். ஒருவேலை "சரியாக இருக்கலாம், நீங்கள் ஆபிரகாமின் சந்ததிகள் தான், இருப்பினும் நீங்கள் என் வார்த்தைகளுக்கு செவி

கொடுக்காமல் இருக்கிறதென்ன? என் பிதாவினிடத்தில் கேட்டதை தானே நான் உங்களிடம் சொல்லுகிறேன்? பிதா சொல்வதை நீங்கள் கேட்க வேண்டாமா?" (யோவான் 8:38)

அவர்கள் இதற்கு அளிக்கும் பதில் "நீர் சொல்லுவது என்ன என்று நாங்கள் அறியோம்? எங்களுக்கு தெரிந்தது இவ்வளவு தான், நாங்கள் ஆபிரகாமின் சந்ததியினர்" (யோவான் 8:39).

பாரம்பரியம் வருவித்த பேராபத்தை பாருங்கள். விடுதலையின் வார்த்தைகளை அவர்களுக்கு கேட்க மனதில்லை (அடிமைகள் என்ற உண்மையை அறிந்தால் தானே விடுதலையின் வார்த்தைகளைப் பற்றி ஆலோசிக்க முடியும்) அவர்களுக்கு தெரிந்த ஒரே ஒரு உண்மை என்னவென்றால், அவர்கள் ஆபிராகாமின் பிள்ளைகள் என்பது தான். பாரம்பரியம் தவிர வேறொன்றும் அவர்களுக்கு உண்மையாக இல்லை.

இறுதியில் இயேசு சொல்கிறார் "நீங்கள் ஆபிரகாமின் சந்ததியர்கள் என்றால் அதை நிருபியுங்கள். பாரம்பரியம் வெறுமனே வார்த்தைகளினாலல்ல, செய்கைகளினாலே காட்ட வேண்டும். ஆபிரகாமின் பிள்ளைகள், ஆபிரகாமின் செயல்களை செய்ய வேண்டும்".

ஆபிரகாமின் செயல்கள் எவ்விதமாயிருந்தது? தேவனுடைய வார்த்தைகளை சந்ததியை குறித்த வாக்குதத்தத்தை கொண்டு வந்த தேவதூதர்களை பார்த்ததும், அவர்களை ஏற்றுக் கொண்டு உபசிரித்தான் (அதியாகமம் 18:1-8). தம்முடைய வார்த்தைகள் மனிதனுடையதல்ல, பிதாவினிடத்திலிருந்து கேட்டதையே உங்களுக்கு சொல்லுகிறேன் என்று இயேசு சொல்கிறார் (8:38, 40). அதாவது இஸ்ரவேலர்களுக்கு இயேசு தேவனுடைய தூதுவர் ஆவார். அப்படியிருக்க, ஆபிரகாமின் பிள்ளைகள் தேவனுடைய செய்தியை கொண்டு வந்திருக்கும் இயேசுவை (ஆபிரகாம் செய்தது போல) ஏற்று கொள்வதற்க்கு பதிலாக அவரை கொன்றுப் போட தான் பார்க்கிறார்கள். அதற்கு பாரம்பரியம் அவர்களுக்குள் உண்டு பண்ணின தப்பான தன்னறிவே காரணம்.

யோவான் எழுதின சுவிசேஷம் 8ஆம் அதிகாரம் 33-40 வரை உள்ள வசனங்களை வாசிக்கும் போது புரியும், யூதர்கள் இயேசுவின் வசனங்களை புறக்கனிப்பதின் காரணமே தங்கள் ஆபிரகாமனின் சந்ததியார்கள் என்ற எண்ணம் தான் என்று காண முடியும்.

ஆபிரகாமின் சந்ததியார்கள் என்ற தீவிரமான எண்ணம் வேறொரு ஆபத்தான நிலையை எட்டியிருக்கிறதை பிறகு பார்க்கிறோம். ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருப்பதினால் ஆபிரகாம் வாழ்ந்ததுப் போல வாழவேண்டும் என்று அவர்கள் விரும்பினதில்லை. அதற்கு மாறாக பாரம்பரியத்தின் நன்மைகளை கடைப்பிடிக்காமல் வெண்மட்டமான வாழ்கையிலும் மேலாகவுள்ள மத பக்தி வைராக்கியத்திலும் திருப்தி அடைந்தார்கள். அது மட்டுமல்ல ஆபிரகாமைவிட பெரியவர்கள் யாருமேயில்லை என்றும் நம்பினார்கள்.

இயேசு யூதர்களை மீண்டும் சந்தித்து ஜீவ வார்த்தைளை அவர்களுக்கு மறுபடியும் கொண்டு வருகிறார். "ஒருவன் என் வார்த்தைகளைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தை காண்பதில்லை" என்று சொன்னார் (யோவான் 8:51). இதைக் கேட்டதும் ஆபிரகாமும், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள், அப்படியிருக்க இயேசுவின் வார்த்தைகளை கைக்கொள்கிறவன் எப்படி சாகாமல் இருக்க முடியும் என்றார்கள். ஆகவே இயேசு பிசாசுப் பிடித்தவர் என்று சொன்னார்கள்.

"நீ யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எங்கள் தந்தை ஆபிரகாமை விட நீ பெரியவனா? ஆபிரகாம் இறந்தார், தீர்க்கதரிசிகளும் இறந்தனர். பிறகு உன்னுடைய வார்த்தைகள் எப்படி உண்மையாகும்?" என்று யூதர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். (யோவான் 8:52,53).

கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கிடைக்க வேண்டிய முக்கியத்துவத்தை பாரம்பரியம் தட்டிச்செல்லும் நிலமை இன்றைய காலத்திலும் சர்வசாதாரணமாக இருக்கிறது. இன்றும் ஆட்கள் இயேசுவை கொல்ல முயலுகிறார்கள் (யோவான் 8:37). ஒருவேளை யூதர்களைப் போல நிஜமாகவே இயேசுவை கொன்றுப் போடாமலிருக்கலாம். ஆனால் நமக்குள் கிறிஸ்து வளர நாம் அனுமதிக்காமல் இருக்கும் ஒவ்வொரு நேரத்திலும், நாம் கிறிஸ்துவை கொலைச் செய்கிறோம். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நமக்குள் அனுமதிக்காமல் இருக்கும் போது இயேசு நமக்குள் மரித்துக் கொண்டிருக்கிறார்.

உங்களுடைய வாழ்க்கையிலும் பாரம்பரியம் வசனத்திலிருந்து உங்களை எப்படி அகற்றிப் போடுகிறது என்று பரிசோதித்து பாருங்கள். யூதர்களுக்கு உண்டான அதே சிக்கல் நம்முடைய வாழ்க்கையிலும் உண்டு. யூதர்களுக்கு ஆபிரகாம் ஒரு விக்கிரகமாக இருந்ததுப் போல, இன்று நம் வாழ்க்கையிலும் அநேக விக்கரகங்கள் காணப்படலாம். ஒருவேலை

மறைந்துப் போன சபை ஸ்தாபகர்கள் அல்லது உயிரோடுயிருக்கும் சில தலைவர்கள், யூதர்கள் ஆபிரகாரமை பிதா என்று அழைத்தும் அவர் வாழ்க்கையோ விசுவாசத்தையோ பின்பற்றாமலிருந்துப் போல 'எங்கள் திருச்சபை', 'எங்கள் போதகர்', 'எங்கள் முற்பிதாக்கள்', என்று சொல்லிக் கொண்டு வாழ்க்கையைக் வீண் அடிக்கிறோம். அவர்களைக் குறித்து வெறுமனே தற்பெருமை பேசுகிறதல்லாமல் அவர்களுடைய நேர்மை, விசுவாசம், தேவ அன்பு, இவைகளைப் பின்பற்ற யாருமே முன் வருவதில்லை.

ஜேம்ஸின் விசுவாச அறிக்கை போல தான் இன்று அநேகரின் பாரம்பரிய உணர்வும் காணப்படுகிறது.

ஒரு நாள் ஒருவர் ஜேம்ஸை பார்த்து:

"ஜேம்ஸ் உங்களுடைய சபையின் விசுவாசம், என்ன?" என்று கேட்டார்.

ஜேம்ஸுக்கு அது என்ன என்று தெரியாது. ஆகவே "அது ... அது... எங்களுடைய சபையின் விசுவாசம் தான் ....ம்....ம் என்னுடைய விசுவாசம்.....!!" என்றான்.

அப்படி யென்றால் உன் சபையின் விசுவாசமும், உன்னுடைய விசுவாசமும் என்ன? என்று அவர் கேட்டார். இப்பொழுது வசமாக மாட்டிக்கிட்டான் ஜேம்ஸ்!

"அது ... அது.... இரண்டும் ஒன்னுதான் சர்" ! சாமர்த்தியமாக பதில் அளித்து ஜேம்ஸ் தப்பித்துக் கொண்டான்.

தன்னுடைய விசவாசம் (அ) நம்பிக்கையை விளக்க ஜேம்ஸ்க்கு முடியவிலலை. ஏனென்றால் அவனுக்கு அது தெரியாது. நம்முடைய சபைகளிலும் இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது. ஏதோ ஆடி பாடி, துள்ளி குதித்து, அல்லேலுயா ஸ்தோத்திரம் என்று சொல்லி போகிறோம் என்றல்லாமல் சரியாக, தைரியமாக நம் விசுவாச பாதை என்ன என்பதை விளக்க தெரியாது. இனி அப்படி யாராவது ஒரு சிலர் சொன்னாலும் கூட மென்மட்டமாக சொல்லி தப்பித்து விடுவார்கள். ஆனால் பாரம்பரியத்தை குறித்து பெறுமிதம் அடைவதற்க்கு மட்டும் ஒரு குறைச்சலும் வைப்பதில்லை.

கர்த்தர் நம்மை புதிய அனுபவங்களுக்குள்ளாக நடத்தவோ, புதிய காரியங்களை கற்று தரவோ விரும்பும் போது நம் பாரம்பரியம் அதற்கு தடைக்கட்டையாக குறுக்கிடுகிறது. நாம் ஒரு காரியத்தை எப்போதும் நினைவுகூற வேண்டும். அதென்னவென்றால் நம் முன்னோர்களுக்கு, சபை பிதாக்களுக்கு பிழைகள் ஏராளம் வந்திருக்கலாம். ஆனால், தேவனுக்கும் அவர் வார்த்தைக்களுக்கும் ஒரு நாளும் பிழை ஏற்ப்படாது.

யூதர்கள் மட்டுமல்ல, சமாரியர்களும் கூட 'பாரம்பரியத்தின்' தப்பான உட்பார்வையினால் திருவசனங்களுக்கு எதிரடையாக நிற்கிறார்கள் என்பதை, இயேசுவுக்கும் சமாரியப்பெண்ணுக்கும் மத்தியில் நடை பெற்ற உரையாடலில் இருந்து புரிந்துக் கொள்ள முடியும் (யோவான் 4:24).

ஒரு முறை இயேசு யூதேயா தேசத்திலிருந்து சமாரியாவிலுள்ள கலீலேயா என்ற ஊருக்கு சென்றார். யூதனுடைய பாரம்பரிய வழக்கத்தை இயேசு வேண்டுமென்றே மீறுகிறார்.

அந்தக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் மூன்றாக பிரிக்கப்ட்டிருந்தது. தென்பகுதி யூதேயா, வட பகுதி கலீலேயா, மத்தியில் சமாரியா. யூதர்கள் பிரதானமாக கலீலேயா மற்றும் யூதேயா பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். கலீலேயர்களுக்கும் யூதர்களும் போக வர மிகவும் சுலபமான பாதை சமாரியா வழியாக பிரயாணம் செய்வது தான். ஆனால் யூதர்கள் சாமாரியர்களை அருவருக்கப்பட்டவர்களாக எண்ணினார்கள். யூதர்கள், குறிப்பாக அவர்கள் ரபி-கல் சமாரியா வழியாக போவதை வெருத்தார்கள். ஆகவே சமாரியா வழி போகாமல் மாற்று பாதையில் பயணம் செய்வார்கள். இந்த வழி சாதாரணமாக இருக்கும் தூரத்தை விட இரண்டு மடங்கு தூரமும், நேரமும் ஆகும். அதுமட்டுமல்ல இரண்டு முறை யோர்த்தான் நதியை கடக்க வேண்டும். ஆனாலும் கூட யூதர்கள் சுற்றுப்பாதை வழியாக செல்வதை விரும்பினார்கள். ஆனால் இந்த வழக்கத்திற்கு கீழ்பட இயேசு என்ற இந்த ரபி (குரு) தயாரில்லை.

இயேசுவின் இந்த பயணத்தில் நடப்பது எல்லாமே யூத வழக்கங்களுக்கு எதிராக இருந்தது. முதலாவது இயேசு ஒரு சமாரியாப் பெண்ணிடம் குடிக்க தண்ணீர் கேட்பது, யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங் கலவாத காலத்தில் ஒரு யூதன் சமாரியா வம்சத்தை சேர்ந்த ஒரு பெண்ணிடம் குடிக்க தண்ணீர் கேட்பது என்றால் யோசித்து பார்க்கக் கூட முடியாத ஒரு காரியம். ''கூத்தியனிடமிருந்து (சமாரியா நாட்டை சேர்ந்தவன்) ஆகாரம் கைக்கொள்பவன் பன்றியின் மாமிசம் புசிக்கிறான்.'' என்று யூத ரபிகள் பாடி

நடக்கும் காலம்! ஆனால் இயேசு இந்த யூத பழக்க வழக்கங்களை எல்லாம் மீறுகிறார். யூத ரபிகள் பொதுவான இடங்களில் வைத்து பெண்களோடு பேசுவதில்லை. அது தன் சொந்த மனைவியோ, சகோதரியோ ஆனாலும் சரி! ஆனால் இயேசு அந்த பாரம்பரிய கோட்பாட்டை உடைத்தெரிகிறார். தமக்கு இதுவரை அறிமுகமில்லாத தம் இனத்தை சேராத ஒரு பெண்ணிடம் அவர் பேசுகிறார்.

எல்லா பாரம்பரிய வழக்கங்ளையும் மீறி. இயேசு 'சீகார்' என்ற சமாரியாவை சேர்ந்த பட்டணத்திலுள்ள பெண்ணைத் தேடிப் போகும்போது, அங்கே கவலைக்குரிய காரியம் நடப்பது என்னவென்றால், அந்த சமாரியா ஸ்திரி இயேசுவின் வார்த்தைகளை தன் பாரம்பரிய வழக்கங்களினால் தடுக்க முயற்சிப்பது தான்.

சீகார் என்னும் ஊரிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் யாக்கோபின் கிணறு உள்ளது. இயேசு அந்த சமாரியா பெண்ணிடம் தண்ணீர் குடிக்க கேட்பது அவளாளே நம்பவே முடியவில்லை. பிரமித்து போனாள் அவள். "நீர் ஒரு யூதனாக இருந்தும் சமாரியா பெண்ணாகிய என்னிடத்தில் தண்ணீர் கேட்பது எப்படி"? இது தான் அவள் சந்தேகம்.

அதற்கு இயேசு "உனக்கு தேவனுடைய ஈவை குறித்தும், உன்னோடு பேசிக் கொண்டிருக்கும், தண்ணீரை கேட்க்கும் நபரை குறித்தும் ஒன்றுமே தெரியாது. அறிந்திருந்தால், நீயே அவரிடம் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்".

"ஜீவனுள்ள தண்ணீர் என்றால் என்ன?" என்று அந்த சமாரியப் பெண் புரிந்து கொள்ளவில்லை. அல்லது அவள் அதை தவறாக புரிந்து கொண்டாள். அவள் உலகபிரகாரமாக சிந்தித்தாள். அவள் கேட்கிறாள், "ஐயா தண்ணீரை மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை, கிணரும் ஆழமானது அப்படியிருக்க ஜீவத் தண்ணீர் எனக்கு தர உம்மால் எப்படி முடியும்?"

மொண்டு எடுக்க வேண்டிய தண்ணீர் தான் ஜீவத்தண்ணீர் என்று அவள் நினைத்தாள். அதை ஆவிக்குரிய முறையில் எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவளாள் அதற்கு முடியாது. அவள் அப்படிப்பட்ட அறிவு இல்லாத பெண். ஆனாலும் தன்னுடைய பாரம்பரியத்தை குறித்து அவளுக்கு நன்றாக தெரியும். "நம்முடைய பிதாவாகிய யாக்கோபை விட நீர் பெரியவரோ? அவர் தான் இந்த கிணற்றை எங்களுக்கு தந்தார்" என்று அவள் சொன்னாள்.

சமாரியர்கள் தங்களை யாக்கோபின் சந்ததிகள் என்று நம்பினார்கள். யாக்கோபின் மகனான யோசேப்பின் பிள்ளைகளான எப்பிராயிம், மனாசே என்பவர்களுடைய வம்சத்தை சேர்ந்தவர்கள் தான் இவர்கள். வேதாகமத்தில் இஸ்ரவேல் தேசத்தை "எப்ராயீம்" என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த சமாரியா ஸ்திரி சொல்லுவது தவறு அல்ல. அவள் உண்மையை தான் சொல்கிறாள்.

பாரம்பரியம் சொல்லும் எல்லா காரியங்களும் உண்மை அல்லாமலிருந்தாலும் ஒரு சில உண்மைகள் இருக்க தான் செய்கிறது. ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளை சாந்தத்தோடு ஏற்றுக் கொள்ள அவர்களை அனுமதிக்காமல் பாரம்பரியத்தை குறித்ததான, இப்படிப்பட்ட தவறான உட்பார்வைகள் செயல்படுகிறது.

இந்த பெண் ஆவிக்குரிய அறிவு இல்லாதவள் மட்டுமல்ல அவள் புறக்கனிக்கப்பட்வளாக இருந்திருக்க வேண்டும். அதனால் தான் அந்த மதியான வேளையில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிணற்றில், கடும் வெயிலில் தண்ணீர் மொள்ள வந்திருக்கிறாள்.

அறிலில்லாதவளும், மற்றுள்ளவர்களால் புறக்கனிக்கப்பட்டவளுமாக இருந்தாலும், தன் பாரம்பரியத்தைக் குறித்து அகந்தையுள்ளாயிருந்தாள். ஆனால் பாரம்பரியமல்ல வாழ்க்கை தான் முக்கியம். ஆகவே உன் கணவனைக் அழைத்து வா என்று இயேசு அந்த சமாரியா பெண்ணிடம் சொல்கிறார்.

அவள் வாழ்க்கையை தொட்டு பேசிய போது அவள் உள்ளத்தில் ஒரு அசைவு ஏற்பட்டது. இவர் ஒரு தீர்க்கதரிசியாகதான் இருக்க வேண்டும் என்று ஆச்சரிய்யா பட்டாள் அவள் என்ன சொல்கிறாள் என்று கவனியுங்கள். "தீர்க்க தரிசியே, நான் ஒரு பாவி, இப்பொழுது சொல்லும், என் பாவத்துக்கு பிராயச்சித்தமாக நான் எங்கெ வழிபட வேண்டும்? எங்களுடைய பாரம்பரிய வழக்கப்படி நாங்கள் வழிபடுவது இந்த மலையில் (கரஸீம் மலை) தான். ஆனால் அல்ல எருசலேமில் தான் வழிபட வேண்டும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். எது சரி? நீர் ஒரு தீர்க்கதரிசி தானே, எங்கள் பிரச்சனைக்கு ஒரு தீர்வைத் தாரும்".

கரஸீம் மலைக்கு சமாரியர்கள் மிக முக்கியத்துவம் அளித்து வந்தார்கள். யூதர்கள் எருசலேமைக் குறித்து கூறும் எல்லாவற்றையும் சாமாரியர்கள் கரஸீம் மலைக்கு சொல்லி வந்தார்கள். ஆபிரகாம் ஈசாக்கை கரஸீம்

மலையில் தான் பலியிட்டாராம். மெல்கிசேதேக்கு ஆபிரகாமை சந்தித்ததும் கரஸீம் மலையில் வைத்து தானாம். அது மட்டும் அல்ல வாக்குத் தத்த தேசத்தில் இஸ்ரவேலர்கள் பிரவேசித்த பிறகு முதல் பலியை கர்த்தருக்கு செலுத்தியதும் இங்கு தான் என்று சொல்லி வந்தார்கள்.

(சமாரியர்கள் கரஸீம் மலைக்கு கொடுத்து வந்த முக்கியத்துவத்தை தெளிவாக்குகிற ஒரு கதை அந்நாட்களில் பாலஸ்தீனாவில் சொல்லப்பட்டு வந்தது. அதாவது, ஒரு நாள் ரபி யோவான் கலீலெயாவிலிருந்து எருசலேமுக்கு போகும்போது ஒரு சமாரியன் அவரை தடுத்து நிறுத்தி கேட்டான்

"நீர் எங்கே போகிறீர்?"

"எருசலலேமுக்கு பிரார்த்தனை செய்வதற்காக போகிறேன்" என்று அவர் பதில் சொன்னார்.

சமாரியன் கேட்டான் "அங்கே எதற்காக போக வேண்டும், இங்கு பரிசுத்த மலையாகிய கரஸீம் மலை இருக்கம் போது தேவையில்லாமல் ஏன் அந்த சபிக்கப்பட்ட மலைக்கு போக வேண்டுமா?")

அந்த சமாரியா பெண்ணுக்குள் குற்ற உணர்ச்சி இருந்தப் போதிலும் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதற்குள் பிரவேசிக்கவிடாமல் பாரம்பரியம் அவளை தடைச் செய்தது. ஆனால் யூதன் தன் பாரம்பரியத்தை விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டு இயேசுவை கொல்ல முயன்றப் போது, இந்த சமாரியப்பெண் தன் பாரம்பரியத்தை விட்டுவிட்டு கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றக் கொள்ளும் காட்சியை இங்கு பார்க்கிறோம்.

பாரம்பரியத்தைப் போல ஆபத்தான வேறொரு காரியம் தான் சம்பிரதாயங்கள். சில நேரத்தில் பாரம்பரியத்தை விட மிக மோசமாக அது செயல்படுகிறது. தொடக்கத்தில் சொன்னது போல முன்னோர்கள் தொடங்கி வைத்த (அ) அனுசரித்து வந்த சில சடங்குகள் தான் சம்பிரதாயங்கள்.

பாரம்பரியத்தைப் போலவே மனிதனை சரியான முறையில் ஆதிக்கம் செலுத்தவும் அதே நேரத்தில் ஒரு மனிதனுடைய வாழக்கையை தவறான முறையில் வழி திருப்பவும் சம்பிரதாயங்களால் முடியும். சில சம்பிரதாயங்கள் மனிதனுக்கு ஆரோக்கியமான, தார்மீகமான நலனை கொண்டு வருகிறது. ஆனால் அதே நேரத்தில் சில சம்பிரதாயங்களை பார்ப்போமானால், முன்னோர்களால் ஆரம்பாமானது என்று அல்லாமல் வேறொரு நன்மையும்

அதற்கு சொல்ல இல்லை. சில காரியங்கள் கருத்துள்ளதாக இருந்தாலும், ஏராளமானைவகள் கருத்தற்றதாக இருக்கும்.

ஒரு சாமியர் பூஜை செய்யும் நேரமெல்லாம் அவர் வளர்த்தும் பூனை அவரை தொந்தரவு செய்து வந்தது. அதனால் பூஜை செய்ய தொடங்குவதற்கு முன் பூனையைப் பிடித்து ஒரு கூடையில் அடைத்து வைத்து விடுவாராம். அதற்கு பிறகு தான் பூஜைகளை ஆரம்பிப்பார். அந்த சாமியார் ஒருநாள் இறந்து போனார். அவருக்கு பின் அவருடைய சீடன் பூஜைகளை தொடர்ந்து செய்ய துடங்கினான். அவரும் பூனையைப் பிடித்து மூடி வைத்து விட்டு பூஜையை நடத்தினார்! சில நாட்களுக்கு பிறகு அந்த பூனை செத்துவிட்டது. பூஜை செய்வதையும் நிறுத்திவிட்டார். என்ன செய்ய முடியும், பூஜைக்கு முன் பூனையை மூடி வைக்க வேண்டுமே? கடைசியில் எங்கோ போயி ஒரு பூனையை கொண்டு வந்து கூடையில் அடைத்து விட்ட பிறகு தான் பூஜையை நடத்தினாராம்!.

இது முட்டாள்தனமாக இருந்தாலும், எந்த வித ஆபத்துமில்லாது. ஆனால் சில சடங்குகளை பார்போமானால், அவைகள் மடமையானது மட்டுமல்ல பேராபத்தை விளைவிக்கும் ஒன்றாக இருக்கும். வட இந்தியாவில் அண்மையில் ‘சதி’ என்னும் ஒரு சமயச் சடங்கு இருந்தது. ‘உடன் கட்டை ஏறல்’ என்று தமிழில் சொல்லுகிறோம். கணவனை இழந்த மனைவி அவரின் சடலம் தீ மூட்டப்படும் போது, அந்த தீயில் தன்னை அழித்து கொள்ளுவாள் இது தான் உடன் கட்டை ஏறுதல். ஏதோ ஒரு பெண் தன் கணவனை இழந்த வருத்தத்தை தாங்க முடியாமல் தானாகவே அந்த தீக்குண்டத்தில் கணவனோடுக் கூட மரித்திருப்பாள். அந்தப் பெண் காட்டின இந்த மடத்தனத்தை உற்றோர்கள் ஒருவேளை புகழந்து பேசியிருப்பார்கள். ஆனால் பிற்பாடு அது வளர்ந்து இறந்துப் போன கணவனின் சடலத்தை எரிக்கும்போது மனைவி அந்த தீக்குண்டத்தில் தன்னை அழித்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் ‘சமுதாயத்தால்’ ஏற்படுத்தப்பட்டதை தான் நாம் வரலாற்றில் பார்க்கிறோம்.

இதெல்லாம் ‘புறஜாதிகளின் மூடநம்பிக்கை அல்லது சடங்காச்சாரங்கள்’ என்று சொல்லி தள்ளிவிட வரட்டும். அப்படிப் பார்க்கும்போது நம் மத்தியிலும் இப்படிப்பட்ட ராளமான காரியங்கள் உண்டு.

யூதர்கள் இடையில் அவர்களுடைய மூதாயர்களின் மரபு (சம்பிரதாயங்கள்) விளைவித்த ஆபத்து மிக மோசமானது. அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் "ஒன்று நியாபிராமணத்தில் சொல்லபட்டதுப் போல அப்படியெ வாழ வேண்டும் அதற்கு முடியவில்லை என்றால் மத ஒழுங்கு முறைகளை, சடங்குகளை செய்தால் போதும்". அதாவது டிக்கட்டில்லாமல் பயணம் செய்தால் 1000 ரூபாய் அபராதம் கட்டவேண்டும். அபராதம் செலுத்த பணம் இல்லையென்றால் மூன்று மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும்" என்று சொல்லுவது போல யூதர்கள் கர்த்தருடைய நியாய பிரமானங்களுக்கு பதிலாக இப்படிப்பட்ட மரபுகளை அனுமதித்தார்கள். நியாயபிரமாணத்தின்படி ஒருவன் தன் தாயையும், தகப்பனையும் கவனிக்க வேண்டும். அது ஒரு மகனுடைய கடமை. அப்படி அவன் செய்யாமல் அவர்களை அவமதிக்கிறவனுக்கு மரணதண்டனை வழங்கப்படும். ஆனால் யூதனுக்கு அவனுடைய மரபின் உதவியோடு கூட இந்த மரணத்தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்! மூதாயர்களின் மரபை பின்பற்றின பரிசேயன் என்ன சொன்னான் என்று தெரியுமா? "உமக்கு நான் தரக் கடமைப்பட்டிருக்கிறதை கடவுளுக்குக் காணிக்கையாக கொடுக்கிறேன்" என்று சொன்னால் போதும் அவனுடைய கடமை முடிந்தது (மத்தேயு 15:5). பெற்றோர்களுக்கு கொடுக்க வேண்டிய உதவிப் பணத்தை ஆண்டவருக்கு காணிக்கையாக செலுத்தினால் போதுமாம்!

இதையே நம்முடைய காலத்துக் ஏற்றவாறு எப்படி விவரிக்கலாம் என்று பாருங்கள். அதாவது நல்ல கடவுள் பக்தியுள்ள ஒரு மகன் தன் தகப்பனிடத்தில் "அப்பா, உங்களுக்கு தர 500 ரூபாய் வைத்திருந்தேன். ஆனால் என்ன சொல்ல, அந்த பணத்தை நான் சபைக் கட்டுமானப் பணிக்கு கொடுத்து விட்டேன்". இப்படிச் சொன்னால் போதும் அதற்கு பிறகு பெற்றோருக்கு உதவ வேண்டிய தேவையில்லை. இது எப்படி இருக்கு! (அப்படியென்றால் தகப்பனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை தானே இதுவரை அவன் காணிக்கையாக செலுத்தி வந்தான்! என்ன ஒரு ஐடியான்னு பாருங்க...!!)

ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ, அதுதான் அவருடைய சித்தம். அதில் இருந்து ஒன்றையும் குறைக்க யாருக்குமே அதிகாரமில்லை. ஆனால் யூதன் என்ன சொல்லுகிறான். கடவுளுடைய கட்டளைகளுக்கு பதிலாக யூத மதத்தின் வழிமுறைகளை பின்பற்றினால் போதும்.

பக்திவைராக்கியமுள்ளவனாக இருந்தால் போதும், பெற்றோர்கள் பட்டினியாக இருக்கட்டும் பரவாயில்லை. ஆனால் ஆண்டவருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளை ஆலயத்துக்கு கொண்டு வர வேண்டும்.

திருவசனத்துக்கு கீழ்படிவது ஒரு ‘அப்ஷன்’ (option - வேண்டியதை தெரிந்தெடுக்கும் உரிமை) அக மாறும்போது வரும் ஆபத்து என்னவென்றால், வானமும் பூமியும் ஒழிந்துப் போனாலும் ஒழிந்து போகாத, போகமுடியாத கர்த்தருடைய வார்த்தைகளுக்கிருக்கும் மாறாதன்மையை இழக்கச் செய்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை பலவீனப்படுத்துகிறோம். பரிசேயர்கள் இப்படி செய்தது மிக கொடூரமான குற்றாமாகும்.

அவர்கள் “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து” (மத்தேயு 15:9). தேவனுடைய கட்டளைகளை கீழ்படிவதற்கு பதிலாக மனுஷருடைய கட்டளைகளாகிய பழக்கவழக்கங்கள், மரபுகள், வழிமுறைகள், சடங்குகள் என்பவைகளுக்கு முதலிடத்தை கொடுத்து உயர்த்தி காட்டினார்கள். திருவசனங்களுக்கு பதிலாக மத ஒழுங்குகளை தவறாமல் அனுஷ்ட்டித்தால் போதும் என்ற நிலமை வந்தது. போக போக வசனத்துக்கு கீழ்படிகிறீர்களோ இல்லையோ, மத ஒழுங்குகளை, வழிமுறைகளை தவிர்க்கவே தவிர்க்க முடியாது என்ற சூழ்நிலை ஏற்ப்பட்டது.

யூத மதத்தின் பாதுகாவலர்களாகிய பரிசேயர்கள், தங்களுடைய யூத சம்பிரதாயங்களை தொட்டு விளையாடுவதை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் இயேசுவின் சீடர்களை பார்க்கும்போது அவர்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள். சீடர்கள் ஒருமுறை மத பாரம்பரீயத்தின்படி கைக்கழுவாமல் போஜனம் பண்ணினார்கள் (இது வழக்கமாக நாம் எல்லாரும் செய்வதுப் போல சாப்பாட்டுக்கு முன் நம் கைகளை கழுவுவது அல்ல. சில நேரங்கள் எடுத்து ஜெபங்களைச் சொல்லி நடத்தும் முறையான கழுவுதல். உடனே பரிசேயர்கள் இயேசுவிடம் கேட்டார்கள்: “உம்முடைய சீடர்கள் ஏன் கை கழுவாமல் போஜனம் பண்ணினார்கள்? மீறக்கூடாத நம் மூதாயர்களின் மரபுக்களை ஏன் உம் சீடர்கள் மீறினார்கள்?”.

இது நகைச்சுவையான காரியம். வசனத்தைத் தான் மீறக்கூடாது. வசனத்திற்கு சில சாக்குபோக்கென்றுதான் சம்பிரதாயங்களை துவங்கினார்கள். அது வசன அடிப்படையில் அமைத்த காரியங்களும் அல்ல. ஆனால் இப்போது வசனத்தை மீறினாலும் பரவாயில்லை சம்பிரதாயங்களை மீறவே கூடாதாம் !

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

இயேசு பரிசேயர்களை கடிந்துக் கொள்கிறார், “நீங்கள் உங்கள் ‘மரபின்’ பொருட்டு தேவனுடைய கட்டளைகளை அவமாக்கி வருகிறீர்கள்”. இன்று திருச்சபையிலும் கூட கர்த்தருடைய வசனங்களுக்கு இப்படிப்பட்ட மனுஷர்களுடைய உபதேசங்களாகிய பழக்க வழக்கங்கள், சடங்குகள், வழிமுறைகளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். ஏதாவது செய்யும்போது திருவசனம் அதைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று ஆராய்ந்துப் பார்க்காமல், முன்னோர்கள் என்ன தீர்மானம் எடுத்தார்கள் என்றுதான் பார்க்கிறோம். தட்டி கேட்டால் “உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைகுறியை மாற்றாதே” என்று சொல்வார்கள் (வசனத்தை மீற வசனத்தை பயன்படுத்தும் பாவத்தை கூட தலையிலேற்றுகிறோம்)

பாரம்பரியங்களும், மரபுகளும் நமக்கு வழிகாட்டிகளாக தான் இருக்க வேண்டும். அதை இருகப்பிடித்துக் கொண்டு இருக்கவேண்டிய தேவையில்லை. தேவன் ஒவ்வொரு நபரோடும் வித்தியசமான அணுகுமுறைகளை தெரிந்துக் கொள்கிறார்.

மாற்கு 10: 46 - 56 சொல்லப்படும் சுகம் பெற்ற குருடனும் யோவான் 9வது அதிகாரத்தில் சொல்லப்படும் குருடனும், ஒருவருக்கொருவர் சந்திப்பதை, மேத்யு பி. தாமஸ் என்பவர் கற்பனையாக எழுதியிருக்கிறார். அது எப்படியென்றால்,

முதலாவது குருடனை பார்த்து இரண்டாவது குருடன் கேட்டான்

“ நீ சுகத்தை எப்படி பெற்றாய்?”

“ கர்த்தர் என்னோடு, உன் விசுவாசம் உன்னை இரசித்தது என்று சொன்னார். நான் பார்வை அடைந்தேன்” என்று முதலாவது குருடன் சொன்னான்.

ஆனால் இரண்டாவது குருடன் சொன்னான்,

“ அப்படி ஒரு மனிதனுக்கும் பார்வை அடைய முடியாது. பார்வை கிடைக்க வேண்டுமென்றால், இயேசு தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி அந்தச் சேற்றை நம்முடைய கண்களின்மேல் பூச வேண்டும். அதற்கு பிறகு சீலோவாம் குளத்தில் சென்று கழுவ வேண்டும். அப்போது தான் ஒருவராலே பார்வையை பெற்றுக் கொள்ள முடியும் தம்பி... ! அல்லாமல் நீ சொல்லுகிற போல ஒன்றும் கிடையாது!”

இந்த காலத்தில் சபை இரண்டாக உடைய இந்த காரணம் ஒன்றே போதும். நம்ம காலத்துல வீனான பாரம்பரியங்கள் சபைகளை ஒன்றுக்கொன்டு பிரித்து விடுகிறது. பாரம்பரியம், சம்பிரதாயங்கள், மரபுகள் என்பவைகளை வசனத்தின் முக்கியத்துவத்தை பரிக்க நாம் அனுமதிக்க கூடாது. என்றென்றைக்கும் நிலைநிற்பது வசனம் மட்டும்தான். வசனத்தை தடைச் செய்யும் இந்த தீய வல்லமைகளுக்கு எதிராக எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவன் தாமே நம்மை அதற்க்காக பலப்படுத்துவாராக.

# 10

# வசனம் தரும் விடுதலை...

குத்தகைக்கு எடுத்த நிலத்தில் வாழை சாகுபடிக்காக முத்துச்சாமி கிராம வங்கியிலிருந்து வேளாண்மை கடன் எடுத்தார். கிராம பஞ்சாயத்து தலைவர் பொன்னையா அதற்க்கான ஒத்தாசை அவருக்குச். செய்துக் கொடுத்தார். (அதற்கு பரிசாக அவரை பொன்னைய்யா நன்றாக கவனிக்கவும் செய்தார். ஆனாலும் பரவாயில்லை) முத்துச்சாமி தங்கியிருக்கும் வீட்டை ஈடு வைத்து தான் அவர் அந்த லோன் எடுத்தார். முதல் வருடம் பணம் ஒன்றும் கட்ட வேண்டாம் என்பது ஆறுதல் தந்தாலும், அதற்கு அடுத்து வருடம் 12 மாதங்களுக்குள் தவணைகளாக கடனை கொடுக்க வேண்டும். இல்லையென்றால் இப்போது இருக்கும் வீடு பரிப்யோய்விடும்.

வாழை மரங்கள் செழித்து வளர வளர முத்துச்சாமியின் நம்பிக்கையும் வளர்ந்தது. ஆனால் திடீரென்று வீசிய புயல் காற்றில் தன்னுடைய கனவுகள் எல்லாம் சிதைந்தது. அத்தனை வாழைமரங்களும் சரிந்து விழுந்தன. நிலத்துக்கு சொந்தகாரர் நில வாடகை கேட்டு தொந்தரவு கொடுத்தார். அதனாலே முத்துசாமி வட்டிக்கு கடன் வாங்கி அதைக் கொடுத்தார். முத்துசாமிக்கு தூங்கவே முடியவில்லை. லோன், வட்டி, நில வாடகை, வீட்டுச் செலவு, பிள்ளைகள் படிப்பு... என்று குழம்பி போனார் அவர்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

இதுக்கிடையில் பொன்னையாவும், முத்துசாமியை தேடி வருவார். வங்கியிலிருந்து எடுத்த கடனை ஒழுங்காக முத்துசாமி கட்டுகிறாரா என்று விசாரிக்கவே வந்து போனார்.

“நான் எங்கிருந்துய்யா கடனை கட்டுவேன்? சாப்பாட்டுக்கே வழியில்லை” என்று முத்துச்சாமி தலைவரிடம் சொன்னார். “கூலித் தொழில் செய்வது உண்மைத்தான். ஆனால் வீட்டு செலவுகே அது போதாது. இதுல நில வாடகை வேறெ கொடுக்கணும்... அது வட்டிக்கு கடன் வாங்கிதான் இப்போது கொடுத்துகிட்டு இருக்கிறேன்...” என்று புலம்பினார் முத்துச்சாமி.

12 மாதங்கள் ஓடி விட்டன. வங்கி கடன் இன்னமும் கட்டவேயில்லை. விருப்பம் இல்லாமல் அல்ல பணம் இருந்தால் தானே கட்டமுடியும்!

ஒரு நாள் பஞ்சாயத்து தலைவர் ஒரு நோட்டீசை கொண்டு வந்தார். கடன் எடுத்துவிட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. இந்த வாரத்துக்குள் வட்டியும் முதலுமாக பணம் கட்டவில்லையென்றால் சட்டபடி நடவடிக்கைகள் மேற்க் கொள்ளப்படும் என்று அதில் எழுதியிருந்தது.

“சட்ட நடவடிக்யின்னா என்ன? ஜப்தி தான். போலீஸ் வந்து. வீட்டு ஜாமா எல்லாம் வெளியே துக்கி போடுவாங்க. உங்களையும் வெளியே விரட்டி, வீட்டை சீலு வைப்பாங்க, எவ்வளவு சீக்கிரம் பணம் அடைக்க முடியுமோ அவ்வளவு சீக்கரம் அடைக்கிறது தான் புத்திசாலித்தனம்” என்று தலைவர் பொன்னைய்யா சொன்னார்.

அது தான் புத்திசாலித்தனம் என்று முத்துச்சாமிக்கும் தெரியும். ஆனால் பணத்துக்கு பணம் வேண்டுமே...!

“ஐயா, காப்பாத்துங்கைய்யா.... என்னையும் என் குடும்பத்தையும் நடுவழியில் விட்டுறாதீங்க ஐயா. ஐயா நீங்க பெரியமனசு வச்சா என்னைய காப்பாத்த முடியும்யா ... எப்படியாவது சட்ட நடவடிக்கையை மாத்துங்கய்யா... நீங்க நல்லாயிருப்பீங்க... உங்கள கைய்யெடுத்து கும்புடுறேன் ஐயா....” அழுது கேட்டுக் கொண்டார் முத்துசாமி.

“நான் மட்டும் நினைச்சா... எப்படி முத்துசாமி அது நடக்கும். கிராம வங்கி என்ன ஏ வீட்டு சொத்தா? உனக்கு ஒத்தாசை பண்ணின நான் தான் குழப்பதுல மாட்டிக்கிட்டேன்” பொன்னையா சொன்னார்.

தலைவர் பொன்னையா நினைத்தால் தன்னை காப்பாத்த முடியும் என்று முத்துசாமி நம்பினார். வீட்டுக்கு பின்புறம் சென்று ஒரு சின்ன வாழகுழையை வெட்டி பொன்னையாவிற்கு கொடுத்துவிட்டு கையெடுத்து கெஞ்சினார். எப்படியாவது காப்பாத்துங்க இது இருக்கட்டும் என்று சொன்னார்.

அதற்கு பிறகு அடிக்கடி தலைவர் பொன்னையா முத்துச்சாமியைத் தேடி வருவார். முத்துச் சாமியை ஜப்தியை பற்றி சொல்லி மிரட்டுவார். வாழக்குலையோ, தேங்காய்யோ, காட்டுத் தேனையோ வாங்கி கொண்டு திரும்பி போவார்.

பல மாதங்கள் உருண்டோடின கடனெடுத்த தொகையும், வட்டியும், வட்டிக்கு வட்டியும் எல்லாம் சேர்த்து இப்போது அடைக்க வேண்டிய தொகை, வாங்கினதை விட இரண்டுக்கும் அதிக மடங்கு ஆகிவிட்டது என்று தலைவர் பொன்னையா முத்துச்சாமியிடம் சொன்னார்.

முத்துச்சாமிக்கு பொன்னையாவின் நிழலைப் பார்தாலேப் போதும் நெஞ்சு வலி வந்துவிடும்.

“வங்கியிலிருந்த எப்ப வேண்டுமானாலும் ஜப்திக்கு வருவார்கள். நான் சொன்னதினால் தான் அவங்க பொறுமையா இருக்கிறாங்க” தலைவர் பொன்னைய்யா சொன்னார். கொஞ்சம் நாளாக முத்துச்சாமி பள்ளிக் கூடமிருக்கும் குன்றுச்சரிவில் சென்று வங்கியிலிருந்து யாராவது வரார்களா? போலீஸ் ஜீப் எதுவும் வருகிறதா? என்று சொல்லி பாதையை நோக்கி உட்கார்ந்து இருப்பார்.

ஒரு நாள் அந்த ஸ்கூல் ஹெட்மாஸ்டர் மரத்தண்டையில் சோகமாயிருக்கும் முத்துச்சாமியை பார்த்து அருகில் வந்தார்.

“என்னங்க இப்படி உட்காந்திருக்கிறீங்க? இப்படி உங்களே பார்த்ததே இல்லையே! இரண்டு மூன்று நாளா பாத்துக்கிட்டே வாரே... என்னாச்சு உங்களுக்கு?” என்று அன்போடு விசாரித்தார்.

மாஸ்டரைக் கண்டதும் முத்துசாமி எழுந்து தலையில் சுற்றி இருந்த துண்டை கையில் பிடித்துக் கொண்டு, பணிவாய் எல்லாம் விவரமாக மாஸ்டரிடம் சொன்னார். ஜப்தியைப் பற்றி சொல்லும் போது முத்துசாமியின் கண்கள் கலங்கி ஆற்றைப் போல கண்ணீர் வடிந்தது.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

முத்துசாமி சொல்வதை எல்லாம் பொருமையுடன் கேட்ட மாஸ்டர் கடைசியில் அவரை பார்த்து சிரித்தார். வாய்விட்டு சிரித்தார். முத்துசாமிக்கு ஒன்றுமே புரியவில்லை. “ஏங்க அந்த பஞ்சாயத்து தலைவர் பொன்னையா உங்கள நல்லா ஏமாத்திகிட்டு இருக்கிறாங்க. போன வருடம் வரையுள்ள எல்லா வேளாண்மை கடன்களும் அராசங்கம் தள்ளுபடி செய்து ஆறு மாசம் ஆச்சுங்க! ஏங்க நீங்க செய்தி கேட்கமாட்டிங்களா? டிவில, பத்திரிக்கை ரேடியோல எல்லாம் வந்ததுங்க... ! நீங்க கேள்விப்படலயா? ஜப்தி செய்ய இனி யாரும் வரமாட்டாங்க தைரியமா போயி உங்க வேலையை பாருங்க” என்று மாஸ்டர் சொன்னார்.

முத்துசாமி ஆ... ன்னு வாயை திறந்த வண்ணம் நின்றுவிட்டார். சில வினாடிகளுக்கு பிறகு தான் நினைவுக்கே வந்தார். உடனே அவர் சொன்னார். “அந்த திருட்டுப்பய பொன்னையா இனி வரட்டும்... அவனுக்கு வச்சிருக்கேன்... பஞ்சாயத்து தலைவராவது... கிலைவராவது... வரட்டும் நான் சும்மா விடமாட்டேன்”. முத்துசாமிக்கு ஒரு பக்கம் சந்தோஷம் தாங்க முடியவில்லை. மறுபக்கம் தன்னை இது வரை ஏமாற்றி கொண்டிருந்த தலைவர் பொன்னையா மேல தாங்க முடியாத எரிச்சல்வேற.

“உங்கல கையெடுத்து கும்பிடுரேனய்யா, நீங்க நல்லருக்கணும்” என்று சொல்லி விட்டு தலை உயர்த்தி, நெஞ்சை விரித்து, ‘சுதந்தரமடைந்தவாறாக’ சந்தோஷத்தோடு வீட்டுக்கு சென்றார். மாஸ்டர் அதைப் புன்னகையோடு பார்த்து ரசித்தார்.

முத்துசாமியை ‘விடுதலை’ யாக்கியது எது? வேளாண்மை கடன்கள் தள்ளுபடி செய்த அரசின் உத்தரவா?, துல்லியமாக சொல்லப்போனால் அது சரிதான். ஆனால், அரசாங்கம் இந்த உத்தரவைப் புறப்படுவித்து ஆறு மாதங்கள் ஆகிவிட்ட பின்பும் முத்துசாமிக்கு விடுதலையை அனுபவிக்க முடியவில்லையே. விடுதலையாயும் கூட அந்த உண்மையை அவர் அறியாமலிருந்தார். சத்தியத்தை அறிந்ததும் முத்துசாமி சுதந்திரத்தை அனுபவித்தார். வேறொருவிதமாக சொல்லுவோமென்றால் சத்தியத்தை அறிந்த பிறகு மட்டும் தான் முத்துசாமிக்கு சுதந்திரத்தை அனுபவிக்க முடிந்தது.

சத்தியத்தை அறியாமலிருகிரதினால் நாம் கட்டுண்டவர்களாக மாறுகிறோம். சில சூழ்நிலைகளில் இந்த ஒரே ஒரு காரணத்தினாலே மட்டும் நாம் அடிமைகளாகவே இருந்து விட வாய்ப்புண்டு.

"இயேசு தம்மை விசுவாசித்து யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவான் 8:31-32).

விசுவாசித்த அந்த வினாடியிலே அவர்கள் விடுதலையை அடைந்து விட்டார்கள். ஆனால் அந்த விடுதலையை உணர்ந்து அனுபவிக்க வேண்டுமானால் அவர்கள் புத்திரசுவிகாரத்தைப் பற்றினதான சத்தியத்தை அறிந்தேதான் ஆக வேண்டும்.

'தம்மை விசுவாசித்த' யூதர்களை பார்த்து இயேசு சொன்ன வார்த்தைகள், ஒரே நேரத்தில் அவர்களுக்கான உபதேசமும், அதே நேரத்தில் வாக்குத்தத்தமாகவும் இருக்கிறது.

சீஷத்துவத்தின் மேம்பாட்டு இங்கே வரைந்து காட்டப்படுகிறது.

விசுவாசிக்கிரார்கள் ➔ உபதேசத்தல் நிலைநிற்கிறார்கள் ➔ சீடராகுகிறார்கள் ➔ சத்தியத்தை அறிந்துக் கொள்ளுகிறார்கள் ➔விடுதலையை அடைகிறார்கள்.

இந்த வசனத்தினுடைய முதல் பகுதி போதனையாகவும் இரண்டாம் பகுதி வாக்குத்தத்தமாகவும் இருக்கிறது. இன்னமும் ஆழமாக கவனிக்கும்போது ஒரு காரியமும் கூட புரியும். விசுவாசிக்கிறவர்கள், மனபூர்வமாக செய்ய வேண்டிய என்பது தான். செய்ய முடிகிற காரியம் என்னவென்றால் வசனத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்பதே. வசனத்தில் நிலைநிற்கிறவன் எவனோ அவன் தான் உண்மையான சீடன். சீடன் சத்தியத்தை அறிந்துக் கொள்வான். ஏனென்றால் அவன் சத்தியத்தில் நிலைத்திருக்கிறான். வசனம் தான் சத்தியம் (யோவான் 17:17). வசனத்தை அறிய அறிய ஒரு சீடன் விடுதலையை அல்லது சுததந்திரத்தை அனுபவிக்கிறான். சத்தியத்தை பூரணமாக தெரிந்துக் கொள்வதற்கு முன்னமே - விசுவாசித்த அந்த கணமே - சீடன் சுதந்திரத்தை அல்லது விடுதலையை அடைந்துவிட்டான். ஆனால் அந்த சுதந்திர நனவு யதார்த்தமாக உணர்ந்து கொள்வது சத்தியத்தை (வசனம்) தெரிந்து கொள்ளும் போதுதான்.

நாம் விடுதலைப் பெற்றவர்கள் என்ற உண்மையை நாம் அறிந்தே ஆக வேண்டும். அந்த அறிவுக்கு நேராக நம்மை நடத்தவது வசனம் தான். வசனத்தில் நிலைநிற்கிறவன் விடுதலையில் முன்னேறுகிறான்.

அறியாமை என்பது ஒரு இலகுவான காரியமாக தள்ளிவிட கூடாது. சதுசேயர்கள் குருட்டுக் கேள்வியை கேட்டு இயேசுவினிடத்தில் வந்தபோது இயேசு அவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னார். "நீங்கள் வேதவாக்கிங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்"

"நீங்கள் தவறான வழியில் செல்கிறீர்கள்" (YLT)[1]

"உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்கிறீர்கள் (HCSB)[2] என்றும் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது. தம்மை சூழ்ந்துவந்த யூதர்களை நோக்கி பேசும் வேளையிலும் கூட அவர்களுடைய பிரதான பிரச்சனையாக இயேசு அவர்களுக்கு சுற்றிக் காட்டுவது அவர்களுடைய அறியாமையயை தான்.

"நீங்களோ நான் எங்கேயிருந்து வருகிறேனென்றும், எங்கே போகிறேன் என்றும் அறியீர்கள்" (யோவான் 8:14).

"என்மையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்" (யோவான் 8:19).

"பிதாவைக்குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்" (யோவான் 8:27).

'அறியாமை ஒரு பாவம் அல்ல' என்று சிலர் நினைத்து லேசாகயிருப்பதுண்டு. இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்! ஆனால் அறியாமை எப்போதுமே மன்னிக்கப்படாது (Ignorance is not always forgiven). அறியாமையினால் சில நேரங்களில் தண்டிக்கப்படவும் செய்யலாம். ஊரடங்குச் சட்டம் (Curfew) அமல்படுத்தப்பட்ட நாளில் வெளியே சென்றால் தண்டிக்கப்படுவது உறுதியான காரியம். ஐயோ, எனக்கு தெரியாதென்று தலைச் சொரிந்துக் கொண்டு நின்றால், ஏதாவது பிரயோஜனம் இருக்குமா? ஊரடங்கு உத்தரவு போடப்பபட்டுள்ளது. இதை தெரிந்திருக்க வேண்டும். வசனத்திற்குள் நிலைநிற்க வேண்டும் என்பது ஒரு சீடனின் கடமை. அறியாமையின் சலுகையை எதிர்பார்ப்பது ஒரு நாளும் நல்லதல்ல. அறிந்து கொள்ள வேண்டும் – வசனத்தில் நிலைதிருக்க வேண்டும் என்பது சீடர்கள் என்ற முறையில் நாம் ஒவ்வொருவருடைய கடமை மற்றும் பொருப்பு ஆகும்.

சீடன் எப்படி தன் சுதந்திரத்தை பெற்றக் கொள்கிறான்?. இயேசு தம்மை விசுவாசித்தவர்களோடு சொன்னார் "உபதேசத்தில் நிலைதிருந்தால் விடுதலையைப் பெருவீர்கள்".

அந்த வார்த்தைகளைக் கேட்டவர்கள் இயேசுவிடம் இப்படி சொன்னார்கள், "விடுதலையைப் பெறுவீர்கள் என்றா? விடுதலைப் பெற நாங்கள் என்ன அடிமைகளாகவா இருக்கிறோம்?" அடிமைத் தனத்தை பற்றி அவர்களுக்கிருக்கும் எண்ணம் தான் பிரச்சனை. அவர்களுடைய கண்ணோட்டத்தில் அடிமைத்தனம் என்றாலே அது ஆட்சி ரீதியில் மட்டும் தான்.

இயேசு சொன்னார் நீங்கள் தவறாக அதைப் புரிந்துக் கொண்டீர்கள். நான் சொல்ல நினைப்பது அது அல்ல (மெய்யாகவே, மெய்யாகவே என்று பயன்பாட்டின் கருத்து மேல் சொல்லப்பட்டது தான். யாராவது ஒருவர் நாம் சொன்னதை தப்பாக எடுத்துக் கொள்ளும் போது, "நான் அப்படி நினைச்சு சொல்லல, நான் என்ன சொன்னேன்னா" என்று சொல்லுவோமில்லையா. அதைப்போல அராமை மொழியில் இருக்கும் பயன்பாடுத் தான் "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது). அரசியல் ரீதியாகவோ ஆட்சி ரீதியாகவொ இருக்கும் அடிமைத்தனத்தை விட உங்களுடைய அடிமைத்தனம் மிகவும் ஆழமானது என்று இயேசு சொன்னார். அது பாவத்திற்கு அடிமைப்படுவது தான். "பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிக்கிறான்" (யோவான் 8:34)

பாவஞ்செய்கிறவன் பாவத்துக்கு அடிமை. வசனத்தில் நிலைத்து இருக்கிறவன் விடுதலையையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்கிறான். அப்படியென்றால் என்ன?

வசனத்தில் நிலைநிற்கிறவனுக்குபாவத்திலிருந்து விடுதலை அல்லது சுதந்திரம் உண்டு. வசனமும் பாவமும் ஒன்றுக்கொன்று முறன்பாடுகின்றன என்று நாம் முந்தின அதிகாரங்களில் பார்த்தோம். அந்த காரியம் இங்கு ஒருமுறைக் கூட உறுதிப்படுத்தப்படுகிறோம். ஆனால் அதை விட ஆழமான வேறொரு சிந்தனை இங்கு இருக்கிறது.

நம்முடைய கடந்தக் கால பாவங்களை தேவன் மன்னித்து விடுகிறார் என்பது எல்லாவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. நாம் பாவத்தின் தண்டணையிலிருந்து மீட்க்கப்பட்டுள்ளோம். ஆனால் பாவத்தின் வலிமையிலிருந்து மீட்கப்பட்டுவிட்டோமா? யோசித்துப் பாருங்கள்.

விசுவாசிகளில் நல்ல ஒரு சதவீதம் பாவத்திற்க்கு அடிமைகளாயிருக்கிறார்கள். "என்ன செய்ய முடியும். நாம் பலவீனர்கள், பாவத்தை எதிர்த்து மேற்க்கொள்ள திரணியில்லாதவர்கள், பாவத்தின்

பற்களுக்கு இறையாக இருக்கிறோம்", என்று நாம் நம்மைக் குறித்து சொல்லிக் கொண்டு இருக்கிறோம். "வெற்றிகரமான வாழ்க்கை உன்னால் வாழ முடியாது" என்று பிசாசு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வினாடியும் நம்மோடு சொல்லிக் கொண்டேயிருக்கிறான். பஞ்சாயத்துத் தலைவர் பொன்னையா முத்துசாமியை மிரட்டிவைத்திருந்ததுப் போல ஒவ்வொரு நாளும் நாம் 'அடிமைகள்' என்ற பொய்யை நம்ப வைத்து, அதிகமான அடிமைத்தனத்துக்கு நேராக சாத்தான் நம்மை கொண்டு செல்கிறான்.

ஆனால் உண்மையென்ன? பிசாசுக்கு நம் மீது எந்த விதமான உரிமையும் இல்லை. பாவம் நம்மை நோக்கி அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்று வற்புறுத்தும் போது, அதற்கு கீழ்படிய வேண்டிய அவசியமில்லை. "பாவத்திற்கு நம்மை ஆளுகை செய்யவோ, மேற்கொள்ளவோ முடியாது" (ரோமர் 6:14). என்று அப்போஸ்தலனாகிய பவுல் ஆணித்தனமாக சொல்லுகிறார்.

அதாவது நம்மை ஆளுகை செய்ய பாவம் போராடும் போது அதற்கு முன் சரணடைய தேவையில்லை. காரணம், தேவாதி தேவன் நம்முடைய பாவங்களை மன்னித்து நமக்கு வைத்திருந்த தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் பாவத்தின் வல்லமையிலிருந்து (வசீகரிப்பு) அவர் நம்மை விடுதலையாக்கி விட்டார்.

அப்போஸ்தலனரிகய பவுலின் சில வார்த்தைகளை சில பேர் ஆட்கள் அதின் உள்ளடக்கத்தைவிட்டு (Out of context) பயன்படுத்துவதை நான் பார்த்திருக்கிறேன்.

"நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்கு கீழாக விற்க்கப்பட்டு, மாம்சத்துக்குறியவனாயிருக்கிறேன்... ஆனப்படியால் நன்மை செய் விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தை காண்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னை சிறையாக்கிக் கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:14-24).

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் உள்ளவர்களுக்கு நிருபத்தை எழுதும் போது அவருக்குள் இருந்த சிந்தனைகள் (அவர் அனுபவித்தது என்றுமாகலாம்) என்று யாரும் எண்ணிவிடாதேயுங்கள். சுய ஆற்றலில்

நம்பி நியாயபிரமாணத்திற்கு ஏற்ப வாழ முயலும் துரதிர்டசாலியான ஒரு மனிதனின் உருவபடத்தை தான் பவுல் நமக்கு முன் சித்தரிக்கிறாரே ஒழிய அவருடைய அனுபவத்தை அவர் எழுதவில்லை.

சொந்த ஆற்றலை நம்பி சுய முயற்சிகயினால் பாவத்திலிருந்து தப்பித்துக்கொண்டு 'வெற்றிகரமான வாழ்வை' வாழ விரும்பினால் நமக்கும் இது தான் கதி.

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளை ஒரு கேடுகெட்ட மனிதனின் கூக்கிரலோடு கூட அல்ல, ஜெயங்கொண்டவனின் வீரமுழக்கத்தோடு முடிக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" (ரோமர் 7:25) காரணம் பாவத்திற்க்கும் மரணத்திற்கும் கெஞ்சிக் பணிகிற சரீத்தில் இருந்து என்னை விடுதலையாக்க இயேசுகிறிஸ்து இருக்கிறார்! அல்லேலூயா!

நாம் உயரத்திலிருந்து, தேவனிடமிருந்து பிறந்தவர்களானபடியால் பாவத்தை வெல்ல நமக்கு பெலனுண்டு. "தேவனிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவத்தில் தொடர்வதில்லை, தேவனின் இயல்பு அவரிடம் இருக்கிறது. தேவனிடமிருந்து பிறந்தவர்களாகயிருப்பதினால் அவரால் பாவத்தில் தொடர இயலாது" (1 யோவான் 3:9)[3].

தேவனிடமிருந்து பிறந்த ஒருவருக்கு பாவத்தை எதிர்த்துப் போராட வல்லமையுண்டு. வசனத்தில் நிலைநிற்கும் போது தான் இந்த வல்லமையை நமக்கு சொந்தமாக்க முடியும். ஆனால் அது சீடனான முதல் நாளிலே அப்படி மாற உங்களால் முடியும் என்றல்ல. பல நேரங்களிலும் சீடனாக மாறினப் பின்பு ஏதாவது பாவத்தில் விழலாம். ஆனாலும் கூட பாவத்தை எதிர்த்து நிற்க்கும் வல்லமையை தேவன் நமக்கு அருளியிருக்கிறார். நம் கிறித்துவ வாழ்க்கையை நாம் ஆரம்பித்த முதல் நாளிலே தேவன் அந்த வல்லமையை நமக்கு தந்து விட்டார். ஆனால் வசனத்திற்க்கு முன்பாக நம்மைநாமே தாழ்த்தி பணிவோடு கீழ்படியும்போது அந்த வல்லமையை பூரணமாக நமக்கு பயன்படுத்தி கொள்ள முடியும்.

வசனத்துக்கு நாம் காட்ட வேண்டிய கீழ்ப்படிதலையையும், மற்றும் பாவத்தின் வலிமையிலிருந்து பெறும் சுதந்திரம் (அ) விடுதலையையும் சம்பந்தப்படுத்திக் கொண்டு பவுல் எழுதும் வேதவாக்கியத்தை கவனியுங்கள்.

“முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனபூர்வமாய்க் கீழ்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நிங்கள் விடுலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்”(ரோமர் 6:17, 18).

முன்பு பாவம் சொல்லுவதை கீழ்படியும்படியாக நீங்கள் உங்களுடைய சரீரங்களை விட்டுக் கொடுத்தீர்கள். ஆனால் இப்போது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்தை, ஒழுக்க நெறியை, உளமார கீழ்படிய, கடைப்பிக்க உங்களையும் அடிமைகளாக்கி அற்ப்பணித்துவிட்டீர்கள். இதற்குரிய சத்துவத்தையும் நீங்கள் பெற்று கொண்டீர்கள். தேவன் அதை உங்களுக்கு தந்திருக்கிறார்.

மேலும் அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும் காரியத்தையும் குறிப்பிடுகிறேன். “வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்” (1 யோவான் 2:14).

வசனத்தில் நிலைத்திறுக்கும்- வசனத்தை தொடர்ந்து கடைபிடிக்கும்-சீடன்-கர்த்தர் அவனுக்கு அருளின சுதந்திரத்தை அதாவது பாவத்தின் வலிமையிலிருந்து அடைந்த சுதந்திரத்தை-தெரிந்து கொள்வான், பாவத்திலிருந்து விடுதலையையும் பெருவான். பாவத்தினாலே தாக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் மத்தியிலும்-ஒரு வேளை பாவத்தில் சிக்கிகொள்ளுகிற போதும் - கர்த்தருடைய திருவசனங்கள் அவனை ஆற்றித் தேற்றும்படியாக அவன் சமீபத்தில் வரும். பாவத்திற்கு நாம் அடிமைப்பட தேவையில்லை என்றும், பாவத்தை எதிர்த்து முறியடிக்க உன்னால் முடியும் என்றும் அந்த வசனம் அவனை ஞாபகப்படுத்தும். ஆகவே, வசனத்தில் நிலைதிருக்கிறவன் பாவத்திலிருந்து விடுதலையையும், சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்வான்.

வசனம் நமக்கு அடுத்தாக தரும் சுதந்திரம் புத்திரசுவிகாரத்தின் சுதந்திரம். பாவத்துக்கு அடிமைகளாக இருந்தவர்கள் பிசாசினுடைய ராஜ்யத்திலிருந்து தேவனுடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் ‘தேவனுக்கு அடிமைகளாக’ மாறுகிறார்கள். உண்மையில் அடிமைத்தனத்துக்குள் அல்ல மாறாக புத்திரசுவீகாரத்துக்குள்ளாக தான் நாம் பிரவேசித்திருக்கிறோம். நமக்கு கிடைத்த இந்த புது சுதந்திரம் என்பது ‘புத்திரசுவிகாரத்தின்’ சுதந்திரமாக இருக்கிறது.

கோவா மாநிலத்தை சேர்ந்தவர் ராபர்ட் கொல்கத்தாவில் மேற்கொண்ட ஒரு பயணத்தின் போது தம்முடைய இரண்டு வயதுள்ள மகன் டேவிட்டை அங்கு ஏற்பட்ட ஜனநெரிச்சலில் சிக்கி இழந்தார். ராபர்ட் கொல்கத்தா போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தார். ஆனால் அவர்களுக்கு அவனைத் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை. பல வருடங்கள் ஆயிற்று இன்னும் அவனை பற்றி ஒரு விபரமும் கிடைக்கவில்லை.

தன் மகனைக் குறித்துள்ள பாரம் ராபர்ட்டை மிகவும் தளர்த்தியது. இரவும் பகலும் தன் மகன் டேவிட் ஞாபகமாவே காணப்பட்டார். அவர் அடிக்கடி கொல்கத்தா சென்று வந்தார். அங்கு செல்லும்போதெல்லாம் தெருத்தெருவாய் சுற்றி அலைந்து தன் மகனைத் தேடுவார். அப்படியே காவல் நிலையத்தில் சென்று தன் மகனை பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா என்று விசாரிப்பார். இப்படி அடிக்கடி வந்து செல்வதால் காவல் நிலைத்திலுள்ள போலீஸ்காரர்கள் அனைவரும் ராபர்ட்டின் நண்பர்கள் ஆனார்கள்.

ஒரு நாள் திருட்டு குற்றம் சுமத்தப்பட்ட நாடோடி வாலிபன் கைதுச் செய்யப்பட்டான். அவனை விசாரித்த போலீஸ்காரருக்கு அவன் கொல்கத்தாவைச் சேர்ந்தவன் அல்ல என்பது தெரியவந்தது. அதை தன் மேலதிகாரியிடம் அவர் தெரிவித்தார். அந்த மேலதிகாரி ராபர்ட்டின் நண்பர். ஒருவேளை சில வருடங்களுக்கு முன் காணாமல்ப் போன டேவிட்டாக இருக்கலாம் இந்த வாலிபன் என்ற சந்தேகம் இருந்ததினால் கோவாவிலுள்ள ராபர்ட்டை தொலைப்பேசி மூலம் தொடர்புக் கொண்டு கொல்கத்தாவுக்கு விரைந்து வர அழைத்தார். ராபர்ட் விமானத்தில் விரைந்து வந்தார். காவல் நிலையத்தில் வந்து அந்த நாடோடி வாலிபனை கவனித்து பார்த்தார். ஒரு சில நிமிடங்களுக்குள் அந்த வாலிபன் தன் மகன் டேவிட் என்பதை கண்டுபிடித்தார். தன் மகனை கிடைத்த சந்தோஷத்தில் அவனை கட்டிபிடித்து கதறி அழுதார். அடுத்த நாளே அவர்கள் இருவரும் கோவாவுக்கு சென்றார்கள்.

அரமனைப்போல இருக்கும் வீடு. தெருவில் வளர்ந்த டேவிட்டுக்கு எல்லாமே வித்தியாசமாக இருந்தது. சாப்பிடும் நேரம் வந்தது. மிக பிரம்மாண்டமான விருந்து ஆயத்தப்பட்டிருந்தது. மேஜையில் வந்து அமராமல் டேவிட் இதையெல்லாம் பார்த்து பயந்து போய் ஒதுங்கி நின்றான். பலமுறை ராபர்ட் சாப்பிட அழைத்தும் அவன் வரவில்லை. பிறகு ராபர்ட்

எழுந்துப் போய் டேவிட்டின் கையைப் பிடித்து பாசத்தோடு அழைத்தார். உடனே டேவிட் “சார். சார், வேண்டாம் சார்” என்று சொன்னான். “சார், இல்லடா, நான் உன் அப்பாடா,” என்று சொல்லி தன் பக்கத்திலே உட்கார வைத்தார். இரவு படுக்கை அறையை பார்த்து டேவிட் அதற்குள் நுழையவே பயப்பட்டான். பின்னர் ராபர்ட்டு வந்து தன் மகன் டேவிட்டை படுக்கை கூட்டிச் சென்று உடன் படுத்தார். படுத்துக் கொண்டு சிறுவயதில் டேவிட் செய்த சுட்டித்தனங்கள், சேட்டைகள் எல்லாம் அவனுக்கு சொன்னார். சொன்னது ஒன்றுக் கூட ஞாபகத்துக்கு வரவில்லை என்றாலும் அதையெல்லாம் டேவிட் கேட்டு அப்படியே தூங்கி விட்டான்.

நாட்கள் செல்ல செல்ல டேவிட் ராபர்டை அப்பா என்று அழைக்க ஆரம்பித்தான். வீட்டு காரியங்களில் பொறுப்புள்ளவனாகவும், அக்கறையுள்ளவனாகவும் மாறினான். அந்த வீட்டுக்கு வாரிசு அவன்தான் என்ற உணர்வு அவனுக்குள் வந்தது. அவனுடைய சுபாவங்கள், பழக்க வழங்கங்கள், அணுகுமுறைகள் எல்லாம் மாற ஆரம்பித்தது. அவன் வீட்டு பிள்ளையாக மாறினான். நாட்கள் செல்ல செல்ல அவன் ராபர்டின் மகனாக மாறினான் என்றல்ல. டேவிட் என்றைக்குமே மகன்தான். ஆனால் தகப்பனையும், வீட்டையும் விட்டு தெருவில் வளர்ந்தவன், இப்பொழுது தன் தகப்பனோடுக் கூட சொந்த வீட்டில் வாழ ஆரம்பித்த பிறகுதான் அவனுக்குள் அந்த உணர்வும் நம்பிக்கையும் வந்தது.

“நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியோடு சாட்சி கொடுக்கிறார்” (ரோமர் 8 : 16).

தேவனுடைய தூய ஆவியானவர் நம்முடைய ஆவி மனிதனோடு சொல்லும் வார்த்தை, அவர் பகிர்ந்து கொள்ளும் சான்றுதான் நம்முடைய புத்திர சுவீகாரத்தை குறித்து நமக்கு இருக்கும் நம்பிக்கையின் அடித்தளம். புத்திரசுவிகாரத்தின் சுதந்திரத்தையும், விடுதலையையும் பெற்றுக் கொண்டு அனுபவிக்க நமக்கு உதவி செய்வது தேவனுடைய வசனங்கள்தான். ஆகவே அந்த வார்த்தைகளுக்காக நாம் ஒவ்வொரு நேரமும் ஆவலோடு கர்த்தர் சமூகத்தில் காத்திருப்பவர்களாக இருக்க வேண்டும். “தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்கு செவிக்கொடுக்கிறான்” (யோவான் 8 : 47).

டேவிட் தன்னுடைய தகப்பனை முதலில் ‘சார்’ என்று அழைத்து வந்தான். ஆனால் ராபர்ட்டின் வார்த்தைகள் அவனுக்குள் ‘மகன்’, ‘பிள்ளை’ என்ற உணர்வை உருவாக்கியது. இப்போழுது அப்பாவோடுக் கூட பேசி

மகிழவும், அவருடைய குரலை கேட்கவும் ஆவலோடு இருப்பது மட்டும் அல்ல அப்பாவின் சொல்லை கேட்கவும், அவருக்கு கீழ்படிவதற்கும், அதை பாதுக்காக்கவும், கவனமுள்ளவனாகவும், பொறுப்புள்ளவனாகவும் இருக்கிறான்.

அடுத்தாக எதிர்காலத்தைக் குறித்து நமக்கு இருக்கும் பயத்திலிருந்து தேவனுடைய வசனம் நமக்கு விடுதலை தருகிறது.

---

1 - *Young's Literal Translation*

2 - *Holman Christian Standard Bible*

3 - *மூலைப்பாஷையிலிருப்பதைப் போல மொழிமாற்றம் செய்தது*

# 11

# எளிய வார்த்தை...
# எழில்மிகு வார்த்தை...

கௌதம் ஒரு புகழ்பெற்ற ஒரு ஓவிய கலைஞன். அவர் இந்நிலையில் பிரபலமானதிற்க்கு பிறகு கலை இயக்க விமர்சகர்கள் கௌதம் வரைந்த ஓவியங்களைக் குறித்து கட்டுரைகளையும், விளக்கங்களையும் எழுதி நாளிதழ்களில் வெளியிட ஆரம்பித்தார்கள். இப்பொழுது கௌதம் என்ன வரைந்திருக்கிறார் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டுமானால் விமர்ச்சர்களின் விளக்கங்களை பரிசோதிக்க வேண்டும் என்ற இக்கட்டை சாதாரண ஜனங்களுக்கு இந்த கலை நிபுணர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். கலை விமர்சகர்கள் கௌதமின் ஓவியங்களை ‘பண்பியல் ஓவியங்கள்’ என்று அழைத்தார்கள். ஏனென்றால் பண்புக்கு புலப்படாத அநேக அர்த்தங்கள் அந்த ஒவிங்களுக்குள் மறைந்து இருக்கிறதாம்!.

அவருடைய ஓவிய கண்காட்சியை பார்க்க பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு வந்து செல்வார்கள். மிக உயர்ந்த விலைக்கு ஓவியங்கள் விற்பனைச் செய்யப்பட்டது. அந்த கண்காட்சியில் வைத்திருந்த ஒரு குறிப்பிட்ட ஓவியத்தைப் பற்றி ஒரு கட்டுரை அன்றைய நாளிதழில் இப்படி வந்தது. “மிக அற்புதமான ஓவியம், இதில் காணும் அந்த நிறைவான பானை உயிரின் நிறைவை குறிக்கிறது. அதற்கு மேல் இருக்கும் அந்த தட்டையான தளம் உயிரின் நிறைவை தடுத்து நிறுத்தும் மாயையின் வேதாளம். அந்த தட்டை தளத்திலிருந்து வளரும் கொம்புகள், மாயையின் வேதாளத்தை துளைத்து

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

ஆகாயத்தை நோக்கி உயரும் நம்பிக்கையின் கொம்புகள், அதற்கு பின் காணும் சின்ன கொம்புகள் இப்போது இருக்கும் எதிர்பார்பின் சின்னங்கள்…"

இதை வாசிக்க கௌதமுக்கு ஒரே குழப்பம். எந்த ஓவியத்தை பற்றி இவர் இதை எழுதியிருக்கிறார் என்று பார்க்க கண்காட்சி நடக்கும் இடத்திற்கு விரைந்து சென்றார். அவர் அங்கு வைத்திருந்த ஓவியங்கள் ஒவ்வொன்றாக கவனித்து பார்த்து கொண்டு வந்தார் அவருக்கு சிரிப்பு அடக்க முடியவேயில்லை. ஏனென்றால் ஒரு ஒவியம் தலைக்கீழாக வைத்திருந்தார்கள். அந்த ஓவியத்தைப் பற்றிதான் இந்த கட்டுரை எழுதப்பட்டுருக்கிறது!. உண்மையில் அந்த ஓவியம் மிகவும் எளிமையான ஒன்று. ஒரு இளம்பெண் மனச் சோர்வின் காரணமாக மேசையின்மேல் தலைகுனிந்து இருக்கிறார். தலைக்கீழாக ஓவியத்தை வைத்தப் போது அந்த பெண்ணின் தலை உயிரின் 'நிறைகுடமாக' ஆனது. மேசையின் மேற்பரப்பு 'மாயையின் வேதாளம்' ஆயிற்று. மேசையின் கால்கள் மாயையின் மேற்பரப்பை துளைத்து ஆகாயத்தை நோக்கி பாயும் 'நம்பிக்கையின் கொம்புகளாக' காட்சி அளித்ததாம்!!!.

இங்கு யாரை குற்றம் கூறுவீர்கள்? கண்காட்சியின் போது ஓவியத்தை சரியாக வைக்காமல் அதை தலைகீழாக வைத்தவர்களையா? ஆம் சொல்லப் போனால் அவர்கள் செய்ததும் தவறுதான். ஆனால் மிக கடுமையான தவறு செய்தவர் அந்த கலை விமர்சகர்தான். தலைக்கீழாக வைத்திருக்கும் அந்த ஓவியத்திற்கு விளக்கவுரையை எழுதின அவருடைய 'புத்தி'யை என்ன சொல்வது?

அவர் அதற்கு விளக்கத்தை படைக்காமல் சும்மா வைத்திருப்பாரென்றால் கண்காட்சிக்கு வரும் ஜனங்கள் அதை பார்த்து, அது தலைக்கீழாக வைத்திருக்கிறார்கள் என்று புரிந்து அதை சரியாக வைக்க சொல்லியிருப்பார்கள். ஆனால் விமர்சகனின் 'அறிவு' சாதாரண மக்களை கௌதமின் ஒவியங்களை எளிமையாக ரசிப்பதிலிருந்து தடுத்து நிறுத்திவிட்டது.

வேதாகமத்தின் காரியத்திலும் கூட நடந்தது இதுதான் சாதாரண மக்களிடமிருந்து விளக்கவுரையாளர்கள் வசனத்தை பறித்துக் கொண்டார்கள். ஆண்டவர்கூட கனவில் காணாத கருத்துக்களையும், விளக்கங்களையும் மேடைகளிலும், புத்தகங்களிலும் அள்ளி தெளிக்கும் இப்படிப்பட்ட 'நடமாடும் பைபிள் கலைகளஞ்சியங்கள்' கிறிஸ்தவ உலகத்தில் இருக்கிறார்கள். இதை படித்து பட்டம் பெறும் பட்டதாரிகளும் ஏராளம். இங்கு ஏமாற்றம் அடைவது சாதாரண ஜனங்கள் தான்.

சற்று சிந்தித்துப் பாருங்கள், எபிரேய வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு ஏழாவது வார்த்தைக்கும் குறிப்பிட்ட எண்கள் கொடுத்து அவைகளை இணைத்து அதற்கு விளக்கமளிக்கும் ‘பைபிள்-கோட்’[1] (Bible - Code) என்ற நூலை எழுதினவர், யாருக்காக வசனத்தை வியாக்கியானம் செய்திருக்கிறார்?. இதனுடைய இலட்ச கணக்கான நகல்கள் விற்கப்பட்டது.

தேவன் தம்முடைய வார்த்தைகளை மிக எளிமையான முறையில் நமக்கு தந்திருக்கிறார். ஆனால் அதை எளிமையான முறையில் ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் நாம் இருக்கிறோம். வரைந்தது கௌதமாக இருந்தால் அது நிச்சயமாக எளிமையாக இருக்காது என்றும், வெளித்தோற்றத்துக்குப் புலப்படாத உள்ளார்ந்த பண்புகள் ஓவியத்துக்குள் மறைந்திருக்கும் என்றும் விமர்சகர்கள் சொல்லி சாதித்து விடுகிறார்கள். வேத வசனங்களும் இதைப் போல அநேக ‘வெளித் தோற்றத்துக்குப் புலப்படாத’ பரம இரகசியங்கள் மறைந்திருக்கிறதென்றும் அது எளிதாக யாராலும் புரித்துக் கொள்ள முடியாது என்று சொல்லி சாதாரண ஜனங்களை ஏமாற்றும் இப்படிப்பட்ட ‘விசேஷித்த ஞானவரம்’ பெற்ற ஏராளம் பேர் இன்றும் இருக்கிறார்கள். மிக சிறிய, எளிமையான வசனங்களுக்கும் வேத பகுதிகளுக்கும் எண்கள், படிமங்கள் மற்றும் வர்ணித்து அந்திகிறிஸ்து, கம்ப்யூட்டர், சிப், பார் கோட் போன்றவைகளை அதுக்குள் தரிசிக்கிறார்கள். இக்காரணத்தினால் சாதாரண விசுவாகிகள் மிகவும் எளிமையான வேதப்பகுதியை கூட சொந்தமாக்க பயப்படுகிறார்கள். தனக்கு புரிந்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு பரிசுத்த வேதாகமம் எளிமையானது என்று நம்ப பயப்படுகிறார்கள். ஏனென்றால் ஏதாவது மறைப்பொருள்கள் வார்த்தைகளிலோ, அர்த்தங்களிலோ இருக்குமானால் என்ன செய்வது!

வில்லியம்ஸ் ஒரு மேதை. அவர் வாசிக்காத புத்தங்களே இல்லை. அவருடைய நண்பர்கள் அவரை - சாக்கிரட்டீஸ் என்று அழைப்பார்கள். ஒரு நாள் அவருடைய அலுவலகத்தில் வேலைப் பார்க்கும் ஒருவர் அவரிடம்-

“சார் நீங்க எப்போதாவது பகவத் கீதை படித்ததுண்டா?

“ஆமா, நா படிச்சிருக்கேன்... ஏன் கேக்கிறிங்க?” வில்லியம்ஸ் கேட்டார்.

“இல்ல அது படிக்கும்போது உங்களுக்கு ஏதாவது புரிஞ்சுதா?”

வில்லியம்ஸ் : “ஆமா, கொஞ்சம் புரிஞ்து... ஆனா எல்லாமே புரிஞ்சுதுண்ணு சொல்ல முடியாது”

“நீங்க சொன்னது ரொம்ப கரக்ட் சார், கீதையை சாதாரணமா யாராலயுமே புரிந்துக் கொள்ள முடியாது. அதுதான் உங்ககிட்ட கேட்டேன்” என்று அவர் சொன்னார்.

தவம் செய்து வரம்பெற்ற முனீஸ்வரர்களால் மட்டும்தான் கீதையின் விளக்கங்கள் பெற்றுக்கொள்ள முடியும். சாதாரண ஜனங்களுக்கு அது சாத்தியம் ஆகாது என்பது அவருடைய நம்பிக்கை.

‘புரிந்து கொள்ள முடியாது’ என்பது கீதாவின் சிறப்புத் தன்மையாக இருக்கும் போது, ‘புரிந்துக் கொள்ள முடியும்’ என்பதுதான் வேதாமத்தின் சிறப்புத்தன்மை. உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் கர்த்தருடைய வார்த்தைகள் புலப்படவேண்டும், தேவனுடைய சித்தத்தை அவர்களும் புரிந்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டதுத்தான் பரிசுத்த வேதாகமம்.

சாதாரண மக்களுக்கு புரிந்துக் கொள்ள முடியாத காரியங்கள் தேவாகமத்தில் இல்லை என்று சொல்லவில்லை. அப்படியிருந்தாலும் கூட வேதாகமத்தை பொதுவாக பார்க்கும் போது அது சாதாரண மக்களுக்கு புரிகிற வண்ணமாக தான் எழுதப்பட்டிருக்கிறது. மாறாக அவர்களை தூரம் தள்ளி நிருத்தும் வண்ணமாக அல்ல.

வேதாகமம் எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்களும் மிக சாதாரணமானவர்களாக இருந்தார்கள். கிராமத்தில் வசித்த சாமுவேல், ஆடு மேய்க்கும் தாவீது, அத்தி சாகுபடி செய்யும் ஆமோஸ், ஆசாரியப் பாரம்பரியம் மட்டும் இருந்த எரேமியா, பாபிலோனில் அடிமையாயிருந்த நெகேமியா, வரி வசூல் செய்யும் மத்தேயு, வைத்தியனாகிய லூக்கா, மீன் பிடிக்காரன் பேதுரு, மனித ஞானத்தை பயன்படுத்தமாட்டேன் என்று அடம்பிடிக்கும் பவுல்.....

தேவன் தம்முடைய மகத்தான புத்தகத்தை உருவாக்க சாதாரண ஜனங்களை ஏன் தெரிந்தெடுத்தார்?

“அவருடைய மகிமைக்காக பலவீனப் பாத்திரங்களில் தமது வல்லமையை வெளிப்படுத்தினார்” என்று ஒருசிலர் எண்ணலாம். ஆனால் அதை விட நியாயமான வேரொரு சிந்தனை என்னவென்றால், தம்முடைய செய்தியை வாசிக்க இருக்கும் மக்கள் சாதாரண மக்கள் என்பது ஆண்டவருக்கு தெரியும். அவர்கள் அந்த செய்தியை வாசிக்கும் நேரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகள், மொழி அமைப்பு என்பவைகள் கூட வாசகர்களை குழுப்பக்

கூடாது என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. புகழ்ப்பெற்ற கவிஞர் ஹோமர். தலைசிறந்த தத்துவஞானி பிளாட்டோ போன்றவர்களை வேதபுத்தகம் எழுத தேவன் சொல்லியிருப்பாரென்றால் என்ன நடத்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! ஹோமர், பிளட்டோ, அரிஸ்டாடில் என்பவர்களின் புத்தங்களை வாங்கி வாசித்துப் பாருங்கள். ஒரு பக்கத்தை கூட உங்களால் படிக்க முடியாமல் திணறி விடுவீர்கள். அதைவிட இமாலயத்தை இரண்டு தடவை ஏறியிறங்குவது சுலபமாக இருக்கும். இப்படிப்பட்டவர்கள் மூலமாக தேவன் தம்முடைய செய்தியை உலகத்துக்கு அனுப்பியிருப்பாரென்றால், வேதாகமம் பெரும்பாலான ஜனங்களுக்கும் தூரமாக இருந்திருக்கும்.

வேதாகமத்தை ஒருவருக்கும் எளிமையான முறையில் அடைய முடியாத இலக்காகவோ, அரிந்துகொள்ள முடியாத புலமையாகவோ மாற்றுவது தான் பாண்டித்தியம் என்று எண்ணும் ஏராளம் பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேதவசனங்களின் அடிப்படை நோக்கத்தை உடைத்தெரிய முயலுகிறார்கள். தேவன் தம்முடைய வார்த்தைகளை எல்லா ஜனங்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். அந்த நோக்கத்துடன் தான் “வசனம் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்” (யோவான் 1:14) என்றெழுதப்பட்டிருக்கிறது. லோகோஸ் என்றால் தேவனின் திரு இருதயம் என்று அர்த்தம். அது அநாதிக் காலத்தில் இருந்து மனிதர்களுக்கு மறைவாக இருந்தது. ஆனால் அதை எல்லா ஜனங்களுக்கும் வெளியரங்கமாக்க வேண்டும் என்பதினால் தான் லோகோஸ் மாம்சமாகி, மனித உருவமெடுத்து ஜனங்கள் மத்தியில் வாழ்ந்துக் காட்டினார். அந்த ஜீவவார்த்தையை காணவும், நோக்கிப் பார்க்கவும் கைகளினால் தொடவும் (1யோவான் 1:1) சாதாரண ஜனங்களால் முடிந்தது. எளிமை என்பது வேதாகமத்தின் சிறப்பு அம்சம் ஆகும். அதை நாம் எக்காரணத்தைக் கொண்டும் மர்மமாக மாற்றி அமைக்க கூடாது.

பிரபல வேதாகமக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்ற ஒரு ஊழியக்காரர் ஒருவர், ஒரு கிராம சபைக்கு பிரசங்கம் செய்ய வந்தார். அவர் ஒரு பிரபல பைபிள் மேதை. அவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்ததும் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பார்க்க தொடங்கினார்கள். ஏனென்றால் அவருடைய பிரசங்கம் முழுவதும் தலைக்குள் நுழையாதப் பொருள்களும், வாய்க்குள் நுழையாத வார்த்தைகளுமாக இருந்தது.

அவர் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் பொறுமையை இழந்த பெரியவர் ஒருவர் எழுந்து நின்று :

“ஐயா.... நீங்க சொல்ற எதுவுமே தலையில ஏறவே ஏறல ஐயா.... புரியிற மாதிரி ஏதாவது சொல்லி தாங்கய்யா, நீங்க பெரியப் பெரிய காரியங்கள் தான் சொல்லுறீங்க, ஆனா அதெல்லாம் எங்க தலைக்கு மேலாற போற மாதிரியிருக்கு ஐயா....” என்று சொன்னார்.

“தலைக்குமேலாற போவுதுன்னா நான் என்ன செய்ய முடியும் பெரியவரே? முடிஞ்ஞா ஒன்னு செய்யுங்க, தலைய கொஞ்சம் உசத்தி புடிச்சுகிட்டு இருங்க” என்று அந்த போதகர் அவரைப் பார்த்து கிண்டலாக சொல்லி உட்கார வைத்தார்.

அதற்கு அந்த பெரியவர் “நீங்க சொன்னது ரொம்ப கரக்ட்டுங்கய்யா... நாங்க தலைய உசத்தி புடிக்க எங்காளால முடிச்ஞு வரைக்கும் ட்ரை பண்ணுரோம்.... எதாவது தலையில ஏறினா எங்களுக்கு தானே நல்லது... ஆனா ஐயா இது ஒன்னு மட்டும் ஞாபகத்துல வச்சுகோங்க.... ஆண்டவர் பேதுரு அடிகளைக் கூட தம்முடைய ஆட்டுகுட்டிகளை தான் மேய்க்க சொன்னாருங்கய்யா... அல்லாம ஜிராப்ஃபுகளெ இல்லங்கய்யா....!”

வசனங்களை போதிக்கிரவர்கள் – விளக்கங்களைச் சொல்லுகிறவர்கள் – எழுத்தாளர்கள், புகழ்பெற்ற ஊழியர்கள் இந்த கருத்தை மனதில் வைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும்.

திருச்சபை மக்களைப் பார்த்து ஒரு காரியத்தை சொல்லாமலிருக்க முடியவில்லை. திருவசனங்களை படிக்கும் ஒவ்வொரு நேரமும் வர்ணனைகளையும், விவரணயாளர்களையும் நாட வேண்டும் என்பது அவசியமா? கௌதமின் ஓவியங்கள் எல்லாமே சாதாரண மக்களுக்கு புரிந்து கொள்ள கூடிய அளவில் எளிமையானது. ஆனால் அவற்றில் வெளித் தோற்றதுக்குப் புலப்படாத உள்ளார்ந்த பண்புகள் ஏராளம் உண்டு என்ற எண்ணத்தை ஏற்படுத்தி அவர்களுடைய ஏகபோக உரிமையை தக்கவைத்துக் கொள்ள வர்ணனையாளர்கள் காட்டும் தொழில்வித்தை தான் விளக்கவுரைகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

சில நேரங்களில் தேவவசனங்களை விளக்கப்பட வேண்டும் என்பது உண்மைதான் “அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து அவர் (எத்தியோபிய மந்திரி) ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதை கேட்டு நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்கு தெரியுமா என்றான். அதற்கு அவன், ஒருவன் எனக்கு தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படி தெரியும் என்று சொல்லி சொன்னான்.” (அப்போ 8:30, 31)

இந்த எத்தியோப்பியா மந்திரிக்கு, யூத பின்புலத்தைப் பற்றி எதுவும் தெரியாதவர். அவர் வாசித்துக் கொண்டிருந்த வேதப் பகுதி யூதர்களுடைய மேசியா நம்பிக்கையை வலுவூட்டும் வேத பகுதி என்பதை மறந்து விடக் கூடாது. அதில்லாமலிருந்திருக்குமானால் மந்திரிக்கு அந்த வேதப்பகுதி புரிந்திருக்கும், வர்ணனையாளரும் தேவைப்பட்டிருக்காது.

நிச்சயமாகவே, விளக்கங்களுக்கு முக்கியத்துவம் உண்டு. ஆனால் வேதாகமத்திலுள்ள பெரும்பாலான பகுதிகளையும் எந்த வித கமெண்டரிகள் (வர்ணனைகள், விளக்குரைவுதல்) இல்லாமலே புரிந்துக் கொள்ள முடியும். அதற்கு உணர்வு பூர்வமான பயிற்சியும் முயற்சியும் இருந்தால் மட்டும் போதும்.

வசனம் வாசிக்கும் போதெல்லாம் வர்ணனைகளையோ, வர்ணனையாளர்களையோ நாடுவது ஆபத்தானது. வசனத்தின் எளிமையை அறிந்துக் கொண்டு தானாகவே கிரகிக்க கற்றுக் கொள்ள வேண்டும். வசனங்களை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். தானாக படிக்க வேண்டும். “நீ எனக்கு இன்று ஒரு மீனை தரும் போது அதை சாப்பிட்டு என்னால் இன்று ஒரு நாள் எனக்கு உயிர் வாழ முடியும். ஆனால் மீனை பிடிக்க எனக்கு கற்று தரும் போது அதை வைத்து எனக்கு வாழ்நாள் எல்லாம் உயிர்பிழைக்க முடியும்” என்று ஒரு சீன பழமொழி உண்டு. மீன் பிடிக்க தெரியாமலிருந்தால், நாம் என்றைக்குமே வேறொருவரை சார்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆனால் நமக்கு சொந்தமாக மீன் பிடிக்க தெரியுமானால் மீன் விற்பனை செய்கிறவனுடைய ஏகபோகம் உடைகிறது. அது மட்டுமல்ல வாங்கும் மீனின் தரத்தையும், குணத்தையும் பரிசோதிக்கும் திறமையும் பொறுப்பும் நமக்கு அதிகமாகும். வசனம் நமக்கு சொந்தமாகும் போது ஏகபோகஸ்தரால் நெருக்கடி வர வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும் அதை பார்க்காமல் திருவசனங்களை நாம் ஆராய்ந்து படிக்க வேண்டும். கத்தோலிக்க திருசபை சபைமக்களை வேதாகமம் வாசிக்க அனுமதியாமலிருந்த காலங்களில், சபை அங்கத்தினர் ஒருவர் வேதபுத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். அதை அங்குள்ள பாதிரியார் கண்டு:

“வேதப்புத்தகத்தை உங்களைப் போலுள்ளஆட்கள் வாசிக்கக் கூடாது. அதை வாசித்து எடுத்துரைக்க நாங்களிருக்கிறோம்” என்றார்.

“ஐயரே .... நான் வீட்டுக்கு தேவையான பால் இந்த பக்கத்து கடையில இருந்து தான் வாங்கிட்டுவந்தேன்...., ஆனா அந்த பாலுல என்னமோ கலப்பு இருக்கு... பாலு சரியில்ல.... அதனால சிரம்மத்தை

பார்க்காம கறவ மாடு ஒன்று வாங்கிட்டே" என்று அந்த வீட்டுகாரர் சொன்னாராம்.

அந்த பாதிரியார் ஒன்றுமே சொல்லாமல் திரும்பிப் போய் விட்டார் என்று ஒரு கதை உண்டு.

பரிசுத்த வேதாகமம் தேவன் நமக்கென்று தந்த ஈவு என்ற அறிவு நமக்கு எப்போதும் இருந்தே ஆக வேண்டும். வசனத்தை நமக்கு சொந்தமாக மாற்றிக் கொள்ள இது முக்கியமானது. வேதாகமத்தை கற்றுக் கொள்ள ஆரம்பிக்கும் போது அது எவ்வளவு எளிமையானது என்று அறிவீர்கள். தொடர்ந்து வாசிக்க வாசிக்க அதில் மகிழ்ச்சியையும் அடைவீர்கள்.

"கர்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை
உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.

கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை
ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.

கர்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தை
சந்தோஷிப்பிக்கிறதுமாய் இருக்கிறது.

கர்த்தருக்கு பயப்படும் பயம் சுத்தமும், என்றைக்கும்
நிலைத்திருக்கிறதுமாய் இருக்கிறது.

கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும்
நீதியுமாயிருகிறது.

அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும்
விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும்
தெளித்தேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது. அன்றியும்
அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்".

(சங்கீதம் 119:7-11).

சங்கீதக்காரன் தாவீது திருவசனத்தை எப்படி தனக்கு சொந்தமாக்கி கொள்கிறார் என்று பார்தீர்களா! "அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். ஆம் பிரியமானவர்களே வசனம் உங்களுக்கு அருளப்பட்ட தேவ ஈவு, அதை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

1-*பிபிளிக்கள் நியுமரோலஜி-யை பயன்படுத்தி 'பிப்ளியா ஹெப்பிராயிக்க' என்ற எபிரேய பைபிள்தான் 'பைபிள் கோட்'*

# 12

# வசனத்தை விளக்கும் ஆவியானவர்...

எந்த சாதாரண மனிதனுக்கும் எளிதாக புரிந்துக் கொள்ளும் வண்ணமாக பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டிருக்கிறது என்று கடந்த அத்தியாத்தில் பார்த்தோம். சில நேரங்களில் “மேலதில கருவிகள்” (Extra Tools) என்ற முறையில் வேதபகுதியின் பிண்ணனியைப் பற்றின விரிவான ஆய்வு தேவைப்படலாம் வேதாகம எழுத்தாளர்கள் வாழ்ந்து வந்த காலம், எழுதப்பட்ட சந்தர்பம் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளின் அன்றய பயன்பாடு போன்ற தகவல்கள் அந்த குறிப்பிட்ட வேத பகுதியை, அதிகாரத்தை, புத்தகத்தை கூடுதல் நன்றாகவும், தெளிவாகவும் புரிந்துக் கொள்ள உதவியாகயிருக்கும். இது இயல்பறிவுள்ள எந்த நபருக்கும் இப்படி ஒரு ஆய்வை நடத்த முடியும். யாரிடமாவது கேட்டு தெரிந்து கொள்ளலாம். அதைப் பற்றி புத்தங்கள் வாசித்தோ, இணையதளங்கள் மூலமாகவோ அறிந்து கொள்ளலாம். அது அல்லாமல் இந்த வசனத்துக்குள் மறைந்திருக்கும் இரகசியம் என்று சொல்லி “புத்திகெட்டாத பெரியப் பெரிய காரிங்களை” வியாக்கியானங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. வசனவியாக்கியானங்கள் தேவையில்லை என்றல்ல, திருவசனங்களை விளக்கும் போது, அது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்படிப்பட்ட செல்வாக்கை உருவாக்க வேண்டும் என்பதை பற்றி இந்த அதிகாரத்தில் பார்ப்போம்.

பரிசுத்த ஆவியானவர் ஒருவர் மட்டும் தான் திருவசனத்தின் உண்மையான வர்ணனையாளர். பரிசுத்தாவியானவரின் ஆதரவில்லாத எந்த விளக்கங்களும் சரியானது அல்ல. கர்த்தர் சொல்கிறார், ''இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்போது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்கும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும்ஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்'' (யோவான் 16:12, 13).

ஒருவரால் புரிந்து கொள்ள கடினமான காரியங்களை அவருக்கு விளக்கி சொல்லுவதை தான் நாம் வியாக்கியானம் என்று கூறுகிறோம். அப்படிப்பார்க்கும் போது இயேசு கிறிஸ்துவின் வசனங்களை வியாக்கியானம் செய்யும் நபர் பரிசுத்த ஆவியானவர் தான். வெளிப்படையாக யார் வியாக்கியானம் செய்தாலும் தேவ ஆவியானவர் அதை ஒருவரின் இதயத்திற்குள் கொண்டுச் சென்று அவருக்கு சாட்சி சொல்லாவிட்டால் அந்த முயற்சி பலனற்றதாக மாறும்.

முக்கியமாக இரண்டு கிரியைகளை பரிசுத்தாவியானவர் செய்வார் என்று இயேசுவே சொல்கிறார். அதில் முதலாவதாக அவர் நம்மை கண்டித்து உணர்த்துவார் (யோவான் 18:8). பாவம், நீதி, நியாயதீர்ப்பை பற்றி அவர் கண்டித்து உணர்த்துகிறார். வசனத்தை வாசிக்கும் போதோ, கேட்கும் போதோ உணர்த்தல் என்கிற அனுபவம் இடம் பெறும். அது வெறும் மூளை அறிவு ரீதியான ஒன்றல்ல. இரட்சிக்கப்பட்ட நபரின் உள்ளத்தில் தேவன் உருவாக்கும் தாக்கத்தை தான் 'உணர்த்தல்' என்று சொல்கிறோம். வசனத்தை பேசுவதும் விளக்குவதும் ஒரு மனிதனாக இருந்தாலும், உண்மையில் அந்த வார்தைகளின் மூலம் பரிசுத்தவியானவர் கிரியைச் செய்து பாவம், நீதி, நியாயதீர்ப்பு குறித்ததான உணர்வை இதயத்தில் உருவாக்குகிறார். அந்தபடியே பரிசுத்தாவியானவர் துணை நின்று சாட்சிக் கொடுக்காத விளக்கங்களும் உண்டு. அவைகளுக்கு எதிராக நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மனிதனுக்கு இயல்பாகவே கணிக்கவும், யோசனைச் செய்யவும், நிதானிக்கவும், ஒரு முடிவுவோ தீர்மானமோ எடுக்கவும் முடியும். அதை தேவாவியானவரின் உணர்த்தலாக எண்ணிவிடக்கூடாது. உதாரணமாக, அரசு ஊழியர் ஒருவர் அவருக்கு கிடைத்த போனஸ் பணத்தை வைத்து என்ன செய்யலாம் என்று தீர்மானிப்பது. அதாவது, தங்க முதலீடு

செய்வதா, நிலம் வாங்குவதா என்று யோசித்து, சரியான தீர்மானத்தை எடுத்பதைப் போல வேதாகமத்தில் இருந்து நாமும் சில முடிவுகள், தீர்மானங்கள் நிதானித்து, யோசித்து எடுப்பது வழக்கம். ஆனால் அது தேவ ஆவியானவரின் உணர்த்தல் அல்ல. இது இரண்டும் வித்தியாசமானவைகள். முதலில் சொன்னது மூளை அறிவை சம்பந்தப்பட்டது. இரண்டவது, மனிதனுக்குள் இருக்கும் ஆவியை சம்பந்தப்பட்டது. உள்ளார்ந்த மனிதன் என்று வேதாகமம் சொல்வது மனிதனுக்குள் இருக்கும் ஆவியை தான். தேவ ஆவியானவர் நம் உள்ளார்ந்த மனிதனிடம் உரையாடுவார். தங்கள் ஞான வைபோகத்தை கொட்டி காட்டும் வர்ணனையாளர்களின் முயற்சி பயனற்று போவதின் காரணம் என்னவென்றால், அவர்களாலே மனிதனுடைய ஆவியை தொடமுடிவதில்லை என்பதே.

மூளை அறிவை வைத்து எடுக்கும் தீர்மானம், முடிவு, கணிப்பு மாற்றத்துக்கு உட்பட்டது. அது எப்படியென்றால் மேல்சொல்லப்பட்ட அரசு ஊழியர் தன்னுடைய பணத்தை என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து அதை வணிக முதலீட்டை செய்ய முடிவு எடுத்த போது வேறொருவர் வந்து, “ஐயா 20 இலட்சத்திற்கு ஒரு வீடு விற்பனைக்கு இருக்கிறது. நாம் அதை வாங்கினால் சில நாட்களுக்கு பிறகு அதை உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யலாம்” என்று சொல்லும் போது தீர்மானம் மாற்ற அந்த அரசு ஊழியர் தயார் ஆவார். நம் மத்தியில் இன்று காணும் கருத்து வேறுப்பாடுகள் பல, உபதேசங்கள், போதனைகள் வந்ததின் காரணம் மூளை அறிவை வைத்து தங்கள் மனதுக்கு ஏற்றவாறு வசனத்தை விளக்கி கொள்வதினால் தான்.

ஆனால் பரிசுத்தாவியானவரின் கிரியைகள் மனித புத்தியின் செயலிருந்து வித்தியசமானது. அதற்க்காக அது அறிவுக்கு எதிரானது என்றல்ல. ஆனால் சில நேரங்களில் புத்திக்கு அப்பாற்பட்டதாகயிருக்கும். ஆனாலும் பரிசுத்தாவியானவரோடு ஐக்கியம் கொண்டுள்ள நபரை அவர் உறுதிப்படுத்துவார். தேவ ஆவியானவரால் நடத்தப்படுகிற ஒருவருக்கு தேவவியானவரின் உணர்த்தல் அறிவுக்கு அப்பாற்பட்டதாகயிருந்தாலும், அறிவுக்கு எதிராக இருந்தாலும், அது அந்த நபரை ஒரு நாளும் அசைப்பதில்லை. ஏனென்றால் தேவாவியானவர் உணர்ந்தலோடுக் கூட தம்முடைய சமாதானத்தையும் நிச்சயமாக அளிப்பார். தேவாவியானவர் நம்முடைய புத்தியில் அல்ல நம்முடைய உள்ளார்ந்த மனிதனில் கிரியை செய்கிறார்.

இக்காலத்தில் நம் மத்தியிலுள்ள வேதவியாக்கியானங்களை, உபதேச போதனைகளை கவனித்து பார்க்கும்போது மக்களை விசுவாசத்திலும், அறிவிலும் ஒற்றுமைக்கு நேராக நடத்துவதற்கு பதிலாக பெருங்குழப்பத்துக்கு ஆளாக்கிவிடுவதாக பார்க்கிறோம். ஆகவே தான் இன்று நம் மத்தியில் இத்துனை பிளவுகளும், பிரிவுகளும் தலைவிரித்தாடுகிறது. பரிசுத்தாவியானவரை சாராமல் சுய சிந்தைகளையும், புத்தியையும் மட்டும் நம்பி கருத்துக்களை கடைந்தெடுகிறதினால் தான் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் திருச்சபைக்கு வந்து சேர்ந்தது. இப்படிப்பட்ட மனித எண்ணங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உபதேசங்கள், போதனைகள், கோட்டைகளைப் போல் உயர்ந்து நிற்ப்பதினாலே பரிசுத்தாவியானவருக்கு மனிதனுடைய ஆவியோடு கூட தொடர்புக்கொள்ள முடிவதில்லை.

நாம் ஒரு உண்மையை ஒத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். பரிசுத்தாவியானவரால் மட்டுமே மனிதனுடைய ஆவியை எட்ட முடியும். இதை புரிந்துக் கொண்டு பரிசுத்தாவியானவர் செய்யவேண்டியதை அவரே செய்யட்டும் என்ற மனத்தாழ்வோடு அவருக்கு பணிந்து இருப்போமென்றால், நிச்சயமாகவே தேவன் நம்மை ஒற்றுமைக்கு நேராக நடத்துவார். ஆகவே நம்முடைய வியாக்கியானங்கள் பரிசுத்தாவியானவருக்கு மக்கள் இருதயத்தில் செயல்பட ஒரு அரங்காக அமைய வேண்டும். அதை விட்டுவிட்டு எதிராளிகளின் (அதுக்கூட எவ்வளவு தப்பான வார்த்தை!) வாயை அடைப்பதற்காகவோ, நமக்கிருக்கும் ஞானத்தை காட்டவோ வசனங்களை பயன்படுத்தக் கூடாது. அப்படி செய்யும்பொழுது ஒருவேளை உங்களுடைய எதிராளி (!)யின் வாதங்கள் முறியடிக்கப்படலாம். ஆனால் ஒரு மெய்யான உணர்த்தல் அவருக்குள் உண்டாகுவதில்லை மாறாக அவர்கள் குழப்பத்துக்குள் சிக்கி விடுவார்கள்.

அடுத்தாக பரிசுத்தாவியானவர் நம்மை வழி நடத்தகிறார். இயேசு பரிசுத்தாவியானவரை 'சத்தியத்தின் ஆவியானவர்' என்று அழைக்கிறார். அவர் வந்து உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார். அதாவது ஆண்டவரைக் குறித்துள்ள சத்தியங்களை மனிதர்களுக்கு கொண்டு வருகிறார். அதோடுக்கூட மனிதர்களை தேவனைக் குறித்துள்ள சத்தியங்களுக்குள்ளாகவும் நடத்துகிறார்.

பாவஇருளின் இருக்கும் மக்களை சுவிசேஷ சத்தியங்களுக்குள்ளாக நடத்துகிற காரியத்தை குறித்து இங்கு சொல்லப்படவில்லை. நிச்சயமாகவே

அவர் அந்தகாரத்தில் இருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு ஜனங்களை வழிநடத்துவார். ஆனால் இங்கு இயேசு, சீடர்களை சத்தியத்திற்குள் நடத்துகிறதை பற்றி சொல்லுகிறார்.

சீடர்கள் சத்தியத்தை அறிந்தவர்கள்தானே? ஆம் ஆனால் அவர்களுடைய அறிவு வரம்புகுட்பட்டதாகும். ஆகவே அவர்களுக்கு எடுத்துக் சொல்லவோ விளக்கி உரைக்கவோ வேண்டும். பரிசுத்தாவியானவர் இயேசுவின் வார்த்தைகளைக் கொண்டு சீடர்களை ஆழமான, அதிகமான சத்தியத்திற்குள் வழி நடத்துகிறார். அவர் அதை இன்றும் செய்துக் கொண்டேயிருக்கிறார்.

வியாக்கியானத்தின் முதலாவது நோக்கம் ‘கண்டித்து உணர்த்தல்’ என்றால் இரண்டாவது குறிக்கோள் ‘சத்தியத்திற்குள் வழிநடத்துவது’ தான். ஆகவே வியாக்கியானங்கள் நம்மை புதிய புதிய சத்தியத்திற்க்குள்ளாக நடத்த வேண்டும். வழிநடத்துதல் என்று சொல்லும்போது அது ஒரு பயணத்தைக் குறிக்கிறது. ஒன்றில் இருந்து வேறொன்றுக்கு செல்லும் பயணம். ஆகவே தேவனை பற்றும் சகல சத்தியங்களையும், ஒரு சீடனுக்கு ஒரே நாளில் அடைந்து கொள்ள முடியவே முடியாது. இலக்கை அடையும் வரை பயணத்தை தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். எங்கயாவது நின்று விடுவோமென்றால் புதிய புதிய சத்தியங்களுக்குள் நடந்து முன்னேற நம்மால் முடியாமல் போய்விடும்

பிரியமானவர்களே, பரிசுத்தாவியானவர் நம்மை வழி நடத்ததான் செய்வார். நம்மை மல்லுக்கட்டி இழுத்துச் செல்லமாட்டார். ஆவியானவருக்கு பணிந்து ஒவ்வொரு காலடிகளையும் எடுத்து வைக்க வேண்டியது நம்முடைய கடமை. இல்லாவிட்டால் சத்தியத்தின் பாதையில் எங்கயாவது ஓரிடத்தில் அப்படியே நின்று விடுவோம்.

வசனங்களை எப்படி விளக்க வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேதாகமத்திலிருந்தே ஒரு உதாரணத்தை பார்ப்போம். இதிலிருந்து இன்றைய வியாக்கியானங்களின் பிளவுகளையும், அதேச் சமயத்தில் வியாக்கியனங்களுக்கு தேவையான அம்சங்களையும் குறித்தும் பார்க்கலாம்.

இயேசு மரித்து அடக்கப்பட்டு, மூன்றாவது நாள் அதிகாலையிலே சில ஸ்திரிகள் கல்லறையில் சென்றார்கள். இயேசுவின் சரீரத்தை பார்க்க அவர்களால் முடியவில்லை. ஆனால் ‘அவர் உயிர்தெழுந்தார்’ என்று கூறும் தூதர்களை அவர்கள் கண்டார்கள். அதை அந்த ஸ்திரிகள் அப்போஸ்தலர்களிடத்தில் சொன்னார்கள். அப்போஸ்தலர்களுக்கு அந்த

ஸ்திரிகளுடைய வார்த்தைகள் வீண் பேச்சாக தோன்றியதால், அவர்கள் அந்த வார்த்தைகளை நம்பவில்லை.

அன்றைய தினமே சீடர்களில் இரண்டு பேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரத்திலுள்ள எம்மாவூர் என்னும் கிராமத்துக்குப் போனார்கள். அவர்களுடைய அந்த பயணத்தை லூக்கா சுவிஷேம் 24வது அதிகாரத்தில் பார்கிறோம். போகையில் அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டே போனார்கள். ஸ்தீரிகள் கல்லறையில் சென்றபோது சாரீரத்தை காணவில்லை. பேருவும் கூட சென்றிருந்தார். அவறாலே சீலைகளை மட்டும் தான் பார்க்க முடிந்தது. “கர்த்தருடைய சரீரத்தை யாருமே காணவில்லை என்ன தான் நடந்திருக்கும்?”

இப்படி அவர்கள் உரையாடிக் கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது இயேசுவும் அவர்களோடு கூட சேர்ந்து நடந்தார். ஆனால் அவர் யார் என்பதை அறிந்து உணர முடியாமல் அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.

இயேசு அவர்களை பார்த்து: “நீங்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்ன?” என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு தங்கள் வழித்துணையை பார்த்தார்கள். அவர்களுக்குள் கிளயோப்பா என்னும் பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக:

“எருசலேமில் தங்கியிருப்பவருக்குள் உமக்கு மட்டும் இந்நாட்களின் நிகழ்ந்தவைகள் என்ன என்பதை அறியாமல் இருக்கிரீறோ?” என்றான்.

“என்ன நிகழ்ந்தது?” என்று இயேசு கேட்டார்.

“நாங்கள் நாசரேத்து ஊரானாகிய இயேசுவைப் பற்றிதான் பேசிக் கொண்டிக்கிறோம். அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். ஆனால் என்ன செய்ய முடியும். நம்முடைய பிரதான ஆசாரியரும், அதிகாரிகளும் அவருக்கு மரணதண்டனையை விதித்து சிலுவையில் அறைந்தார்கள். நாங்களும் இயேசுவின் சீடர்கள்தான். இஸ்ரவேலை மீட்க ஆண்டவர் அனுப்பின மேசியா அவர் தான் என்று நாங்களும் விசுவாசித்தோம். ஆனால் இப்போது எங்களுடைய குழப்பம் என்னவென்றால்,

அவர் மரித்து இன்றைக்கு மூன்று நாள் ஆகிவிட்டது. எங்களோடு கூட அவரை பின்பற்றின ஸ்திரிகளில் சிலர் இன்று காலையில் அவரை வைத்திருந்த கல்லறைக்கு சென்றிருந்தார்கள். நேற்று ஒய்வு நாளாகயிருந்ததால் போக முடியவில்லை. கல்லறைக்கும் முன் வைத்திருந்த பெரிய கல் புரட்டப்பட்டிருப்பதாக கண்டார்கள். இயேசுவின் சரீரத்தையும் அதற்குள் காணவில்லை. அவர்கள் திரும்பி எங்களிடம் வந்து நடந்ததையெல்லாம் சொன்னார்கள். அதுமட்டுமல்ல தூதர்கள் அவர்களுக்கு தரிசனமாகி இயேசு உயிர்தெழுந்தார் என்றும் சொன்னார்களாம். எங்களுக்கு ஒரே பதட்டமும், அச்சமும் உண்டாயிற்று. அப்படியெல்லாம் உண்மையிலே நடக்குமா? இதை உறுதிப்படுத்த எங்களிருந்து சிலர் கல்லறைக்கு சென்றார்கள்! அந்த ஸ்திரிகள் சொன்னதுப் போலவே இருந்தது... அவருடைய சரீரத்தை காணவில்லை..! இதைதான் நாங்கள் விவாதித்து வருகிறோம்''.

**இதை கேட்ட இயேசு (இயேசு என்று அவர்களுக்கு தெரியாது) அவர்களைப்பார்த்து:** ''உங்களுக்கு கொஞ்சங்கூட புத்தியில்லையா? யோசிக்க மாட்டீர்களா? தீர்க்கதரிசிகள் சொன்னதை எல்லாவற்றையும் நம்ப முடியாத மந்த உள்ளதினர்களே!, மேசியா தாம் மாட்சி அடைவதற்க்கு முன் இத்துன்பங்களை அனுபவிக்க வேண்டுமே... இதை நீங்கள் அறியீர்களா?''.

இதை சொல்லிவிட்டு இயேசு அவர்களுக்கு மோசே முதல்கொண்டு சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களையெல்லாவற்றிலும் மேசியாவைக் (தம்மை) குறித்து சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்து காண்பித்தார் (லூக்கா 24:13-27).

இயேசு வேதவாக்கியங்களை விவரிக்கிறதை இங்கு காண்கிறோம். இயேசு வசனங்களை விளக்க முயலுவதற்கு ஒரு குறிப்பான காரணம் உண்டு. அவருடைய சீடர்கள் வசனத்தை தவறாக புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வேதவாக்கியங்களை அறியாதவர்கள் அல்ல. ஆனால் அதை தவறாகப் புரிந்துக் கொண்டவர்கள். சொல்லப்போனால் வேதவாக்கியங்களை வியாக்கியானம் செய்தவர்களின் வஞ்சனைக்கு ஆளானவர்கள்!

இயேசுவைக் குறித்து ஒரு பெரிய எதிர்பார்ப்பு இந்த சீடர்களுக்கு இருந்தது – "அவர் இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர்" என்று நம்பியிருந்தார்கள்! (லூக்கா 24 : 21)

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

அந்தகாலத்தில் யூதர்கள் பொதுவாக மேசியா ஒருநாள் வருவார் என்ற நம்பிக்கையோடும் எதிர் பார்ப்போடும் கூட வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்கள் மேசியாவை ஒரு அரசியல் தலைவராக எதிர் பார்த்தார்கள். ரோமயரின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுதலை செய்ய தேவனால் அனுப்பப்படும் வீர பராக்கிரம பேரரசராக மேசியாவை எதிர்பார்த்தார்கள்.

இயேசுவை மேசியாவாக பார்த்த அனேகம் பேர் அன்று பலஸ்தீனாவில் இருந்தார்கள். ஆகவேதான் இயேசுவை ராஜாவாக்கும்படி அவரை பிடித்துக் கொண்டுபோக ஒருமுறை முயற்சி செய்தார்கள் (யோவான் 6 : 15). இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பாக எருசலேம் தேவாலயத்துக்கு கழுதைக்குட்டியின் மேல் போகும் அந்த யாத்திரயின் போது ஜனமெல்லாம் அவருக்கு ‘ஓசன்னா’ என்று பாடினதின் காரணமும் இதுதான்.

இயேசுவின் சீடர்களும் இதே எதிர்பார்ப்பை உடையவர்களாக இருந்தார்கள். ஆனால் இயேசுவின் சிலுவை மரணம் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை எல்லாம் சுக்குநூறாக்கினது. சிலுவையிலிருந்து அவராகவே இறங்கி வருவார் என்றும் கூட நினைத்தார்கள். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. இயேசு மரித்தார். அடக்கம் பண்ணப்பட்டார். நீண்ட நாள் நம்பிக்கை ஒன்றுமில்லாமல் போனது. எருசலேமில் தங்கி இனி என்ன பிரயோஜனம் என்று சொல்லி தங்கள் கிராமங்களுக்கு சீடர்கள் திரும்பி போனார்கள்.

மேசியாவைக் குறித்து சீடர்களுக்கு இருந்த அறிவு வசனத்தில் இருந்து உண்டான அறிவு. மோசை முதற்கொண்டுள்ள தீர்க்கதரிசின் மூலமாக அருளப்பட்ட இறை வார்த்தைகள்! அவர்கள் மேசியாவை அறிந்ததே வசனம் மூலமாகதான். ஆனால் அவர்களுடைய தவறு என்னவென்றால் வேதவாக்கியங்களின் ஒரு பகுதியை மட்டுமே எடுத்தார்கள். மேசியாவை மகிமை, வல்லமை பொருந்திய மாமன்னராக மட்டும் வேதாகமங்களில் கண்டார்கள். ஆனால் திருவசனங்களை சரியான முறையில் புரிந்து கொண்டிருப்பார்களானால் முயன்றிருப்பார்களானால் பாடுபடுகிற தாசனாகிய மேசியாவையும் பார்திருப்பார்கள். பாடுகளை சகித்த பிறகு மகிமையில் பிரவேசிக்கும் மேசியாவைத்தான் தீர்க்கதரிசிகள் முகப்படுத்தினார்கள் (Vrs 26).

உயரமான மலையின் உச்சியில் ஏறி தூரத்தில் பார்க்கும் போது மற்ற மலைகள் அடுக்கடுக்காக இருப்பதைபோல தோற்றமளிக்கும். ஆனால் நாம்

பார்க்கும் ஒவ்வொரு மலைகளுக்கும் இடையில் ஒவ்வொரு பள்ளதாக்கு இருக்கிறது என்று மறந்துவிடக் கூடாது. ஒருவேளை அங்கு குடியிருப்புகள் இருக்கலாம். கட்டிடங்கள், தொழிற்சாலைகள் கூட இருக்கலாம். ஆனால் நாம் மலை உச்சிகளை மட்டுமே பார்க்கிறோம்.

திருவசனங்களை வியாக்கியானம் செய்யும்போதும் இந்த ஆபத்து வருகிறதை பார்க்க முடியும். கர்த்தர் சொல்கிறார், “நீங்கள் தீர்க்கதரிசிகள் சொல்வதை முழுமையாக நம்பவில்லை. அவர்களுடைய வார்த்தைகளில் முக்கியமாக காணவேண்டியவைகளை காண தவிர்த்து விட்டீர்கள். மலைச் சிகரங்களை மட்டும்தான் பார்த்தீர்கள், பள்ளதாக்குகளைக் காணவில்லை. மேசியாவின் மகிமையை கண்டீர்கள். அவருடைய இழிவை காணவில்லை. மலை உச்சியை அடைவதற்கு முன் ஒரு பள்ளதாக்கை கடந்தே ஆக வேண்டும். பாடுபட்ட பின்புதான் மகிமையில் பிரவேசிக்க முடியும் என்று நீங்கள் அறிந்துக் கொள்ளவில்லை”.

இஸ்ரவேலர்கள் மத்தியிலும் பெரும்பாலானவர்களும் மகிமைப் பொருந்திய மாமன்னராக மேசியாவை கண்டார்கள். சீடர்களும் அதைத்தான் எதிர்பார்த்தார்கள். இப்படிப்பட்ட ஆபத்து எல்லா காலத்திலுமுள்ள மக்கள் மத்தியிலும் இருக்கிறது என்பது உண்மை. அதிகமான ஆட்கள் எதை நம்புகிறார்களோ அதை நம்ப ஓர் தூண்டல் இயல்பாக எல்லோருக்கும் இருக்கும். ஆனால் வேதம் பல நேரங்களிலும் பெரும்பாலான மக்களின் கருத்துக்குளுக்கு எதிராக தான் இருக்கும்.

தீர்க்கதரிசன ஆகமங்களில் பாடு அனுபவித்து, மகிமையில் கனப்படுத்தபடுகிற மேசியாவைக் குறித்து மிக தெளிவான விபரங்கள் இருக்கும் போதும் கூட பெரும்பாலான மக்கள் மகிமையின் மாமன்னராகிய மேசியாவை மட்டும் எதிர்ப்பார்த்து வந்ததின் காரணம் தான் என்ன?

பிரபலமான வர்ணனையாளர்கள் எப்போதுமே வெகு ஜனத்திற்கு (Mass) பிடித்தவைகளை மட்டும் எடுத்து வழங்குகிறார்கள் என்பதுதான் அதற்கு காரணம். அரசியல் ரீதியாக அடிமைத்தனத்தில் இருக்கும் ஜனங்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும் வகையான சிந்தனை என்னவென்றால் அவர்களுக்கு விடுதலையை அளித்து அவர்களை துன்பப்படுத்தும் துரோகிகளை அழிக்க வரும் மேசியாவை குறித்ததுதான். ஆகவே வானங்களை கிழித்திறங்கும் மேசியாவைப் பற்றி வேத அறிஞர்கள் அந்த ஜனங்களுக்கு பிரசங்கித்தார்கள்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

அதைவிட்டுவிட்டு மேசியாவும் அவர்களைப் போல துன்படுவாரென்றும், உபத்திரப்படுவார் என்றும், அடிக்கப்படுவார் என்றெல்லாம் சொல்லப்போனால் யார் தான் இதையெல்லாம் ஆர்வாமாய் கவனிக்கப் போகிறார்கள்? யார் தான் இதை கரகோஷத்தோடு ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? இப்படியெல்லாம் பிரசங்கம் பண்ணினால் காணிக்கை கிடைக்காதே! என்ன செய்வது?

ஜனங்கள் விரும்புகிறபடி திருவசனத்தை வியாக்கியானம் செய்பவர்கள் இன்று ஏராளம். ஜனங்களும் சத்தியத்தை அல்ல சந்தோஷத்தை தான் நாடுகிறார்கள். அந்த சந்தோஷம் மாயமான ஒன்றாய் இருந்தாலும் பரவாயில்லை!

ஜனங்களுக்கு தேவையானதைத் தானே கொடுக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லலாம். ஆம் ஜனங்களுக்கு தேவையானதைத் தான் கொடுக்க வேண்டுமே தவிர ஜனங்கள் விருப்பப்படுவது அல்ல. இவைகள் இரண்டுமே வித்தியாசமான இரண்டு காரியங்கள். சர்க்கரை (Sugar) வியாதியுள்ள ஒருவர் லட்டு சாப்பிட விருப்பபடுவார். ஆனால் அவருக்கு தேவையானது பாவைக்காய் ஜூஸ்!. பக்கத்து வீட்டுகாரர் லட்டு கொண்டு வந்து கொடுக்கும்போது இவர் சந்தோஷப்படுவார். ஆனால் பாவைக்கா ஜூஸ் கொண்டு வரும் மனைவியிடம் கோபமாயிருப்பார். அன்பானவர்களே, பாசம் பொங்கி வழியுவதால் அயலான் லட்டையும், மனைவி ஆத்திரம் தாங்க முடியாமல் பாவைக்காய் ஜூஸையும் கொண்டு வருகிறார்கள் என்று நினைத்து விட கூடாது. மனைவி தேவையானதை மட்டும் கொடுக்க அக்கறையுள்ளவளாக இருப்பாள். அயலான் அப்படியிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

எல்லாவர்களும் தீர்க்கதரிசன ஆகமங்களிலிருந்து மகிமை பொறுந்தின மேசியாவை தேடிப் போகும் போது, இயேசுவின் சீடர்களாவது பாடுகள் சகிக்கும் தாசனாகிய மேசியாவை அறிந்து இருக்க வேண்டுமாயிருந்தது. அதற்கு மாறாக சீடர்களும் மகிமையை மட்டும் தேடிப் போனார்கள்.

பிரபலமான வர்ணனயாளர்களை தேடிப் போகாமல், அவர்களோடு இணைந்துக் கொள்ளாமல், சத்தியத்தை சத்தியமாக திருவுளம் செய்த ஒரு தீர்க்கதரிசியை 2 நாளாகமம் 18வது அதிகாரத்தில் பார்க்கிறோம். அவர் பெயர் மீகாயா.

இஸ்ரவேலின் ராஜா ஆகாபும் யூதாவின் இராஜாவாகிய யோசபாத்தும் தேவனுக்கு பிரியமில்லாத ஒரு உறவு முறையை கொண்டார்கள்.

அவர்கள் ஒருமித்து கிலயாதிலுள்ள இராமோத்து என்ற பட்டிணத்தை பிடிக்க தீர்மானித்தார்கள். ஆனால் அதற்காக புறப்படுவதற்கு முன்னால் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யாராவது ஒருவரிடம் அதை தேவனுடைய ஆலோசனை என்ன என்று விசாரித்துவிட்டு போலாம்", என்று யோசாபாத் ஆகாபிடம் சொன்னான். உடனே அகாப் இராஜா நாநூறு தீர்க்கத்திரிசிகளை வரவழைத்து அவர்களிடம் ஆலோசனையை கேட்டான். அவர்கள் எல்லோரும் "ஒன்றுக்கும் பயப்பட தேவையில்லை, புரப்படுங்கள் நீங்கள் இராமோத்தை ஜெயிப்பீர்கள்" என்று சொன்னார்கள்.

ஆகாபோடுக் கூட உறவுமுறை கொண்டாலும் கூட யோசாபாத் கொஞ்சம் ஆவிக்குரிய மனிதனாக இருந்தார். இந்த நாநூறு தீர்க்கத்தரிகளின் வார்த்தைகளை கேட்டபோதும் அவருக்கு ஒரு திருப்தியும் வரவேயில்லை. "நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா?" என்று கேட்டார்.

அதற்கு ஆகாபு "ஒருவன் இருக்கிறான், ஆனால் அவனை கூப்பிடாமல் இருப்பது தான் நல்லது. அவனை நான் வெறுக்கிறேன். ஏனென்றால் நான் எதை விரும்புகிறேனோ அதற்கு எதிராக தான் எப்போதுமே அவன் பேசுவான். அதனாலே நான் அவனை கூப்பிடுவதேயில்லை" என்றான்.

ஆகாபின் வார்தைகளை கவனியுங்கள். அவன் விரும்புவதை தீர்க்கதரிசி சொல்லாததினால் அந்த தீர்க்கதரிசியை அழைக்க மாட்டானாம்.

தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தைகளை கொண்டுவருபவன். அவன் கர்த்தருடைய வார்த்தைகளைத் தானே சொல்லவேண்டும்? தேவனுடைய செய்தியை ஜனங்களுக்கு சொல்லும் போது, அதை கேட்க அவர்களுக்கு விருப்பமில்லை என்ற காரணத்தினால் அந்த செய்தியை மாற்ற நமக்கு அதிகாரம் உண்டா? அந்த 400 தீர்க்கதரிசிகளும் அதை தான் செய்தார்கள். என்ன சொல்ல வேண்டும் என்று தேவன் அல்ல ஜனங்களே தீர்மானித்து விடுகிறார்கள்.

ஆனால் மீகாயா அதிகப்பட்ச அபிப்ராயத்திற்கு செவிக்கொடுக்கமால் "இராமோத் பட்டினத்திற்கு தேவன் உன்னை அனுப்பவில்லை. இதை மறுதலித்து போனால் நீ சமாதானமாய் திரும்பி வரமாட்டாய்" என்று சொன்னார். கடைசியில் மிகாயா சொன்னது தான் நடந்தது.

அனைவரும் மகிமை பொருந்தின மேசியாவை மட்டும் பார்க்கும் போது, பாடுகள் சகிக்கும் தாசனாகிய மேசியாவையும் பார்க்கும் வேதவசன வர்ணனயாளர் தான் உண்மையான வர்ணனயாளர். நிறைவான ஆசிர்வாதங்களைக் குறித்த வசனங்களை மட்டும் தேடி கண்டுப்பிடித்து வாசிக்கும் போதும், ''அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்க்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது'' என்ற வசனமும் அதே வேதாகமத்தில் தான் உள்ளது என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

இயேசு தம் சீடர்களை நோக்கி என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். ''தீர்க்கதிரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதமுள்ளவர்களே'' (லூக்கா 24: 25). (O foolishmen and slow of heart to believe all that the prophets have spoken).

இங்கே அவர்களுடைய புத்திக்கு மட்டுமல்ல அவர்களுடைய இருதயத்திற்கும் கேடு உண்டென்று இயேசு சொல்கிறார். தீர்க்கதரிசிகள் சொல்வதை எல்லாம் விசுவாசியாதவர்களுடைய புத்தி மட்டுமல்ல இருதயமும் சரியான முறையில் செயல் படுகிறதில்லை என்று இங்கு இருந்து புரிந்து கொள்ள முடிகிறது. தீர்க்கதரிசிகள் சொன்னதை முழுவதும் ஏற்றுக் கொள்ளாமல் தங்களுக்குப் பிடித்தவைகளை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்கள். மகிமையை ஏற்றுக் கொள்கிறார்கள், பாடுகளை புறக்கணிக்கிறார்கள். இதைப்போல வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொண்டு மறு பகுதியை தள்ளிவிடுவது மிக ஆபத்தான காரியம் ஆகும்.

பொய்யை விட ஆபத்தானது தான் அறைகுறை சத்தியம். இன்றைய வசன வியாக்கியானங்களிலும் இப்படிப்பட்ட அறைகுறை சத்தியங்கள் ஏராளம் பார்க்க முடியும். ஆனால் இயேசு தம் சீடர்களுக்கு வேத வாக்கியங்களை விளக்கும் போது, அவர்களை அறைகுறை அறிவிலிருந்து முழுமையான அறிவுக்குள்ளாக வழி நடத்துகிறார். இதற்க்காக அவர் வேத வாக்கியங்கள் ஊடாக ஒரு பிரயாணத்தையே ஏறெடுக்கிறார். ''மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்'' (லூக்கா 24:27).

வசனத்திலிருந்து ஏதவாது ஒரு கருத்தை விவரிக்கும்பொழுது அந்த குறிப்பிட்ட கருத்தோடு இணைந்து வரும் வேதாகமத்தின் மற்ற பகுதிகளில் உள்ள வசனங்களைக் குறித்து ஒரு பொதுவான புரிதல் தேவை. வேதவசனத்தை பல துண்டுகளாக்கி விட்டு அதிலிருந்து நமக்கு பிடித்ததை

மட்டும் எடுத்துக் கொள்வோமென்றால் அக்கருத்தின் பூரண வடிவை நம்மால் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே வேதாகமத்தைக் குறித்தும் வேதாமத்தின் உள்ளடக்கத்தை குறித்தும் ஒரு பொதுவான அறிவு நமக்கு இருக்க வேண்டும்.

அறிஞர்களுக்கும் மற்றும் கல்வியாளர்களுக்கும் மட்டும் தான் இது சாத்தியம் என்று நினைத்துவிடாதேயுங்கள். வேதாமத்தை நிரந்தரமாகவும், ஒழுங்காகவும் வாசிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட அறிவை பெற்றுக் கொள்ள முடியும். அங்கும் இங்குமாக வாசிக்காமல் நேரத்தை எடுத்து அடிக்கடி வாசிக்க முன்வருவீர்களானால் இந்த ஞானத்தைப் பெற்றுக் கொள்வோம். இயேசு வேத வாக்கியங்களை சீடர்களுக்கு விளக்கிக்கொடுக்கும் போது இந்த கருத்தை உறுதிப்படுத்துகிறார். மேசியாவை பற்றி மோசேயின் (முதல் ஐந்து புத்தகங்கள்) ஆகமங்களிலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் மற்று எல்லா வேத வாக்கியங்களிலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு விவரித்தார்.

இயேசு வசனத்தை விவரிக்கும்போது சீடர்களுடைய மனகுழப்பங்கள் அகன்று போனது. அவர்கள் முழுமையாக புரிந்துக் கொண்டார்கள். சீடர்கள் இயேசுவைப் பார்த்து (அவர் இயேசு தான் என்று அறிமாலிருந்தும் கூட) ‘எங்களோடு கூட தங்கும்’ என்று சொல்லி கட்டாயப்படுத்தி அவரை வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அவர் அவர்களோடு கூட தங்க சென்றார். அவர்களோடு கூட பந்தியில் அமர்ந்திருந்தப் போது அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து பிட்டு அவர்களுக்கு கொடுத்தார். அப்போது அவர்களுடைய கண்கள் திறந்தது. அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களைவிட்டு மறைந்துப் போனார்.

இப்போது அவர்கள் பழைய சீடர்களே அல்ல. இயேசுவின் வசனவிவரணம் அவர்களை முற்றிலும் மாற்றிவிட்டது. அவர்கள் வாழ்வில் இருந்து அவிசுவாசம் மறைந்தது, நம்பிக்கை மலர்ந்தது. சிலுவை ஒரு தோல்வியல்ல என்றும் அது அவருக்கு மகிமைக்குள் பிரவேசிப்பதற்கான நுழை வாசல் என்று இப்போது அவர்கள் புரிந்து கொண்டார்கள். பாடுகள் அனுபவித்த மேசியா மகிமை அடைந்தவராய் உயிர்தெழுந்தார் என்று அவர்கள் அறிந்தார்கள். அவர் உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை காலையில் கேட்ட போது பிரமித்துப் போனவர்கள், இப்பொழுது அவர் உயிரோடு இருப்பதை பார்த்து சந்தோஷமடைந்தார்கள். இவை அனைத்துக்கும் காரணம் இயேசுவின் வசன வியாக்கியானம் ஒன்று தான். அதை அவர்களே ஒருவருக்கொருவர் பிறகு சொல்லிக் கொள்கிறார்கள்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

"அப்போது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டின பொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?" (லூக்கா 24:32).

இயேசு வசனத்தை விளக்கின போது சீடர்களுக்குள் இரண்டு வித அனுபவங்களை அது உண்டாக்கினது.

இயேசுவின் வார்த்தைகள் முதலாவது அவர்களுடைய புத்தியை தொட்டது. கிறிஸ்து மகிமையடைவதற்கு முன்னதாக பாடுகளை அனுபவிக்க வேணடுமென்று மோசை முதற்கொண்ட தீர்க்கதிரிசிகளின் ஆகமங்களின் ஆதாரத்தோடு சீடர்களின் மனக்கண்களுக்கு தெளிவுப்படுத்தினார். மனிதனுடைய புத்தியை தேவன் நிச்சமாகவே ஆதரிக்கிறார்.

தேவனுடைய வார்த்தைகள் மனித புத்தியினால் சில நேரம் புரிந்துக் கொள்ள முடியாமல் இருக்கும். அதவாது, புத்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கும். ஆனால் அது புத்திக்கு எதிராக இருக்காது. மனிதனுக்கு புரிந்து கொள்ள முடியாத அளவில் வசனத்தை வியாக்கியானம் செய்பவர்களுக்கு நாம் எச்சிரிக்கையாயிருக்க வேண்டும். அவர்கள் சொல்லுவதெல்லாம் வெளிபாடுகள், ஆகவே அவர்களைப் போல ஞான வரமோ, வெளிபாடோ இருப்பவர்களாள் மட்டுமே அதை புரிந்துக் கொள்ள முடியும் என்று அப்படிப்பட்டவர்கள் சொல்வார்கள்.

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவிலுள்ள சபைக்கு நிருபம் எழுதும் போது, "மேலும் சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, போதகத்தை போதிக்கிறதற்காவது ஏதுவானதை சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்கு பிரயோஜனம் என்ன"? (1கொரிந்தியர் 14:6) என்று கேட்கிறார்.

அப்பொஸ்தலனாகிய பவுல் இங்கு திருவெளிப்பாட்டையும், மெய்யறிவையும், இரண்டாக பிரித்துப் பேசுகிறதை பாருங்கள். மெய்யறிவு என்று சொல்லும் போது அது புத்தியில் அடுக்ககடுக்காய் இருக்கும் சிந்தனைகளைக் குறிக்கிறது. ஆனால் திருவெளிபாடு என்பது உள்ளார்ந்த மனிதன் என்று அழைக்கப்படும் ஆவியில் உண்டாகிற உள்ளுணர்வு.

அந்த உள்ளுணர்வாகிய வெளிபாட்டை சொல்லும் போது அது தீர்க்கதரிசன உரையாக மாறுகிறது. தீர்க்கதரிசனம் என்று சொல்லும் போது தேவனுக்கு பதிலாக தேவனுடைய ஸ்தானத்தில் இருந்து கொண்டு சொல்வது என்று அர்த்தம். அதை மேடையில் நின்று வேண்டுமானாலும் பேசலாம்.

மெய்யறிவு (அ) அறிவை நாம் வெளிப்படையாக கூரும்போது அது போதனையாக மாறுகிறது. அறிவை வைத்து தீர்க்கதிரிசனம் சொல்ல முடியாது. தீர்க்கதரிசனம் உரைக்க வெளிப்பாட்டின் பக்கபலம் மிக முக்கியமானது. அறிவை வைத்து தீர்க்கதரிசனத்தை சொல்ல கூடாது என்பதைப் போல முக்கியமானது தான், வெளிப்பாட்டை வைத்து போதகத்தையும் போதிக்க கூடாது என்பதும் போதனைகள் எப்போதுமே அறிவுக்கு ஒப்புடைவதாக இருக்க வேண்டும். (1 பேதுரு 3 : 15) "உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தந்தோடும், வணக்கத்தோடும் உத்தரவுச் சொல்ல எப்போழுதும் ஆயத்தமாயிருங்கள்". நம்முடைய போதனை என்ன, நம்பிக்கை என்ன என்று யாராவது கேட்கும்போது அவர்கள் புத்திக்கு தெளிவுப்படுத்தும்படி அவர்களுக்கு உத்தரவுச் சொல்ல வேண்டும்.

வெளிபாடு புத்திக்கு அப்பாற்பட்டதாக இருப்பதினால் அதை அறிவுக்கு ஏற்புடையதாக விவரிக்க கடினம். ஆனால் போதனைகள் எப்போதுமே அறிவுக்கு ஏற்புடையதாக தான் இருக்கும். அப்படித்தான் இருக்க வேண்டும். ஆகவே 'அறிவு' தான் போதனையின் அடித்தளம்.

ஒருதனிப்பட்ட நபருக்கு கிடைத்த வெளிப்பாட்டின் அடிப்படையில் வேத வசனங்களை விளக்குகிற சபைகள் பிற்காலத்தில் துருஉபதேச சங்கங்களாக மாறும்.

இயேசுவின் வார்த்தைகள் முதலாவது அவர்களுடைய அறிவை பிரகாசிப்பித்தது என்று கண்டோம். இரண்டாவதாக அவ்வசனங்கள் அவர்களுடைய உள்ளத்தை, இருதயத்தை பற்றி எரிய செய்கிறது. "அவர் நம்முடனே பேசி, வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபோது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா?" மனது அறிவின் இருப்பிடமாக இருக்கும்போதும் இருதயம் உணர்ச்சிகளின் இருப்பிடமாக இருக்கிறது. மோசை முதல் தீர்க்கதரிசிகள் வரை மேசியாவை குறித்துச் சொல்ப்பட்ட கருத்துக்களை இயேசு அவர்களுக்கு விவரித்தார்.

தங்களிடம் பேசி கொண்டிருப்பவர் இயேசு என்று அவர்களுக்கு தெரியாது. எருசலேமுக்கு தொழுகைக்காக வந்த ஏதோ ஒருவர் என்று இயேசுவைப் பற்றி நினைத்தார்கள். ஆனால் ஒவ்வொரு பகுதியையும் இயேசு விவரிக்கும்போது அந்த விவரணங்கள் அவர்களுடைய இருதயத்தை நிறைத்தது, அந்த அறிமுகமில்லாத மனிதனின் வார்த்தைகள் மூலமாக அவர்கள் இயேசுவை தரிசித்தார்கள். இயேசுவின் செயல்களையும், வார்த்தைகளையும் அவர்கள் ஒருமுறைக் கூட நினைத்துப் பார்தார்கள். அப்பொழுது அவர்களுடைய இருதயங்கள் இயேசுவுக்காக பற்றி எரிந்தது! இயேசு பாடுகளை அனுபவித்து விட்டார் என்பது அவர்களுக்கு நன்றாக தெரியும். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த மேசியா அவர் தானா என்பது அவர்களுக்கு சந்தேகமாயிருந்தது. ஆனால் அந்த சந்தேகம் இப்போது அவர்களுக்கு இல்லை. இயேசு தான் கிறிஸ்து என்ற உண்மை அவர்களுடைய புத்திக்கு முதலாவது தெளிவானது. ஆனால் இப்பொழுதோ பரவசப்படுத்தும் தேன் அருவியாக அவர்களுடைய உள்ளத்தை அது நிரப்புகிறது. இயேசுவை பார்க்க, அவரிடம் பேசி மகிழ அவர்கள் இருதயங்கள் வாஞ்சயாய்த் துடித்தது.

வசனங்களை விவரிக்கும்போது மனக்கண்கள் மட்டும் திறந்தால்போதாது, உள்ளங்கள் பற்றி எரிய வேண்டும். அது ஒவ்வொருவர் உள்ளத்திலும் இயேசுவுக்காக ஒரு ஏக்கத்தை உண்டு பண்ண வேண்டும். எம்மாவூருக்கு போகும் சீடர்கள் அறிவிலிகளும் மந்த இருதயமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுடைய இந்த இரண்டு பிரச்சனைகளையும் இயேசு வசனங்களை வியாக்கியானம் செய்து மாற்றியெடுத்தார். அவர்களுடைய மனக்கண்களை திறந்து, உள்ளத்தை கொழுந்துவிட்டு எறியச் செய்தார்.

சிலர்களின் பிரசங்கம் மிகவும் ஆழகாக இருக்கும். அதை கேட்க்கும் மக்களின் உணர்வுகள் பரவசமடையும். வசனங்களின் எபிரேய, கிரேக்க, ஆராமிய மொழிகளையும், அதின் அர்த்தங்களையும் எடுத்து சொல்வார்கள். ஆனால் அப்படிப்பட்ட கூட்டங்களில் ஒரு அக்கினியை உணரமுடியாது. இயேசுவை இன்னமும் அதிகமாக நேசிக்க வேண்டும், அவரோடு இன்னமும் அதிகமாக உரைவாட வேண்டும், இயேசுவுக்காக வைரக்கியாகமாக வாழ வேண்டும் என்ற எண்ணங்கள் ஏதும் உருவாகுவதில்லை. மாறாக பேச்சாளரின் ஞானத்தையும், திறமையும் புகழ்ந்து பேசிவிட்டு ஆமேன் சொல்லி வீட்டுக்கு திரும்பி விடுவோம்.

வேறு சிலரின் பிரசங்கங்கள் மிக வல்லமையாக இருக்கும் அக்கினி பற்றியெறியும், ஆனால் கூட்டம் முடிந்தவுடன் "எதைப் பற்றி பிரசங்கம்

பண்ணினார்?” என்று கேட்டுப் பாருங்க. அப்பொழுது ஒன்றும் புரியாமல் மேலயும் , கீழையுமாக மக்கள் பார்ப்பார்கள். ஒரே அக்கினி அபிஷேகமாக இருந்தது. ஆனால் என்ன சொன்னாங்க என்று ஞாபகமில்லை என்று சொல்லி ஓடி ஒளித்துக் கொள்வார்கள். ஏனென்றால் அந்த பிரசங்கம் புத்தியை பிரகாசிபிக்கவில்லை புதிய அறிவுகள் ஏதும் அவர்களுக்கு கொடுக்கவில்லை.

சரியான வசன விளக்கங்கள் ஒரு நபரின் புத்தியையும், உள்ளத்தையும் தாண்டி ஆவிக்குள்ளாக தாக்கத்தையும், உணர்த்தலையும் அளிக்கிறது. பரிசுத்தாவியானவர் தான் மெய்யான வர்ணனையாளர். ஒரு திறமைச்சாலியான பிரசங்கியாளருக்கு ஒருவேளை உங்களின் புத்தியை பிரகாசிக்க பண்ணுவதற்க்கும், உங்கள் உள்ளத்தை பரவசப்படுத்தவும் முடியலாம். ஆனால் ஆவியின் ஆழங்களுக்கு இருங்கி சென்று அதை தொட வேண்டுமானால் ஆவியானவர் செயல்பட்டால் தான் முடியும்.

திருவசனங்களை சரியான முறையில் பகுத்து கூறும்போது உண்டாகும் வேறொரு அற்புதமான செயல் என்ன என்பதை பாருங்கள்.

‘‘அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்கு திரும்பி போனார்கள் ‘‘(லூக்கா 24:33) (தி.பொ.மொ)

இவர்கள் எருசலேமிலிருந்து எம்மாவூருக்கு பயணம் செய்தார்கள். எம்மாவுருக்கு அவர்கள் வந்தடைந்தப் போது நேரம் சாயங்காலமாகிவிட்டது. பொழுதும் போனது. அப்படியிருந்தும் இயேசு பகுத்து கூறின வசனங்கள் சீடர்களின் உள்ளத்திள் கிரியை செய்ய ஆரம்பித்தது. அவர்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொண்டார்கள். தங்களுடைய பொறுப்பைக் குறித்துள்ள உணர்த்துதலை அவர்களுடைய ஆவிக்குள் உணர்ந்தார்கள். அந்நேரமே எருசலேமுக்கு திரும்பிப் போனார்கள். இரவு அயிற்றே ஏறத்தாழ ஏழு மைல் தூரம் இன்னமும் நடக்க வேண்டுமே என்றோ இப்பொழுது தானே வந்தோம், பொறுத்திருப்போம், பொழுது விடியட்டும் என்றோ சொல்லாமல், அந்நேரமே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்.

திருவசனங்களை பரிசுத்தாவியின் நடத்துதலோடும், உதவியோடும் சரியாக விவரிக்கும் போது அந்த வார்த்தைகள் வல்லமையாய் கிரியை செய்ய ஆரம்பிக்கும். இங்கு இயேசுவின் வியாக்கியானம் சீடர்களின் அறிவை பிரகாசிப்பித்து, அவர்கள் உள்ளத்தை கொழுந்துவிட்டு

எரியசெய்ததுமல்லாமல் அவர்கள் ஆவியையும் பெலனடையச் செய்தது. அப்படி தேவ ஆவியால் தொடப்பட்ட பிறகு சும்மா இருக்க முடியுமா என்ன? ஒரு நாளும் முடியாது. அவர்கள் தங்களையே தேவசமூகத்தில் ஒப்படைத்து, தங்களை சீர்படுத்திக் கொள்ள விரைந்தார்கள்.

திருவசனம் நம்மை சீர்படுத்தும். நாம் சீர்பொருந்தப்பட வேண்டுமென்றால் அதற்கான கிரயத்தை செலுத்த தயாராக வேண்டும். நம்முடைய சுபாவங்களை மாற்ற வேண்டும். சில காரிய்களை இழக்க ஆயத்தப்படவேண்டும், சிலவு செய்ய வேண்டும் நாமே சிலவழிய வேண்டும். நிச்சயமற்ற எதிர்க்காலத்தை சந்திக்க முன்வரவேண்டும், எந்த ஆபத்தையும் பயப்படாமல் முன்னேற தைரியம் காட்ட வேண்டும்.

ஆனால் இன்றைய காலங்களில் எந்தவிதமான கிரயத்தையும் கொடுக்க வேண்டாம். இப்போது இருக்கிறதைப் போலவே இருந்தால் போதும் எந்த மாற்றமும் தேவையில்லை என்று கூறும் பிரசங்கங்களைத் தான் கேட்க முடிகிறது. இரண்டாம் வருகையின் அறிகுறிகள், 666, ஆயிரம் ஆண்டு ஆட்சி என்றெல்லாம் பிரசங்கம் செய்வது நல்லதுத்தான் ஆனால் அவை ஒன்றும் ஆட்களுக்கு எந்தவித மாற்றமும் உண்டாக்குவதில்லை என்பது சங்கடத்துக்கூறியதாகும்.

‘மார்க்கட்’ பார்த்து பிரசங்கம் செய்கிறவர்கள் உண்மையாகவே வசனத்தை ஒரு வியாபார சரக்காக மாற்றுகிறார்கள். வசனம் பிரசங்கிக்கப்படும் எல்லா இடங்களிலும் ஜனங்கள் மனம் திரும்பப்பட வேண்டும்.

திருவசனம் வியாக்கியானம் செய்கிறவர்கள் நினைவுக்கூற வேண்டிய ஒரு சில அடிப்படை தத்துவங்கள் என்னவென்றால், முதலாவது பரிசுத்தாவியானவர் தான் மெய்யான வர்ணனையாளர் என்று அறிந்துக் கொள்ள வேண்டும். ஆகவே பரிசுத்தாவியின் ஒத்தாசையும், வல்லமையும் இல்லாமல் வசனத்தை விளக்கவோ அதை பயனுள்ளதாகவும், பலனுள்ளதாகவும் மாற்ற முடியாது என்று ஒத்துக் கொள்ள வேண்டும். யார் வேண்டுமானாலும் வேத வசனங்களை வியாக்கியானம் செய்யலாம். ஆனால் அந்த வார்த்தைகளையும் சிந்தைகளையும் கேட்கிறவர்களுடைய இருதயங்களில் ஆவியானவர் தான் கொண்டு சென்று கிரியை செய்ய வேண்டும். ஆவியானவர் தான் மனம் திரும்புதலை கொடுக்க வேண்டும். பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயதீர்ப்பைக் குறித்தும் எடுத்து காட்டுபவர் அவர் ஒருவரே!

பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்க்குள்ளாகவும் நடத்துகிறார். ஆகவே திரு வசன விளக்கவுரைகள் நமக்கு சத்தியங்களை காட்டி தந்து நம்மை அதற்குள் வழிநடக்க ஏதுவாக இருக்க வேண்டும். இயேசுவின் வியாக்கியானம் சீடர்களின் மனக் கண்களைத் திறந்து, உள்ளத்தை பற்றி எரியவிட்டு, ஆவிக்குள் வைராக்கியத்தை ஏற்படுத்தி, அவர்களை மனம் திரும்புதலுக்கு நேராக நடத்தினதுப் போல நம்முடைய வேத வசன விளக்கவுரைகளும் செயல்பட வேண்டும்.

# 13

# வசனம் என்னும் கண்ணாடி...

இந்திய தபால் துறையில் தபால்காரராக பணி செய்கிறார் ஜான் பிரபாகரன். அவருக்கு காலையில் 9.00 மணிக்கு டியூட்டிக்கு போக வேண்டும். பகல் முழுவதும் கடும் வெயிலில் மூன்று கிராமங்கள் சுற்றி தபால் கொடுக்க வேண்டும். அதுவும் சைக்கிள்ல. ஐயா காலையில் 7.30க்குள் குளித்து, டிபன் முடிச்சிடுவார். அதற்கு பிறகு பேன்ட் சட்டையை போட்டுவிட்டு 8 மணியிலிருந்து 8.20 வரை கண்ணாடி முன்னே நின்று ஒரே 'டெக்கரேசன்ஸ்' தான்!. ஒரு பெரிய கண்ணாடியொன்றை சுவரில் மாட்டியிருக்கிறார். அதோடுக்கூட ஒரு நோட் புக் சைஸ்ல வேறொன்னு! அதற்குபிறகு உள்ளங்கை அளவில் வேறொன்று!!! மூன்று விதமான சீப்பு, ஜன்னலில் வரிசையாக விதவிதமான பௌடர் டின்கள்! பல வகையான க்ரீம் தனியா! ஞாயிற்று கிழமை காலையில் அரைமணி நேரம் எப்படியும் எடுத்திடுவார்! சர்ச்சுக்கு போகனுமே! ஏனென்றால்அவர் தான் சர்ச் செக்கிரட்டரி! ! இவர் எதுக்காக இத்துணை மணி நேரம் கண்ணாடிக்கு முன் நேரத்தை செலவு செய்கிறார் என்று தெரியுமா? அவர் கண்ணாடி முன் நிற்க்கும் போது கண்ணாடிக்குள் அவருடைய உண்மையான முகத்தை பார்க்கும் அதே நேரத்தில் தன்னுடைய மனக்கண்களில், கற்பனையில் வேறொரு முகம் தோன்றும். அது வேறு ஒருவருடைய முகம் அல்ல, அவருடைய அழகான, பூரணமான சிறந்த முகத்தையே பார்க்கிறார். அந்த முகத்தை அவரைத்

தவிர வேறு யாரும் பார்த்ததே இல்லை. அந்த கற்பனையிலுள்ள முகத்தைப் போல இப்போது கண்ணாடியில் தோன்றும் முகத்தை சரி பண்ணுவதற்கு தான் இவ்வளவு பாடு.

இது ஜான் பிரபாகரனின் கதை மட்டுமல்ல. ஒவ்வொரும் தங்களுடைய கற்பனையில் ஒரு அழகான முகத்தை வைத்திருக்கிறார்கள். மனகண்களில் பரிபூரண முகம், கண்ணாடியில் மாற்ற வேண்டிய முகம். எப்படி மாற்ற வேண்டும்? கற்பனையில் இருக்கும் முகத்தைப் போல! அதற்காக தான் ஒவ்வொருவரும் கண்ணாடி முன் நேரத்தை செலவழிக்கிறார்கள். கண்ணாடியில் தோன்றும் முகத்தை, கற்பனையில் இருக்கும் முகத்தைப் போல முடிந்த அளவு சரி செய்து விட்டு, திருப்தியாகவும், மனநிறைவோடும், உற்சாகமாகவும் செல்வார்கள்.

பிரியமானவர்களே, வசனம் ஒரு கண்ணாடி என்று அப்போஸ்தலனாகிய யாக்போபு கூறுகிறார். “ஏனென்றால் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தம் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்று உடனே தாம் எவ்வாரு இருந்தார் என்பதை மறந்து விடும் ஒரு மனிதனுக்கு ஒப்பாவார். ஆனால் நிறைவான விடுதலையளிக்கக் கூடிய சட்டத்தை கூர்ந்து கவனித்து அதைத் தொடர்ந்து கற்போர் தாம் கேட்பதை மறந்து விடுவதில்லை; அவர்கள் அதற்கேற்ற செயல்களை செய்வார்கள்; தம் செயல்களால் பேறு பெற்றவர் ஆவார்கள்” (யாக்கோபு 1:23 - 25).

ஆம், வசனம் என்னும் கண்ணாடியில் நாம் நம்முடைய சுபாவமுகத்தை அதாவது தற்ச்சுவரூபத்தை அல்லது உண்மையான இயல்பை பார்க்கிறோம்.

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் சுபாவமுகம் என்றால் என்ன? சாதாரணமாக கூறப்படும் அர்த்தத்தில் இருந்து வித்தியாசமான வேறொரு அர்த்தம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. அது என்னவென்றால், எனக்கு இப்போது இருக்கும் அசல் உருவம், தற்ச்சொரூபம் என்றல்ல எனக்கு அடைய வேண்டிய அசல் உருவம் என்ற அர்த்தத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, அப்பா கலைக்டர், அம்மா கல்லூரி பேராசிரியையாகவும் இருக்கும் மாணவன் பத்தாம் வகுப்பில் தோற்றுப் போனால் என்ன சொல்வோம்? “உண்மையிலே அந்த பையன் முதல் ரேங்கை வாங்கியிருக்கனும்” என்று தானே சொல்வார்கள்?. ஒன்று அந்த மாணவனுடைய பெற்றோர்களின் தகுதியை வைத்து எதிர்பார்த்த ஒரு முகம், இரண்டாவதாக தோற்றுபோய் நிற்கும் அவனுடைய இப்போதைய பரிதாபமான முகம்.

தேவன் படைத்த முதல் மனிதனின் நிலைமை நம்முடைய நிலமையைப் போல பரிதாபமாக இருக்கவில்லை. தேவன் மனிதனை தம்முடைய சாயலாகவும், தமது ரூபத்தின் படியேயும் உண்டாக்கினார். மனிதனுக்கு தேவனுடைய சுபாவமும், இயல்பும் இருந்தது.

மனிதன் தேவனாக இருக்கவில்லை. ஆனால் தேவனோடு கூட, தேவனோடு ஐக்கியம் உள்ளவனாக இருந்தான். அவன் தேவனுடைய சுபாவத்திலும், இயல்பிலும் வளர்ந்துக் கொண்டிருந்தான்.

ஆனால் மனிதன் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து, தேவனோடு ஐக்கியமாயிருப்பதை விட்டு விட்டு தேவனிடத்தில் இருந்து விலகி பிசாசோடு இணைந்தான். ஆதியாகமம் 3வது அதிகாரத்தில் இது சொல்லப்படுகிறது. இதை மனிதனின் வீழ்ச்சி என்று விவரிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது ஒரு வீழ்ச்சி என்பதை விட ஒரு குதிப்பாக இருந்தது. வேண்டும் என்றே தான் விழுந்தான். ஆனால் விழுந்ததிற்கு பிறகு தான் வீழ்ச்சியின் பயங்கரத்தை அவனால் உணர முடிந்தது.

அந்த வீழ்ச்சி மனிதனை சிதைத்தெரிந்தது. அவனுடைய சாயல், சுவரூபம், இயல்பு, தோற்றம் எல்லாமே மாறிவிட்டது. தேவனோடு ஐக்கியமாய் வாழும் காலங்களில் அவனுக்குள் தேவனுடைய குணாதிசங்கள் விளைந்தது. ஆனால் பிசாசோடுக் கூட நெருங்கின போது அவனுக்குள் பிசாசின் கிறியைகளும், சுபாவங்களும் நிறைந்தது. தேவசாயலாக வளர வேண்டிய மனிதன் பிசாசின் சாயலுக்கு ஒப்பாக வளர ஆரம்பித்தான். இன்றைய மனித குலம் இவ்வளவு தூரம் சீர்குழைந்து போனதின் காரணம் அதுதான். வீழ்ச்சி உண்டாகமல் இருந்திருந்தால், பாவம் உலகத்துக்குள் பிரவேசியாமல் இருந்திருந்தால், இந்த உலகம் எப்படி இருந்திருக்கும். நாம் ஒவ்வொருவரும் எப்படி இருந்திருப்போம். இயல்பாகவே நமக்குள் தேவனுடைய குணாதிசங்கள் தோன்றியிருக்குமே. பிரியமானவர்களே இந்த நிலமை தான், இந்த முகம் தான் முன் சொன்ன அந்த ‘இருந்திருக்க வேண்டிய முகம்’, அது தான் எதிர்ப் பார்க்கப்படுகிற முகம்.

எதிர்பார்க்கப்படுகிற முகம் என்று சொல்லும் போது, யார் எதிர்பார்க்கும் முகம்? என்ற கேள்வி வருகிறது. வேறுயாருடையதும் அல்ல ஆண்டவருடைய எதிர்பார்ப்பே தான். தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் முகம்! நாம் தேவனோடுள்ள ஐக்கியத்திலேயே இருந்திருப்போம் என்றால், பாவம் எல்லாவற்றையும் உடைத்தெறியாமல் இருந்திருந்தால், நமக்கு இருந்திருக்க வேண்டிய அந்த மகிமையான தற்சுவரூபம்! இந்த தற்சுவரூபத்தை தேவன்

நம்மிடம் இருந்து எதிர்பார்க்கும் முகத்தை திருவசனத்தில் இருந்து தான்அறிந்து கொள்ள முடியும்.

நமக்கு நம்மையே பார்க்க வசனத்தை நாட வேண்டிய தேவையில்லை. அதை நம்மை சூழ்திருக்கிறவர்களே சொல்லுவார்கள். அதில்லையென்றால் நாம் நம்மை தாமே சற்று நிதானித்து பார்த்தால் போதுமே. நம்முடைய சுபாவத்தை நமக்கே அறிந்துக் கொள்ள முடியும். ஆனால் நமக்கு இயல்பாக இருந்திருக்க வேண்டிய முகத்தை, தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் சுபாவத்தை நமக்கு திருவசனத்தில் தான் பார்க்க முடியும். வசனம் என்ற கண்ணாடியில் தோன்றும் முகம் அந்த முகம் தான்.

நிலக் கண்ணாடியில் இருந்து, வசனம் என்ற கண்ணாடி வித்தியாசமாக செயல்படுகிறது. நிலக்கண்ணாடியில் நம்முடைய அலங்கோலமான முகத்தை பார்க்கிறோம். அழகான பூரணமான முகத்தை அல்லது தோற்றத்தை கற்பனையில் மனக்கண்களில் காண்கிறோம். ஆனால் பரிபூரணமான முகத்தை – தேவன் நம்மைக் குறித்து எதிர்பார்க்கும் முகத்தை வசனம் என்ற கண்ணாடியில் நாம் பார்க்கிறோம். நம்முடைய அலங்கோலமான முகத்தை மனதிலும் பார்க்கிறோம்.

வேதத்தை வாசிக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் தேவன் என்ன எதிர்பாக்கிறார் என்று தெரியுமா? திருவசனத்தில் அவன் காணும் பரிபூரணமான சுவரூபத்தையும் (அதாவது தேவன் தம்முடைய சாயலிலும் ரூபத்திலும் படைத்த மனிதனின் தற்சுவரூபத்தை, பாவம் மனித வாழ்கையில் பிரவேசிக்காமலிருந்திருந்தால் அவனுக்கு இருக்க வேண்டிய அந்த இயல்பை, சுபாவ முகத்தை) பாவம் அலங்கோலப்படுத்தின, அசிங்கமான முகத்தையும் ஒப்பிட்டு பார்த்து அவனுக்கு இருக்கவேண்டிய உண்மையான சுவரூபத்தை போல, அந்த நிறைந்த மனிதனாக (Perfect man) மாற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

நாம் பாவத்தில் விழாமல் இருந்திருப்போம் என்றால் நாம் யாரைப்போல இருந்திருப்போம்? இது மிக முக்கியமான ஒரு கேள்வி. தேவனுடைய மனதில் இருந்த அந்த நிறைவான மனிதன் யார்? ஆதாமா? ஒரு நாளும் இல்லை !.

ஒருவேளை ஆதாம் பாவம் செய்யாமல் தேவச்சாயலிலே வளர்ந்திருப்பான் என்றால் யாரைப்போல் மாறியிருப்பான்? இதை சற்று யோசித்துப் பாருங்கள். தேவனுடைய பார்வையில் பூரணமான, குறைப்பாடற்ற, சரி நிறைவான அந்த மனிதன் யார்?

தேவனுடைய பார்வையில் குறைபாடற்றவராக, சரிநிறைவுள்ளவராக, பூரணசற்குணராக ஒரே ஒருவர் மட்டும் தான் இருக்கிறார். அது தம்முடைய ஒரே பேரரான குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒருவரே. முதல் மனிதனாகிய ஆதாம் கூட சரிநிறைவான, பூரணரான மனிதனாக இருக்கவில்லை. ஆதாம் கூட தேவனோடுள்ள ஐக்கியத்தில் வளர்ந்து கிறிஸ்துவைப் போல மாற வேண்டும் என்பது தான் தேவனுடைய சித்தமாயிருந்தது.


பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவைப் போல ஆக வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். உண்மையாகவே அந்த அநாதி முன்குறித்துதலோடு தான் தம்மேல் அன்புக்கூரும் ஒவ்வொருவரையும் தேவன் இந்த பூமியில் வைத்திருக்கிறார்.

“தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்” (ரோமர் 8:29).

தேவாதி தேவனுக்கு நித்திய குமாரானாக ஒரே ஒருவர் மட்டும் தான் உண்டு. ஆனால் சிருஷ்டிக்கபட்ட ஒவ்வொரு மனிதனும் தேவனோடுள்ள அன்னியோன்னியத்தில் பெருகி கிறிஸ்து இயேசுவின் சாயலாக வளர்ந்து, இயேசு முதல் பேரானவைராகவும், சிரேஷ்டபுத்திரராகவும் மற்றவர்கள் அவருடைய சகோதரர்களாகவும் வளர வேண்டும் என்பதே தேவனுடை ஆசை. இப்பொழுதும் அவருடைய திருசித்தம் அது தான். ஆனால் அந்த வளர்ச்சி தேவனோடுள்ள அன்னியோன்னியத்தில் மட்டும் தான் சாத்தியமாகும். ஆனால் என்ன செய்வது, மனிதன் ஆண்டவருடன் இருந்த உறவை கைவிட்டானே. கிறிஸ்துவை நோக்கி மேனோக்கமாக வளர வேண்டியவன் பிசாசைப் பார்த்து கீழ்நோக்கியே வளர்ந்துவிட்டான்.

ஆனால் தெய்வீகப் பாதையில் திரும்பி வர விருப்பப்படுகிறவர்களை தேவனோடுள்ள அன்னியோன்னிய ஐக்கியத்தில் கொண்டு வர பாவத்தின் தடைச்சுவரை உடைத்துக் கொண்டு இயேசு இரட்சகராக மன்னுரவானார். ஆதாம் பாவம் செய்தபோது பாவம் அவனுக்கும் தேவனுக்கும் மத்தியில் ஒரு தடைச்சுவராக இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து மூலம் மீட்க்கப்பட்ட ஒவ்வொருவரும் பாவத்தின் நடுச்சுவரைத் தாண்டி, தேவனோடுள்ள அன்னியோன்னிய ஐக்கியத்துக்குள் பிரவேசித்து விடுகிறார்கள். ஆனால் இது ஒரு துவக்கம் மட்டும் தான். பாவத்தின் சுவரை தாண்டி விடுவது மட்டுமல்ல இயேசுபைப் போல, ‘தலையாகிய கிறிஸ்து’வை போல

நாம் வளர வேண்டும். நாம் விழுந்து போனவர்களாக இருந்ததினாலே, பாவத்தில் இருந்து மீட்கப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை நமக்கு அதற்கான பெலன் இல்லாமலிருந்தது. விழுந்துப் போன (Fallen Stage) நிலையில் ஒருவன் விழுந்துக்கொண்டே இருப்பான். சுயமாக எவ்வளவு தான் முயற்சித்தாலும் வீழ்ச்சியின் அதிர்ச்சியை குறைக்க தான் முடியுமே தவிர பாவத்தின் நடுச்சுவரை தாண்டி வர முடியாது. தேவனோடு உறவு இல்லையென்றால் வளர்ச்சியும் இல்லை. வளர்ச்சி இல்லாதவனுக்கு கிறிஸ்துவின் சாயலாக மாறவும் முடியாது. அந்த நடுச்சுவரை தாண்டி மேலே வந்தால் தான் தேவனோடு இணைய முடியும். அப்படி தேவனோடு இணைந்தால் தான் வளரவும் முடியும்.




பிரியமானவர்களே, தேவமைந்தன் இயேசு கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து மீட்டு தடையாய் இருந்த தடைச் சுவருக்கு மேல் நம்மைக் கொண்டு வந்திருக்கிறார். அல்லேலூயா! இனி வளருங்கள். வளர்ந்துக் கொண்டேயிருங்கள். தேவகுமாரனின் சாயலை அடைகிறவரை தொடர்ந்த வளர்ந்து கொண்டேயிருங்கள்....!

வசனமென்ற கண்ணாடியில் தேவகுமாரனின் சாயலை, அதாவது தேவனுக்கு நம்மைக் குறித்துள்ள சித்தத்தின் பரிபூரணமான தற்சுரூபத்தை காண்கிறோம். அன்பானாவர்களே, பாவம் நம்முடைய வாழ்க்கையில் நுழையாமலிருந்தால் நாம் அப்படித் தான் இருந்திருப்போம். தற்போது நம்முடைய நிலமை படுமோசமாக இருந்தாலும் கூட தேவனுடைய இருதயத்திலிருக்கும் அந்த மகிமையான சாயலுக்கு ஒப்பாக வளருவதற்கான வாய்ப்பு நமக்கு உண்டு. தேவன் நமக்களித்த மீட்ப்பை நாம் பெற்றுக் கொண்டதினாலே தேவனோடுள்ள உறவில் நாம் மறுபடியும் இணைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே வசனத்தில் காணும் தேவசாயலுக்கு ஒப்பாக இனி வளர நாம் உற்சாகப்படுவோம். அதற்காகவே தேவன் நம்மை முன் குறித்திருக்கிறார்.

இரண்டு வகையான ஆட்கள் திருவசனமென்னும் கண்ணாடியை பார்க்கிறார்கள். திருவசனத்தை கேட்டு அதன்படி நடவாதர்களும், திருவசனங்களை கேட்டு அதை நடைமுறையில் கொண்டு வருகிறவர்களும், இந்த இரண்டு வகையான ஆட்களும் தங்களுடைய சுபாவ முகத்தை வசனம் என்னும் கண்ணாடியில் பார்கிறார்கள். ஆனால் வித்தியாசமான இரண்டுவித பலன்கள் இருதரத்தார் வாழ்க்கையில் உண்டாகிறது.

திருவசனத்தை கேட்பதோடு மட்டும் நிறத்தி விட்டு, அதை நடைமுறை வாழ்கையில் கொண்டு வராத மனிதனுடைய நிலையையைப் பாருங்கள். சபை கூடுகையின் போதோ, வீட்டு ஜெபத்தின் போதோ, டி.வி. மூலமோ, சீடி, புத்தகங்கள் வழியாகவோ வசனத்தை கேட்கலாம். ஒருவேளை “பிரசங்கமன்னா இப்படி தான் இருக்கனும் சும்மா புட் – புட்டா வைக்கிறாறே” என்று கூட சொல்லலாம். இவர் வசனத்தை கவனிக்கவில்லை என்று சொல்ல முடியுமா? அவர் வசனத்தை கவனித்தார்–தன்னுடைய சுபாவமுகத்தை –தன்னைக் குறித்து தேவனுக்கிருக்கும் எதிர்பார்ப்பு என்னவென்று வசனமென்னும் கண்ணாடியில் கண்டார். இவர் சபையில் பிரதான நபர்களின் ஒராளாக இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் வசனத்தை கேட்கிறவர் மட்டுமல்ல, திருவசனங்களை போதிக்கிற, பிரசங்கம் செய்கிற நபராக கூட இருக்கலாம். வசனம் கேட்கும்போதோ, வாசிக்கும்போதோ, உள்ளத்தில் குத்தப்பட்டு, தன்னுடைய தவறை நினைத்து மனஸ்தாபம் அடையளாம். ஆனால் அவர் வசனகண்ணாடியில் கண்டறிந்த சாயலையும், தன்னுடைய மெய்யான, மோசமான சாயலையும் ஒப்பிட்டு பார்த்து, அதை சரிசெய்ய, தன்னை திருத்திக் கொள்ள தயாராக இல்லை.

“ஆமாம் பிரதர், ஆண்டவருடைய பிள்ளைகள்ன்னா அப்படிதான் இருக்கனும் அதை தான் ஆண்டவரும் பிரியப்படுகிறார்...” என்றெல்லாம் சிலர் சொல்லுவதை கேட்டிருக்கிறீர்களா? அதாவது அவர் வசனகண்ணாடியில் தன்னுடைய சுபாவ முகத்தை பார்த்தவர். ஆனால், இப்படியெல்லாம் அரட்டை அடிக்கிறதோடு நிறுத்தி விடுகிறார். அதில்லாமல், அவர் வசனக் கண்ணாடியில் பார்த்த அந்த தேவ சித்த்திற்கேற்ற சாயலை அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு ஜெபமோ, முயற்சியோ, செயலோ அவரிடம் இருந்து வருகிறதில்லை.

இந்த ஆபத்து நாம் அனைவருக்கும் நிகழ வாய்ப்பு இருக்கிறது. திருவசனத்தில் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம். தேவனுடைய சித்தத்தை குறித்து வாய் பேசலாம்,ஐய்யோ, நான் இன்னும் ஆண்டவர் விரும்புகிற அளவிற்கு வளரவில்லையே என்று பரிதாப்பட்டு அழுது புலம்பலாம். ஆனால் இவையெல்லாம் வசனம் கேட்கிற அந்த நேரத்தில் மட்டும் தான். கண்ணாடியில் தன்னனைத்தானே கொஞ்சம் பார்த்துவிட்டு, அவன் அவ்விடம் விட்டுப் போகிறான். சற்று நேரம் அமர்ந்து, கேட்ட வசனத்தின் வெளிச்சத்தில் தன்னைத் தாமே ஆராய்ந்துப் பார்க்கவோ, வசனத்திற்கேற்ப நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவோ, தேவனிடம் ஜெபிக்கவோ நேரமில்லை. “அதுக்கெல்லாம் எங்கய்யா நேரம். எக்கச்சக்கமான வேலை இருக்கு. ஆபிஸ், வீடு, பிஸினஸ், சபை... (சில நேரங்களில் பைபில் கிளாஸ், ஊழியம்) இப்படி நூற்றுக்கணக்கான காரியங்கள் ஒரு மனுஷனுக்கு இருக்கும்போது இது எல்லாம் எப்படி நடக்கும்? எப்பவும் பைபிளும் கையுமா இருக்க முடியாமா?” என்று சொல்லலாம். இவ்வளவு பிஸியான வாழக்கையின் நடுவில் வேத வசனமாகிய கண்ணாடியில் கண்ட தேவ சித்தத்தின் தற்சுரூபத்தை மறந்து விடுகிறோம். நான் தேவசித்தத்னின் சாயலில் தான் இருக்கிறேன் என்று நினைத்து விடுகிறோம். அதுக்கும் காரணமிருக்கிறது. அடிக்கடி மீட்டிங், சபை சம்பந்தப்பட்ட காரியங்களில் ஏற்படுகிறோம். பெரிய பெரிய ஆவிக்குரிய ஊழியர்களோடு நெருங்கிய உறவு வைத்திருக்கிறோம். சொல்லிக்காட்ட அநேக ஆவிக்குரிய அனுபவங்களும் ஒரு வேளை இருக்கலாம். அப்படி மிக மும்முரமாக இருக்கிறதினாலே (இது பலநேரங்களிலும் ஆவிக்குரிய காரியங்களுக்காகவும் இருக்கலாம்) இதற்கெல்லாம் எப்பொழுதும் போல நேரம் கிடைப்பது இல்லை.

வசனத்தை கேட்கிறதோடு நிறுத்திவிட்டு, அதில் சொல்லியிருக்கிறதை செய்யாமலும், நடைமுறை வாழ்க்கையில் அதற்கேற்ப எந்தவித மாற்றங்களையும் கொண்டு வராமலும் வசனமென்ற கண்ணாடியில் காணும்

தேவசித்தத்தின் சுரூபத்திற்கு ஏற்றவாறு தன்னுடைய சுபாவ முகத்தை மாற்ற மனதில்லாதவன் எவனும் தன்னையே வஞ்சித்துக் கொள்கிறான் என்று யாக்கோபு சொல்கிறார் (1:2).

திருவசனத்ததுக்கேற்ற செயல்களை செய்கிறவன் வசனமென்னும் கண்ணாடியில் உற்றுப் பார்க்கிறான். அந்த சுரூபத்தையே உற்றுபார்த்து கொண்டு இருக்கிறான். அப்படி பார்த்துக் கொண்டே இருக்கும் போது, அவனுடைய இப்போதுள்ள 'சுபாவ முகம்' உள்ளத்தில் தோன்றும். இப்போது அவன் இரண்டு முகங்களையும் பார்க்கிறான். தேவசித்தத்தின் சரிநிறைவையும், தன்னுடைய குறைபாடுள்ள, மோசமான முகத்தையும் ஒப்பிட்டு பார்க்கிறான். குறைபாடுகளையும், தவறுகளையும் எங்கே உள்ளது என்று சோதித்துப் பார்க்கிறான். அதை அழகுப்படுத்தி தேவ சாயலை பெற்றுக் கொள்கிறான்.

வசனத்தில் நிலைதிருப்பவனுக்கு மட்டும் தான் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையை அடையமுடியும். "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவானயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக்கோபு 1:25).

இரண்டு காரியங்களை யாக்கோபு இங்கு குறிப்பிடுகிறார். ஒன்று, வசனத்தில் நிலை நிற்பது, இரண்டு வசனத்திற்கேற்ற கிறியைகளை செய்வது.

வசனத்தில் நிலைத்திறுக்காதவன், வசனத்தில் தொடர்ந்து நடக்காதவன், வசனத்தில் வாசம் செய்யாவதன், இப்படிப்பட்டவர்களுக்கு வெற்றிகரமான கிறிஸ்துவ வாழ்க்கை வாழவே முடியாது. அதனால் தான் இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி "நீங்கள் என் உபசேதத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷர்களாயிருப்பீர்கள்" என்று சொன்னார் (யோவான் 8:31).

அதுமட்டுமல்ல வசனத்துக்கேற்ற கிரியைகளையும் செய்ய வேண்டும். கர்த்தர் சொல்கிறார். "ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின் படி செய்கிறவன் எவனோ, அவனைக் கண்மலையில் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" (மத்தேயு 7:24).

"வசனத்தை கேட்கிறவன் அல்ல, கேட்டு செய்கிறவனே புத்தியுள்ள மனிதன், கேட்டு செய்யாதிருக்கிறவன் புத்தியில்லாதவன்" (மத்தேயு 7:26).

# 14

# ஆவியின் பெலத்தினால் வரும் கீழ்படிதல்...

ஆர்யாவும், சூர்யாவும் ஐந்து வயது வரை தெருக்களில் வளர்ந்த பிள்ளைகள். அவர்களுடைய தகப்பன் ஒரு காச நோயாளி. கஞ்சா போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமை. ஒருநாள் காலையில் திடீரென்று இறந்து விட்டார். துரதிர்ஷ்டவசமாக அம்மாவும் ஒரு கார் விபத்தில் பலியானாள்.

இந்த அனாதை பிள்ளைகளை பார்த்து இரக்கப்பட்ட ஒருவர் அவர்களை ஒரு அநாதை இல்லத்தில் சேர்ந்துவிட்டார். இவர்களைப் பற்றிய செய்தி ஒரு நாள் ஓர் நாளிதழில் வந்தது. அதைப் பார்த்த Dr.ஜெபாலன் இந்த சகோதரர்களை தத்தெடுக்க தீர்மானித்தார். சட்டபூர்வமான நடவடிக்கைகளை பூர்த்தி செய்துவிட்டு Dr. ஜெயபாலன் தன்னுடைய காரில் அவர்களை வீட்டுக்கு அழைத்து சென்றார். போகும் வழியில் பின்சீட்டில் இருந்து சூர்யா, ஆர்யாவிடம் இப்படி சொன்னான் “ டேய், ஆர்யா தெருவுல இருந்த மாதிரியெல்லாம் அங்க போயி இருக்க கூடாதுடா... இந்த ஐயா சொல்றதெல்லாம் கேட்கணும் சரியா... சேட்டை ஒன்னும் பண்ணக் கூடாது... அப்புறம் அவரு நம்ம ரண்டு பேரையும் அவர் வீட்டில இருந்து துரத்திடுவாரு டா!”.

பல நேரங்களிலும் நாம் கட்டளைகளை கீழ்படிவதின் நோக்கமே இந்த பயம்தான். நாம் பாவத்தின் பயங்கரமான குழியிலும் உளையான

சேற்றிலுமிருந்தோம். ஆதரவற்றவர்களாக இருந்தோம். நம்முடைய இந்த பரிதாபமான, படுமோசமான சூழ்நிலையின் மத்தியில் அன்பு தெய்வம் இயேசு இரங்கி வந்தார். நம்மை இரட்சித்து தம்முடைய நேச அரசுக்குள்ளாக சேர்த்துக் கொண்டார். நாம் இப்பொழுது பரலோகத்தை நோக்கி யாத்திரை செய்கிறோம். இது முதற்கொண்டு நம்முடைய பழைய சுபாவரீதிகளை திரும்பவும் எடுக்கக் கூடாது. கர்த்தருடைய கட்டளையின்படி எல்லாம் நடக்க வேண்டும் இல்லையென்றால் அவர் தம்முடைய வீட்டிலிருந்து நம்மை துரத்தி விடுவார், பிறகு நாம் என்ன செய்வோம்? பரலோகத்துக்கு போக முடியாதே.

பெரும்பாலானவர்களும் ஆண்டவரை கீழ்படிவதின் முக்கிய காரணம் பரலோகத்துக்கு போக வேண்டும் என்பது தான். ஒரு சில கட்டளைகளை கீழ்படிவதில்இருந்து தவறினாலும் பரவாயில்லை பரலோகத்துக்குப்போகலாம் என்று வேதத்தில் எங்கையாவது சொல்லப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட கட்டளைகளை தேடிப்பிடித்து மீறதான் பார்ப்போம். சிலர் கேட்பார்கள். “சினிமா பார்ப்பது தப்பா?, சினிமா பார்க்கிறவர்கள்பரலோகத்துக்கு போக முடியுமா சார்?” இந்த கேள்வியை ஏன் கேட்கிறார்கள் என்று தெரியுமா? சினிமா பார்கிறதினாலே பரலோகத்தை இழந்து விடமாட்டோமென்று இருக்கும்போது ஏன் வீனா நல்ல நல்ல படங்கள் பார்காம்ம வேஸ்ட் பண்ணனும்? என்று அவர்கள் நினைக்கிறார்கள். “பரலோகத்துக்கு செல்ல குறைந்தபட்ச தகுதி இவைகள்” என்ற ஒரு அட்டவணை வேதத்தில் கொடுக்கப்பட்டிருந்தால் இதை வாசிக்கிற நீங்க கூட அந்த ‘மினிமம்’ தகுதியில் தான் போக பார்ப்பீர்கள்! உண்மை தானே? ஒரு நபருக்கு எத்தனை கட்டளைகள் வர மீரலாம், குறைந்தபட்சம் எத்தனை பாவங்கள் வர ஒருவருக்கு செய்யலாம்? இப்படிப்பட்ட காரியங்களை ‘ரூம் போட்டு’ யோசிப்பவர்களும் உண்டு !.

கீழ்படுதலுக்கும் மோட்சம் செல்வதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாமலிருந்திருக்குமானால் இன்று நாம் அடிபணியும் கற்பனைகளில் எத்தனை கட்டளைகளை கீழ்ப்படிய நாம் ஆர்வம் காட்டியிருப்போம்? ‘பரிசுத்த வாழ்க்கை’ என்று சொல்லிக் கொண்டு நாம் இன்று செய்கிற காரியங்களில் எத்துனை காரியங்களை தொடரந்து செய்கிறவர்களாக இருப்போம்? சற்று நேரம் உங்களையே ஆராய்ந்துப் பாருங்கள். ஆர்யாவும், சூர்யாவும் சொல்லுவதைப் போலதான் நாமும் சொல்லுகிறோம். “சரி கீழ்ப்படிந்து போவோம்... இல்லையென்றால்... வீட்டைவிட்டு வெளியே துரத்திவிட்டால்.. என்ன பண்ண முடியும்...?!!!”

பரலோகத்தை அடைய முடியாதே, அதை இழந்துவிடுவோமே என்ற வியாகுலத்தோடு தான் நாம் இன்றைக்கும் தேவனுடைய கட்டளைகளையின்படி வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்றால், நாம் அடிமைத்தனத்தில் இருந்து இதுவரை பூரணமாக விடுவிக்கப்படவில்லை. ஆர்யாவையும், சூர்யாவையும் டாக்டர் ஜெயபாலன் அடிமைகளாக அல்ல பிள்ளைகளாக தான் தம் வீட்டுக்கு கொண்ட வந்திருக்கிறார் என்பதை மறந்துவிடாதேயுங்கள். “தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான்” (யோவான் 8 : 47).

பிள்ளைகள் அப்பா பேச்சை கேட்கிறதும். அவர் சொல்லுக்கு கீழ்படிந்து போகிறதும் அவர் அப்பாவா இருக்கிறதினாலே தானே? அதில்லாமல் அவர் பேச்சை கீழ்படியவில்லையென்றால் அவர் நம்மை வீட்டைவிட்டு துரத்திடுவாரோ என்ற பயத்தினாலயா? ஒரு நாளும் இல்லை. அவர் நம் பிதா நாம் அவர் பிள்ளைகள். நம்மை ஆளுகை செய்யும் ஆற்றலே இந்த பாச உறவு ஒன்று தான். பிதா பிள்ளையிடத்தில் குடும்ப காரியத்தை தான் சொல்வார். அதை நிறைவேற்றுவது நம்முடைய கடமை.

நாம் தேவனுடைய வீட்டில் இப்படிப்பட்ட உரிமை வாழ்வை வாழவேண்டும். வெளியே போ என்று சொல்லி என்னை தள்ளிவிடுவாரோ என்ற மனப்பான்மையோடும், பயத்தோடும் ஒவ்வொரு வினாடியும் வாழ்வதை இன்றே நிறுத்தி விடுங்கள். அடிமையைத்தான் வெளியேற்றுவார்கள் “அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்”. அடிமைக்கு வீட்டில் நிலையான இடம் இல்லை. எஜமானனின் சொல்லை தவறாமல் அடிப்பணியும் வரைத்தான் அடிமை வீட்டில் அனுமதிக்கப்படுவான். ஆனால் “குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்” (யோவான் 8 : 35). தேவமைந்தன் இயேசு தம் பிதாவை சகலத்திலும் கீழ்படிந்தார். அடிமை நடுக்கத்தோடுகூட கீழ்படியும்போது, குமாரன் சுதந்திரத்தோடு, நிறைமனதோடுகூட கீழ்படிகிறான்.

“அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா... பிதாவே, என்று கூப்பிட பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்” (ரோமர் 8 : 15).

கர்த்தர் சொல்கிறார், “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைகொள்ளுங்கள்” (யோவான் 14 : 15).

வசனத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்படிவதற்கு பழைய ஏற்பாட்டில் இருந்து முற்றிலும் வித்தியாசமான ஒரு காரணத்தைதான் இயேசு இங்கு கூறிப்பிடுகிறார். பழைய ஏற்பாட்டில் சொல்லும்போது "நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்துக் சுகித்து நீடித்திருக்கும் படி உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்க கடவீர்கள்" (உபாகமம் 5:33). அதாவது கீழ்படிவீர்களானால் பிழைப்பீர்கள் இல்லையென்றால் சாவீர்கள். கீழ்படிந்தால் சுகித்து நீடித்திருப்பீர்கள் இல்லை என்றால் நாசமடைவீர்கள். "அவைகளின் படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்" (லேவியாராகமம் 18:5).

புதிய ஏற்பாட்டிலானாலும் சரி, பழைய ஏற்பாட்டிலானாலும் சரி கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டகளைகளின் கீழ்படிதலும் உண்டு. ஆனால் பழைய ஏற்பாடு காலத்தில் நடுக்கத்தோடும் பீதியோடும் கூட கட்டளைகளை கடைபிடிக்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாடுக் காலத்தில் வரும் போது பயத்தை உதரி எறியுங்கள் அன்பைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று இயேசு சொல்கிறார்.

பயத்தை விட்டு விடுங்கள் என்று சொன்னால் கட்டளைகளை விட்டுவிடுங்கள் என்று அர்த்தமில்லை. அடிமையானாலும், குமாரன் ஆனாலும் கட்டளைகளை கீழப்படிய தான் வேண்டும். ஆனால் குமாரன் அன்பில் இருந்து அதைச் செய்கிறான் அடிமை பயத்திலிருந்து செய்கிறான்.

"அன்பலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறமே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1யோவான் 4:18).

பரலோகத்தை இழந்து விடுவேனோ என்ற அங்கலாயிப்புடன் இன்றைக்கும் கட்டளைகளுக்கு கீழ்படிந்து அதன்படி நடக்கிறவர்கள் கர்த்தரோடுள்ள அன்பில் பூரணப்பட்டவர்கள் அல்ல. அவர்களுக்குள் அன்பு முழு நிறைவு அடையாது.

"நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைகொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்" (1 யோவான் 5:3).

நாம் அவரை நேசிக்கிறோம் என்பதற்கான ஆதாரம் இதுவே. அவரை நேசிக்கிறோம் என்று சொல்லிவிட்டு அவருடைய கட்டளைகளை மகிழ்சியோடு கீழ்படிய ஆர்வம் இல்லாமலிருப்போமென்றால் பொய்யை

சொல்கிறோம் (1யோவான் 2:4). அன்பு கூருகிறவன் ஐய்யப்படாமல் கீழ்படிய உற்சாகமுள்ளவனாக இருப்பான்.

“நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தார் என் கற்பனைகளை காத்து கொள்வீர்கள்”. முற்றிலும் உண்மை. இப்படி சொல்லவும் அதை கேட்கவும் நன்றாக தான் இருக்கும். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் பல தடைகளை சந்திக்கிறோமே! நான் ஆண்டவர் மேல் அன்பாயிருக்கிறேன், இயேசு என்றாலே எனக்கு உயிர். அவர் வார்த்தைகளை ஒன்றுக் கூட தவறாமல் அவர் சொல்வதைப் போல கீழ்படிய எனக்குள் அடங்காத வாஞ்சையும் உண்டு. பயத்திலிருந்து அல்ல பாசத்திலிருந்து வரும் வாஞ்சை. அப்படியிருந்தும் கர்த்தருடைய வார்த்தைகளை நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வரமுடியவில்லையே. வாஞ்சையில்லாமலல்ல, எனக்கு முடியவில்லை, எனக்கு பெலனில்லை! என் அன்பு நேசரை கொஞ்சங்கூட துக்கப்படுத்தாமல், அவர் சொல்கிறதைப் போலவே வாழ எனக்குள் ஆர்வமிருந்தும், தேவனுடைய சித்தம் என்னில் நிறைவேறப்படுவதில்லையே. அன்பு உண்டு, ஆர்வம் உண்டு என்று சொல்லி என்ன பிரயோஜனம்.... ஆற்றல் வேண்டாமா?

வாழ்ந்தால் ஒரு உண்மையான வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற துடிப்புடன் காணப்படுகிற எல்லோரையும் வதைக்கும் சிக்கல் இது. திருவசனத்திற்கேற்ப வாழ பெலன் அவர்களுக்கு இல்லை.

“என்னுடைய பலவீனங்கலெல்லாம் கர்த்தர் அறிவார்” என்று ஒரு வேளை நீங்கள் சொல்லலாம். ஆம் அது உண்மைதான். ஆனால், நாம் நினைப்பதுப் போல தேவன் அதையொல்லாம் கண்டுக்காமல் விடமாட்டார். “மகனே மகளே.... பரவாயில்லை... பரிசுத்தமாய் வாழவேண்டும், என்னுடைய வார்த்தைகளை எல்லாம் கீழ்படிய வேண்டுமென்கிற விருப்பம் உனக்கு இருக்கிறதே.... அது போதும்....” என்று ஆண்டவர் ஒருபோதும் சொல்லமாட்டார். தேவன் நம்மிடமிருந்து பரிபூரணமான கீழ்படிதலை எதிர் பார்கிறார். அதை மட்டும் தான் அவர் விரும்புகிறார். அப்படியென்றால் நாம் என்ன செய்ய போகிறோம்?

ஆண்டவரை நேசிக்கிறேன். ஆனால் பெலவீனனாக இருக்கிற என் மேல் கர்த்தர் பாரமான சுமையை வைப்பரா என்ன? இல்லை ஒருபோதுமில்லை... இதற்கு இயேசு என்ன சொல்கிறார் என்று யோவான் 14:15-16 வாசித்துப் பார்த்தால் தெரியும். அதை நான் உங்களுக்காக இங்கு பொழிப்புரையாற்றுகிறேன்.

கண்மலையின்மேல் அடித்தளமிடுகிறவன்.

"நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளுக்கு கீழ்படிவீர்கள். ஆனால் சுயபலத்தை நம்பி பலநேரங்களில் என் கட்டளைகளுக்கு கீழ்படிவதற்கு இயலாமல் போகிரீர்கள். அதை நான் விரும்புவதில்லை. அதனாலே நான் பிதாவிடம் கேட்பேன். அவர் சத்திய ஆவி என்ற வேறொரு தேற்றவாளரை, உங்கள் துணையாளரை உங்களுக்கு அருளுவார். அவர் உங்களளோடு கூட என்றென்றைக்கும் இருப்பார். கட்டளைகளை பரிபூரணமாக கீழ்ப்படிய இந்த துனையாளர் உங்களுக்கு உதவி செய்வார்".

"என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளை கடைப்பிடிப்பீர்கள்" என்று சொல்லிவிட்டு சத்திய ஆவி என்ற தேற்றரவாளரை பிதா உங்களுக்கு அனுப்புவார் என்று எழுதியிருப்பதை பாருங்கள். அது மட்டுமல்ல இந்த இரண்டு வசனங்களையும் 'ஆனால்'* என்ற இடைசொல்லால் இணைக்கப்பட்டிருக்கிறது. இதின் அர்த்தம் என்ன? கட்டளைகளை காக்கவும் திருவசனத்தின் படி வாழவும் நம்மை உதவும்படி நமக்கு துணையாளராக பரிசுத்த ஆவியானவரை பிதா அணுப்பியிருக்கிறார் என்று தானே?

கர்த்தருடைய ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார். திருவசனங்களின் விளக்கங்களை நமக்கு போதிப்பார். நம்முடைய புத்தியையும் மனக்கண்களையும் திறந்து, நம் உள்ளங்களை இயேசுவுக்காக பற்றி எரிய செய்வார். நம் ஆவி மனிதனுக்குள் தேவ வல்லமையால் நிரப்புவார். நம் கரங்களை பிடித்து காலமெல்லாம் கூட இருந்து நம்மை வழிநடத்துவார். நமக்குள் வாசம் செய்து தேவ சித்தத்தை நாம் நிறவேற்ற நமக்கு உதவுவார். பிரியமானவர்களே, பரிசுத்த ஆவியோடு கூட நாம் வாழும் போது தேவனுக்கு உகந்த அர்ப்பண வாழ்வை வாழ நம்மை பெலப்படுத்தி, ஊக்குவித்து, நடத்தி செல்வார்.

என்னை வீட்டை விட்டு துரத்திவிடுவாரா? பரலோகத்தை இழந்துவிடுவேனா? என்ற பயத்தினாலல்ல என் அன்பு தகப்பனின் செல்லப்பிள்ளை நான் என்ற உரிமை உணர்வால் அவர் சித்தம் செய்ய மகிழ்ச்சியடைவோம். தேவ அன்பு நம்மை ஆளுகை செய்யட்டும்.

---

Foot Note: *கிரேக்க மொழியில் 'ஆனால் நான் பிதாவிடம் கேட்பேன்' என்றுள்ளது. Kai-காய் என்ற இடைசொல்லுக்கு 'மற்றும்' 'மேலும்' 'ஆனால்' என்று வெவ்வேறு அர்த்தங்கள் உள்ளது. நீங்கள் வாசிக்கும் இந்த புத்தகம் மலையாளம் மொழியிலிருந்து மொழிப் பெயர்க்கப்பட்டது. மலையாள வேதாகமத்தில் 'ஆனால்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

என் நேசர் இயேசுவை நான் நேசிக்கிறேன். அவருடைய சித்தத்தை நான் செய்ய வேண்டும். என்னுடைய சுய பெலத்தினால் அவருக்கு பிரியமானதை செய்ய, கட்டளைகளின் படி நடக்க முயற்சி செய்தேன். ஆனால் தோற்று போனேன். நான் பெலவீனன் என்று தேவனிடத்தில் சொன்ன போது, “என் ஆவியினால் உனக்கு உதவுவேன், நான் உன்னை வழி நடத்துவேன், நான் உன்னோடுக்கூட இருந்து, உனக்குள் வாசம் செய்து உன்னை பெலப்படுத்துவேன்” என்று கர்த்தர் தம் வார்த்தைகள் மூலம் என்னோடு பேசினார். சுயமுயற்சிக்கு அன்றே முற்றுகையிட்டேன். தேவன் தம் ஆவியை தந்தருளினாரே இனி நான் ஏன் பாரத்தை சுமக்க வேண்டும்? அவர் என்னை பெலப்படுத்துவார் என்று அறிக்கையிட்டு என்னை திடப்படுத்தினேன்.

ஆவியானவர் என்னை வழி நடத்த துடங்கினார். தடுக்கி விழுந்த நேரத்தில் கரம் பிடித்து என்னை தூக்கினார். உடைக்கப்பட்ட நேரங்களின் உருவாக்கினார். சோர்ந்து போன நேரங்களிள் தம் பெலத்தால் இடைகட்டினார். தேற்றரவாளராக என் அருகில் வந்தார் என்னை திரும்பவும் நடக்க செய்தார். சத்தியத்திலிருந்து சத்தியத்திற்குள்ளாக முன்னேற உதவி செய்து கொண்டிருக்கிறார். அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி என்னுடைய உயர் தலங்களில் என்னை நிறத்துகிறார். எனக்குள் வாசம் பண்ணி, என்னோடு கூட இருந்து என்னை வெற்றி வீரனாக்குகிறார். முடியவில்லை... இந்த பயணம் இன்னும் முடியவில்லை... என் அன்பர் இயேசுவை நான் முக முகமாய் காணும் நாள் வரை இது தொடரும்...

# 15

# எழுப்புதலின் வாசலில்...

*“திருச்சபை வேதாகம சத்தியங்களுக்கு திரும்பிச் சென்று, புதிய ஏற்பாடின் வழிமுறையை பின்பற்ற முன்வரும் எந்த இடங்களிலும் தேவன் எழுப்புதலை அனுப்புவார்”*

பிரபல எழுப்புதல் வரலாற்றாளர் எட்வின் ஓர் (Edwin Orr) அவர் எழுதின ‘இவாஞ்சலிக்கல் அவேய்க்கனிங்ஸ்’ என்ற புத்தக தொடரின் முன்னுரையில் இதை எழுதி வைத்திருக்கிறார். உலகத்தின் பல பகுதிகளில் நடந்த எழுப்புதல்களை திட்டவட்டமாக விசாரித்து அதை விரிவாய் ஆராய்ந்த பின் எழுதின கருத்து இது.

யூத இராஜாவான யோசியாவின் காலத்தில் ஒரு மாபெறும் எழுப்புதல் நடந்ததாக 2 இராஜாக்கள் 22,23, 2 நாளாகமம் 34,35 அதிகாரங்களில் பார்க்கிறோம். இந்த பகுதிகளை நன்றாக படியுங்கள்.

யோசியா அரசரானபோது அவருக்கு எட்டு வயது. அவன் தன்னுடைய இளம்வயதிலேயேகர்த்தரைத்தேடினான்(11நாளா34:3).இருபத்தி ஆறாவது வயதில் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்துச் சீர்படுத்திகிறதற்கு விரும்பினான். இதிலிருந்து தான் எல்லாமே ஆரம்பமாகிறது.

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து 'நியாயப்பிரமாணப் புத்தகம்' கண்டெடுக்கப்பட்டது. ஒரு வேளை அது வரை ஆலயத்திலுள்ள கற்பாறை அறைகளில் எதாவது ஒன்றில் இது இருந்திருக்க வாய்ப்பு உண்டு. எப்படியோ அது இராஜாவின் கைகளில் கிடைத்தது. அரண்மனைப் பொருப்பாளராயிருந்த சாப்பான் அதை இராஜாவுக்கு வாசித்துக் காட்டினான். நியாயபிரமானத்தின் வார்த்தைகளை யோசியா கேட்டப்போது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு:

"அய்யோ... இந்த புத்தகத்தில் நம்மை குறித்துள்ள தேவ சித்தம் அல்லவா... நமக்காக எழுதப்பட்டிருக்கும் இந்த புத்தகத்தை இதற்கு முன்னமே கண்டுபிடித்திருக்க வேண்டுமே..." என்று கதறி அழுதான் (2 இராஜாக்கள் 22 : 13).

இந்த வசனங்களின் விளக்கத்தை புரிந்துக் கொள்ளும்படியாக கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை தேடினான். ஆனால் கர்த்தராகிய தேவன் தம்முடைய ஆலோசனையை ஒரு சாதாரண பெண்ணிடம் ஒப்படைத்திருந்தார். அரண்மனை தையலாளரின் மனைவியாகிய உல்தாள் தான் அந்த பெண்.

இந்த வசனங்கள் நியாயதீர்ப்பின் வசனமாக இருக்கிறது, தேவன் யூதாவின்மேல் கோபமாயிருக்கிறார் என்று அவள் சொன்னாள் (22:16,17). இராஜா இந்த வார்த்தைகளை கேட்டப்போது தன் உள்ளம் கலங்கி, ஆண்டவர் திருமுன் தன்னை தாழ்த்தி, தன் ஆடைகளை கிழித்துக் கொண்டு கர்த்தர் சமுகத்தில் அழுததினாலே கர்த்தர் உங்களை மன்னித்து உங்கள் முன்னைய நல்நிலைக்கு கொண்டு வருவார் என்ற தேவனுடைய வார்த்தைகளை உல்தாள் சொன்னாள்.

இராஜா சகல ஜனங்களையும் அழைத்து நியாபிரமாணத்தின் இந்த வார்த்தைகளை அவர்கள் கேட்க வாசித்தான். அதற்கு பிறகு இப்படி சொன்னான் "இந்த வசனங்கள் கர்த்தருடைய ஆலயத்திருந்து கண்டெடுக்கப்பட்டது. இதை நான் வாசித்தேன். என்னுள்ளம் உடைந்தது. இந்த வார்த்தைகள் நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளாக இருக்கிறது. கர்த்தர் சொல்லுகிறார். நாம் கர்த்தரைப் புறக்கணித்துவிட்டு, வேறே தேவர்களுக்கு தூபம் காட்டி, நம்முடைய கிறியைகளினால் அவரை சினம் மூட்டினோம். ஆகவே இந்த நியாயபிரமாணத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளின் படி நம்மை தண்டிக்க அவர் கோபம் நமக்கு விரோதமாக பற்றியெரிகிறது (22:17,18). அதனால் ஜனங்களே... நாம் தேவ சமுகத்தில் நம்மை தாழ்த்தி, நம் பாவ

வழிகளை விட்டு மனம்திரும்பி வரவேண்டும். இது மிக அவசியம். இதற்கு நானே தலைமை கொள்கிறேன். நான் இந்த நியாயபிரமாண புத்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தைகளின் படியே செய்வேன். கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன், என் முழு இருதயத்தோடும், என் முழு ஆத்துமாவோடும் அவருடைய கட்டளைகளையும், சாட்சிகளையும் கைகொண்டு அதை நிறைவேற்றுவேன் என்று கர்த்தர் முன்னிலையில் உடன்படிக்கை செய்கிறேன். உங்களுடைய முடிவு என்ன?" **என்று கேட்டான்.**

"நாங்களும் அந்த உடன்படிக்கைக்கு உடன்படுகிறோம்" என்று ஜனங்களெல்லாம் சொன்னார்கள் (2 இராஜாக்கள் 23 : 1-3).

இது எழுப்புதலின் ஆரம்பமாயிருந்தது. கர்த்தருடைய ஆலயத்திலிருந்து பாகாலுக்கும், அசேராவுக்கும், வானத்தின் படைதிரள் அனைத்திற்கும் பண்ணபட்டிருந்த சகல பனிமூட்டுகளையும் புறம்பாக்கி சுட்டேரித்தார்கள், தூபம் காட்டினவர்களையும், கோவில் விபச்சாரிகளான பெண்களையும் ஆலயத்தை விட்டு அகற்றினார்கள். தோப்பு விக்கிரகங்கள், தொழுகை மேடுகள், சிலைத்தூண்கள், கம்பங்கள், பலிபீடங்கள் என்பவைகளை சுட்டேரித்து மாசுப்படுத்தி, வெட்டி வீழ்த்தி, தூள் தூளாக்கினார்கள் என்று வேதம் சொல்கிறது. இதை 2 இராஜாக்கள் 23:4-20ல் பார்க்கிறோம். அவ்வளவு வைராக்கியமாக செயல்பட்டார்கள். ஒன்றையும் விட்டு வைக்கவுமில்லை.

அதற்கு பின்பு யோசியா 'கர்த்தருக்குப் பஸ்காவை' கொண்டாடினான் (2 நாளா 35 : 1). சுத்திகரிப்பைத் தொடர்ந்து ஆராதனை ! இப்படிப்பட்ட பஸ்கா பண்டிகை இஸ்ரவேலின் வரலாற்றில், நியாயதிபதிகளின் காலத்திலிருந்து நடந்ததேயில்லையாம்! (2 இராஜாக்கள் 23:22). யோசியா கர்த்தருடைய ஆலயத்தில், பஸ்காவை ஆசரித்தல், சர்வாங்க பலிகளை செலுத்தல் ஆகிய ஆராதனை முறைகளை யாவயும் மீள்நிலைப் படுத்தினான் (2 நாளகமம் 35 : 20).

எழுப்புதல் எப்படி ஆரம்பித்தது என்று பாருங்கள்.

வாலிபனான யோசியா-யூத அரசர் கர்த்தருடைய பார்வையின் செம்மையானதை செய்து அவர் பாதையில் நடக்கிறான். கர்த்தருடைய ஆலயத்தை செப்பனிடுவதில் அமோக ஆர்வம் கொண்டான். அவன் கர்த்தரைத் தேடின போது, கர்த்தர் தம்முடைய வசனம் மூலமாக அவனைத் தேடி இறங்கி வந்தார். கண்மலையை நொருக்கும் சம்மட்டியைப்போல, சுட்டெரிக்கும்

அக்கினியைப் போல, இருப்புறமும் கருக்குள்ள பட்டயத்தைப்போல அந்த வசனங்கள் அவனுக்குள் கிறியை செய்ய ஆரம்பித்தது. அவ்வார்த்தைகள் யோசியாவின் ஆவி, ஆத்துமாவையும், கணுக்களையும், ஊனையும் பிரித்து அவனை உறுவ குத்த துவங்கியது...! அந்த வசனங்கள் தனக்காக எழுதப்பட்டது என்பதை யோசியா உணர்ந்தான். அதனுடைய விளக்கத்தை புரிந்து கொள்ள விரும்பினான். அவ்வார்த்தைகளின் விளக்கத்தை அரமனை தையற்காரனுடைய மனைவி உள்தாளிடம் தேவன் ஒப்படைத்திருந்தார். ஒரு சாதாரண பெண்ணிடம் இருந்து அதை பெற்றுக் கொள்ள யுதாவின் இராஜாவான யோசியா தன்னையே தாழ்த்தினான். தேவனின் வசனங்கள் நியாயதீர்ப்பின் வசனங்கள் என்ற உண்மையை உணர்ந்தான். எழுப்புதல் ஆரம்பித்தது. அந்த எழுப்புதல் இராஜாவை தொட்டது. ஆனால் இராஜ்யத்தின் மக்களைக் இன்னமும் தொடவில்லை. ஜனங்கள் எழுப்புதல் அடைய வேண்டும். ஆனால் அதற்க்காக கட்டளை புறப்படவிக்க முடியுமா? இல்லை, கட்டளையினாலோ, சட்டத்தினாலோ எழுப்புதலைக் கொண்டு வர முடியாது. தேசத்தில் எழுப்புதல் வர தலைவர் கட்டளையிட்டால் போதாது. தனக்குள் எழுப்புதலின் அக்கினியை பற்றியெரிய வைத்தது கர்த்தருடைய திருவசனங்கள் என்று யோசியாவிற்கு நன்றாய் தெரியும். ஆதலால் அந்த திருவசனங்களையே ஜனங்களுக்குள் கொண்டு செல்வது தான் எழுப்புதலின் சாரளவாயில் என்று அவன் உணர்ந்தான்.

யூத அரசர் யோசியா தன் நாட்டின் ஜனங்களையெல்லாம் தன்னிடத்தில் வரவழைத்து அவர்களிடம் தன் வாழ்க்கையில் நடந்ததை எடுத்துக் சொன்னான். கர்த்தருடைய திருவார்த்தைகள் என்னை உருமாற்றம் அடைய செய்தது. எனக்குள் எழுப்புதல் அக்கினி பற்றி எரிகிறது. நான் தேவனுக்கு முன்பாக ஓர் உடன்படிக்கையை செய்கிறேன். அவர் வசனங்களின் படியே நான் நடப்பேன். ஜனங்களே உங்களுடைய தீர்மானம் என்ன?

வசனம் ஜனங்களையும் தொட ஆரம்பித்தது. அவர்களும் சொன்னார்கள், நாங்களும் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுகிறோம். நாங்களும் தேவனின் வசனம்படி நடப்போம். மடை திறந்த வெள்ளம்போல எழுப்புதல் தேசத்தை அசைத்தது.

வேதவசனங்களுக்கேற்ப வாழ்க்கையை சீரமைத்துக் கொள்வது தான் எழுப்புதல். அது தான் உடன்படிக்கை. பாடல் பாடி, ஆடி கடைசியில் அமேன் சொல்லிவிட்டு போவது எழுப்புதல் என்று நம்பி விடாதேயுங்கள். தேவஜனம் தேவனோடுக்கூட ஒரு உடன்படிக்கைக்குள்ளாக வரவேண்டும்.

தேவனுடைய செயல்களை நம் வாழ்வில் அனுபவிக்க வேண்டுமானால் உடன்படிக்கை மிக மிக அவசியம். தேவன் நோவாவோடுக்கூட உடன்படிக்கைச் செய்தார். ஆபிரகாமோடுக் கூட உடன்படிக்கை செய்தார். சீனாய் மலையின் மீது இஸ்ரவேல் ஜனங்களோடுக் கூட உடன்படிக்கை செய்தார். உடன்படிக்கையின் இரத்ததை சிந்தி இயேசு தம் மணமகளோடுக் கூட உடன்படிக்கைச் செய்திருக்கிறார்.

உடன்படிக்கையின் ஜனம் வேறுப்பட்ட ஜனம், பரிசுத்த ஜனம், பரமனின் ஜனம். அவர்கள் ஜாதிகளோடு களவாமல் தனியே வாசமாயிருப்பார்கள். தீட்டானவைகளை அவர்கள் வெறுத்து தள்ளுவார்கள். அவர்கள் எல்லைக்குள் அசுத்திற்கு இடமேயில்லை. இப்படிப்பட்ட உடன்படிக்கையின் வாழ்க்கை நமக்கு தேவை.

யோசியா தேசத்தை சுத்தீகரிக்க தொடங்கினான். நாடு முழுவதும் சஞ்சரித்து சகல விக்கிரகங்களையும் உடைத்தெரிந்தான். வேண்டுமானால் யூத பேரரசு யோசியாவுக்கு ஒரு கட்டளையை புரப்படுவித்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் விக்கிரங்களை ஒரு வேலை தெருக்களில் இருந்துதான் அகற்றி இருக்க முடியும். ஆனால் வீடுகளிலிருந்தும் மக்கள் இதயங்களில் இருந்தும் அகற்றியிருக்க முடியாது. இல்லத்தலைனின் ஆணையினாலோ, சபைத்தலைவரின் சட்டத்தாலோ சுத்திகரிப்பையும், எழுப்புதலும் கொண்டு வர முடியாது. விதியை பயந்து வீதியில் பொல்லாங்கை ஒருவேளை செய்யாமலிருக்கலாம். ஆனால் இல்லத்திலிருந்தும் உள்ளத்திலிருந்தும் அதை ஒழிக்கச் சட்டத்தால் ஆகாது.

சுத்திகரிப்புக்கு பிறகு தான் பஸ்கா ஆராதனை. இராஜாவுக்கு பஸ்கா பண்டிகையை இதற்கு முன் நடத்தியிருக்கலாமே. ஆனால் பரிசுத்தம் இல்லாமல் பஸ்கா பண்டிகை அர்த்தமற்றது.

யார் நம்மை பரிசுத்தப்படுத்துவார்? எது நம்மை பரிசுத்தப்படுத்தும்? வசனம்! வசனம்! வசனம் ஒன்றே நம்மை பரிசுத்தப்படுத்தும்.

“நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே (வசனத்தினாலே) நீங்கள் இப்போழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்” (யோவான் 15:3).

வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுகிறோம். இயேசு தம்முடைய பிராதான ஆசாரியப் பிராத்தனையின் போது “உம்முடைய சத்தியத்தினாலே அவர்ளைப் பரிசுத்தப்படுத்தும், உம்முடைய வசனமே சத்தியம்” (யோவான் 17:17) என்று சொல்லி ஜெபிக்கிறார்.

ஆனால் பரிசுத்தமாகுவது எப்படி? கொஞ்சம் கண்ணீர் விடுவதினால் பரிசுத்தமடைய முடியுமா? ஒரு நாளுமில்லை. கட்டிடம் கட்டுகையில் ஒரு செங்கல் ஒன்று துரித்துக் கொண்டிருந்தால் என்ன செய்வார்கள்? தண்ணீரை விட்டு கழுவுவார்களா? அளவுகோலை பிடித்து, துறுத்தி நிற்க்கும் செங்கல்லை உடைத்து விடுவார்கள் அல்லவா? பரிசுத்தமாகுதல் என்றால் அது தான். முறடித்துப் போன கொம்புகளை வெட்டி தூர வீச வேண்டும் (யோவான் 15:2)

ஆராதனைக்குப் பிறகு, ஆலயம் மீள்நிலைப் படுத்தப்பட்டது, ஆலயத்தில் நடக்க வேண்டிய ஊழியங்கள் சீரமைக்கப்பட்டது. எவ்வளவு முன்மாதிரியான எழுப்புதல்! யோசியாவின் இதய ஏக்கம் திருவசன சத்தியங்களை கண்டடைகிற வரை தனிந்துப் போகாமல் இருந்தது தான் அதற்கு திருப்புமுனையாக திகழ்ந்தது. அதற்கு பிறகு வசனம் அதனுடைய கிறியைகளை செய்ய ஆரம்பித்தது. திருவசனம் ஜனங்ளை உடன்படிக்கைக்கு நேராகவும், சுத்திகரிப்புக்கு நேராகவும் நடத்தியது. இறுதியாக மறுசீறமைப்புக்கும் மறுமலர்ச்சிக்கும் நேராக கொண்டு சென்றது.

சிறையிறுப்பில் இருந்த தானியேல் திருவசனங்களை தியானிக்கையில் ஏரேமியா தீர்க்கதரிசன ஆகமத்திலிருந்து எருசலேமின் பாழ்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபது ஆண்டுகள் என்று அறிவுறுத்தப்பட்டான். அந்நேரம் முதல் தேவனை நோக்கி மன்றாடவும், உபவாசித்து ஜெபிக்கவும் ஆரம்பித்தான். (தானியேல் 9வது அதிகாரம்).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் ஜனம் திருவசனங்களை கேட்க ஆவலோடு இருக்கும் காட்சியை (நெகேமியா 8:17.18) நெகேமியாவின் புத்தகத்தில் பார்க்கிறோம். அவர்கள் கர்த்தருடைய நியாயபிரமானத்தின் வார்த்தைகளை கேட்டு அழுதார்கள். கெம்பீரமாய் ஆர்ப்பரித்து மகிழ்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் வீடுகளை விட்டு, கூடாரங்களை போட்டு, கூடாரஙள்களில் குடியிருந்து கொண்டு கர்த்தருடைய வார்த்தைகளை தினமும் கேட்டார்கள். சிறையிறுப்பிலிருந்த ஜனங்களை விட சிறையிறுப்பிலிருந்து திரும்பி வந்த ஜனங்கள் மிகவும் வைராக்கியத்தோடும், ஆவலோடும் கூட தேவ பயத்திலும், விசுவாசத்திலும், பரிசுத்த வாழ்கையிலும் வளர்ந்ததின் காரணம் என்னவென்றால் எஸ்ரா சாஸ்திரிகள் முதற்க் கொண்டுள்ளவர்கள் வசனத்தை ஜனங்களுக்கு சமீபமாக்கியது தான். சீறிய நாட்டின் உபத்திரவங்கள் மத்தியிலும், பிரபல தீர்க்கதரிகளின் அன்மையிலும் உறுதியுடன் நிற்க அவர்களுக்கு

பெலனளித்தது திருவசனம் ஒன்று தான். புதிய ஏற்பாட்டில், இயேசுவின் வசனங்களுக்காக பசியை மறந்து ஜனங்கள் ஆவலோடு காத்திருந்தார்கள். பெந்தேகோஸ்தே நாளிலும் கூட எல்லோரும் அன்னியபாஷையில் பேசுகிற போதோ அதின் விளக்கங்களை கேட்டபோதோ அல்ல பேதுருவின் பிரசங்கத்தை கேட்டப்போது தான் இருதயத்தில் குத்தப்பட்டவார்களாய் இயேசுவின் சீடர்களானார்கள். கொர்னேலியுவின் இல்லத்திலும் வசனத்தை கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்தாவியானவர் இரங்கினார்.

திருச்சபை வரலாற்றில் கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கம் உருவானவதின் காரணமே, வில்லியம் டின்டெய்ல்யை (William Tyndale) போன்றவர்கள் வசனத்தை சாதாரண ஜனங்களுக்கு எடுத்துரைத்ததினால் தான். வேதாகமத்தை சாதாரண மக்கள் மத்தியில் கிடைக்க கூடிய அளவில் அதை பிரசித்தம் பண்ணின மார்ட்டின் லூதர், சுவிங்கிலி என்பவர்களின் முயற்சி தான் சீர்திருத்த இயக்கம் இன்னும் தொடர்வதின் காரணம்.

“கிரேட் அவெய்க்கனிங்” (பெரும் விழிப்பு)ன் காலங்கள் இன்றும் ஜொலிக்கும் நினைவுகளாக கிறிஸ்தவர்களின் மனதில் கொழுந்துவிட்டு எரிவதின் காரணமே ஜோநாத்தான் எட்வேர்ட்ஸின் (Jonathan Edwards) வல்லமையான திருவசன பிரசங்கம் அல்லவா? மெத்தாடிஸ்ட் முன்னேற்றத்தை ஐரோப்பியா முழுவதும் பரப்பியதின் காரணம் ஜான் வெஸ்லியின் திருமறை விளக்கங்கள் அல்லவா? பரிசுத்த வாழ்க்கைக்காக ஜனங்களை தூண்டுவிக்கும் செய்திகளை வேதாகமத்திலிருந்து பிரசங்கம் பண்ணின ஜார்ஜ் வைட்ஃபீல்டும் ‘இவான்சலிக்கல் அவேய்க்கனிங்’ முன்னேற்றமும் இன்றும் பேசப்படுவது ஏன்? பெந்தகோஸ்தே முன்னேற்றத்துக்கு முன்னோடியாயிருந்த ‘ஹோலினஸ் மூவ்மென்ட்’ திருவசனம் போதிக்கும் வாழ்க்கைக்கு தங்களையே அற்பணித்தவர்களின் ஐக்கியமாயிருந்தது. கடைசிக் காலத்தில் மாமிசமான யாவர்மேலும் பொழியப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமை குறித்து திருவசனத்தில் இருந்து அறிந்து அதற்காக காத்திருந்ததினால் தானே பெந்தேகோஸ்தே எழுப்புதல் வந்தது?

இவைகள் அனைத்துமே எழுப்புதல் வந்த வழிகளை பற்றி எடுத்துக் காட்டுகிறது. எழுப்புதல் தொடருவதும், நிலைநிற்பதும் வசனத்தால் தான். எட்வின் ஓர் சொன்னது போல “திருச்சபை வேதாகம சத்தியங்களுக்கு திரும்பி வந்து, புதிய ஏற்பாட்டின் வழிமுறையை பின்பற்ற முன்வரும்போது எழுப்புதல் உண்டாகிறது. அதே நேரத்தில் எழுப்புதல் அடைந்த திருச்சபை

வசனத்தில் நிலைத்திருக்கும் போது புதிய ஏற்பாட்டின் வாழக்கை முறை மீள்நிலைப்படுத்தப்படும்".

திருவசனத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் எழுப்புதல் ஜனங்களை உடன்படிக்கை உறவுக்கு நேராக வழிநடத்துகிறது. அவர்களை பரிசுத்தமாக்குகிறது. அவர்களை சீறமைக்கிறது. அவர்களை மீள் நிளைவுப்படுத்துகிறது. உண்மையான ஆவிக்குரிய எழுப்புதலின் போது இரையரசு பூமியில் இரங்கி வருகிறது.

வசனத்தின் அடிப்படையான ஒரு எழுப்புதலுக்காக நம் இதயம் துடிக்கட்டும். அதற்கான வாஞ்சை நம்மை நிரப்பட்டும். திருவசனமே அதற்கான வாசல் என்று மறந்து விடாதேயுங்கள். தேவன் அதை நிச்சயமாகவே அனுப்புவார்.

# கண்மலையின் மேல் அடித்தளமிடுகிறவன்

பெருமழை
சொரிந்து,
பெருவெள்ளம் வந்து,
காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியது.
அது கண்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்ததினால் விழவில்லை.
ஆனால்,
மணலின்மேல் கட்டினதோ,
விழுந்தது.
விழுந்து முழுவதும் அழிந்தது.
வசனமென்னும் கன்மலையின்மேல் தன் வாழ்க்கையின் அடித்தளத்தை அமைக்கிறவன்
பெருமழையிலும், தண்ணீரின் பெருக்கத்திலும்,
பெருங்காற்றின் உக்கிரத்திலும் விழுந்தது போவதில்லை.

ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு.
இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கண்மலையின்மேல்
தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.



**ஸாஜு**

## ஆசிரியரைக் குறித்து...

இப்புத்தக ஆசிரியர் ஸாஜு ஜாண் மேத்யூ கடந்த பல ஆண்டுகளாக கர்த்தருடைய ஊழியத்தை இந்தியாவிலும், ஆப்பிரிக்கா, இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் செய்து வருகிறார். ஸாஜு அவர்கள் தன்னுடைய 13வது வயதிலிருந்தே பள்ளியிலும், கல்லூரியிலும், தெருக்களிலும் சுவிஷேசத்தை பிரசங்கித்து வந்தார்.

1994ம் ஆண்டு வட இந்தியா ஊழியங்களுக்காக 'ஜீசஸ் மிஷன்' என்ற மிஷனரி இயக்கத்தை தேவ ஆவியின் ஏவுதலால் ஆரம்பித்தார். இவர் எழுதிய புத்தகங்கள், பேசிய ஒலி, ஒளி நாடாக்கள் மூலமாக இந்தியாவிலும் மற்ற பிற நாடுகளிலும் உள்ள மக்களை தேவன் சந்தித்து வருகிறார்.

ISBN - 978-81-922375-3-4

SANCTUARY
Word Media Publishing Pvt. Ltd.
26/150A, Avee's Building,Toll Junction
Edapally, Cochin-24, Kerala, India.
Tel. 0484-2557606, Email:sanctuarywm@gmail.com

Rs. 90/-